**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing |
Google Scholar Impact Factor
https://ngmtamil.in/

# இனிக்கும் இலக்கியம்

**முனைவர் ம.பிரேமா,உதவிப்பேராசிரியர்**

**தமிழாய்வுத்துறை,**

**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,**

**திருச்சிராப்பள்ளி – 02.premasoosairaj@gmail.com**

**அலைபேசி – 9942106490**

1. மலைகள்

மலைகள் நாட்டின் பாதுகாப்பு அரண்கள்.மக்களின் வாழ்வியலுக்குத் தேவையான அனைத்தையும் நல்கும் இயற்கையின் கொடை. மலைகளும் குன்றுகளும் உள்ள இடங்கள் குறிஞ்சி நிலம் என்று பெயர்ப் பெற்றன.மேற்குத் தொடர்ச்சி மலைகளும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் தமிழ் நாட்டில் அமைந்துள்ளன.உலகில் பல்லுயிர் வளமிக்க எட்டு ,டங்களில் மேற்குத் தொடர்ச்சி மலைகளும் ஒன்றாகும்.இத்தகைய மலைகளிலும் மலைகளின் மேலுள்ள மலைச் சாரல்களிலும் மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.குறிஞ்சி நிலத்தில் இருந்த ஊர்களுக்குக் குறிஞ்சி,சிறுகுடி என்று பெயர். மலையும் மலைச் சார்ந்தப் பகுதியும் குறிஞ்சி நிலம் என்று அழைக்கப்பட்டது.இந்நிலத்தில் வாழ்ந்த மக்கள் இறவுளர்(இருளர்), குறவர்,கானவர்,வேட்டுவர் என்று அழைக்கப்பட்டனர். பொதிகைமலை, அயிரைமலை, முதிரமலை, பறம்புமலை, கொல்லிமலை, பாழிமலை, பாயல்மலை, தோன்றிமலை, வேங்கடமலை, முள்ளூர்மலை, கொண்கானம்மலை, இமயமலை, குடமலை, நவிரமலை, தோட்டிமலை என்று பல்வேறு மலைகள் உள்ளன. அம்மலைகள் பற்றியும்,அம்மலைகளின் வளங்கள் பற்றியும் சங்க இலக்கியம் குறிப்பிடும் செய்திகளை ஆராய்வோம்.

**மலை - ஒருபொருட்பன்மொழி:**

நம் முன்னோர்கள் மலையைக் குறிக்கும் பல்வேறு சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர்.அவை அடுக்கம்,குன்று,வரை,மலை,சிலம்பு,ஓங்கல்,வெற்பு,கல் என்பனவாகும். அடுக்கம் என்பது மலைப்பக்கத்தையும்,குன்று என்பது குறுகிய மலையையும்,ஓங்கல் என்பது ஓங்கிய மலையையும், வெற்பு என்பது பிற மலைகளைக் காட்டிலும் உயர்ந்து நிற்கும் மலைகளையும்,சிலம்பு என்பது மலையில் எதிரொலி கேட்கும் பகுதியையும்,கல் என்பது கற்கள் மிகுந்திருப்பதையும்,வரை என்பது சுவர் போல் நிலத்தை வரையறுக்கும் பகுதியையும் குறிக்கும் நிலையில் சிற்சில வேறுபாடுகளைக் கொண்டு மலை என்னும் பொருளில் கையாளப்பட்டிருக்கின்றது.சங்கத்தமிழனின் சொல்லாட்சித் திறம் அறிவின் ஆளுமையைப் புலப்படுத்துகின்றது.

**பறம்பு மலை**

பறம்பு என்ற சொல்லிற்கு மலை என்று பிங்கல நிகண்டு பொருள் கூறுகின்றது.

" மலை அளிதோ தானே பாரியது பறம்பே" (புறநானூறு:109)

என்ற தொடரும் இதற்குச் சான்றாக அமைகின்றது.பாரி அரசாட்சி செய்த மலை பறம்பு மலை. இம்மலையில் முந்நூறு ஊர்கள் உள்ளன.

"ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும்

சிறுவரை சென்று நின்றோர்க்கும் தோன்றும்" (புறநானூறு -114)

என்று கபிலர் பாடிய பறம்புமலை 2450 அடி உயரமுடையது என்று ஆராய்ச்சி குறிப்பு ஒன்று செப்புகின்றது.அறை,பொறை முதலானவற்றைக் கொண்டது.

சமய இலக்கியங்களில் திருக்கொடுங்குன்றம் என்றும்,தற்காலத்தில் பிரான்மலை என்றும் அழைக்கப்படுகின்றது.இது கபிலரால் பாடப்பட்ட மலை. இவர் பாரி உள்ளவரை அவைக்களப் புலவராக இருக்கும் பேறு பெற்றவர்.பலமுறை முடியுடை வேந்தர் முற்றுகையிட்டாலும் வளம் குறையாத மலை பறம்புமலை. அம்மலையில் உள்ள கிளிகள் மலையடிவாரத்தில் உள்ள நிலங்களில் விளைந்த நெற்கதிர்களைக் கொத்திக் கொண்டு வந்து களஞ்சியத்தில் சேர்த்ததால் உணவு பஞ்சம் இல்லாத மலையாகக் காட்சியளிக்கிறது.

பாரியின் பறம்பு மலையில் காலையில் இருந்து மாலை வரை பறவைக்கூட்டம் முதிர்ந்த கதிர்களைக் கொண்டு வருவதை ஔவையாரும்,கபிலரும்

"பாரிபறம்பின் ……

நிரைபறைக் குரீஇயினம் காலைப் போகி

முடங்குபுறச் செந்நெல் தரீஇயர்"; (அகநானூறு-303)

"------நெல்லின் விளைகதிர் கொண்டு" (அகநானூறு:78)

என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

பாரியின் மலையில் இனிய நீர் ஊறும் சுனைகள் மிகுந்திருப்பதை

"பாரிபறம்பின்பனிச்சுனை"(புறநானூறு:370)

"பாரிபறம்பின் பனிச்சுனைத் தெண்ணீர்" (புறம்-176)

"பாரிபறம்பின் பனிச்சுனைத் தெண்ணீர்

தைஇத் திங்கள் தண்ணிய தரினும்" (குறுந்தொகை-196)

என்று கபிலர், புறத்திணை நன்னாகனார், மிளைக்கந்தன் ஆகிய புலவர்கள் எடுத்துரைக்கின்றனர்.மேலும்

"குறத்தி மாட்டிய வறல்கடைக் கொள்ளி

சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும் பறம்பு"(புறம்-108)

"உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே" (புறம்-109)

என்ற தொடர்களிலிருந்து சந்தனத்தின் மணமும், வேங்கைப் பூவின் மணமும் கமழும் மலைச்சாரல் தாமே விளையும் மூங்கில் நெல்,பலாப்பழங்கள்,வள்ளிக்கிழங்கு,தேனடைகள் மிகுந்திருந்த பறம்பின் வளங்களை அறிந்து கொள்ள இயலுகின்றது. புறம்பு மலையைத் தலைமையிடமாகக் கொண்ட நாடு பறம்பு நாடு. இந்நாடு பறம்புநாடு,பாரிநாடு,பறநாடு எனவும் வழங்கப்படுகின்றது. வேளிர்குலத் தலைவனாக விளங்கிய வேள்பாரி இந்நாட்டினை ஆண்டான். இந்நாடு பிற்காலத்தில் பாண்டிநாட்டின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. முல்லைக்குத் தேர்க் கொடுத்தப் பாரியை

நினைவூட்டும் வகையில் கொடி தளும்பினால் குடி தளும்பும் என்னும் சொலவடை வழக்கில் இருப்பதாக முனைவர் கோ.ஜெயக்குமார் தன் ஆய்வில் பதிவு செய்துள்ளார்.

**கொல்லிமலை**

இரண்டாயிரத்து எண்ணூறு சதுர கிலோமீட்டர் பரப்பளவையும் ஆயிரத்து எண்ணூறு மீட்டர் வரை உயரம் கொண்ட இம்மலைத் தொடரானது தென்னிந்தியாவின் கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கின்றது. ஊரின் பெயரால் ஒருவரை பெயரிட்டு அழைப்பது போல மன்னனை நாட்டின் பெயரால் பெயரிட்டு அழைக்கும் வழக்கம் இருந்துள்ளது.குட்டநாட்டில் இளவரசுப் பட்டம் கட்டப்பட்டு ஆட்சியைத் தொடங்கியவன் குட்டுவன் என்றும், பொறைநாட்டில் அரசமுறைமையைத் தொடங்கியவன் பொறையன் என்றும் அழைக்கப்பட்டான்.குட்டுவன் என்னும் பெயர் சேரமன்னர்களைக் குறிக்கின்றது.சேரல்,குட்டுவன்,கோதை,பொறை,பொறையன் போன்றவை சேரமன்னர்களைக் குறிக்கும் பெயர்கள் ஆகும்.

சேரனது அகன்ற காட்டில் அமைந்திருப்பது கொல்லிமலை.கொல்லிமலையைப் பொறையன், குட்டுவன் என்னும் சேரமன்னர்கள் ஆட்சி செய்தனர். இம்மலைத் தேனடைகள் மிகுந்தும்,பலாப்பழங்கள் நிரம்பியும் காட்சியளிக்கின்றது.குவளை மலர் பூத்துக் கிடக்கும் சுனை ஒன்று உள்ளது. சுனையில் பூத்த நீலமலர் தலைவியின் கண்கள் போல் காட்சியளிக்கின்றது. கொல்லி மலையின் மேற்கில் இருந்த குகை வளைவுக் கற்களில் கொல்லிப்பாவை வரையப்பட்டுள்ளது. பாவை தெய்வங்களிலே கொல்லிப்பாவை புலவர் பெருமக்களால் பெரிதும் போற்றப்படுகிறது.தெய்வம் விரும்பி உறையும் மலையாகக் கொல்லிமலை இருந்துள்ளது.

அச்சத்தைத் தரும் கொல்லிமலையில் உச்சியிலிருந்து தாவி,பெருக்கெடுத்து ஓடும் அருவியில் சூர் மகள் இருத்தல்,அகன்ற மலைக்காடுகள்,மலையில் பொறிக்கப்பட்ட புடைப்போவியம் போன்ற குறிப்புகள் இவ்வாறு கொல்லிமலைப் பற்றிய குறிப்புகள் கீழ்வரும் பாடல்களில் காணக்கிடக்கின்றன.

“----------சூர்புகழ் நனந்தலை
மாஇருங் கொல்லி உச்சித் தாஅய்த்”;(அகநானூறு-303)

“அகல்இருங் கானத்துக் கொல்லி போல”(அகநானூறு :338)

“செவ்வேர்ப் பலவின் பயம்கெழு கொல்லி
நிலைபெறு கடவுள் ஆக்கிய
பலர்புகழ் பாவை அன்னநின் நலனே”(அகம்-209)

“பல்பழப் பலவின் பயம்கெழு கொல்லி”(அகம்-208)

“பெரும்பூண் பொறையன் பேஎமுதிர் கொல்லி
கருங்கண் தெய்வம்”(குறுந்தொகை -89)

“குட்டுவன் குடவரைச் சுனைய” (நற்றிணை:105)

கொல்லிமலை முதலில் வல்வில் ஓரிக்கும் பின் சேரமானுக்கும் உரிமைப்பட்டிருந்ததாக தெரியவருகின்றது என்கிறார் மு.சண்முகம்பிள்ளை. இதனை

“வல்வில் ஓரிக் கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந்தனளே” (குறுந்தொகை-100: 5-6)

என்கிறது.

**நவிரமலை**

நன்னன் ஆட்சி செய்த மலை நவிரமலை.வள்ளலாகிய நன்னனிடம் பரிசுப் பெற்றுத் திரும்பும் கூத்தன் ஒருவன் வழியில் கண்ட தன்னையொத்த வறுமை நிலையில் இருந்த கூத்தருக்கு நன்னனது நாட்டின் இயல்பையும்,மலைவளத்தையும் சொல்கின்றான்.மேலும் வளமை வாய்ந்த ,முதிர்ந்த மூங்கில் அடர்ந்து வளர்ந்த நவிரமலை மேல் விரைவாக மழை பொழிவது போல் தன்னிடம் வந்தவர்களுக்கு முதல் நாளே கொடை அளிப்பவன் என்று நன்னனின் கொடைச்சிறப்பையும் உரைக்கின்றான். நவிரமலையில் இருந்து கொட்டும் அருவிகள் நன்னனின் வெற்றி கொடிகள் போல் காட்சியளிக்கும்.இதனைப் பெருங்கௌசிகனார்

"நீரகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பேரிசை நவிர மேஎ யுறையும்" (மலைபடுகடாம்: 81-84)

''வளம்பிழைப்பு அறியாது வாய்வளம் பழுநி
கழைவளர் நவிரத்து மீமிசை ஞெரேரென
மழை சுரந்து அன்ன ஈகை நல்கி
தலைநாள் விடுக்கும் பரிசில் மலைநீர்
வென்று எழு கொடியின் தோன்றும்
குன்றுசூழ் இருக்கை நாடு கிழவோனே"

(மலைபடுகடாம்:578 -83)

என்று இயம்புகின்றார்.

இன்று நவிரமலை பர்வதமலை,திரிசூலமலை என அழைக்கப்படுகிறது.சவ்வாது மலையில் உள்ள புதூர் நாட்டில் நவிரமலை என்னும் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.(தினமணி நாளிதழ் 28,சனவரி2018)18

நன்றா மலை

பதிற்றுப்பத்தில் ஏழாம்பத்தின் பாட்டுடைத்தலைவன் செல்வக் கடுங்கோ வாழியாதன். பல போர்களில் வெற்றிக் கண்டவன்.இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சி செய்த சிறப்பிற்குரியவன்.இம்மன்னனது கொடைப் புகழை கபிலர் பத்துப் பாடல்களில் பாடியுள்ளார்.கபிலர் புகழ்ந்து பாடிய பாடல்களைக் கேட்டு நன்றா என்னும் மலையின் மீது ஏறி நின்று தன் கண்ணிலும் புலவர் கண்ணிலும் தெரிந்த ஊர்களையெல்லாம் புலவர்க்குக் கொடையாக வழங்கினான். மேலும் சிறுபுறம் என்று நூறாயிரம் காணம் செல்வமும் வழங்கினான் என்ற செய்தியினைப் பதிற்றுப்பத்தின் ஏழாம் பதிகம் பதிவு செய்துள்ளது.

முதிரமலை

கடையேழு வள்ளல்களில் ஒருவன் குமணன்.இவன் முதிரமலையை ஆண்ட குறுநில மன்னன்.இம்முதிரமலை பழனிமலைத் தொடர்களில் உள்ளது.குமணனுடைய ஆட்சி நலத்தாலும் தோளாற்றலாலும் நாட்டின் செல்வநிலை உயர்ந்தது.இன்றைய முதுமலை என்ற பெயரே சங்ககாலத்தில் முதிரமலை என்று அழைக்கலாயிற்று.

"அதிரா யாணர் முதிரத்துக் கிழவ
இவண் வளங்கு சிறப்பின் இயல் தேர் குமண" (புறம்-158)

"பழந்தூங்கு முதிரத்துக் கிழவோன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே"(புறம்-163)

என்னும் புறப்பாடல்கள் முதிரமலையின் வளத்தினையும் குமணின் கொடைச்சிறப்பினையும் உரைக்கின்றது.

**இமயமலை**

அந்தி வந்ததும் அந்தணர் தம் கடமையாகத் முத்தீ வளர்க்கும் இடங்களுள் ஒன்றாக இமயம் இருந்துள்ளது.சிவன் திரிபுரம் எரித்தப்பொழுது இமயம் அவனுக்கு வில்லாயிற்று.செல்வ வளம் நிரம்பிய இமயத்தில் இருந்து வழிந்த கங்கை ஆறு வானர மகளிர் இருப்புக் கொள்ளும் இடமாக அமைந்திருந்தது.சேரலாதன் கடம்ப மரத்தை வெட்டிக் கடம்பரை ஓட்டிய பின்னர் இமயத்தில் வில்லைப் பொறித்ததை கண்முன் நிறுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

"சேரலாதன்......

முந்நீர் ஓட்டிக் கடம்பு அறுத்து இமயத்து"(அகம்-127)

சோழன் குளமுற்றத்து துஞ்சிய கிள்ளி வளவன் இமயத்தை அரசாண்ட வானவனை வீழ்த்தி இமயத்தில் வில் கொடி நாட்டி வஞ்சி நகருக்குப் பெருமை சேர்த்ததை மாறோக்கத்து நப்பசலையார்

"வரையளந் தறியாப்பொன்படு நெடுங்கோட்டு

இமையம் சூட்டியஏம விற்பொறி

பொன்படு நெடுங்கோடு கொண்டது(புறம்-39)

என்கிறார்.

"வடபுல இமயத்து வாங்குவில் பொறித்த

இயல்தேர்க் குட்டுவன்" (சிறுபாணாற்றுப்படை:-48)

என்று ஆற்றுப்படையும் பகர்கின்றது.இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் இமயத்தில் தன் முத்திரையாகிய வில்லைப் பொறித்தான் என்பதையும் (பதிற்றுப்பத்து-பதிகம் 2)24 இமயமலைப்பகுதியில் ஆட்சி செய்த அரசர்கள் குமரிமுனை வரை கைப்பற்றக் கனவு கண்டவிடத்து .இமயவரம்பன் அவர்களது கனவுகளைப் பொய்யாக்கித் தன் புகழை இமயம் வரையில் நிலைக்கொள்ளச் செய்தான் என்பதையும்(பதிற்றுப்பத்து- 2-ஆம் பத்து பாடல்-11)25 பதிகம் வழி அறியமுடிகின்றது.

" கொண்டல் மழை இமயத்தைத் தீண்டிப் பொழியும்"(புறம் -34)

"வடதிசை இமயமும் தென்திசை ஆய்குடியும்

உலகைச் சமநிலை கொள்ளச் செய்யும்"(புறம் - 132)

"பொன்னுடை நெடுங்கோட்டு இமயம்

பொன் வேழம் பரிசாகத் தருக" (புறம்-369)

நற்றிணை 369, கலித்தொகை 38,92,105, குறுந்தொகை 158 ,அகம் 265, பரிபாடல் திரட்டு 1,புறம்-2,பரிபாடல் 8 ஆகிய பாடல்களில் இமயமலைப் பற்றிய குறிப்புகள் விரவிகாணக்கிடக்கின்றன.

குடமலை

பண்டைக் காலத்தில் மாங்காடு என்னும் பெயர் கொண்ட ஊர்கள் பல இருந்தன. அவற்றில் ஒன்று குடமலை. இந்த ஊரைச்சேர்ந்தவன் மாங்காட்டு மறையோன்.சிலம்பில் கோவலன், கண்ணகி,கவுந்தி ஆகியோருக்கு மதுரை செல்லும் முப்பெரும் வழிகளைக் காட்டியவன். "குடமலை மாங்காட்டு உள்ளேன்"(சிலம்பு – காடுகாண்காதை -10-106)

என்ற தொடரில் குடமலைப் பற்றிய குறிப்பு காணக்கிடக்கின்றது.

மாங்காடு பனிபொழியும் மலையடுக்கத்தில் இருந்ததையும்,அதில் இட்டாறு என்னும் அருவிக் கொட்டியதையும்,ஆண்குரங்கு குட்டியை வைத்திருக்க ,பெண்குரங்கு பலாப்பழத்தைப் பிளக்கும்போது குளிரால் வாடித் துன்புறுவதையும், மாங்காட்டிலிலுள்ள மகளிர் தம் கூந்தலில்

மலர்களைக் கொத்தோடு சூடிக்கொள்வார்கள் என்பதிலிருந்தும் பனிமூட்டம் மிக்கதாக மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி; இருந்ததை விற்றூற்று மூதெயினார்

“நண்ணிக் கொடியோர் குறுகும் நெடி இருங்குன்றத்து
இட்டாறு இரங்கும்விட்டொளிர் அருவி
………..
அந்தீங் கிளவி தந்தை காப்பே(அகம்-288)30 என்கிறார்.

வடக்கில் காவிரி தோன்றும் பகுதி முதல் தெற்கில் சந்தனம் மணக்கும் பொதியமலை வரை உள்ள மேற்குத்தொடர்ச்சி மலை முழுவதையும் உள்ளடக்கியது குடகுமலை.இக்குடகு மலையில் காவிரி உருவாவதை

“மலைத் தலைய கடல் காவிரி புனல் பரந்துபொன் கொழிக்கும்”
(பட்டினப்பாலை 6-7)

“குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி”(மலைபடுகடாம் -327)

பாலை நிலத்து வேட்டுவர் விழாக் கொண்டாடும் போது சாலினி மீது தெய்வம் ஏறி கண்ணகியை
“இவளோ கொங்கச் செல்வி குடமலையாட்டி”(சிலம்பு -11-53)33
“குடமலை வென்வேலான் குன்றில் மறைந்தாள்” (சிலம்பு-12-1-47)34
என்னும் தொடர்களிலிருந்து குடமலை பற்றிய குறிப்புகளைக் காணமுடிகின்றது.

**தோட்டிமலை**

யானையை அடக்க உதவும் அங்குசத்துக்கு வழங்கப்பட்ட பெயர் தோட்டி.தோட்டி போல் உயர்ந்தோங்கி நின்ற முகடு தோட்டிமலை எனப்பட்டது. சங்ககால சேரமன்னன் பெருஞ்சேரல் இரும்பொறை தோட்டி மலையை வென்று தனதாக்கி கொண்டதைப் பதிற்றுப்பத்து

“ஆரெயில் தோட்டி வௌவினை” (8ஆம் பத்து –பாடல் 71)

எனச் சுட்டுகிறது.

தோட்டி மலைக்கு நளிமலை என்று மற்றொரு பெயரும் உண்டு. தமிழ்நாட்டிலேயே பெரிய மலையாகவும், குளிர்ச்சிப் பொருந்தியதாகவும் இருப்பதால் நளிமலை எனப் பெயர்ப் பெற்றது.

“நளியென் கிளவி செறிவும் ஆகும்” (தொல்-உரியியல்-323)

என்கிறது தொல்காப்பியம்.

கடையேழு வள்ளல்களில் ஒருவனாகிய நள்ளி இம்மலையின் அரசனாக இருந்ததை

“நளிமலை நாடன் நள்ளி” எனச் சிறுபாணாற்றுப்படையும்

“இரும்பு புனைந்து இயற்றாப் பெரும்பெயர்த் தோட்டி
அம்மலை காக்கும் அணி நெடுங் குன்றின்
பளிங்கு வகுத்து அன்ன தீம் நீர்
நளிமலை நாடன் நள்ளி”(புறம்-150)

என்று புறப்பாடலும் சுட்டுகின்றது.

எருமை இருந்தோட்டி போல் ஒருவன் என் கையைப் பிடித்துத் தன் தலைமேல் வைத்துச் சத்தியம் செய்தான் என்று ஒரு பெண் குறிப்பிடுவதாகப் பரிபாடலும் (8-86)எடுத்துரைக்கின்றது.

கடையெழு வள்ளல்களில் ஒருவன் தோட்டி மலை நள்ளி.இவன் தன் தோட்டிமலைக் கோட்டையை நெடுஞ்செழியன் அழிக்காமல் இருப்பதற்காக ஒவ்வொரு நாளும் விழுமிய வளங்களை கொண்டு வந்து தந்தான்.கங்கை ஆறு கடலில் கலப்பது போல இந்த தார வளங்கள் மதுரையில் குவிந்தன.

'நாடுடை நல்லெயில் அணங்குடைத் தோட்டி

அளந்துகடை யறியா வளங்கெழு தாரமொடு"(மதுரைக்காஞ்சி: 693-697)
என்ற பாடல் **தோட்டிமலை**யைக் எடுத்துரைக்கின்றது.

**பொதியமலை**

பொதிய மலையை ஆய்,திதியன் ஆகிய குறுநில மன்னர்கள் ஆண்டனர் என்பதை

"கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்(குறு-84)

"பொதியில் செல்வன் பொலந்தேர்த் திதியன்"(அகநா-25)

என்னும் பாடல்கள் உணர்த்துகின்றன.

பொதியமலையில் சந்தன மரங்கள் மிகுந்திருந்ததை

"மன்னுயிர் அறியாத் துன்னரும் பொதியில் சந்தனம் போல்" (குறுந்தொகை:376) என்பதின் வழி அறிய முடிகின்றது.

**விச்சிமலை:**

விச்சிப்பூ மிகுதியாகப் பூத்ததால் விச்சிமலை என்று பெயர்ப் பெற்றது. இந்நாட்டினை ஆட்சி செய்த விச்சிக்கோவை கபிலர் அடங்காத அரசர்களை சினத்தோடு போர் புரிந்து அடக்கும் குறையாத விளைவுடைய வளமான நாட்டுக்கு உரிமை உடையவனே என்று புகழ்ந்துரைத்து, அவன் நாட்டில் உள்ள உயர்ந்த மலைகள்,மலைகளின் உச்சிகளில் உள்ள மூங்கில் காடுகள்,வளங்கள் முதலியவற்றைச் சுட்டி பாரிகமளிரை மணம் செய்து கொள்ள வேண்டுகிறார்.இதற்கு

'மடங்கா விளையுள் நாடு"(புறநானூறு: 200)

என்ற பாடல் சான்றாக அமைகின்றது.இம்மலை தற்பொழுது பச்மைலை என்று அழைக்கப்படுகின்றது.

'வில்கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றைப் பரணர்
புலிநோக்கு உறழ் நிலைக் கண்ட
கலிகெழு குறும்பூர் ஆர்ப்பினும் பெரிதே"

(குறுந்தொகை 328 )

என்ற பரணர் பாடலில் விற்படைகளையுடைய விச்சியர் பெருமகன் புரிந்த குறும்பூர் போர் பற்றிய தகவல் இடம்பெற்றுள்ளது.

சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள மலைகள், அம்மலைகளை ஆட்சி செய்த அரசர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் ஆகியோரின் கொடைச்சிறப்பின் பெருமைகளையும், மலைகள் இயற்கை அரணாகவும், மக்களின் வாழ்வியல் வளமாகத் திகழ்ந்ததையும், ஆனால் தற்காலத்தில் வளம்சார் குறியீடாகிய மலைகள் மெல்ல மெல்ல அழிக்கப்பட்டு வளங்கள் சுரண்டடப்பட்டு வரும் சூழலில் மீண்டும் மீண்டும் மீட்டெடுத்து மழைப் பெருக்கி அரண் கூட்ட விழைவோம்.

## 2. உணவும் தொழிலும்

சங்ககால மக்களின் வாழ்வியலை விளக்குவது ஆற்றுப்படை நூல்கள். இந்நூல்களில் நிலம் சார் தொழில்கள், விளைப்பொருட்கள், வாணிபம், உணவு வகைகள், விருந்தோம்பல், கொடைச்சிறப்பு, ஆட்சி சிறப்பு முதலியவை சித்தரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் தமிழர்களின் பண்பாட்டினை உலக அரங்கிற்கு வெளிப்படுத்தும் வகையில் பொருளாதார வளர்ச்சிக்குப் பின்புலமாக நின்ற பல்வேறு தொழில்களையும், உணவு வகைபாடுகளையும் பதிவு செய்வதே நோக்கமாகும்.

**உழவுத்தொழில்**

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது உணவு. உணவு இன்றேல் உயிர்கள் வாழ இயலாது, மக்கள்; உயர் பண்புகளில் மேன்மையடைய இயலாது என்பதனை உணர்ந்து தமிழர்கள் பயிர்த்தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். உழவினை அடிப்படையாகக் கொண்டே உலகம் இயங்குவதை,

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"(குறள்.1031)
'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் வர் "(குறள்.1033)

என்கிறது வள்ளுவம். பல்லாண்டு காலமாகப் பயிர்த்தொழில் இருந்துள்ளமைக்கு,

வேளாண்மாந்தர்க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி (தொல்.மரபியல் 36)

என்று தொல்காப்பியம் சான்று பகர்கின்றது.

“பழங்கால மக்கள் முதன்முதலில் செய்யக் கற்றுக் கொண்ட தொழில்கள் இரண்டு. அவை உழவும் நெசவுமேயாகும் என்பர் க.த.திருநாவுக்கரசு.”

நிலத்தைப் பயன்படுத்தி உழவு மேற்கொண்டு மிகுந்த விளைச்சலைப் பெற்றமையை

'சாலிநெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடு” (பொருநராற்றுப்படை 246-248)

என்று ஆற்றுப்படை சுட்டிக் காட்டுகின்றது.

ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைவித்துள்ளனர் என்பதிலிருந்து வேளாண் மாந்தர்களின் இடைவிடாத உழைப்பு வெளிப்படுகின்;றது.

''கழனி திருத்தியும் உழவு புரிந்தும்
நாடுகள் செய்தோம்" ( தொழிலாளர் விண்ணப்பம்)

என்று பாரதிதாசன் உரைப்பது குறிப்பிடத்தக்கது.

உழவர்கள் விளைவித்த நெல்லை உழத்தியர்கள் அரிவாள் கொண்டு அரிந்தனர். அரிந்த கதிரை கொத்தாகக் கட்டி கல்லில் அடித்து காற்றில் தூற்றினர். தூற்றிய நெல்லை மூட்டையாக தைத்து நெற்கூடுகளில் வைத்துப் பாதுகாத்தனர்.

'கூனி குயத்தின் வாய்நெல் அரிந்து
சூடு கோடாகப் பிறக்கி நாள்தொறும்
குன்று எனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையின் இடம் கெடக்கிடக்கும்"

(பொருநராற்றுப்படை: 242-245)

என்னும் பாடல் உழத்தியரின் செயல்பாடுகளைச் சித்திரிக்கின்றன.

மனிதனின் வாழ்வு நிலத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது.அவன் வாழ்வின் வளமும் – வறட்சியும், வளர்ச்சியும் – தளர்ச்சியும், பீடும் - பெருமையும், ஏற்றமும் - வீழ்ச்சியும், நகைப்பும் - ஏக்கமும், ஒளியும் - இருளும், நில இயல் கூறுகளின் பின்னணியைப் பொறுத்திருக்கின்றன. எனவே மனிதனின் வரலாற்றினை இலங்கு நில இயல் என்று தம் நூலில் வரலாற்றுப் பேராசிரியர் வி.டி.செல்வம் குறிப்பிடுகின்றார்.

**நெசவுத்தொழில்**

'ஆடையில்லா மனிதன் அரைமனிதன்' என்னும் வழக்கு அனைவரும் அறிந்ததே. மனித வாழ்வில் உணவிற்கு அடுத்து உடை இன்றியமையாத இடத்தை வகிக்கின்றது. தமிழர்கள் கண்ணுக்குப் புலப்படாத வகையில் மெல்லிய நூலால், அழகிய வேலைப்பாடுகள் நிரம்பிய பருத்தி ஆடைகளையும், பாம்பின் தோல் போன்ற மென்மையும். வழவழப்பும், பளபளப்பும் நிறைந்த ஆடைகளையும் உற்பத்தி செய்தமையை,

'நோக்கு நுழைகல்லா நுண்மைய பூகடகனிந்
தரவுரி யன்ன அறுவை நல்கி "(பொருநராற்றுப்படை – 82-83)

என்பதன் வழி அறியமுடிகின்றது.(அறுவை – ஆடை) கரை வைத்த பட்டு நூலால் ஆகிய பட்டாடைகளையும் உருவாக்கும் திறன் பெற்றிருந்தனர் என்பதனை,

'கொட்டைக் கரைய பட்டுடை நல்கி "(பொருநராற்றுப்படை – 155)

என்று முடத்தாமக்கண்ணியார் குறிப்பிடுகின்றார்.

''பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்''
(பாரதியார் - பாரததேசம்)

என்று பாரதியாரும்

'ஆடைகள் நெய்தோம்"(பாரதிதாசன்-தொழிலாளர் விண்ணப்பம்)

என்று பாரதிதாசனும் சுட்டிக் காட்டுவதிலிருந்து தமிழர்கள் நெசவுக் கலையில் வல்லவர்களாக இருந்துள்ளமைப் புலனாகிறது.

**பண்டமாற்று**

ஒரு பொருளைக் கொடுத்து அதற்கு மாற்றாக மற்றொரு பொருளைப் பெறுவது பண்டமாற்று.சங்க இலக்கியங்களில் பண்டமாற்று நடைபெற்றமைக்கான சான்றுகள் ஏராளமான உள்ளன. 'பொருநராற்றுப்படை குறிஞ்சி நிலமக்கள் தேனையும், கிழங்கையும் நெய்தல் நிலத்திற்குக் கொண்டு சென்று விற்று மீனையும் மீன் நெய்யினையும் பெற்றனர் என்றும், மருத நிலத்து மக்கள் கரும்பினையும் அவலினையும் முல்லை நிலத்தாரிடம் கொடுத்து, மான்தசையையும் மதுவையும் பெற்றனர் என்றும் பின்வருமாறு காட்சிப்படுத்துகின்றது.

'தேனெய்யோடு கிழங்கு மாறியோர்
மீனெய்யொடு நறவு மறுகவும்
தீங்கரும்போ டவல் வகுத்தோர்
மான்குறையொடு மது மறுகவும்" (பொருநராற்றுப்படை 214 – 217)

வணிகத் தொடர்பினால் சமூக நல்லுறவு தழைத்தது. மேலும் பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் முதலிய பரிமாற்றங்கள் வாயிலாக ஒருமைப்பாட்டு உணர்வு மேலோங்கி வளர்ந்தது.

காலந்தோறும் தமிழர்கள் வணிகத் தொடர்பு கொண்டிருந்;தனர் என்பதை,

"கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்"
(பாரதியார் -பாரததேசம்)

என்று பாரதியார் தம்முடைய கவிதையில் பதிவு செய்துள்ளாரர்.

'யவனர் தந்த வினைமான் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி"(அகநானூறு 149:9-11)

'கொள்வதூம் மிகை கொளாது
கொடுப்பதூம் குறைபடாது
பல் பண்டம் பகர்ந்து வீசும்
தொல் கொண்டித் துவன் றிருக்கை" (பட்டினப்பாலை 210 – 213)

என்ற இலக்கியச் சான்றுகளும் வணிகத் தொடர்பினை மெய்ப்பிக்கின்றன.

எப். ஹெக். ஆர்பைசன் அவர்களும், "மனித வளங்கள் என்பது மக்களிடமுள்ள ஆற்றல்கள், திறன்கள், அறிவு ஆகிய மறைந்துள்ள சக்திகளைப் பண்டங்களின் உற்பத்தியிலும் பயனுள்ள பணிகளை ஆற்றுவதிலும் பயன்படுத்தப் பட வேண்டும்" என்று நவில்வது ஒப்புநோக்கத்தக்க வகையில் உள்ளது.

உணவு

'நீரின்றி அமையாது உலகு போல' உணவின்றியும் உயிர்கள் வாழ இயலாது. நம் முன்னோர்கள் நெல், வெண்ணெய், இறைச்சி, கள், பணியாரம், அரிசிசோறு, பொரிக்கறி, தேன், கிழங்கு போன்ற உணவு வகைகளை உட்கொண்டுள்ளனர்.

**இறைச்சி**

இல்லிற்கு வந்த விருந்தினர்க்கு இறைச்சி உணவினை மிகுதியாக வழங்கியுள்ளனர். அருகம்புல்லை நன்கு சாப்பிட்டு கொழுத்த செம்மறிக்கிடாயின் இறைச்சியை உணவாக்கி மிகுந்த சூடோடு பரிமாறியதால் வாயின் வலப்பக்கத்திலும், இடது பக்கத்திலும் மாற்றி மாற்றி ஆற வைத்து பொருநர்கள் உண்டனர் என்பதை.

'துராஅய துற்றிய துருவையம் புழுக்கின்
பாராவுரை வேவை பருகெனத் தண்டில்
காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை
ஊழின் ஊழின் வாய்வெல் தொற்றி
அவையவை முனிடுவம் எனினே சுவைய
வேறுபல் உருவின் விரகுதர் திரீஇ" (103 – 108)

என்கிறது பொருநராற்றுப்படை. வேக வைக்கப்பட்ட கம்பிகளில் செருகி சுடப்பட்ட இறைச்சி துண்டங்களை உண்ட செய்தியும் வெளிப்படுகிறது.

அரிசி உணவு

முழுமையான நீண்ட அரிசியைக் கொண்டு வேக வைத்த சோற்றைக் குழையாமல் சமைக்கும் பக்குவம் அறிந்திருந்தனர் என்பதை,

'முரவை போகிய முரியா அரிசி
விரல் என நிமிர்ந்த நிரல் அமை புழுக்கல்"
(பொருநராற்றுப்படை: 113 -114)

என்னும் வரிகள் பறைசாற்றுகின்றன.

'பரல் வறைப் கருனை காடியின் மிதப்ப
அயின்ற காலை" (பொருநராற்றுப்படை: 115 – 116)

என்பதிலிருந்து பலாக் கொட்டை அல்லது அவரை விதை போன்ற காய்களில் பால் சேர்த்து பொரித்த பொறிக் கறிகளையும் புளிக் கறிகளையும் சமைத்து உண்டதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**கள்**

பூக்களில் இருந்து பெறப்பட்ட தேனைப் புளிக்கச் செய்து கள் தயாரித்துள்ளனர். அரசவை விருந்தினர்க்குக் கள் கொடுத்துள்ளனர். விருந்தினர்க்கு ஏவல் மகளிர் இன்முகத்துடன் மழை போல கள்ளை வார்த்து அளித்துள்ளனர். இச்செய்தினை,

''இழைப்பணி வனப்பி இன்நகை மகளிர்
போக்கில் பொலங்கள நிறைப் பலகால்
வாக்குபு தரத்தர" (பொருநராற்றுப்படை: 85 -87)

''மகிழ்ப்பதம் பன்னாட் கழிப்பி "(பொருநராற்றுப்படை -111)

''இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறல் மருப்ப" (மதுரைக்காஞ்சி - 81)

என்ற ஆற்றுப்படை நூல்கள் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது.

தனிமனித வளர்ச்சி, சமூக உயர்வு நாட்டின் பொருளாதாரப் பெருக்கம் என்ற முப்பரிமாணக் கொள்கைகளை அடிப்படை இலக்காகக் கொண்டு இயங்கிய தமிழர்களின் பரந்துப்பட்ட சிந்தனைகள், வியக்க வைக்கும் நுட்பமான தொழில் திறன்கள், அன்றாட வாழ்க்கையில் உடலுக்கு வலுவூட்டும் உணவுகளைப் பக்குவமாகச் சமைத்தக் கலை ஆகியவற்றை இக்காலச் சமுதாயத்திற்கு நினைவு கூர்வோம்.

**3.நீரறமும் மேலாண்மை நுட்பங்களும்**

மனித வாழ்க்கையில் நீர் பிரிக்கமுடியாத ஓர் அங்கம்.சங்கத் தமிழர்கள் நீரின் மகத்துவம் அறிந்திருந்தனர். நீரின் முதற்றே உலகம் என்பதை மன்னர்கள் அறிந்திருந்தனர். அதனால் நீர் ஆவியாகாத அளவுக்கு கிணறு வெட்டும் நுட்பங்களைக் கையாண்டுள்ளனர்.அனைத்து அறங்களிலும் சிறந்தது நீரறமே என்பதை செவ்வியல் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.வான்சிறப்பு என்ற அதிகாரத்தில் வள்ளுவர் நீரின்றி அமையாது உலகு என்று உரைக்கின்றார்.மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் என்று சிலம்பும்,மழையின்றி மாநிலத்தவர்க்கு இல்லை என்று

நான்மணிக்கடிகையும்(48) உரைக்கின்றது. ஆகவே பழந்தமிழர்கள் உலக இயக்கத்திற்கு காரணமான பூதங்களில் நிலத்திற்கு அடுத்து முக்கியப் பங்கு வகிக்கின்ற நீரினைப் பாதுகாக்க நீர் நிலைகளை உருவாக்கியும், பருவக் காலங்களில் பொழியும் மழையினைத் தேக்கி வைத்துப் பயன்படுத்துவதற்குரிய இடங்களைப் புதுக்கியும் வளமான வாழ்க்கைக்கு வழி வகுத்துள்ளனர். தமிழர்களிடத்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த புறச்சூழல் விழிப்புணர்வு இருந்துள்ளது.அவ்வகையில் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள தமிழர்களின் நீரற மேலாண்மைச் சிந்தனை நுட்பங்களை ஆராய்வோம்.

**நீர்நிலைகளின் வகைகள்:**

சங்க இலக்கியத்தில் மட்டும் 47 நீர்நிலைகள் இருந்தமைக்கான குறிப்புகள் காணப்படுகின்றன. அவை அகழி, அருவி, ஆழி, கிணறு, ஆறு, இலஞ்சி, உறை, ஊருணி. ஊற்று. ஓடை. ஏரி கட்டுக்கிணறு, கண்மாய், கால், கால்வாய், குட்டம்,குட்டை, குண்டம், குண்டு, குமிழி, ஊற்று குளம், கூவம்,கூவல், வாளி, கேணி, சிறை, அணை, சேங்கை, தடம், தளிகுளம், திருக்குளம், தொடுகிணறு, நடைகிணறு, குள்ளைக்கிணறு, பொங்குகிணறு, பொய்கை, மடை, மதகு, மடு, மறுகால்,வளையம்,வாய்க்கால் ஆகியன.

**கற்சிறை**

கல்லால் ஆன அணைக்கு கற்சிறை என்று பெயர். நீரின் மகத்துவம் அறிந்த பண்டையத் தமிழர்கள் ஆறுகளின் குறுக்கேயும், குளங்களில் இருந்து கால்வாய்கள் பிரியும் இடங்களிலும் அணைகள் கட்டி கதவுகள் அமைத்து தேவைக்கேற்ப தண்ணீர் திறந்துள்ளனர்.தொல்காப்பியர் புறத்திணையில் பேரியாற்று வெள்ளத்தை கற்சிறைக் கொண்டு தடுப்பது போல தம்மை எதிர்தது வருகின்ற பகைவர்களைத் தடுத்து நிறுத்தி அழித்திடும் அரண்களாக வீரர்கள் விளங்கினர் என்பதை

“வருவிசை புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமையானும்”

(தொல்காப்பியம் -புறத்திணையியல் -8)

என்று விளக்குகின்றார். இதனையே மதுரைக்காஞ்சியில்

“வருபுனற் கற்சிறை கடுப்ப விடையறுத்து
ஒன்னா ரோட்டிய செருப்புகல் மறவர்”

(மதுரைக்காஞ்சி: 725-726)

என்று மாங்குடி மருதனார் குறிப்பிடுவது ஒப்புநோக்கத்தக்கது.

சோழ மன்னர்களில் மாவீரனாகத் திகழ்ந்த கரிகாலன் காவிரியின் வெள்ளப் பெருக்கை தடுக்கவும்,மிகுதியான நீரைப் பயன்படுத்தி பாசனப் பரப்பை அதிகரித்து வேளாண்மை செய்யவும் கல்லணையைக் கட்டினான்.இதுவே கிமு 12 இல் கட்டப்படட முதல் அணை. கல்லணை பெரிய பாறைகளையும், களிமண் பூச்சும் கொண்டு 30 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பெற்ற சிறப்புடையது.

“மிக்க கரிகால் வேந்தனும்தான் -பக்கம்
அலைக்கும் புகழ் பொன்னியின் கரை கண்டான்”

(பெருந்தொகை)

“சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட்டாகக்
காவிரிப் புரக்கும் நாடு கிழவோனே”

(பொருநராற்றுப்படை: 245-248)

என்னும் அடிகள் கல்லணையைக் கட்டிய கரிகால் பெருவளத்தானின் நீரியல் அறிவு, பாசனப்பரப்பின் விரிவாக்கச் சிந்தனை,வேளாண்மைப் பெருக்கம் முதலியவற்றைப் புலப்படுத்துகிறது.காவிரி அணைக் கட்டுவதற்குப் பயன்படுத்திய தொழில்நுட்பம் இன்றையப் பொறியியல் வல்லுநர்களையும் வியக்க வைக்கின்றது.நீர் வெளியேறும் அணைக்கட்டுகளின் இடுக்குகளில் சிறுவர்கள் உடும்பு பிடித்தக் காட்சியை

"வேட்டச் சிறாரஅர் சேட்புலம் படராது
படமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்" (புறநானூறு:326:4-5)

என்பதிலிருந்து அணைக்கட்டுகள் இருப்பது புலனாகின்றது.

குளம்

நீரானது குழி செய்யப்பட்ட இடத்தில் நிற்கும் இயல்புடையது.இதற்கு (குழித்துழி நிற்பது நீர்-30) என நான்மணிக்கடிகையும் சான்று பகர்கின்றது. சங்ககாலத்தில் பாறைகளையம், சிறு குன்றுகளையும் கரைகளாகக் கொண்டு குளங்கள் அமைப்பது வழக்கத்தில் இருந்துள்ளது. இவ்வாறு உருவாக்கப்பட்ட குளத்தில் விரைவாக நீர் நிரம்பும் போது கரை உடையாமல் பாதுகாப்பாக இருக்கவும். உபரிநீரை வெளியேற்றவும், நீரைப் பங்கீட்டு முறையில் பயன்படுத்தவும், நீர் விரையமாவதை தடுக்கவும், சுரங்கை அமைப்பு முறையை முன்னோர்கள் பயன்படுத்தி உள்ளனர். பூமிக்கு அடியில் செல்லும் சுருங்கை வழியாக குளத்து நீரைக் குளக்கரையின் அடிப்பகுதி வழியாக வெளியே எடுத்து சென்றுள்ளனர்.இம்முறை தற்போதைய நிலத்தடி நீர் குழாய்களுக்கு முன்னோடியாக இருந்துள்ளதிலிருந்து தமிழர்களின் அறிவியல் அறிவும்,நீர்சேகரிப்பு முறையும், நீரறம் பேணும் நுட்பமும் வெளிப்படுகிறது. இத்தகவலை சீத்தலைச்சாத்தனார்

"பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி
இரும்பெரு நீத்தம் புகுவது போல
அளவாச் சிறுசெவி அளப்படு நல்லறம்
உளமலி உவகையோடு உயிர் கொளப்புகும்"
(மணிமேகலை-அறவாணர் தொழுத காதை:79-82)

என்று பதிவு செய்துள்ளார்.

ஒரு ஆறு முழுவதும் உள் அடங்கத்தக்க அளவிற்கு குளம் இருப்பது ஒரு நாட்டிற்கு சிறப்புத் தரும் என்பதை விளம்பிநாகனார்

"யாறுள் அடங்கும் குளமுள வீறுசால்" (நான்மணிக்கடிகை)

என்றுரைக்கின்றார்.இதிலிருந்து தமிழர்களின் அளவியல் கணக்கீட்டுத் திறனை அறிந்துகொள்ள இயலுகின்றது.குளங்களின் அளவுக்கு ஏற்ப நீர்ச்செல்லும் நீர்க்கால்களின் பரப்பளவு அமைக்கப்பட்டிருந்ததை விளம்பிநாகனார்

"குளத்தனைய தூம்பின் அகலங்கள்"
(நான்மணிக்கடிகை-72) என்கிறார்.

தூம்பு என்பதற்கு உட்டுளை, நீர்வரும் வழி, நீர் வெளியே கிழியும் நீர்க்கால், மதகு, கலங்கள் என்ற பொருளுண்டு.நீர்நிறைந்த பள்ளத்தினை மடு என்றும்,மடுவின் தன்மையை தெளிந்த நீரால் அறிந்த நுன்மாண் நுழைபுலத்தினை

"நீரான் அறிப மடுவினை"( நான்மணிக்கடிகை-79)

என்கிறது நீதிஇலக்கியம்.

மேலும் குளத்தில் சேமித்த நீரைமக்கள் பயன்பாட்டிற்காக வெளியேற்ற மதகு, மடை,புதவு,குமிழி போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி உள்ளனர்.மதகு அமைப்பு குமிழித்தூம்பு என்று அழைக்கப்பட்டுள்ளது.

**ஏரி**

நீர்நிலைத்தேக்கத்தில் ஏரிகளின் பங்கு முக்கியமானது. ஏரிக்கரையின் நீளம் குறைவாகவும் அதிக நீர் கொள்ளளவு உள்ள வகையில் ஆழமாகவும் இருந்தால் மிகுந்த நன்மைப் பயக்கும். அறிவியல் வளர்ந்த 21 ஆம் நூற்றாண்டின் நீரியலாளர்கள், நிலவியலாளர்கள், நில நீரியலாளர்களைப் போன்று அன்றே நிலத்துக்கு அடியில் செல்லும் நீர்க்கால்கள் எனப்படும் நீரோடும் பாதையை சரியாக கண்டுபிடித்து மழைக் காலத்து நீர்த் தேங்கும் கிணறுகளையும், ஏரிகளையும், குளங்களையும் அமைத்துள்ளனர். பறம்புமலையில் உள்ள ஏரியின் அமைப்பு சந்திரனின் எட்டாம் பிறை வடிவில் நீளம் குறைவாகவும் அதிக நீர் கொளள்ளவுக் கொண்டதாகவும் பாதுகாப்பானதாகவும் இருந்ததை கபிலர்

“அறையும் பொறையும் மணந்த தலைய
எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ
தேர்வண் பாரி தண் பறம்பு நாடே” (புறநானூறு:118:1-4)

என்கிறார். அறிவியல் கண்ணோட்டத்துடன் ஏரியை வடிவமைத்ததுடன் மட்டுமன்றி ஏரிகளில் நீர்க்குறையும் பொழுது மதகுகள் மூலம் நீர்ப்பாய்ச்சி நீரைப்பெருக்கி இருப்பதிலுருந்து உயிர்க்காக்கும் பேரறமாகிய நீரறம் ஓம்பும் பணியில் கவனம் செலுத்தியுள்ள தமிழர்களின் பண்பு வியப்பூட்டுகிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி நீரினைப் பொறுத்தே அமைகின்றது. உயிர்கள் வாழ உணவு இன்றியமையாதது போல நிலம் வளமாக இருக்க நீர் தேவை என்பதை

“நீரின்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்க் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
..................
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே ”(புறநானூறு :18:18-23)

என்பதிலிருந்து நீர்நிலைகளை ஏற்படுத்துவதன் மூலம் நீரினையும் நிலத்தையும் ஒன்றாக கலக்கச் செய்பவரே இவ்வுலகத்தில் உடலையும் உயிரையும் படைத்தவர் என்ற பெருமையைப் பெறுவர் என்று உணர
முடிகின்றது.நிலம் என்பது உடம்பு. நீர் என்பது உயிர்.உடம்பார் அழியில் உயிரார் அழிவர் என்பது திருமூலர்க் கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

போர் வெற்றியைக் கொண்டாடும் வேளையில் ஓங்கிய கரைகளோடு அமைந்த குளம், குளக்கரையிலே அமைந்திருக்கக்கூடிய வயல்கள், வயலோரத்திலேயே அமைந்திருக்கக்கூடிய களங்களில் குவிக்கப்பட்டிருக்கும் நெல்மூட்டைகளைப் பலருக்கும் பரிசாக வழங்கி மகிழ்விப்பர் என்று சோழன் நலங்கிள்ளியைக்
கோவூ ர்க்கிழார் பாராட்டும் இடத்து

“ குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்’’

(புறநானூறு :33:4-5)

என்று சுட்டுகின்றார்.

**நீர்நிலைப் பாதுகாப்பு**

உழவுக்கும் உயிர்களுக்கும் அடிப்படையாகத் திகழும் நீர்நிலைகளைப் பாதுகாப்பது மன்னனின் தலையாயக் கடமை. பருவக்காலத்தில் பெய்யும் மழைநீரைத் தேக்கி கயம், வாவி, குளம், ஏரி, கிடங்கு,மடு, மதகு, மடை,ஏந்தல், தாங்கல் முதலியவற்றில் தேக்கி அவற்றை முறையாகப் பாதுகாத்து பயிர்த் தொழிலுக்கும் உயிர்த்தொழிலுக்கும் ஆண்டு முழுவதும் பயன்படுத்தும் நீர்மேலாண்மைத் திறனை மன்னர்கள் அறிந்திருந்தனர்.

நிலம் எங்கெல்லாம் பள்ளமாக இருக்கின்றதோ அங்கெல்லாம் நீர்நிலைகள் அமையும்படி கரை அமைப்பதே மன்னர்களுக்குப் பெருமை என்பதை புலவியனார் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு

"நிலன் நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோரம்ம இவன் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே" (புறநானூறு:18:28-30)

என்று அறிவுறுத்துகிறார். பருவக் காலங்களில் முறையாகப் பெய்த மழைநீரை ஏரி,குளங்களில் சேமித்து தக்க வகையில் பயன்படுத்தி நாட்டை வளம்பெறச் செய்யும் மன்னவனைப் பற்றி இளங்கோவடிகள்

"இடியுடைப் பெருமழை எய்தா ஏகப்
பிழையாவிளையுள் பெருவளம் சுரப்ப
மழை பிணிந்(து) ஆண்ட மன்னவன்"
(சிலம்பு- காடுகாண்; காதை 27-29)

என்று சுட்டுவதிலிருந்து மழை நீரைப் பாதுகாக்கும் மன்னர்களின் மேலாண்மைத் திறன் வெளிப்படுகிறது.

"பெருங்குள காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே" (அகநானூறு:25)

என்னும் பாடல் வழியே ஒரு தாய் தனது பிறந்த குழந்தையைப் பாதுகாக்க தனது உறக்கத்தை தியாகம் செய்வது போல மன்னர்கள் நீர்நிரம்பிய குளங்களையும், கண்மாய்களையும் பாதுகாக்க மழையிலும், நள்ளிரவிலும், பனியிலும், உறக்கம் மறந்து காவலர்கள் போல் செயலாற்றி உள்ளனர் என்பது தெளிவாகின்றது.

குளங்களைப் பாதுகாக்க காவலர்களை நியமித்துள்ளதை

"மடைவாரியர்கள் கண்மாய் குடும்பன்" (அகநானூறு:252)

என்பதன் வழி அறிந்துகொள்ள முடிகின்றது.

அரசனின் பெயரில் குளம் இருந்தச் செய்தியை

"கடுந்தேர்ச் செழியன் படைமாண்
பெருங்குளம் மடைநீர்" (நற்றிணை:340)

என்று நற்றிணைக் காட்சிப்படுத்துகின்றது.

நல்லாட்சிப் புரியும் மன்னன் புகழ் எப்போதும் உயர்ந்து நிற்கும்.அதனால் குலோத்துங்கச்சோழனே நீர்நிலைகளைப் பெருக்கி நெற்களஞ்சியங்களை நிரப்பி குடிமக்கள் வாழ்வை வளமாக்கி நற்புகழ் அடைந்திடுக என்று ஔவை பெருமாட்டி

"வரப்புயர நீருயரும்

நீருயர நெல்லுயரும்
நெல்லுயர குடியுயரும்
குடியுயர கோலுயரும்
கோலுயர கோனுயர்வான்" (ஔவையார்)

வாழ்த்திப் பாடுகின்றார்.

சோழநாட்டில் காடு திருத்தி நாடாக்கி,குளங்களை உருவாக்கி வளம் பெருக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு உறையூரை திருமாவளவன் விரிவாக்கியதைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார்

"காடு கொன்று நாடாக்கிக்
குளம் தொட்டு வளம் பெருக்கிக்
பிறங்குநிலை மாடத்து உறந்தை" (பட்டினப்பாலை:283:285)

என்கிறார்.

**குடிநீரத்திட்டம்**

சங்கத் தமிழர்கள் மக்கள் செல்லக்கூடிய வழிகள் தோறும் கிணறு, குளம், ஏரி, தண்ணீர் பந்தல் அமைத்து மக்கள் குடிப்பதற்கு குடிநீர்த் திட்டங்களை வகுத்துள்ளனர். இச்செயல் ஓர் அறச்செயலாகக் கருதப்பட்டுள்ளது.திரிகடுகம், இனியவை நாற்பது, பெரியபுராணம் முதலிய இலக்கியங்களில் குளம் வெட்டுவித்தல் என்பது மிக பெரும் அருஞ்செயலாக சுட்டப்பட்டுள்ளது.1400 ஆண்டுகளுக்கு முன்பே அப்பூதியடிகள் அப்பர் பெயரில் தண்ணீர்ப்பந்தல் அமைத்து நீர் அளிக்கும் அறம் நன்று என்பதை நிலைநாட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

"காவொடு அறகுளம் தொட்டல் மிக இனிதே"
(இனியவை நாற்பது-23)

'' குள நிறைந்த நீர்த்தடம் போல்
குளிர் தூங்கும் பரப்பினதாய்
வளமருவும் நிழற் தரு தண்ணீர் பந்தர்"
(பெரியபுராணம்- நாவுக்கரசர் புராணம் :பா.வரி. 1787)

"ஊர்உண் கேணி உண்தொக்க" (அகம்.399:1)

"குளம்தொட்டுக் கோடுபதித்து வழிசீத்து
உளம்தொட்டு உழுவயல் ஆக்கி வளம்தொட்டுப்
பாடுபடுங் கிணற்றோ டென்றிவ் வைம் பாற்படுத்தான்
ஏகும் சுவர்க்கத்து இனிது" (சிறுபஞ்சமூலம். 66)

''கூவல் குறையின்றி தொட்டானும்
....சாவா உடம்பெய்தினர்'' (திரிகடுகம்)

"நீரறம் நன்று நிழல் நன்று தன்னில்லுள்
பாரறம் நன்று பார்த்து உண்பானேல் பேரறம்" (சிறுபஞ்சமூலம்.63)

என்னும் மேற்கண்ட பாடலடிகள் உண்ணப்படுகின்ற நீர் குறைவுபடாதபடி கிணறுகளைத் தோண்டி வைத்தவனும், நீர்நிலைகளை உருவாக்கி அவற்றைச் சுற்றி மரக்கிளைகளைக் நட்டு வைப்பவனும் சொர்க்கம் புகுவான் என்றுரைக்கின்றன. நீரும், நிழலும், இல்லில் உணவளிப்பதும் பேரறம் என்று இக்காலத் தலைமுறையினருக்கு உணர்த்துகின்றன. மேலும் தமிழர்களின் குளம், கலிங்கு, வரத்துக்கால், மதகுகள், மிகைநீர்போகும்கால்கள் பொதுக்கிணறு அமைத்தல் என்ற பரந்துப்பட்ட

நீரியல் சுழற்சி முறையும் புலப்படுகின்றது. பழந்தமிழகத்தில் மன்னர்கள் தண்ணீர் பந்தல் அமைக்கும் திட்டத்தை மேற்கொண்டதை கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன.திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள சோழமாதேவி கிராமத்தின் கயிலாயமுடையார் கோயிலில் ராஜராஜன் பெயரில் அமைக்கப்பட்ட தண்ணீர் பந்தல் மண்டபம் இருந்ததற்கானக் கல்வெட்டு குறிப்புக் காணப்படுகின்றது.

**நீர் மேலாண்மை**

ஆற்று நீரையும் ஊற்று நீரையும் ஏரி, குளம், மதகு, மடு, அணை போன்ற இடங்களில் நீர் சேமிக்கும் முறை சங்ககாலம் தொட்டு இன்றுவரை நடைமுறையில் உள்ளது.

“ஊர்கால் நிலந்த பொதும்பருள் நீர்கால்” (கலித்தொகை:56:1)

“வறுமை உரிய மண்நீர் சிறுகுளம்”(அகநானூறு:55:8)

“பல்கேணி பிடி அடி நசைஇ” (அகநானூறு:137:2)

“நெடுவிளிக் கோவலர் கூவல் தோண்டிய” (அகநானூறு:55:8)

“நீர் மோதும் மதகுகளை உடைய உறையூர்” (அகநானூறு:237)

இப்பாடல் வரிகளின் வழியாக கால்வாய், குளம், கேணி, கூவல் என்று நீர் சேமிக்கும் அமைப்புகள் இருந்ததை அறிந்து கொள்ள முடிகின்றது.

நீர்நிலைகளின் தற்காலநிலை:

இக்காலத் தலைமுறையினர் ஆறுகளையும்,ஏரிகளையும் அழித்து குடியிருப்புகளாக மாற்றியும், நீர்நிலைகளில் கழிவுகளை கலந்தும்,நீர்சேகரிப்பு முறையினை மேற்கொள்ளாமல் நிலத்தடி நீரினை ஆழ்த்துளைக் குழாய்களால் உறிஞ்சியும் வருகின்றனர். இதனால் எதிர்கொள்ளவிருக்கும் அவலநிலையினைக் கவிஞர் இன்குலாப்

“நதி இழந்த ஒரு நாட்டின்
பழங்காட்சிச் சாலை
கண்ணாடிக் குடுவைகளில்
பார்வைக்கு வைப்பார்கள்
நதிகளை எல்லாம் ” (இன்லாப் -ஒவ்வொரு புல்லையும்-286)

என்றும், மற்றொருக் கவிஞன்

“என் தாத்தா ஆறு குளங்களில்
தண்ணீரைப் பார்த்தார்
என் தந்தை கிணறுகளில்
தண்ணீரைப் பார்த்தார்
நான் பிளாஸ்டிக் பாட்டில்களில்
தண்ணீரைப் பார்க்கிறேன்
என் குழந்தைகள்…………? ”

என்ற வினாவுடன் முடிக்கின்றார்.

மழை நீரை சேமிக்காது விடுவதால் மக்களின் வாழ்வாதாரத்திற்குப் பயன்படாது கடலில் கலந்துவிடுகின்றது.இதனால் மீண்டும் மேகம் மழை பொழிய மறுப்பதைக் கவிஞர் கபிலன்

“குடிநீரை
கடலில் கலக்கிவிட்டு
கடல்நீரை
குடிநீராக்குபவன்

தொப்பைக்கும் கர்ப்பத்திற்கும்
வித்தியாசம் தெரியாதவன்"

என்று எள்ளி நகையாடுகின்றார்.

நட்ட பயிரெல்லாம்
நீரின்றி கருக
விவசாயியும் ஆரம்பித்துவிட்டான்
தண்ணீரை காசு கொடுத்து பருக
ஆரம்பித்துவிட்டான். "

காலத்தைக் கணிப்பவன் கவிஞன் என்பது சரியானக் கூற்றுதான்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழர்கள் அறிவியல் சார்ந்த முன்மாதிரியான நீர் மேலாண்மை அறிவை கொண்டிருந்தனர் என்பதற்கு கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.மன்னர்கள் நீர் வளங்களை நன்முறையில் நிர்வகித்து அனத்துக் காலங்களிலும் பயன்படுத்தியுள்ளனர் என்பதை இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. ஆகவே நீரறமே அனைத்து வகையான அறங்களுக்கும் முதன்மையானது என்பதை அறிந்து

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்

என்னும் குறளுக்கேற்ப நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என்னும் நான்கு அரண்களில் முன்னிலை வகிக்கும் நீரரணைப் பாதுகாத்துள்ளனர்.

## 4. காதல்

மனிதனின் ஐம்புலன்களில் கண் முக்கிய இடம் வகிக்கின்றது. கண்களே உணர்வுகளை வெளிப்படுத்தியும், எதிர்பார்ப்புகளையும், ஏக்கங்களையும், ஆசைகளையும், கோபத்தையும், மகிழ்வின் வெளிப்பாடுகளையும், குற்றங்களையும், குறைகளையும் மெய்நிறுத்தி புலப்படுத்தும் உன்னதமானப் பணியை நுட்பமாக ஆற்றிவருகின்றது. ஓராயிரம் பக்கங்களில் எழுதி விளக்கக்கூடிய கருத்தை ஒரு நிமிடத்தில் தெரிவிக்கும் தொடர்பு சாதனம் கண். காலந்தோறும் விழிகளின் மொழிகளிலேயே காதல் பிறந்துள்ளது. சாகாவரம் பெற்ற சரித்திரக் காதலர்களின் காதலே, மரணமில்லா பெருவாழ்வுக்கு ஊன்றுகோலாக அமைந்திருந்தது கண்வழி தோன்றி புறத்தே வெளிப்பட்ட காதல் உள்ளத்தால் இரண்டற கலந்து மலர்ந்தமையை இலக்கியங்களின் வழி திரைப்படப் பாடல்களில் fhz;Nghk;.

**காதலும் மனிதமும்:**

மனித உயிர்களின் அடிப்படை ஆதாரமாக இருப்பது காதல் உணர்வு மட்டுமே. அறிவியல் தொழில் நுட்பத்தில் உச்சத்தைத் தொட்டாலும் உலகமே காதலால் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. பேதை பருவத்திலிருந்து பேரிளம்பெண் வரை உடலில் தோன்றும் மாற்றங்களைப் போலவே காதல் என்பதும் உள்ளத்தில் இயல்பாக இயற்கையாகத் தோன்றும் ஓர் மெய்ப்பாடு. அறிமுகம் இல்லாத ஆணும் பெண்ணும் சந்தித்த நொடியில் காதலில் வீழ்கின்றனர்.

தமிழ் மொழியின் தொல் இலக்கியமான சங்க இலக்கியங்களில் அன்பின் வழியது மட்டுமே உயிர்நிலை என்று வாழ்ந்ததற்கான சான்றுகள் விரவிக் கிடக்கின்றன.காதலைக் கொண்டாடும் இனமே மனிதம் போற்றும் இனமாக இருக்கமுடியும் என்பது திண்ணம்.

**"யாயும் ஞாயும் யார் ஆகியரோ?**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**செம்புலப் பெயல் நீர் போல**
**அன்புடைய நெஞ்சம் தாம் கலந்தனவே"**

**(குறுந்தொகை-40)**

என்று செம்புலப்பெயல் நீரார் பாடிய பாடலில் உன் தந்தைக்கும் என் தந்தைக்கும் என்ன உறவுமுறை, உன்னைப் பெற்றெடுத்தவர் யார் என்று தெரியாது,செம்மண் நிலத்தில் விழுந்த மழை நீரானது அந்நிலத்தின் தன்மையைப் பெறுவது போல நெஞ்சம் ஒன்று கலந்த நம் அன்பும் என்றும் பிரியாது, பிரிக்கவும் முடியாது என்று நெஞ்சுரத்துடன் அன்பு கலந்த உறவின் வலிமைப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**செம்புலப் பெயல் நீரும் திரையிசைப்பாடல்களும்**:

இருவர் படத்தில் இடம்பெற்றுள்ள கவிப்பேரரசு வைரமுத்துவின் நறுமுகையே என்று தொடங்கும் பாடலின் இடைவரிகளில் செம்புல பெயல் நீர் என்னும் தொடர் கையாளப்பட்டுள்ளது.

"யாயும் ஞாயும் யாராகியரோ
நெஞ்சில் நேர்ந்ததென்ன
யானும் நீயும் எவ்வழி அறிதும்
உறவு சேர்ந்ததென்ன
செம்புலம் சேர்ந்த நீர்த்துளி போல்
அன்புடை நெஞ்சம் கலந்ததென்ன"

(வைரமுத்து - இருவர் படம்)

சில்லுன்னு ஒரு காதல் என்ற திரைப்படத்தில் பாடப்பட்ட முன்பே வா என் அன்பே வா பாடலின் இடையில்

**''நீரும் செங்குல சேறும்**
**கலந்தது போல கலந்தவர் நாம்"**

**(வாலி - திரையிசைப்பாடல்)**

என்ற வரிகள் காதல் உள்ளங்களின் ஒன்றுபட்ட நிலையை கண்முன் நிறுத்துகிறது.ஒரு தங்க ரதத்தில் ஒரு பொன்மஞ்சள் நிலவு என்ற பாடலில் அண்ணன் தங்கை உறவை சொல்லுமிடத்து

**"செம்மண்ணிலே தண்ணீரைப் போல்**
**உண்டான சொந்தம் இது"**

**(கண்ணதாசன் - திரையிசைப்பாடல் )**

என்று செம்மண் சங்கமம் கூறப்பட்டுள்ளது.

**“செந்நில மேலே தண்ணீர்**
**சேர்ந்தது போலேஆனது நெஞ்சம்**
**நீ என்வாழ்க்கையின் சொந்தம்”**
**(கவிஞர் முத்துலிங்கம் - வெள்ளை ரோஜா -1983)**

என்று ஆசைக்கொண்ட நெஞ்சங்களின் உள்ளங்கள் கலந்ததை கேட்போரின் உள்ளம் கொள்ளைக் கொள்ளும் வகையில் கவிஞர் சித்திரித்துள்ளார்.2006 ஆம் ஆண்டில் வெளிவந்த சித்திரம் பேசுதடி என்ற திரைப்படத்தில்

**“யாயும் நீயும் யாரோ**
**எந்தை நுந்தை யாரோ**
**செம்புலநீராய் ஒன்றாய்க் கலந்தோமே”**
**(கவிஞர் கபிலன்- பட்டாம் பூச்சி)**

என்று செம்புலப் பெயல் நீரை இணைக்கிறார்.

2019 இல் கவிஞர் ஹமீர்

**“யாயும் ஞாயும்**
**யாராகியரோ எந்தையும்**
**நுந்தையும் எம்முறைக்**
**கேளிர் செம்புலப் பெயல்**
**நீர் போல் அன்புடை**
**நெஞ்சம்தாம் கலந்தனவே” (கவிஞர் ஹமீர் -சகா)**

என்ற குறுந்தொகைப் பாடலை முழுமையாக பயன்படுத்திப் பாடலைத் தொடங்கி இருப்பதிலிருந்து உயிருடன் கலந்த உண்மைக் காதலின் மெய்மைத் தன்மை ஒளிப்பிழம்பாக ஓங்கி நிற்கின்றது. குறுந்தொகையின் செம்புலப் பெயல் நீர் வரிகளின் ஆளுமை 1979 தொடங்கி 2019 வரை 6 திரையிசைப் பாடல்களில் இடம்பெற்று முத்திரைப் பதித்துள்ளது. 2000 ஆண்டுகள் கடந்த பின்னும் அதே காதல் அதே இன்பம்.

**“நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று”**
(குறுந்தொகை 3)

என்ற பாடல் வரியானது

“**நிலவும் வானும் நிலமும் நீரும்**
**ஒன்றைவிட்டு ஒன்று செல்லுமோ**
**நீயும் நானும் காணும் உறவு**
**நெஞ்சை விட்டு செல்ல எண்ணுமோ”**
**(கண்ணதாசன் . திரை இசைப்பாடல்கள்)**

என்பதில் பிரிக்கமுடியாதது காதல் என்பதை குறுந்தொகை ஆசிரியரும், கண்ணதாசனும் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளனர்.

சங்க இலக்கியத்தில் பாரி மகளிர் பாடிய

**"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்**
**எந்தையும் உடையேம் எம் குன்றும் பிற**
**இற்றைத் திங்கள் இவ்வெண்நிலவில்**
**குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே"**

**(புறநானூறு)**

என்னும் அற்புத வரிகளை உள்வாங்கி

**"அன்று வந்ததும் இதே நிலா**
**இன்று வந்ததும் அதே நிலா**
**என்றும் உள்ளது ஒரே நிலா**
**இருவர் கண்ணுக்கும் ஒரே நிலா**
**இருவர் கண்ணுக்கும் ஒரே நிலா"**

**"அன்றொரு நாள் இதே நிலவில்**
**அவர் இருந்தார் என் அருகே – நான்**
**அடைக்கலம் தந்தேன் என் அழகை – நீ**
**அறிவாயோ வெண்ணிலவே"**

**(கண்ணதாசன்-திரை இசைப்பாடல்கள்)**

என்று படைக்கப்பட்ட பாடல்கள் இவை.

**காதல் மந்திரம்**

எத்தனை யுகங்கள் ஆனாலும் காதல் மந்திரச் சொல்லே. காதல் என்ற வார்த்தை காமத்தோடு தொடர்புடையது என்று நினைத்தக் காலத்தில் உண்மையான காதல் மெய்ப்பாடு மனநிறைவை அளிப்பது, சாதிக்கத் தூண்டுவது என்று உலகிற்கு குரல் கொடுத்ததோடு ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்தியவரும் பாரதி. இதனை

**"காதலினால் மானுடர்க்கு கல்வி உண்டாம்**
**கலவியிலே மானுடர்க்கு கவலை தீரும்**
**காதலினால் மானுடர்க்கு கவிதை உண்டாம்**
**கானம் உண்டாம் சிற்பம்முதல் கலைகளுண்டாம்**
**ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே**
**அஃதன்றோ இவ்வுலகத் தலைமை யின்பம்?**
**காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்**
**கவலைபோம்,அதனாலே மரணம் பொய்யாம்"** **(பாரதியார் -காதலின் புகழ் - 49) )**

என்னும் கவிதை வரிகளில் காதலின் புகழை மெய்ப்பிக்கின்றன்றார்.

**கண்களும் காதலும்**

உயிரினங்கள் தோன்றிய நாள் முதல் நீண்டு வரும் உணர்வே காதல். காதல் என்பது ஆசை, அன்பு, நட்பு, காமம், விரகம் ஆகிய உணர்வுகளில் ஒன்று அல்லது இவைகள் அனைத்தும் கலந்த ஒரு உணர்வு என்று பெரியார் சொல்கிறார்.

வள்ளுவர் இன்பத்துப்பாலில் 'காதல் சிறப்புரைத்தல்' என்ற அதிகாரத்தில் காதலர்களின் உள்ளக்கிடக்கையை நுட்பமாக வெளிப்படுத்தியுள்ளார். கண்கள் தலைவனைப் பார்க்க வைத்து காதல் கொள்ள வைத்ததையும், இன்றுவரை துன்புறுத்தி அழவைத்ததையும்

**"கண்தாம் கலுழ்வ தெவன் கொலோ தண்டாநோய்**
**தாம்காட்ட யாம் கண்டது" (குறள்: 1171)**

என்று சொல்லி புலம்புகிறாள். கண்ணின் ஆழமான உணர்வோட்டங்களைத் துல்லியமாக உணர்த்தும் வள்ளுவர் உளவியல் கண்ணோட்ட அளவீட்டாளராகக் காட்சியளிக்கிறார்.

காதல் ஆராய்ந்து அறிந்து வருவதல்ல. பார்த்தவுடன் ஏற்படும் உணர்வு பரிமாற்றத்தில் பிறந்த குழந்தையின் உற்சாகம் போன்றது. விரும்பிய உள்ளங்களைத் துன்புறுத்தும் தொழிலையும் நிகழ்த்த அது தவறவில்லை என்பதை,

**"தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்**
**பைதல் உழப்பது எவன்" (குறள்: 1172)**

என்று புலம்பும் பெண்ணின் கூற்று உறுதிப்படுத்துகிறது.

மிதிலையில் கன்னிமாடத்தில் சீதையும் கீழே சாலையில் நடந்து செல்லும் இராமனும் யதார்த்தமாகக் கண்கள் கலந்து காதல் வயப்படும் காட்சியைக் கம்பர்,

**"எண்ணரு நலத்தினாள் இனையள்**
**கண்ணொடு கண்ணினை கவ்வி ஒன்றையொன்று**
**உண்ணவும் நிலை பெறாது உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்**
**நோக்கு எனும் பாசத்தால் பிணித்து**
**இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்"**
**(மிதிலைக் காட்சிப்படலம் -35)**

என்ற பாடலில் எண்ணுவதற்கு அரிய நலன்களைக் கொண்டவள் (சீதை) நின்றிருக்க அண்ணலும் (ராமன்) அவனைப் பார்த்தான். அவளும் அவனைப் பார்த்தாள். அவர்களுடைய கண்கள் ஒன்றை ஒன்று கவ்வி உண்டன. இருவரும் நிலை தடுமாறினர். அண்ணலும் நோக்கினாள் என்பதில் உள்ள உம்மை சீதையும் நோக்கினாள் என்பதையும் அவளும் நோக்கினாள் என்பதில் உள்ள உம்மை இராமனும் நோக்கினான் என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறது. இருவருடைய உணர்வுகளும் ஒன்றாகிவிட்டன (காதல் வயப்படுகிற) என்று திருமாலின் அவதாரமாகிய இராமனுக்கும் சீதைக்கும் ஏற்பட்ட காதலை விரித்துச் சொல்லும் கம்பனின் போக்கு கற்போரைக் காதலில் நிலைக்கொள்ளச் செய்கிறது.

பாலில் கலக்கும் ஒருதுளி மோர் பால்முழுவதையும் தயிராக்கி விடுவது போல் கண்களின் வழியே சீதைக்குள் நுழைந்த காதல் நோய் அவள் உடல் முழுவதும் பரந்து வருந்தியதை,

**"கண்வழி புகுந்த காதல் நோய்**

**பால் உறுபிரை என பரந்தது எங்குமே"**

**(மிதிலைக்காட்சிப் படலம் -41)**

என்கிறார் கம்பர். மகிழ்ச்சியூட்டிய காதலே மகிழ்ச்சியை நீக்கவும் வல்லதாக இருந்தது என்பதை இதைவிட வேறுவிதத்தில் சொல்ல இயலாது.காமத்திற்குரிய இருவருள் ஒருவர் கண்களோடு நோக்குவதை

**"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல"(குறள் – 1100)**

என்பதில் காணமுடிகிறது.

**"ஒருபார்வையாலே என்னை உறைய வைத்தாய்**

**சிறு புன்னகையாலே என்னை உருக வைத்தாய்"**

**( உயிரின் உயிரே- திரைப்படம்)**

**"உன் பார்வையில் ஓராயிரம்**

**கவிதை நான் எழுதுவேன்**

**காற்றில் நானே**

**நிதமும் உன்னை**

**நினைக்கிறேன்"**

**(அம்மன் கோவில் கிழக்காலே, 1986 - கங்கை அமரன்)**

அன்பு மிகும் பொழுது பார்வை ஒன்றே போதுமே என்பதனையே இலக்கியப் பாடல்களும் திரைப்படப் பாடல்களும் உணர்த்துகின்றன.

**காதல் வலி**

காதலனை நெடுங்காலம் பிரிந்திருக்கும் தலைவி(தன்வாழ்க்கை) நம்பிக்கை இழந்த நிலையில் காதலனைக் காணாமலேயே தன் இன்னுயிர் பிரிந்துவிடுமோ என்று அஞ்சிய நிலையில் தோழியிடத்து,

**"சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவேன்**

**பிறப்புப் பிறிது ஆகுவதாயின்**

**மறக்குவேன் கொல் என் காதலன் எனவே"**

**(நற்றிணை -397)**

என்றுரைக்குமிடத்து சாவதற்கு அஞ்சவில்லை. நான் இறந்துவிட்டால் மறுபிறப்பில் என் காதலனை மறந்து விடுவேனோ என்று தான் அஞ்சுகிறேன் என்று தன் ஆற்றாமையைக் குறிப்பிடுகிறாள்.

**“செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க்கு உரை” (குறள்.1151)**

என்று காதலின் வலிக்குத் துயரத்தின் உச்சதிற்கு உயிர்ப்பூட்டுகின்றார் வள்ளுவப் பெருமான்.

**“காதல் காதல்**
**காதல் போயின் சாதல்” (பாரதியார் - குயில் பாட்டு)**

காதல் மோதலை மட்டும் ஏற்படுத்தாது சாதலையும் விளைவிக்கும் என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி உயில் எழுதி வைக்கின்றார்.

சிறிய கிளையில் பாரம் தாங்காமல் தொங்கும் பெரிய பலாப்பழம் போல, காதல் வயப்பட்ட தலைவியின் காதல் மிகப்பெரியது என்றும் ஆனால் அதை தாங்கும் அளவுக்கு அவள் உயிர் பெரிதல்ல, மிகச் சிறியது என்று பெண்ணின் காதல் உணர்வுகளை,

**“சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங் கிவள்**
**உயிர்த்தவச் சிறிது காமமோ பெரிதே”**

**(குறுந்தொகை -18)**

என்று காதல் வலி பதிவு செய்யப்பட்டுள்ளது.

காதல் தேன் அருந்தி சுவைத்ததை சுவைப்படக் கூறியவர்களில் திருவள்ளுவருக்கு அடுத்ததாகக் கண்ணதாசனைக் கூறலாம்.

**காதலே போ! காதலே போ!**
**சாதலே வா! சாதலே வா! (வசந்தமாளிகை)**

என்னும் பாடல் சான்றாக அமைகின்றது.

**காதல் புலம்பல்:**

**“அற்றைத் திங்கள் அவ் வெண் நிலவில்,**
**எந்தையும் உடையேம்; எம் குன்றும் பிறர் கொளார்**
**இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவில்,**
**வென்று எறி முரசின் வேந்தர் எம்**
**குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே!”**

இப்புறப்பாடலைத் தன் காதலனைப் பிரிந்த காதலி பாடுவதாக

**“அன்றொரு நாள் இதே நிலவில்**
**அவர் இருந்தார் என் அருகே**
**நான் அடைக்கலம் தந்தேன்**
**என் அழகை**
**நீ அறிவாயே வெண்ணிலவே”**

**(கண்ணதாசன் திரையிசைப்பாடல்கள் பக்.48)**

என்று வெண்ணிலவிடம் அன்று அவர் இருந்தார், இன்று அவர் இல்லை, அதனால் இன்று போய் நாளை வா! என்று சொல்லுவதாக அமைந்திருப்பதைக் காணலாம்.

காதல் இரசித்து சொல்லவும் காதல் உணர்ச்சிகளைக் கவிதைகளாக கொட்டவும் தெரிய வேண்டும். காதலராய் இருப்பதற்கும் காதலிப்பதற்கும் காதலைத் துணிந்து சொல்லும் தகுதி வேண்டும் என்பதை உணர்த்தும் திரைப்படப்பாடல்கள்

**மானல்லவோ கண்கள் தந்தது**

**மயிலல்லவோ சாயல் தந்தது**

**தேனல்லவோ இதழைத் தந்தது**

**சிலையல்லவோ அழகைத் தந்தது**

**பேசுவது கிளியா - இல்லை**

**பெண்ணரிசி மொழியா**

**கோயில் கொண்ட சிலையா**

**கொத்து மலர்க் கொடியா**

முன்னோரின் கதைகளைக் காதலித்து அவற்றை கவிதையாக்கி இதிகாச, புராணக் கதைகளைக் காதலிக்க வைத்த ஒரு காதற்கவிஞன் கண்ணதாசன்.

இதே போன்று கவிப்பேரரசு வைரமுத்துவும்

**அற்றைத் திங்கள் அந்நிலவில்...**

**நெற்றிதரல நீர்வடிய...**

**கொற்றப் பொய்கை ஆடியவள் நீயா...**

**அற்றைத் திங்கள் அந்நிலவில்...**

**நெற்றிதரல நீர்வடிய...**

**கொற்றப் பொய்கை ஆடியவள் நீயா...**

**(ஆயிரம் பாடல்கள் - வைரமுத்து பக் -.568)**

இலக்கியப் பாடல்களை முழுமையாகவோ அல்லது அதன் வரிகளில் சிலவற்றையோ எடுத்து திரையிசைப் பாடல்களில் இணைத்து பாடலை உருவாக்கி அன்றும் இன்றும் பயன்படுத்தி வருகின்றனர்.

கற்பனையின் ஊற்று சங்க இலக்கியம். சங்க இலக்கியத்தின் தாக்கம் இல்லா பாடல்கள் இல்லை. தமிழ்த் திரை கண்ணதாசன், வாலி, வைரமுத்து, பா.விஜய், தாமரை, சங்க இலக்கியத்தின் தாக்கம் தமிழ்த் திரைப்படப் பாடல்களையும் தமிழ் இலக்கியத்தையும் அவ்வளவு எளிதில் பிரிக்க முடியாது. 2000 ஆண்டுகளுக்கு முன்பே விழியில் நுழைந்த காதல் இதயம் வழிச் சென்று இன்று ஈரத்துடன் செழித்து வளர்ந்து விருட்சமாகியுள்ளது தெளிவாகின்றது.

5. மலர்களின் பயன்பாடு

சங்க இலக்கியத்தில் மலர்களைக் குறிக்கப் பல்வேறுச் சொற்களைப் பயன்படுத்தி உள்ளனர். அவை வீ, மலர், அலர், அலரி, பூ என்பனவாகும். மனித வாழ்க்கையில் மலர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மலர்களின் வாயிலாகப் பல்வேறு சமூக நிகழ்வுகளையும் நிலவளத்தினையும் வாழ்வியல் விழுமியங்களையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது. சங்க இலக்கியங்களில் ஏறத்தாழ 150 மலர்கள் இடம் பெற்றுள்ளன.

காடுகள், மலைகள், வயல்வெளிகள், நீர்நிலைகள் என்று பல்வேறுபட்ட இடங்களில் மலர்களைக் காணமுடிகின்றன. மலர்கள் மலர்கின்ற இடத்தினை அடிப்படையாகக் கொண்டு நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ என்று வகைப்படுத்தலாம். கலித்தொகை பூக்களை

கொடிப்பூ**,** கோட்டுப்பூ செடிப்பூ புதற்பூ (கலித்தொகை**-28)**

என்று வகைப்படுத்தியுள்ளது. வாழ்வியல் நிகழ்வுகளுக்குள் சங்கமிக்கும் மலர்களின் பயன்பாட்டினைக் காண்போம்.

**இறைவழிபாடு**

மலர்கள் கடவுள் வழிபாட்டில் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. மகளிர் மாலைப்பொழுதில் மலர்த்தூவி இறைவனை வழிபடுவதை வழக்கமாக கொண்டிருந்திருக்கின்றனர். இதனை,

'ஐயவி சிந்தி நறைபுகைத் தாய்மலர் தூஉய்க்
கொய்யாக் குறிஞ்சி பல பாடி" (புறப்பொருள் வெண்பாமாலை-79)

'பலிகொடுத் துருவச் செந்தினை குருதியோடு தூஉய் "
(அகநானூறு-22)

'சிறுதினை மலரொடு விரைஇ" (திருமுருகாற்றுப்படை-218)

'திரும்புசெய் விளக்கின் னீர்ந்திரிக் கொளீஇ
'நெல்லும் மலரும் தூஉய்க்கை தொழுது
---------------------------மாலை அயர"(நெடுநல்வாடை 42-44)

'நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ்அலரிதூஉய் கைதொழுது"(முல்லைப்பாட்டு :8-10)

என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

இதிலிருந்து நெல்லுடனும், தினையுடனும், குருதியுடனும், பூக்களைக் கலந்து மாலை நேரத்தில் மகளிர் இறைவனை வணங்கியமைப் புலப்படுகின்றது.

மருதநிலத்து உழவர்கள் உலகிற்கு உயிரென விளங்கும் இந்திரனைத் தெய்வமாக வணங்கி மலர்த்தூவி இந்திரவிழா நிகழ்த்தினர். இதனை

இந்திரவிழாவிற் பூவின் அன்ன (ஐங்குறுநூறு-21)

என்னும் பாடல் வழி உணரமுடிகின்றது.சிலப்பதிகாரமும் மலர் வழிபாட்டினை

“அகனக ரெல்லா மரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகன்மாய்ந்தமாலை"
(சிலம்பு -9:1-3)

என்று சுட்டிக்காட்டியுள்ளது.

அந்தணர்கள் முருகப்பெருமானை வழிபட்டதை

“ஆறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி
விரையுறு நறுமல ரேந்திப் பெரிதுவந்
தேரகத் துறைதலுமுரியன்’’

(திருமுருகராற்றுப்படை 186-89)

என்று குறிப்பிடும் பாடலில் மலர்த்தூவி வணங்கியது வெளிப்படுகின்றது.ஆறெழுத்து மந்திரத்தைச் சொல்லி மலர்க் கொண்டு தொழும் முறைக்கு மந்திரபுட்பம் என்று பெயர்.

பொழுதறிதல்

முன்னோர்கள் பூக்கள் மலரும் பொழுதினை வைத்துக் காலத்தைக் கணக்கிட்டுள்ளனர்.

'செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்
தவ்வித ழவிழ்பதங் கமழப் பொழுதறிந்து" (நெடுநல்வாடை 40-41)

மக்கள் குளிர்க்காலத்தில் தங்களது கடமைகளைச் செய்ய இயலாது வீட்டிற்குள் முடங்கிக் கிடந்தனர். அப்பொழுது பிச்சிப் பூவின் நறுமணம் வீசியது. அந்நறுமணத்தைத் நுகர்ந்து மாலைப்பொழுது வந்து விட்டது என்பதை அறிந்துக் கொண்டனர் என்று பாடல் தெரிவிக்கின்றது.

'செறியிலைக் காயா அஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி"(முல்லைப்பாட்டு 93-97)

கார்காலம் வந்து விட்டதை முல்லை நிலத்தில் மலர்ந்த காயா கொன்றை, கோடல், தோன்றி முதலியப் பூக்கள் அறிவுறுத்தியதாக கூறப்பட்டுள்ளது.

‘‘மடவமன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங்கு அத்தம் சென்றோர் கூறிய
--------------------------------------
வம்ப மாரியைக் கார் என மதித்தே" (குறுந்தொகை -240)

பொருள்வயிற்பிரிவு மேற்கொண்டத் தலைவன் கொன்றைப்பூ மலரும் கார்காலத்தில் வருவேன் என்றுரைத்துப் பிரிந்துச் செல்கின்றான். அக்காலம் வந்துவிட்டது. ஆனால் தலைவன் வரவில்லை என்று தலைவி வருந்துகிறாள். இதிலிருந்து முன்னோர்கள் தங்கள் செயல்களுக்குரிய காலத்தை நிர்ணயம் செய்வதற்குப் பூக்களின் மலர்ச்சியைக் கணக்கிட்டுள்ளத் திறன் தெளிவாகின்றது.

'புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போற் பீரமொடு புதற்புதன் மலர"(நெடுநெல்வாடை-14-15)

முசுண்டையும்,பீர்க்கமலரும் அரும்பும் காலம் கூதிர்காலமாகக் கருதப்பட்டுள்ளது.

'பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்கெயிறாக
நகுமேதோழி நறுந்தண் காரே"(குறுந்தொகை 126)

இப்பாடலில் கார் காலத்தைக் காட்டும் கருப்பொருளாக முல்லைப் பூ இடம் பெற்றுள்ளது.

'தாழ்வின் நொச்சி சூழ்வன மலரும்
மௌவல் மாச்சினைக் காட்டி
அவ்வளவு என்றார் ஆண்டு செய்பொருளே" (அகநானூறு - 23)

மேற்கொண்ட வினையை முடித்துத் திரும்பும் காலத்தை தலைவன் உரைக்கும் பொழுது மலர்கள் மலரும் காலத்தையே நினைவில் நிறுத்திச் செல்கிறான்.

மங்கலப்பொருள்

மலர் மங்கலப்பொருள்.பெண்கள் பூக்களை விரும்பி அணிந்துக் கொண்டனர்.உடலின் வெம்மையைத் தணித்துக் கொள்ளவும், கணவனுடன் வாழும் பெண்கள் அணியும்,மங்கல அணியாகவும், நறுமணப் பொருளாகவும் விளங்கியுள்ளது. சூரர மகளிர் செண்பகப் பூவினைத் தலையில் சூடியதை,

'பெருந்தண் சண்பகம் செரீஇ (திருமுருகாற்றுப்படை-27)
குறமகள் மலர் அணிந்ததை
நறுமல ரணிந்த நாறிடு முச்சிக்
குறமகள் --------------------------"(மலைபடுகடாம்-182)

என்றும்,வேங்கைப்பூவினை குறிஞ்சி நில மகளிர் பெரிதும் விரும்பினர். அதனால் வேங்கை மரத்தில் ஏறிப் பூக்கொய்வர்.அப்போது பஞ்சுரம் என்னும் பாலைப் பண்ணைப் பாடுவதுப்பற்றி

வேங்கை கொய்யுநர் பஞ்சுரம் விளிப்பினும் (ஐங்குறுநூறு-311)

என்றும், ஒதுங்குவதற்கு நிழல் இல்லாத சுரத்தில், கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து தப்புவதற்கு வெள்ளோத்திர மலர்களை மலைந்ததை

''மால் வெள்ளோத்திரத்து மைஇல் வால்இணர்'' (ஐங்குறுநூறு -301)

என்றும்,பரதவ குலப் பெண்கள் மணலையுடைய மனை முன்றில் சுறவின் கொம்பினை நட்டு, வெண்டாளியினது பூவால் உருவாக்கப்பட்ட மாலையையும் தாழையினது மலர்களையும் சூடியதை

''வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்
மடற்றாழை மலர் மலைந்தும்"(பட்டினப்பாலை 85-86)

என்றும், கூதிர்காலத்தில் பெண்கள் சிலமலர்கள் அணிந்ததை

'பல்இருங் கூந்தல் பெய்மார்"(நெடுநெல்வாடை 54)

என்றும் இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

உணவு

வேனிற் காலத்தில் இருப்பை மரப்பூக்கள் மிகுதியாகப் பூக்கும். இப்பூக்கள் நிலத்தில் உதிர்ந்துக் கிடக்கும்.இருப்பை மலர்களை மானினங்கள் தங்களது உணவாக உட்கொள்வதை

''அம்குழை இருப்பை அறைவாய் வான்புழல்
புல்லுளைச் சிறாஅர்வில்லின் நீக்கி
மரை கடிந்தூட்டும் வரையகச் சீறூர்"(அகநானூறு-107)

'பெருவரை வேட்கை பொன்மருள் நறுவீ
மானின் பெருங்கிளை மேயல் கடும்கானகம்" (ஐங்குறுநூறு-217)

என்பதின் வழியாக அறிந்துக் கொள்ளமுடிகின்றது.

"எல்லி மலர்ந்த பைங்கொடி அதிரல்
பெரும்புலர் வைகறை அரும்பொடு வாங்கி
கான யானை கவளங் கொள்ளும்" (அகநானூறு-157)

யானை அதிரல் பூவை மட்டுமன்றி அதன் கொடியினையும் சேர்த்து உண்ணும் செய்திப் பெறப்படுகிறது.

'ஒரு வேள் வெண்பூ வெண்டயிற் கொளீஇ
ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை" (புறநானூறு-215)

'செழும் செய் நெல்லின் விளைகதிர் கொண்டு

கடந்தான் ஆம்பல் மலரொடு கூட்டி" (அகநானூறு-78)

என்னும் பாடல் வேளை பூவை மோரிலிட்டு புளிக்கூழ் செய்தும், ஆம்பல் மலரை ஒருவகைப் பக்குவப்படுத்தி களியாக்கி சோற்றுடன் உண்டனர் என்ற செய்தியைத் தெரிவிக்கின்றது.

நீர்ப் பூக்களில் தாமரை, குவளை, நெய்தல், கழுநீர் ஆகிய மலர்களை எருமை விரும்பி உண்ணுகின்றன.

''எருமை --------------------------

நெய்தலும் புதுமலர் மாந்தும்'' (அகநானூறு - 100)

''கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை'' (சிறுபாணாற்றுப்படை-42)

‘''ஆம்பல் மெல்லடை கிழியக் குவளைக்

கூம்புவிடு பன்மலர் மாந்தி"(அகநானூறு 56)

என்று இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

கரடியின் விருப்பமான உணவு புற்றாஞ்சோறு. இருப்பை மலர்கள் தேன் போன்று இனிக்கும். ஆகவே இருப்பை மலர்களைத் தின்று வெறுத்த பின்பு புற்றாஞ்சோற்றை நாடுகின்றன என்று

''இருங்கிளை எண்கின் அழல்வாய் ஏற்றைக் கருங்கோட்

இருப்பை வெண்பூ முனையின்

பெருஞ்செம் புற்றின் இருந்தலை இடக்கும்" (அகநானூறு-247)

அகநானூறு அறிவிக்கின்றது.

மேலும் புதிய இலைகளுக்காக மரங்களின் மேலே ஏறுவதும் உண்டு. வண்டு, தேனி, தும்பி, எறும்பு இவைகளுக்கு மலர்களின் தேனும் தாதும் உணவாக அமைகின்றன.

மலர்கள் இறைவழிபாட்டிலும், மங்கல நிகழ்வுகளிலும் காலம் காட்டும் கருப்பொருளாகவும் நறுமணப் பொருளாகவும், நங்கையர்கள் சூடிக் கொள்ளும் அழகுமிக்க அணியாகவும், பறவைகள், விலங்குகள், மக்களினங்களின் உணவுப் பொருளாகவும் விளங்கியுள்ளது.

## 6. மீன்கள்

சங்க இலக்கியத்தில் மீன்கள் மாந்தர்களின் வாழ்வியலை விளக்கும் கருப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெண்களின் கண்களுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளன. கடல் தரும் உணவு வகைகள் மீன்களும்; ஒன்று. மீன்களுள் பல்வேறு வகைகள் உள்ளன. மூவேந்தர்களுள் பாண்டியர்களின் கொடியாக மீன் கொடி இருந்துள்ளது.எனவே இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள மீன்களின் வகைகளையும் மீன் பிடித்தொழில் நிகழ்ந்துள்ளமையையும்,பாணர்கள் மீன்பிடித்தல் தொழிலில் ஈடுபட்டிருந்ததையும்,மீன் உணவு சமைத்த விதத்தினையும், நாரை, கொக்கு முதலிய பறவைகளுக்கு மீன்கள் உணவாக அமைந்ததைனையும்,மீன் என்னும் கருப்பொருளின் வழியாக தலைமக்களின் உள்ளக்கிடக்கையையும் காண்போம்.

**மருதநிலம்**

கொக்கு கொத்தியப் பொழுது அதனின்று தப்பிய நீருள் மறைந்த கெண்டைமீன் பக்கத்தில் உள்ள தாமரையின் வெண்மையான தாமரைமொட்டைக் கண்டு அதுவும் கொக்கோ என்று அஞ்சுகின்றது.இத்தகைய வயல் சூழ்ந்த தோட்டம் என்று கூறுவதிலிருந்து மருதநிலத்தில் கெண்டைமீன்கள் மிகுதியாக இருந்துள்ளது தெளிவாகின்றது. இதனை

“குருகுகொளக் குளித்த கெண்டை அயலது
உருகெழு தாமைா வான்முகை வெரூஉம்
கழனிஅம் படப்பை” (குறுந்தொகை -127)

என்ற பாடலின் வழியாக அறிந்துகொள்ளமுடிகின்றது. மேலும் மருதநிலத்திலுள்ள ஆழமான குளங்களில் கெண்டைமீன்கள் ஏராளமாக இருந்ததை

“குண்டுநீர் இலஞ்சிக் கெண்டை கதூஉம்” (குறுந்தொகை -91)

என்னும் பாடல் பதிவு செய்கின்றது.இல்லங்கள் தோறும் நெற்கூடுகள் நிரம்பியிருப்பதை போலவே பொய்கைகள் முழுவதும் வாளைமீன்கள் துள்ளிவிளையாடி கொண்டிருக்கின்றன என்றுரைப்பதிலிருந்து மருதநில மீன்வள மேலாண்மையும் மக்களின் பொருளாதாரப் பெருக்கத்திற்கான காரணிகளுள் ஒன்றாக மீன்வளர்ப்பும் இருந்துள்ளது என்பதை

“ நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
நெல்லுடை நெடுநகர்க் கூட்டுமுதல் புரளும்”(புறம் -287)

என்னும் புறப்பாட்டு எடுத்துரைக்கின்றது.

காண்போர் வியக்கும் வண்ணம் மருதநில நீர்பரப்பு முழுவதும் அயிரைமீன்கள் நிறைந்திருந்ததை நெடும்பல்லியத்தையார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்;

“அயிரை பரந்த அம்தண் பழனத்து” (குறுந்தொகை -178)

ஒப்புமை

போர்க்களத்தில் வில், வாள், வேல் போன்ற பல்வகை கருவிகளை வீரர்கள் பயன்படுத்தி போர்புரிவது வழக்கம். வீரர்கள் தங்களது உயிரையும் பொருட்படுத்தாது போர்புரிந்ததை புறஇலக்கியங்களில் காணமுடிகின்றது. சாத்தந்தையார் பாடிய கரந்தை திணைப்பாடலில் வேலுக்கு ஒப்புமையாக கெண்டைமீனை மொழிகின்றார். அதுமட்டுமன்றி வயலில் திரியும் கெண்டை மீன்கள் போன்று வேல்கள் வந்து பாய்ந்தாலும் அஞ்சி ஓடாத வீரர்கள் என்று மறவர்களின் நெஞ்சுரத்தை

“வயற் கெண்டையின் வேல் பிறழினும்” (புறம் -287 -4)

என்னும் பாடல்வழி கண்முன் நிறுத்துகின்றார்

“ சுறவினத்து அன்ன வாளோர் மொய்ப்ப” (புறம் 13)

என்று மற்றொரு புறப்பாடல் வீரர்கள் போர்புரிந்த வாள் சுறாமீன்களை போன்று இருந்ததாக குறிப்பிடுகின்றது.மதுரை மருதன் இளநாகனார் பாடிய

" --------------------செந்தலை அன்றில்

இறவின் அன்ன கொடுவாய்ப் பெடையொடு"(குறுந்தொகை -160)

என்னும் பாடலில் கூதிர்காலத்தில் சிவந்த கொண்டையை உடைய அன்றில் பறவை தன்பெடையுடன் தடாமரத்தின் உயர்ந்த கிளையில் கூட்டில் தங்கியிருக்கும் இப்பருவத்திலும் தலைவன் வரவில்லை என்று தலைவி வருந்தும் குறிஞ்சித்திணைப் பாடலில் பெண் அன்றில் பறவையின் வாயானது இறால்மீனை போன்று வளைந்திருப்பதாக உரைக்கின்றார்.

**உள்ளுறை உவமம்**

" உள்ளுறுத்து இதனோடு ஒத்து பொருள் முடிகென

உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்" ( தொல்காப்பியம் -994)

என்று தொல்காப்பியர் உள்ளறை உவமத்திற்கு இலக்கணம் கூறுகின்றார்.அகப்பாடல்களில் பெரும்பான்மையும் உள்ளுறை உவமம் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது.

ஐங்குறுநூற்றில் புறத்தொழுக்கத்திலே ஈடுபட்ட தலைவன் நீண்ட நாள்கழித்து இல்லத்திற்கு திரும்பி வருகிறான். நான் இல்லாத காலத்தில் எவ்வாறு இருந்தீர்கள்? என்று தோழியிடம் வினவினான்.அதற்கு பதிலளித்த தோழி; அவனது புறத்தொழுக்கத்தை சுட்டிக்காட்டி காஞ்சிமரத்தினைப் போன்று நறுமணம் உடைய தலைவியை பிரிந்து சென்று புலால் நாற்றம் வீசும் பரத்தையைச் சென்று சேர்ந்த தலைவன் வாழ்க என்று வாழ்த்தினோம் என்றாள். அவளது கூற்றில் தலைவனது பரத்தமை ஒழுக்கம் தகாதது என்னும் குறிப்பு உள்ளடங்கியுள்ளது.இக்கருத்தினை

"நனையக் காஞ்சி சினைய சிறுமீன்

யாணர் ஊரன்" (ஐங்குறுநூறு - 1)

என்ற ஓரம்போகியார் பாடலில் காணமுடிகின்றது. தலைவன் இன்பம் நுகர்வதற்கு தானே பரத்தையை நாடிச் சென்றுள்ளான் . இதனை

"கணைக்கோட்டு வாளைக் கமஞ்சூல் மடநாடு

துணர்த்தேக் கொக்கின் தீம்பழம் கதூஉம்"(குறுந்தொகை -164)

என்னும் காதற்பரத்தை கூற்றின் வழி அறியமுடிகின்றது.

**நாரை - உணவு**

கடலில் தோன்றும் அலைகள் மீன்களை இடம்பெயரச் செய்கின்றன.அதனால் நாரைக் கூட்டமும் பெயர்ந்து சென்று அயிரை மீன்களைத் தின்கின்றன.இக்காட்சியை

"தண்கடற் படுதிரை பெயர்த்தலின் வெண்பறை

நாரைநிரை பெயர்ந்து அயிரை ஆரும்" (குறுந்தொகை -166)

என்பதின் வழியாக உணரமுடிகின்றது. மேலும்

"நாரை திண்தேர்ப் பொறையன் தொண்டி முன்துறை

அயிரை ஆர் இரைக்கும்" (குறுந்தொகை -128)

என்னும் பாடலும் நாரையின் உணவாக அயிரை மீன் அமைவதை எடுத்துரைக்கின்றது.மீன் இனங்களை உண்ணும் நாரைகளுடன் பனைமரத்தின் மீது அன்றில் பறவைகள் தங்கியிருப்பதை

"இனமீன் அருந்து நாரையொடு பனைமிசை

அன்றில் சேக்கும் முன்றில்"(அகநானுறு -360; 16-17 )

என நெய்தல் நிலப்பாடல் உரைக்கின்றது. மருதநிலத்தில் நெற்கதிர்களை அடித்தப் பின்பு குவித்து வைத்திருக்கும் வைக்கோல் போர்களில் கயல்மீனை உண்ட நாரைகள் , அப்போர்களைத் தங்களது உறைவிடமாகக் கருதி தங்கியிருக்கின்றது.இக்கருத்தினை விளக்கும் பாடல் பின்வருமாறு

“கயல்ஆர் நாரை போர்வில் சேக்கும்” (ஐங்குறுநூறு : மருதக்கலி –9)

**கொக்கு -உணவு**

நெய்தல் நிலத்தில் உள்ள பெருங்கழியில் நெய்தல் மலர்கள் ஏராளமாக மலர்ந்திருக்கும். நெய்தல் நில கடற்கரை சோலையில் தங்கியிருக்கும் கொக்கு நெய்தல் மலரை நீக்கி அருகில் உள்ள மீனைக் கொத்தி உண்ணும். இதனை

“நெய்தல்இருங்கழி நெய்தல் நீக்கி
மீன் உண் குருகுஇனம் கானல் அல்கும்” (ஐங்குறுநூறு -184)

என்ற பாடல் மூலம் தெரிந்து கொள்ளமுடிகின்றது.

மீன் உணவு

சோழநாட்டு உழவர்கள் வயலிலிருந்து நெல்லரிக் கட்டோடு மயிலினம் உகுத்த மயிற்பீலிகளையும் தொகுத்து வருவாராயினும் அந்நாடு கொழுத்த மீனையும் விளைந்த கள்ளையும் மிகுதியாகப் பெற்றிருக்கும் என்று சோழநாட்டின் வளத்தை முடமோசியார்

“பழன மஞ்ஞை உகுத்த பீலி
கழனி உழவர் சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன் விளைந்த கள்ளின்” (புறம் -13)

என்று சித்திரிக்கின்றார்.

“மோட்டுஇரு வராஅல் கோட்டுமீன் கொழுங்குறை” (புறநானூறு -399;:5)

என்னும் புறப்பாடல் பெரிய வறால் மீனின் இறைச்சியையும் கொம்புகளை உடைய சுறாமீனின் இறைச்சியையும் உண்ணும் வளமான நாடு சோழநாடு என்று சுட்டுகின்றது.உழவரின் உண்கலங்களில் கெடிற்று மீன் உணவுடன் பூவுடன் கலந்த கள்ளும் மிகுந்திருக்கும் கரும்பன் ஊரனின் கிணையர் நாங்கள் என்;று அரசனைப் புகழ்ந்து பாடும்

“விழவு இன்றாயி;னும் உழவர் மண்டை
இருங்கெடிற்று மிசையொடு பூங்கள் வைகுந்து
-----------------கிணையேம் ” (புறநானூறு -384)

என்னும் புறத்திணை நன்னாகனாரின் பாடலும் மீன் உணவு உண்டமையைப் புலப்படுத்துகின்றது.வாளைமீன்கள் துள்ளி பாயும் வளமான நிலம் மருதநிலம். மருதநிலத்து உழவர் முல்லை நிலத்தில் தம் எருதுகளை மேயவிட்டுச் சிறிய முயல்களின் குலைவான இறைச்சியுடன் வாளைமீனைக் கொண்டு பலவகையாகச் செய்யப்பெற்ற அவியலைப் பழைய சோற்றுடன் உண்பர் என்னும் செய்தியை

“இருஞ்சுவல் வாளை பிறழும்” (புறநானூறு -322)

“மென்புலத்து வயல் உழவர்
வன்புலத்து பகடு விட்டு
குறுமுயலின் குழைச் சூட்டோடு
பழஞ்சோற்றுப் புகவு அருந்தி” (புறநானூறு -395)

என்று மதுரை நக்கீரரும் ஆவூர்கிழாரும் மொழிகின்றனர்.

நெல் விளையும் வயலில் பறவைகளை ஓட்டுபவர் நீர்க்காலில் பிடித்த மீனைப் பனைமடலால் சுட்டு கள்ளைக் குடித்து நிறையப் பெறாதவராய் தென்னையின இளநீரைப் பறித்து மகிழ்வர். இதனை உறையூர் முதுகண்ணன் சாத்தனார்

“நெல்விளை கழனிப்படு புள்ஓப்புநர்
ஒழிமடல் விறகின் கழிமீன் சுட்டு

வெங்கதிர் தொலைச்சி" (புறநானூறு -29:13-15)

என்று பழங்காலத்தில் மீனை சுட்டு உண்ணும் வழக்கம் தமிழரிடையே இருந்துள்ளமையை செப்புகின்றார்.

**மீன் வேட்டை:**

பாலைநிலத்தில் உள்ள இருப்பைப் பூ போன்ற மென்மையான தலையை உடைய இறாமீன்களையும் பிறமீன்களையும் வலைக் கொண்டு பிடிப்பதற்காக பரதவகுடிச் சிறுவர்கள் சென்றனர். அவ்வாறு சென்ற சிறுவர்கள் கூர்மையான வாள் போன்ற சுறாமீன்களையும் ஊன் நிறைந்த பலவகை மீன்களையும் கொண்டு வந்து தரையில் குவித்தனர். இச்செய்தியை

" அத்த இருப்பைப் பூவின் அன்ன
துய்த்தலை இறவொடு தொகைமீன் பெறீஇயர்
வரிவலைப் பரதவர் கருவினைச் சிறார்
-------------------------------------------------
வாள்வாய்ச் சுறாவொடு வயமீன் கெண்டி"( நற்றிணை -111)

என்ற நற்றிணைப் பாடல் பதிவு செய்கின்றது.

அலைகள் மோதும் கடற்கரையை உடைய கடலில் மீன்பிடிக்கச் செல்லும் நெய்தல் நிலத்;தலைவன் முள் பொருந்திய இறால் மீனைக் கொண்டு வந்து சேர்த்ததை

"முட்கால் இறவின் முடங்குபுறப் பெருங்கிளை
புணரி இருதிரை தரூஉம் துறைவன்"(குறுந்தொகை -169)

என்னும் வரிகள் வாயிலாக அறியமுடிகின்றது.

ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் அன்று மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். பரதவகுலப் பெண்ணொருத்தி மீன் பிடித்ததை

'' -------மீன்கொள் பாண்மகள்
தான்புனல் அடைகரைப் படுத்த வராஅல்'' (அகநானுறு - 141)

என்னும் அகப்பாடல் சுட்டிக்காட்டுகின்றது.

**மீன் சமைத்தல்**

தலைவி மோதிரம் அணிந்த மென்மையான விரல் சிவக்குமாறு வாளைமீனைக் கொணர்ந்தாள். மீனின் அடிப்பகுதி பருத்திருந்ததால் உண்பதற்கு ஏற்ற வகையில் பொடிப்பொடியாக நறுக்கினாள். கண்கள் புகையுண்ண நெற்றியில் வியர்வைத்துளி அரும்ப மீன் சமைத்தக் காட்சியை

" சிறுதாழ் செறித்த மெல்விரல் சேர்ப்ப
வாளைஈர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகைஉண்டு அமர்த்த கண்ணள் தகைபெறப்
பிறைநுதல் பொறித்த"(நற்றிணை -120)

என்று மாங்குடிகிழார் செப்புகின்றார்.

மீன் விற்றல்:

மீனை விற்று அதற்குப் பண்ட மாற்றாகப் பெற்ற நெற்குவியல் வீட்டின் மேல் தூணிப் போல் காண்போரை மயக்கும்.இதனை

"மீன் நொடுத்து நெல்குவைஇ
மிசைஅம்பியின் மனை மறுக்குந்து " (புறநானூறு -343; :1-2)

என்கிறது புறப்பாடல்.

நெடிய மூங்கிலால் அமைந்த தூண்டிலால் பிடித்த மீனை விற்று, அதற்கு மாறாக கிணைமகள் ஆக்கிய நீரலமான புளிங்கூழை உரிய பொழுதில் பெற்ற செய்தியை

" நெடுங்கழைத் தூண்டில் விடுமீன் நொடுத்து
கிணைமகள் அட்ட பாவல் புளிங்கூழ்" (புறநானூறு -399;:15-16)

என்று குறிப்பிடுகின்றது.

"பசுமீன் நொடுத்த வெண்ணல் மாஅத் தயிர்மிதி
மிதவை ஆர்த்துவம் நினக்கே" (அகநானூறு -340)

என்னும் பாடலில் பகற்குறி வந்த தலைவனிடம் தோழி பச்சையான மீனை விற்றுப் பெற்ற வெண்நெல்லினது மாவைத் தயிர்விட்டுப் பிசைந்து ஆக்கிய கூழினை உன் குதிரைகள் உண்ணத் தருவோம் என்று உரைப்பதிலிருந்து மீன் விற்றல் தொழில் நடைபெற்றதை புலனாகின்றது.

பாணச் சாதிப் பெண்கள் மீன் விற்றதை (குறுந்தொகை 330)

'' நலத்தகை புலத்தி பசை தோய்ந்து எடுத்து ''என்று சுட்டுகின்றது.

மீன்களின் வகைகளையும் மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்ததையும் மீன் விற்பனை
நிகழ்ந்துள்ளமையையும் மீன் உண்ணும் வழக்கம் இருந்துள்ளமையையும் இல்வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள தலைமக்களின் பண்புகளைப் புலப்படுத்தும் கருப்பொருளாக விளங்கியிருந்தமையும் புலப்படுகின்றது.

## 7. நம்பிக்கை

நம்பிக்கை மக்களால் உருவாக்கப்படுகின்றன. பின்னர் அவை சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. மனிதனின் தன்னல உணர்வும், சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. மனிதன் வாழ்வில் முதன்மைப்பெற்று விளங்குவது நம்பிக்கை.

**நம்பிக்கையின் தோற்றம்:**

மனித மனத்தின் விழைவால் நம்பிக்கை தோன்றுகிறது. இயற்கையால் படைக்கப்பட்டுள்ள பொருள்களுக்கும், மனிதனின் செயல்களுக்கும் தொடர்பு உண்டு என்ற கருத்தேற்றத்தின் அடிப்படையில் அவை தோன்றியனவாக காட்சித் தருகின்றன.நம்பிக்கைகள் வழக்கில் மிகுதியாகவும், இலக்கியங்களில் குறைந்தும் காணப்படுகின்றன.எனவே இலக்கியங்கள் சுட்டிக்காட்டும் நம்பிக்கைகள் அனைத்தும் சமுதாயத்தின் நம்பிக்கைகள் என்று கூற முடியாது.நம்பிக்கைகள் உருவாகிய நிலையினை திட்பமாக கூறவியலாது. அவை மனிதன் இயற்கையின் பாதிப்புக்கு மிகுதியாக உட்பட்டிருந்த அறிவு வளர்ச்சியின் தொடக்கக் காலத்தில் தோன்றியிருக்கலாம். புதினம் முழுவதும் மக்களின் உணவுமுறை, தொழில்முறை,அவர்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், அவர்களின் சமூக அணுகுமுறைகள் போன்ற அனைத்துக் கூறுகளையும் எதார்த்தமான நடையில் வெளிப்படுத்தியுள்ளார்.

**சோதிடம்:**

இன்றைய சமூகத்தில் தன்னம்பிக்கையை இழந்து சமூகத்தில் பெரும்பாலான மக்கள் தன் வாழ்க்கையை சோதிடர்கள் கையில் ஒப்படைத்து விடுகின்றனர்.

ஒவ்வொருச் செயலையும் தொடங்குவதற்கு முன்பு நாளும், பொழுதும், நன்னிமித்தமும் பார்த்துத் தொடங்குவது தமிழ் மக்களிடம் தொன்று தொட்டு இருந்து வந்துள்ளது. இவ்வழக்கம் பண்டைய கிரேக்க, ரோமானிய நாகரிகங்களிலும் நிலவியதாக வரலாற்றாசிரியர் குறிப்பிடுகின்றனர். தமிழ் இலக்கியங்களிலும் நிமித்தம் பார்ப்பதைக் காணமுடிகின்றது.

"எழுவணிச் சீறூர் இருள் மாலை முன்றிய
குழுவினங் கைகூப்பி நிற்பத் - தொழுவில்
குடக்கண் ஆக் கொண்டுவா என்றாள் குனிவில்
தடக்கையாய் வென்றி தரும்" (புறப்பொருள் வெண்பாமாலை)

திருமணம் என்பது ஆண், பெண் இருவரின் மனப் பொருத்தம் பார்த்து முடிவதில்லை. இருவரின் சாதகப் பொருத்தம் பார்த்தே திருமணம் நிச்சயிக்கப்படுகின்றது. இன்று பல பெண்களின் வாழ்க்கை நிலை சோதிடத்தினால் கேள்விக் குறியாக உள்ளது. பல பெண்களுக்கு சாதகத்தில் தோசனம் இருப்பதாகக் கூறி திருமணம் தடைப்பட்டு கொண்டே இருக்கின்றது. பெண்களுக்கு, திருமணம் என்பது வெறும் பகற்கனவாகி விட்டது.

புதினத்தில், வடிவாம்பாளுக்கு திருமணம் தடைப்பட்டு நிற்கிறது. அவளுடைய சாதகத்தில் தோசம் இருப்பதாக சோதிடர் கூறுகின்றார். "ஒனக்கு புடிச்சிருக்குற தோசத்தை இன்னம் இருவத்தி ரெண்டு நாளக்குள்ள கழிக்கணுமுன்னு சொல்லிப் புட்டாங் குறும்புக்காரங். இல்லன்னா வயத்துவலி வருமாங் இன்னம் என்னென்னமோ செய்யுன்னாங்" என்று சுந்தராம்பாள் வடிவாம்பாளிடம் கூறினாள்.

பெண்கள், மாத விலக்கின் போது பயன்படுத்தும் துணியை மற்றவருக்கு தெரியாமல் கொளுத்தி விட வேண்டும், இல்லையெனில் அதில் கூட தோசம் ஏற்படும் என்று மக்கள் மூட நம்பிக்கையை கொண்டு இருக்கிறார்கள். வடிவாம்பாள் ஜாதகத்தில் நாகதோசம் ஏற்பட்டதுக் குறித்துச் சுந்தராம்பாள் கூறுகையில்,

"நாக தோசங்தாங். நீ காய வச்சத் துணிய பொறாந்து தூக்கிக்கிட்டுப் போயி பாம்புப் புத்துக்கிட்டப் போட்டுட்டாம். நல்ல பாம்பும் தீண்டிப்புட்டுதான் தோசம் உச்சத் துலருக்குன்னு சொல்லுறான் அத்தாளு" என்கிறாள். இதிலிருந்து கிராமப்புற மக்களின் இயல்பான மூட நம்பிக்கையை உணரமுடிகிறது.

சோதிடர்கள் தங்கள் வாழ்க்கைப் பிழைப்பிற்காக மக்களை ஏமாற்றி வருகின்றனர். கிராமப்புறங்களில் பூசாரிகள், பேய் ஓட்டுதல், பூசை போடுதல், தொலைந்தப் பொருளைக் கண்டறிதல் போன்ற பல காரணங்களுக்காக ஆடு, கோழி போன்றவைகளையும் பணத்தையும் பறிக்கின்றனர். சோதிடர்கள் சாதகத்தில் உள்ள தோசங்களை கழிக்க பல வகையில் மக்களிடம் பணம் பறிக்கின்றனர். வடிவாம்பாளுக்கு நாகதோசம் இருந்தது. அதனால் சோசியர்,

"காதோல கரிகமணி, பாம்பு படமெல்லாம் வாங்கிக்கிட்டு போய் கடலுல முழுவி, கட்டியிருந்த துணியோட இதெல்லாம் கடலோட வுட்டுட்டு திரும்பி பார்க்காம வரச்சொன்னாங். வந்து கொளருவாக் கோயிலுல ஒரு அரிச்சின பண்ணிக்கிட்டு வரச் சொல்லியிருக்குறாங்" என்று சுந்தராம்பாள் கூறினாள்.

**சகுனம்:**

மக்கள் தங்கள் வாழ்வில் ஏற்படும் தடைகளுக்கு சகுனங்களையே காரணம் கூறுகின்றனர். சகுனங்களில் நல்ல சகுனங்களும் உண்டு. தீயச் சகுனங்களும் உண்டு. இதனை சங்ககாலத்தில் நிமித்தம் என்பர். நிமித்தம் என்பது வாழ்வில் பின் நிகழவிருக்கும் நன்மைத் தீமைகளைச் சில

குறியீடுகளின் வாயிலாக முன்னுணர்த்துவதாகும். பழங்கால மக்கள், சகுனத்தைப் புள், நிமித்தம் ஆகிய இர சொற்களால் காட்டியுள்ளனர்.

"புணர்தல், பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் அவற்றின் நிமித்தம்
என்றிவை தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே"

(தொல்காப்பியம்)

என்ற நூற்பாவிலிருந்து நிமித்தம் என்ற சொல்லாட்சி பயின்று வந்துள்ளது தெரிகின்றது.நிமித்தம் என்ற சொல்லுக்குத் தமிழ்ப் பேரகராதி காரணம், நிமித்தம், சகுனம், அடையாளம், பொருட்டு என்ற ஐந்து பொருட்களைச் சுட்டுகின்றது.

"நிமித்தங்கள் நம்பிக்கையின் பாற்பட்டன. நம் செயல்களுக்கும் தம் வயப்படாத இயற்கையின் நிகழ்வுகளுக்கும் தொடர்காட்டுவது நிமித்தங்களின் செயற்பாடாகும். இயற்கை நிகழ்வுகளுக்கும், மனிதனின் செயல்களுக்கும் தொடர்புண்டு என்ற கருத்தேற்றத்தின் அடிப்படையில் அவை நம்பப்படுகின்றன. நிமித்தங்கள் அச்சத்தின் அடிப்படையில் தோன்றியிருக்கலாம் என்பர்" .

காகம், ஆந்தை போன்ற பறவைகளும் இயற்கைக்கு மாறுப்பட்ட செயல்களும் நிமித்தம் காரணியாகக் கொள்ளப்பட்டன.

புதினத்தில் பல இடங்களில் சகுன நம்பிக்கையை காண முடிகின்றது. சுந்தராம்பாள், தன் மகள் வடிவாம்பாளுக்கு சாதகத்தில் உள்ள தோச நிவர்த்திக்காக அவளை அழைத்துச் செல்கிறாள். அப்போது அவர்கள் தொடர்வண்டிச் செல்லும் வழியில் சில கழுதைகள் குட்டிகளுடன் வருகின்றன.

"நல்ல சவுனம் தாங்... ரெண்டு மூணு நட கழுதக் குறுக்க பெயிட்டு..."என்றாள்.நற்காரியத்திற்காகச் செல்லும்பொழுது கழுதைகள் குறுக்கே வருவது நல்ல சகுனமாகக் கருதப்பட்டுள்ளது.

சுந்தராம்பாளும் அவளது மகள் அஞ்சாம்பாளும் பலாப்பழம் பறிப்பதற்காக காட்டிற்குச் செல்கின்றனர். அப்பொழுது பலா மரத்தில் உள்ள எறும்புகள் சுந்தராம்பாளின் கண்முளியில் கடித்து விடுகின்றது. எனவே சுந்தராம்பாள் வலியினால் துடிக்கிறாள். "வூட்டவுட்டு கௌம்பும் போதே பூன குறுக்க ஓடுச்சி, அப்பவே நெனச்சங் இப்புடி ஏதாவது நடக்குமுன்னு.." என்றாள் சுந்தராம்பாள். இதன் மூலம் சகுனம் குறித்த நம்பிக்கை மக்களிடையே இருந்து வந்துள்ளமைப் புலப்படுகின்றது.

சுந்தராம்பாள் அசதியில் எவ்வளவு நேரம் தூங்கினாள் என்று தெரியவில்லை. நள்ளிரவில் ஆந்தை அலறும் சத்தம் கேட்டு எழுந்து வந்துப் பார்த்தாள். பள்ளக் கொல்லைக்குள் விழுந்து கிடந்த மரத்தில் உட்கார்ந்து ஆந்தை அலறிக் கொண்டிருந்தது."நாதியத்த ஆந்த எங்க வந்து ஒக்காந்துக் கிட்டு அலறுத பாரு நாங்கதாம் பஞ்சத்துல பசியகொட ஏலம் போட்டு வித்துக்கிட்டு இருக்கிறோமே இன்னமும் என்ன கெடனுமுன்னுட்டு இஞ்ச வந்து ஒக்காந்துக் கிட்டு அலறுற" 18 என்று சுந்தராம்பாள் பனக்குடுக்கையை தூக்கி வீசி ஆந்தையை விரட்டினாள். ஆந்தை அலறுவது கெட்டச் சகுனத்தின் அறிகுறி என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.சமூகத்தில், கணவனை இழந்த பெண்கள் எந்த சுபகாரியங்களிலும் முன் நிற்கக்கூடாது என்ற பழக்கம் நிலவி வந்துள்ளது. நற்காரியமாக செல்லும்போது அவர்கள் முகத்தைப் பார்ப்பது நல்லதல்ல என்று நினைத்தனர்.

வடிவாம்பாள் கணவன் இழந்த நிலையில் தாய் வீட்டிற்கே வந்து விடுகிறாள். சுந்தராம்பாள், புதிதாக அளம் வாங்குகிறாள். அளத்திற்கு உப்பு வேலை செய்ய சுந்தராம்பாள், வடிவாம்பாளை அழைக்கின்றார். "புதுசா வாங்குன அளம் மொமொத உப்பு வேல செய்யப் போறிய நா எதுக்கு மின்னாடி வந்து நிக்கமுன்னுதாங்" என்று வடிவாம்பாள் அளத்திற்கு வர மறுத்துவிடுகிறாள்.

இயற்கைக்கு மாறுபட்ட நிகழ்வுகளும் நிமித்தங்களாகக் கருதப்பட்டன. கொல்லையில் தொம்மட்டி காய்கள் பூத்துக் குலுங்கி கிடந்தன. சுந்தராம்பாள் மகள்கள் கூடை, கூடையாய் காய்களை அறுத்து வீட்டில் சேர்த்தனர். வடிவாம்பாள், எல்லாவற்றையும் அறுத்து ஊறுகாய் போட்டு விற்கலாம் என்றாள். அதற்குச் சுநந்தராம்பாள், "இப்படி காச்சிக் கெடக்குறதே நல்லதுக்கு இல்ல. எதுவுமே அதிசயமா வௌஞ்சாலும் காச்சாலும் அது கெடுதலுக்குதாங் அறிகுறிம்பாவோ. ஒண்ணு வூட்டுக்காரவ வொளுக்கு ஆவாது இல்லென்னா ஊருக்கு ஆவாது" இவ்வாறு விளைச்சலில் சகுனங்களை நம்பினார்கள்.

மனிதன் உயிருடன் இருக்கும் பொழுது பிடித்தமான உணவினை செய்து தருவதில்லை. ஆனால் இறப்பிற்குப் பிறகு காரியம் செய்தல் என்னும் பெயரில் பிடித்தப் பதார்த்தங்களை வைத்துப் படைக்கின்றனர்.வடிவாம்பாளின் கணவன் பொன்னையன் அவன் ஆரோக்கியமாக வாழ்ந்தவரை சகோதரிகள் ஒருவரும் கவனிக்கவில்லை. ஆனால் கீழே விழுந்த உயிருக்கு போராடுகின்ற நிலையில்,

"காச கரச்சிவூத்துறங் குடிச்சிட்டு அடங்குடா பொன்னையா அடங்குடா. பவுனக் கரச்சி வூத்துறங் குடிச்சிட்டு அடங்குடா பொன்னையா அடங்குடா, நீ தேடுன மண்ணயெல்லாங் கரச்சி வூத்தறங் அடங்குடா பொன்னையா" என்று அவன் உயிர் பிரிவதற்காக ஒவ்வொன்றையும் கரைத்து ஊற்றினார்கள்.

**மூட நம்பிக்கை:**

மூட நம்பிக்கை என்பது மக்களின் மனப் போக்கினைப் பொறுத்தே அமைகின்றது. உப்பளத்தில் மினி இருப்பதாக எல்லோரும் நம்பினார்கள். சுந்தராம்பாளும் அஞ்சாம்பாளும் உப்பெடுத்து வரும்போது, கருவைக் காட்டுக்குள் இருக்கும் மினிக்குப் பயப்படுகிறார்கள். அளத்து மினிக்கு எல்லோரும் வேண்டுதல் செய்கிறார்கள். எதுவும் செய்யாமல் அலட்சியப் படுத்துபவர்களை மினி சும்மா விடாது. வீடுவரை நாய் போல வந்து தனக்கு வேண்டியதை வாங்கிக்கொண்டு தான் போகுமாம் என்று நம்பினர்.

"வயத்துக் கஞ்சிக்கி ஆவுமேன்னுதாங் அள்ளிக்கிட்டுப் போறம் ஒவ்வுப்ப அள்ளிக் கொண்ட போயி கட்ட ஆசப்படல என்னையும் யாம்புள்ளயயும் ஒண்ணும் பண்ணிப்புடாத" என்று வேண்டிக் கொண்டாள். ஒருமுறை வடிவாம்பாளும், சுந்தராம்பாளும் காட்ட வழியே, அகஸ்தியம் பள்ளிக்குச் சென்றுக் கொண்டிருந்தனர். அப்போது பாதையில் மண்மேடு ஒன்று இருந்தது.

"இராமரு இந்த காட்டுலதான் சீதையக் காணாமுன்னு அலஞ்சாராம். காடெல்லாஞ் சுத்தித் தேடியும் எங்கவும் கெடக்கலன்னு வொடன்ன இந்த மண்ணு முட்டு மேல ஏறி நின்னு பாத்தாராங். எலங்கையில சீத இருந்தது தெரிஞ்சிச்சாம். அவரு நின்னு பார்த்த அடி அப்புடியே காத்துல மழயில கரயாம பதிஞ்சி பெயிட்டாம்" என்று அந்த மண்மேடு இராமர் பாதம் என இருவரும் பாதத்தைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார்கள். மக்கள் தங்கள் நோய்களுக்கு மருத்துவரை நாடுவதைவிட அதிகம் மந்திரவாதிகளையே நாடியுள்ளனர். அவர்கள் மந்திரித்துக் கொடுக்கும் பொருளால் நோய் குணமாவதாக நம்பினார்கள்.

"யாருக்காவுது ஏதாவது ஒடம்பு சவுகரியமில்லாமல் சக்கர வாங்காந்து குடுப்பாவோ இந்த மறக்காருகிட்ட, அத அவரு ஒதிக்குடுப்பாரு. ஓதிக் கொடுத்த சக்கரய வாங்கிக் கிட்டுப் போனாக்க எப்புடியாப்பட்ட சீக்கும் தேவலயா பெயிடுமாம்" என்று சுந்தராம்பாள் தன் மகள் வடிவாம்பாளிடம் மறக்காயர்ப் பற்றிக் கூறினாள்.

**இறை நம்பிக்கை:**

நம் மனக்குறைகளை தீர்த்து வைத்தால், சாமிக்கு காணிக்கைச் செய்கிறோம் என்று வேண்டிக் கொள்வது தொன்று தொட்டே இருந்து வந்துள்ளது.மனிதர்கள் இறைவனிடம் மிகுதியாக நம்பிக்கை வைத்து இறைவனிடம் முறையிடுவதன் மூலம் துன்பங்களும் குறைகளும் தீரும் என்று நம்பினார்கள்.

வெளியூருக்குச் சென்ற சுந்தராம்பாள் கணவன் திரும்பவில்லை. அவள் பல தெய்வங்களை வேண்டுகின்றாள். நொண்டி வீரன் சாமி கத்தி மீது ஏறி நின்று வாக்கு சொல்வதைக் கேட்க, சனங்களெல்லாம் ஆவலோடு இருந்தார்கள். சுந்தராம்பாள் தன்னுடையப் பெண்களை பக்கத்தில் நிற்க வைத்துக் கொண்டு சாமியைப் பக்தியோடு வேண்டினாள்.

“சாமி! அடுத்த வரப்புக்கு ஒனக்கு கிடா வெட்டுறாங். யாம் புருசன கொண்டாந்து சேர்ந்துடு” என்று சுந்தராம்பாள் வேண்டிக் கொண்டாள். சுந்தராம்பாள் என்னும் கதை மாந்தர் மூலம் இறை நம்பிக்கையை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளதை உணர முடிகிறது.

இறைவன் மீது மிகுந்த நம்பிக்கையுடன் தன் கணவன் திரும்பி வருவான் என்று நினைத்தவள், அவன் வராததைக் கண்டு கோயில் பக்கம் தலைவைத்துக் கூட படுக்கவில்லை. புயல் அடித்து, ஊருக்குள்ளே வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. ஊர் சனங்கள் எல்லோரும் ஊரை விட்டு வெளியேறினர். சுந்தராம்பாள் வீட்டில் அவள் பிள்ளைகள் அனைவரும் ஓயாது உழைத்துப் பல தானியங்களைச் சேர்த்து வைத்திருந்தனர்.

“ஆவுத்திக்காத்த! ஒண்ணுஞ் செய்யக்கொடா.. யாம் புள்ளைவொ ஒழச்சி கொண்டாந்து வச்சது வெள்ளத்தோட போயிடக் கொடா. கைக்கு எட்டுனத்த வாய்க்கு எட்டாம பண்ணிப்புடாத” என்று சுந்தராம்பாள் எதை எதையோ நினைத்து வேண்டிக் கொண்டாள். ஒவ்வொரு முறையும் நெற்பயிர் வளர விதைகளை தூவும் பொழுதெல்லாம் அவை வெள்ளத்தில் மூழ்கி விடுகிறது. இதனால் வடிவாம்பாள் “ஆவுத்தி காத்தா நீயிருந்தா எங்கள காப்பாத்து… எங்க கொல்ல யெல்லாம் நல்லா வெளயணும். ஆவுத்த காத்தா… ஆம்புளத் தொணயில்லாம எங்களுக்காவ கெடந்து கஷ்டப்படுற எங்கம்மாவ ஏமாத்திப்புடாத” என்று மனமுருக வேண்டினாள்.தங்களின் மனக்குறைகளை இறைவனிடம் எடுத்துரைத்து வேண்டிக் கொள்வது மக்களின் இயல்பு. மேலும் குறைகள் நீங்கும் வரை இறைவன் மீது நம்பிக்கை கொள்கின்றனர்.குறைகள் நீங்காத நிலையில் நம்பிக்கையை இழக்கின்றனர்.

தொகுப்புரை:

இவ்வியலில் நடப்பியல், சோதிடம் பற்றிய நம்பிக்கை, சகுனம் பற்றிய நம்பிக்கை, மூட நம்பிக்கை, இறை நம்பிக்கை போன்றவற்றை பற்றி அறிய முடிகிறது.

## 8. மகளிரின் வளர்நிலை

சங்ககாலத்தில் பெண்கள் சுதந்திரமாக தாங்கள் விரும்பிய நேரத்தில் விரும்பிய விளையாட்டை விளையாடி மகிழ்ந்துள்ளனர்.மனைவாழ்க்கையில் ஆற்ற வேண்டிய கடமைகளை சிறப்பாக ஆற்றியுள்ளனர்.நாட்டுவாழ்க்கையில் முழு ஈடுபாட்டுடன் விளங்கியுள்ளனர்.பொருளாதார வளர்ச்சிக்காக தொழில் முனையவும் முற்பட்டனர்.விழாக்காலங்களில் மகிழ்ந்தும்,விருந்தோம்பலைச் செவ்வனே ஆற்றியும்,அறநெறிகளில் வழுவாதும்,பண்பாட்டு நெறிகளிலிருந்து பிறழாமலும்,மக்கட்பேற்றின் பெருமையை நிலைநிறுத்தியும்,கற்புநெறி திறம்பாமலும் வாழ்ந்தமையை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது
தமிழ்மொழி செவ்வியல் மொழி என்பதற்கு அடிப்படை ஆதாரங்களாக விளங்குபவை சங்க இலக்கியங்களே. இவ்இலக்கியங்கள் காதலையும் வீரத்தையும் உலகப் பொதுமையாகக் குறிப்பிடுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் முகிழ்ந்த சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து எழுந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும். மொழிக்கும் வாழ்க்கைக்கும் இலக்கணம் நவிலும் தொல்காப்பியமும், இறையனார் அகப்பொருளும், இரட்டைக்காப்பியங்கள் என்று அழைக்கப்படும் சிலப்பதிகாரமும்; மணிமேகலையும், மூவேந்தர்களின் சிறப்பினை உரைக்கும் முத்தொள்ளாயிரமும், தமிழை உலகச் செம்மொழி வரிசையில் இடம்பெறச்செய்தன என்றால் மிகையாகாது.

"தமிழ்-செம்மொழியே என்னும் நூலில் சுந்தரராசன் சங்ககாலம் என்பது கி.மு ஐந்தாம் நூற்றாண்டு முதல் கி.பி இரண்டாம் நூற்றாண்டு வரை உள்ள காலமாகும். இந்த எழுநூறு ஆண்டுக்கால பரப்பில் வளர்ந்த தமிழ் இலக்கியங்கள் தமிழ்மொழியான் உயர்தனிச்செம்மொழிக் கோட்பாட்டை உலகிற்கு உணர்த்தி நிற்கின்றன என்கிறார், (தமிழ்செம்மொழியே-சுந்தரராசன்-பககம்;-27)

### வாழ்க்கைக்கூறுகள்

**அகம்**

| விளையாட்டு | களவு | கற்பு |
|---|---|---|
| 1.நீராடல் | 1.காதல் | 1.இல்லற மாண்பு (வறுமையிலும் செம்மை) |
| 2.கழங்காடல் | 2.உடன்போக்கு | 2.மக்கட்பேறு |
| 3.பந்தாடல் | 3.அறத்தொடு நிற்றல் | 3.விருந்தோம்பல் |
| 4.பூப்பறித்தல் | | 4.பொருள் வயிற் பரிவு |
| 5.துணங்கையாடல் | | |
| 6.சிற்றல் இழைத்தல் | | |
| 7.வண்டலயர்தல் | | |
| 8.பாவை விளையாட்டு | | |
| 9.குரவையாடுதல் | | |

10.கிளிக்கடிதல்

**விளையாட்டு**

விளையாட்டு என்பது மக்களின் நாகரிகத்தோடும் பண்பாட்டோடும் இணைந்த ஒன்று. மக்கள் வாழ்ந்த கூ+ழ்நிலைக்கும் நிலத்தின் தன்மைக்கும் ஏற்ப விளையாட்டுக்கள் அமைந்துள்ளன. ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கே மிகுதியான விளையாட்டுக்கள் இருந்துள்ளன. பொதுவாக இளமகளிர் அக்காலத்தே கவலையில் தோயாமல் எப்பொழுதும் மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர். விளையாடும் மகளிர் கூட்டத்தினைக் குறிப்பிடும் பொழுதெல்லாம் சங்ககாலப் புலவர்கள் "ஓரையாமம்" "பொய்தல் மகளிர்" என்று குறிப்பிடுகின்றனர்.

"விளையா டாயமொடு ஓரை யாடாது

இளையோர் இல்லிடத்திற் சென்றிருத்தல்

அறனும் அன்றே ஆக்கமும் தேயமென" ( நற்றிணை-பா.எண்-68)

என்னும்; பாடலில் மகளிர் வீட்டின் வெளியே சென்று விளையாடமலிருப்பது அறமாகாது என்றும், அவர்கள் விளையாடச் செல்லவில்லை என்றால் செல்வம் தேய்ந்து விடும் என்றும் உரைக்கப்பட்டுள்ளது.

**வண்டல் அயர்தல்**

பூக்களைப்பறித்து வயல்களிலும் மணலிலும் அமர்ந்து விளையாடும் விளையாட்டு வண்டல் அயர்தல். அடும்பின் பூக்களைப் பறித்து விளையாடியதையும், இல்லிற்கு இரவு சென்றதையும்

"----------------அடும்பின்

ஒண்டொடி மகளிர் வண்ட லயரும்" (குறுந்தொகை-பா.எண்-243)

"வண்டலாயமொ டுண்டுறைத் தலைஇ"

(பெரும்பாணாற்றுப்படை-பா.எண்-311)

"வளைவாய் கோதையார் வண்டல் தைஇ

பகலே எம்மொடு ஆடி இரவே

காயல் வேய்ந்த தேயா நல்கில்" (அகநானூறு-பா.எண்-370)

என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.அச்சத்தை நீக்கி உற்சாகமான மனவெழுச்சியைத் தூண்டக்கூடிய ஆற்றல் விளையாட்டிற்கு உண்டு. ஆகையால் விளையாடுவதற்கு என்று நேரத்தை வகுக்கவில்லை. மகளிர் மனமகிழ்ச்சியடையும் வரை விளையாடி சோர்வுற்றப் பின்பு இல்லத்திற்கு வந்துள்ளனர் என்பதிலிருந்து உளரீதியான இன்பத்தை அனுபவித்துள்ளனர் என்று தெளிவாகின்றது.

**நீராடல்**

மகளிர் சுனைகளிலும், அருவிகளிலும், ஆறுகளிலும், குளங்களிலும் நீராடி மகிழ்ந்துள்ளனர்.

"யாறும் குளனும் காவும் ஆடி"(தொல்காப்பியம்-நூற்பா - 1137)

என்று தொல்காப்பியரும் உரைக்கின்றார்.

தினைப் புனங்காக்கும் மகளிர் சுனையில் நீராடி தமது களைப்பினைப் போக்கிக் கொண்டனர்.

"பளிங்கு சொரிவு அன்ன பாய்சுனை குடைவுழி

நளிபடு சிலம்பில் பாயம்பாடி

உள்ளகம் சிவந்த கண்ண" (குறிஞ்சிப்பாட்டு-பா.ண்-58-60)

தினையைக் காய வைத்த மகளிர் களைப்பினை நீக்கிக் கொள்ள சுனையில் நீராடியுள்ளனர்.

"நிரைவளை முன்கை நேர்இழை மகளிர்

இரும்கல் வியல் அறைச் செந்தினை பரப்பிச்

சுனைபாய சோர்வு இடைநோக்கிச் சினை இழிந்து"

(குறுந்தொகை:பா.எண்-335)

"கார் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்"

(கலித்தொகை:பா.எண்-39)

என்று குறிஞ்சி நிலக் காட்டாற்றுப் புதுவெள்ளத்தில் தலைவியும் தோழியும் நீராடி மகிழ்வுற்றச் செய்தி வெளிப்படுகின்றது.

"புனலாட்டு மகளி ரிட்ட பொலங்குழை"

(பெரும்பாணாற்றுப்படை: பா.எண்-312)

நீருண்ணும் துறையில் நீராடும் மகளிர் இட்டுச்சென்ற பொன்னாலான மகரக்குழை கிடந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐங்குறுநூற்றில் "புனலாட்டுப் பத்து" என்று ஓர்பத்து இடம் பெற்றிருப்பதிலிருந்தே பெண்களுக்கு நீர் விளையாட்டில் இருந்த ஈடுபாட்டினை அறிந்துக்கொள்ள இயலும்.

வள்ளைப்பாட்டு

மகளிர் உலக்கைக் கொண்டு தானியங்களைக் குற்றும் பொழுது பாடும் பாட்டு வள்ளைப்பாட்டு

"வளைக்கை மகளிர் வள்ளை கொய்யும்
முடந்தை நெல்லின் விளைவயல்"( பதிற்றுப்பத்து :பா.எண்-02)

"தினைகுறு மகளி ரிசைபடு வள்ளையும்"

(மலைபடுகடாம்:பா.எண்-342)

வள்ளைப்பாடல்கள் சிறைப்புறம் நிற்கும் தலைவனைப் புகழ்ந்துரைத்து விரைவில் மணம் புரியவேண்டும் என்னும் கருத்து பொதிவுகளைக் கொண்டிருக்கின்றது.

**கழங்காடல்**

சிறுமகளிர் வீட்டின் முற்றத்தில் கழங்காடியுள்ளனர். பெண்களின் விருப்பமான விளையாட்டுகளுள் ஒன்று கழங்காடுதல். சிலம்பும் வளையும் அணிந்த இளமகளிர் பொன்னாற் செய்த கழங்காய் கொண்டு விளையாடியுள்ளனர்.

"செறியரிச் சிலம்பின் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கின் தெற்றி ஆடும்"

(புறநானூறு:பா.எண்-36)

"முத்த வார்மணற் பொற்கழங்காடும்"

(பொருநராற்றுப்படை பா.எண்-335)

"கிளியும் பந்தும் கழங்கும் வெய்யோள்"( அகநானூறு -பா.எண்-49)

என்னும் பாடல் வரிகளின் மூலம் பொன்னால் செய்த கழங்கினைக் கொண்டு மணல் மேடுகளில் விளையாடினர் என்று அறியமுடிகின்றது.விளையாட்டுப் பொருட்களையே பொன்னால் செய்யும் அளவிற்கு தங்கம் மிகுதியாகப் புழக்கத்தில் இருந்துள்ளது தெரியவருகின்றது.

**பந்தாடல்**

ஆற்றுமணல் பரப்பிலும் நீரிலும் ஆடிய ஆட்டங்களுள் பந்தாட்டமும் ஒன்றாகும்.இவ்விளையாட்டு ஆயத்தாரோடு ஆடக்கூடியதாகும். மேலும் இல்லிலும் பந்தாடியுள்ளனர்.

"வரிப்பந்து கொண்டோடி"( கலித்தொகை-பா.எண்-51:3)

"பொற்சிலம் பொலிப்ப உயர்நிலை
வான்தோய் மாடத்து வரிப்பந்தசைஇ"

(பொருநராற்றுப்படை:பா.எண் 332-333)

பொன்னால் செய்த சிலம்புகள் ஆராவாரிக்க நூலால் வரித்தலையுடய பந்தையடித்து களைப்புற்றனர் என்னும் செய்திப் பெறப்படுகிறது.

**துணங்கைக்கூத்து**

ஆணும் பெண்ணுமாக இணைந்து ஆடும் கூத்து துணங்கைக்கூத்து.

"மகளிர் தழீஇய துணங்கையானும்"( குறுந்தொகை:பா.எண்-31)

"துணங்கை நாளும் வந்தன" (குறுந்தொகை:பா.எண்-364)

"துணங்கையந் தழுவின் மணங்கமழ்சேரி"

(மதுரைக்காஞ்சி: பா.எண்-329)

"முழவிமிழ் துணங்கை தூங்கிய விழவின்"

(அகநானூறு : பா.எண்-336:36)

"நிரைதொடி நல்லவர் துணங்கையுட் டலைக்கொள்ள"

(கலித்தொகை :பா.எண்-70:14)

என்னும் பாடல்வரிகளின் மூலம் துணங்கை என்பது மகளிர் தமக்குரிய ஆடவரைத் தழுவி ஆடக்கூடிய ஆடல் என்றும், விழாக்காலங்களில் நடைபெறும் துணங்கைக் கூத்தினை எதிர்ப்பார்த்து தலைவனும் தலைவியும் காத்திருந்தனர் என்றும் தெளிவாகின்றது.

ஜான் ஆசிர்வாதம் என்பவர்"இது வழிபாட்டிலும் தொழில் முறையாகவும் மட்டுமின்றி பழந்தமிழர் காதல் வாழ்விலும் பெரும்பங்கு கொண்டிருந்தது. கூத்து நிகழ்ச்சியின் போது காதலர் ஒருவரை ஒருவர் சந்தித்துக் காதலை வளர்த்துக்கொள்ள வாய்ப்பிருந்தது. ஆதலின் துணங்கை நிகழும் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் என்று விளக்குகின்றார்" (தமிழ்க்கூத்துக்கள்-ஜான்ஆசிர்வாதம் -பக்-17)

மேலும் மண், மரம், புல் ஆகியவற்றால் செய்த பாவைகளைக் கொண்டும் விளையாடியள்ளனர்.

"சிறுபசும் பாவையும்" (குறுந்தொகை :பா.எண்-2 )

"பந்தும் பாவையும் கழங்கும் எமக்கு ஒழித்தே"

(ஐங்குறுநூறு: பா.எண்-377)

என்ற வரிகள் பெண்கள் பந்தாடியும், பாவை விளையாடியும், கழங்காடியும் இன்பமாக பொழுதினைக் கழித்துள்ளனர் என்றுரைக்கின்றன.

விளையாட்டு என்பது உடல்-வளம் சார்ந்ததாகவும், அயர்ச்சியினைக் களையும் மாற்றுவழியாகவும், புலன்களுக்குப் புத்துணர்ச்சியூட்டுவதாகவும், மகிழ்வினை ஊட்டுவதாகவும் இருந்துள்ளது. இன்று மதில் சுவர்களால் சூழப்பெற்ற வீடுகளைக் கடந்து செல்ல இயலாமல் பாதுகாப்பு என்னும் பெயரில் இல்லத்திற்குள்ளேயே காவல் செய்கின்றனர்.அதனால் இணையத்தோடு விளையாடி(புளூவேல்) உள்ளமும் உடலும் தளர்ந்து உயிரையும் மாய்த்துக்கொள்ளக் கூடிய அவலநிலை உருவாகியுள்ளது என்பதையும் மறுக்க இயலாது.

**அன்பு வாழ்க்கை**

காதல் என்பது மனித வாழ்வில் பல்வேறு பரிணாமங்களில் சங்கமித்துச் செல்கின்றது. அது கண்களில் அரும்பி இதயத்தில் மலர்வது. உலக இயக்கமானது காதல் என்ற மையப்புள்ளியைப் பற்றிக் கொண்டே இயங்குகின்றது.இதற்கானச் சான்றுகள் இலக்கியத்தில் ஏராளமாகக் காணக்கிடக்கின்றன.

காதல் என்பதற்கு அன்பு, வேட்கை என்ற பொருள்களைத் தமிழ்ப்பேரகராதி உரைக்கின்றது.அனைத்து உயிர்களிடத்தும் கொள்ளும் அன்புணர்வே காதல் என்றுரைத்தாலும்

ஆணுக்கும்; பெண்ணுக்கும் இடையில் ஏற்படும் அன்பு உணர்வே காதல் என்ற பெயரால் சுட்டப்படுகின்றது. கருத்தொருமித்த காதலர்கள் உடம்பொடு உயிர் இணைந்ததைப் போன்றவர்கள். அதனால் தான் வள்ளுவர்.

"உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு"

( திருக்குறள்:பா.எண்-1122)

என்கிறார். பாரதிதாசன் "காதல் அடைதல் உயிர் இயற்கை என்கிறார். தொல்காப்பியரும்,

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்துவரூஉம் மேவற்றாகும்" (தொல்காப்பியம்-நூற்பா:1169)

என்று குறிப்பிடும்பொழுது இன்பம் என்பது எல்லா உயிர்களுக்கும் பொருந்திவரும் விருப்பம் உடைமை என்கிறார்.காதல் கொண்ட உள்ளம் மாறுவதோ விட்டுக்கொடுப்பதோ இல்லை.தமிழர்ப் பண்பாட்டில் காதல் உறுதியானதாகவும் தெய்வீகமானதாகவும் இருந்துள்ளது.

"இம்மை மாறி மறுமை ஆயினும்
நீயாகியர் என் கணவனை
யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே"

(குறுந்தொகை:பா.எண்-49)

என்று தலைவி உரைக்கும் இடத்தில் உயிர்சார்ந்த காதலுக்கு உரமூட்டுகிறாள்.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர்அளவின்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"

(குறுந்தொகை : பா.எண்-3)

என்று பெண்ணொருத்தி காதலின் ஆழத்தையும் அகலத்தையும் அளவிடமுடியாத பொருட்களைக் கொண்டு வெளிப்படுத்துகின்றாள். காதலால் உள்ளம் பெருமையுறுகின்றது,உயர்வடைகின்றது, விரிவடைகின்றது.

தலைவி இளம் பருவத்தினளாக இருந்த பொழுது தலைவனின் அன்பினை உணரவில்லை. உரிய பருவம் எய்திய நிலையில் உணர்கிறாள். அவன் மீது வேட்கைக் கொள்கின்றாள். அன்பின் பெருக்கம் எல்லையற்று நீள்கின்றது. இந்நிலையில்

"குன்றக்கூகை, குழறினும் முன்றில்
பலவின் இருஞ்சினைக் கலை பாய்ந்து உகளினும்
---------- சாரல் நீள் இடைச் செலவு"

(குறுந்தொகை : பா.எண்-153)

என்று தலைவன் வரும் காட்டுவழியை நினைத்து அஞ்சுகிறாள். அவளுக்கு இயற்கை நிகழ்வுகளும், அரவங்களும் நடுக்கத்தினை ஏற்படுத்தியமைக்குக் காரணம் தலைவன் மீது கொண்ட அன்பு மட்டுமே.

ஜோசப் லெடூஷ் என்பவர் தனது "வுாந நுஅழவழையெட டீசயைெ" என்னும் நூலில் அச்சமே மனிதனின் உணர்ச்சிகளில் முதன்மைப் பெறுகின்றது என்று உறுதியாக கூறுகின்றார். அவருடைய கூற்று ஒப்பு நோக்கத்தக்க வகையில் உள்ளது.

சங்கமகளிர் தலைவனின் வறுமையைப் புறந்தள்ளி காதலுக்கு மட்டுமே முன்னுரிமை அளித்தனர்.மனத்தடுமாற்றம் எள்ளளவும் இல்லாதிருந்தனர்.விருப்பத்தின் அடிப்படையில் தெளிந்த

முடிவெடுத்தனர்.இறுதிவரையிலும் கொண்ட கொள்கையில் மாறாதிருந்தனர்.இப்பண்புகளை மேற்கூறிய பாடல்களின் வழி அறிந்துக்கொள்ள இயலுகின்றது. எனவே, இவர்களால் காதலும், காதலால் இவர்களும் பெருமையுற்றனர். ஆகவே சங்க இலக்கியத்தின் சாரம்சமாக 'காதல்' விளங்குகின்றது என்று திண்ணமாக விளங்குகின்றது.

**உடன்போக்கு**

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"

(தொல்காப்பியம்-நூற்பா:1045)

என்று பெண்களுக்குரியப் பண்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்களது விருப்பங்களுக்குத் தங்குத்தடையற்ற சுதந்திரமும் உரிமையும் வழங்கப்பட்டுள்ளது. மணவாழ்க்கையில் களவு வாழ்க்கைக்குப் பின்பு, கற்பு வாழ்க்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொல்காப்பியரும் களவியல், கற்பியல் என்றே முறை வைப்பு செய்துள்ளார்.

திருமணத்திற்கு முன்பே காதல் புரிவதை சமூகம் ஏற்றுக்கொண்டது.ஒரு பெண் தான் காதலித்த ஆடவனுடன் உடன்போக்கு மேற்கொள்ளக் கூடிய நிலையும் வழக்கில் இருந்துள்ளது. இச்செயல் தகாதனவாகக் கருதப்படவில்லை, தடை செய்யவும் இல்லை. இதனை

"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்து உடன்போகிய காலையான"

(தொல்காப்பியம்: நூற்பா:108)

"புணர்ந்துடன் போகிய கிழவோள்"

(தொல்காப்பியம் : நூற்பா:1094)

என்பதிலிருந்து உறுதி செய்துக் கொள்ளமுடிகின்றது.ஏனெனில் காதலை உடல் சார்ந்ததாக கருதாது உயிர்சார்ந்ததாக எண்ணியதே அடிப்படை காரணமாகும்.

"..................................சோழர்
ஓமைநீடிய உலவை நீளிடை" (அகநானூறு: பா.எண்-369:14-17)

என்று செவிலிப் புலம்புகின்றாள்.உடன்போக்கு மேற்கொண்ட தலைவியின் இல்லம் உறையூர் போன்ற செல்வ வளமிக்கது, நிலைத்தப் புகழினை உடையது.உறவினர்கள் கூடி மணம் செய்விக்கக் கூடிய சிறப்புமிக்கது. ஆனால் தலைவனுடைய மனை வறியது. அது புல்லால் வேயப்பட்டக்குடில்.ஒரு பசு கட்டியுள்ள ஒற்றைத்தூண் கொண்ட முகப்பு உடையது.இதுவே செவிலியின் வருத்தத்திற்குக் காரணங்களாக அமைகின்றன.

"காலே பரிதப் பினவே கண்ணே
பலரே மன்ற இவ் உலகத்து பிறவே" (குறுந்தொகை-பா.எண்-44)

உடன்போக்கு மேற்கொண்ட பெண்ணைத் தேடிச் சென்ற தாயின் மனநிலையைப் புலப்படுத்தும் இப்பாடலில் உடன்போக்கு மேற்கொண்டோர் பலர் என்ற குறிப்பும் காணப்படுகின்றது.

"என் மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாம் அறி புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணீரோ? பெரும"

(கலித்தொகை : பா.எண்-9)

என்னும் பாடலும் உடன்போக்கு மேற்கொண்டமையைப் புலப்படுத்துகின்றது.உடன்போக்கு மேற்கொண்ட தன்மகள் தலைவனோடு மீண்டும் தன் இல்லத்திற்கு வரவேண்டும் என்று தாய் விரும்புகிறாள்.அதற்கு நன்னிமித்தமாகக் காக்கையைக் கரைய வேண்டுகிறாள்.அவ்வாறு கரைந்தால் அக்காக்கைக்குச் சுற்றத்தோடு இருந்து வயிராற உண்ணும்படி நல்ல உணவினைப் பலியாக தருவதாக உரைக்கும் பாடல்

"வெஞ்சின விறல்வேற் காளையொடு
அஞ்சில் லோதியை வரக் கரைந்தீமே"
(ஐங்குறுநூறு-பா.எண்-391)

என்பதாகும்.மகள் உடன்போக்கு மேற்கொண்டது தாய்க்கு வருத்தமளித்தாலும் மீண்டும் குடும்ப உறவுகள் செழிக்க வேண்டும் என்று கருதுவதிலிருந்து தலைவனிடம் பகைமைப் பாராட்டாதப் பண்பும், கொண்டு தலைக் கழிதலும் அறம் என்றே ஏற்றுக்கொள்கின்ற பெருந்தன்மையும் வியக்க வைக்கின்றது.

கற்பு வாழ்க்கை - இல்லறச்செம்மை

இல்லற மகளிர்க்குரிய பண்புகளைத் தொல்காப்பியர்

"கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்
பிறவுமன்ன கிழவோள் மாண்புகள்" (தொல்காப்பியம் நூற்பா:1098)

என்று சுட்டுகிறார்.அன்பினால் ஒன்றி வாழ்வதே இல்லறம். மகளிர் இதனை நிலைத்த அறமாகக் கருதினர். வறுமையுற்றக் காலத்திலும் தலைவனின் மனநிலைக்கு ஏற்ப இல்லறப் பெருமையைக் காத்து நின்றனர்.குடும்ப வறுமையைப் பெற்றோர்க்கு மறைத்து வாழ்வதையே அறமாக எண்ணினர்.

"ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி
கொடுத்த தாதை கொழுஞ்சோறுள்ளாள்" (நற்றிணை பா.எண்-110)

என்ற பாடலில் தலைவி, தலைவனுடன் வறுமையுற்றச் சூழலில் வாழ்ந்த பொழுதும் தந்தையின் செல்வவளத்தை எண்ணிப் பார்க்காமல் வறுமையையும் பெருமிதத்துடன் ஏற்றுக் கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது.அத்தகைய அறிவும் ஒழுக்கமும், பக்குவமும் கொண்டு இல்லறம் பேணுகின்றாள்.தலைவனிடத்து தலைவிக் கொண்டிருந்த அன்பின் உயர்வினைச் சித்திரிக்கும் பாடல் ஒன்று

"அன்னாய் வாழிவேன் டன்னைநம் படப்பை
மானுண் டெஞ்சிய கலுழிநீரே" (ஐங்குறுநூறு-பா.எண்-203)

என்பதாகும்.

திருமணமான தலைவி பிறந்தகத்திற்கு வருகின்றாள். அவளின் இ;ன்ப வாழ்க்கையை அறிந்துக்கொள்ள விரும்பிய தோழி, உன் தலைவனுடைய நாட்டில் உண்ணுவதற்கு நீர் இல்லையாமே? என்று வினவுகின்றாள்.அதற்குத் தலைவி நம்முடைய தோட்டத்தில் கிடைக்கும் தேனும், பாலும் கலந்த நீரைவிட என் தலைவனின் ஊரிலுள்ள நீர் இனிமையாக இருப்பதாக பதிலிறுக்கிறாள். இதிலிருந்து மகளிரின் ஆழமான வாழ்வியல் திறன் காணக்கிடக்கின்றது.

**நன்மக்கட்பேறு**

தாய்மை நிலை அடைவதால் மட்டுமே பெண் முழுமையடைகின்றாள். செல்வங்களுள் சிறந்தது மக்கட் செல்வம். அம்மக்கட் செல்வத்தால் மட்டுமே இல்லறம் சிறப்புறம்,மேன்மையுற்று வளரும்.இந்நியதிகள் காலந்தோறும் வழக்கில் உள்ளன. மக்கட்பேற்றின் சிறப்பினை,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்

நன்கலம் நன்மக்கட் பேறு” (திருக்குறள்-60)

என்று வள்ளுவரும்

“மனைக்கு விளக்கம் மடவாள்,மடவாள்

தனக்குத் தகைச்சால் புதல்வர்” (நான்மணிக்கடிகை-101)

என்று விளம்பிநாகனாரும்,

“மக்கள் பெறலின் மனைக்கிழத்தி” (திரிகடுகம் - 64)

என்று நல்லாதனாரும் குறிப்பிடுகின்றனர்.

“மயக்குறு மக்களை இல்லோர்க்கு பயக்குறை

இல்லைதாம் வாழுநாளே” (புறநானூறு-188)

செல்வங்களுள் சிறந்தது மக்கட்செல்வம்,அச்செல்வம் இல்லையெனில் வாழும் நாட்கள் வீணானது என்று புறநானூறு பதிவுசெய்துள்ளது. இதனையே

“மக்கட் பேற்றின் பெறும்பேறு இல்லை” (இல்லைப்பத்து -1)

என்று முதுமொழிக்காஞ்சியும் வழிமொழிகின்றது.

புதல்வனைப் பெற்றெடுத்து மனைக்கு விளக்காகத் திகழ்வதாக

“புறவணி நாடன் புதல்வன் தாயே” (ஐங்குறுநூறு-405)

என்று செவிலி கூறுகின்றாள்.

“எம்நலம் சிறப்பயாம் இனிப்பெற் றோளே” (ஐங்குறுநூறு-7)

என்னும் பாடலில் தலைவன் மகப்பேறு கருதிச்செய்யும் இரண்டாவது திருமணத்தைத் தலைவி மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**விருந்தோம்பல்**

சங்ககாலத்தில் விருந்தோம்புதல் ஓர் சிறந்த கலையாகப் பேணப்பட்டது. இக்கலை கணவனுடன் கூடிவாழும் மகளிர்க்குரிய தனியுரிமையாகக் கருதப்பட்டது. பெண்கள் விருந்தோம்பும் பணியினை மகிழ்வுடன் செய்துள்ளனர்.அமிழ்தமே ஆனாலும் விருந்தினரை வெளியே நிறுத்திவிட்டு தாம் தனித்து உண்ணும் பழக்கம் பண்டு இல்லை. இதனையே வள்ளுவரும்,

“விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா

மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று” (திருக்குறள்-82)

என்கிறார்.இல்வாழ்க்கையில் விருந்தினரை ஓம்பலும், சுற்றத்தாரை உபசரிப்பதும், இரப்போர்க்கு ஈதலும் தலையாய அறமாகக் கருதப்பட்டது.விருந்தினரை இன்முகம் கொண்டு வரவேற்று விருப்பத்துடன் படைத்ததை

“விருந்தயர் விருப்போடு வருந்தினர் அசைஇய

முறுவர் இன்நகை ” (நற்றிணை-81)

என்ற பாடல் வாயிலாக அறியமுடிகின்றது.

தலைவன் பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்டு தலைவியை விட்டுப் பிரிந்துச் செல்கின்றான். மீண்டும் தலைவியை வந்தடைந்த தலைவன் நான் பிரிந்த காலத்தில் எவ்வாறு இருந்தீர் என்று வினவ அதற்குப் பதிலிறுக்கும் தலைவி

“விளைக வயலே வருக இரவலர்

எனவேட் டோளே”( ஐங்குறுநூறு-2)

என்று மிகுதியான விளைச்சல் வேண்டுமென்று விரும்பியதாகக் கூறுகின்றாள்.அப்பொழுதுதான் விருந்தோம்பல்,இரவலர்க்கு ஈதல் என்ற பணிகளைக் சிறப்பாக செய்ய இயலும் என்று எண்ணிய அவளது சிந்தனை கற்போருக்கு வியப்பூட்டுகின்றது.

விருந்தினர்கள் நள்ளிரவில் வந்தாலும் இன்முகத்தோடு வரவேற்று உபசரித்ததை இடைக்காடனார்

"அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்

முல்லை சான்ற கற்பின் மெல்லியல்" (நற்றிணை-142)

என்ற பாடலில் உறுதிப்படுத்தியுள்ளார்.

தலைவன் வினைமுற்றி மீள்கிறான்.அவனைத் தேர்ப்பாகன் விரைவாக இல்லிடத்துச் சேர்க்கிறான். அவ்வாறு சேர்த்த பாகனைத் தலைவன் பாராட்டித் தழுவுகின்றான். ஆனால் தலைவியோ பாகனை புதியவராக வரவேற்று விருந்தளிக்கிறாள்.

"வரைமருள் மார்பின் அளிப்பனன் முயங்கி

விருந்தேர் பெற்றனள் திருந்திழை யோளே" (அகநானூறு-384)

தன்னுடைய வாழ்க்கையில் இன்பம் பயக்கத் துணை நின்றவர்களுக்கும் மகிழ்ந்து அமுதுப் படைத்துள்ள தலைவியின் பான்மை வெளிப்படுகிறது.

"தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப

---- -- --- அமலை வெண்சோறு" (சிறுபாணாற்றுப்படை-190-94)

பிள்ளைகளை உபசரிப்பது போல விருந்தினர்களை வரவேற்று இன்சுவை உணவளித்துள்ளனர்.தலைவன் வினைமுற்றி மனைக்கு வருகின்றான்.இதனால் தலைவியும் தலைவனும் மகிழ்ந்து விருந்தளிக்கின்றனர்.

"அரும்பெற்ற காதலர் வந்தென விருந்தயர்பு

மெய்ம்மலி உவகையின் எழுதரு" (குறுந்தொகை -398)

பெண்கள் கணவனுடன் சேர்ந்திருக்கும் பொழுது விருந்து உபசரிப்பு

சிறப்பாக நடைபெறுவதையும், விருந்தினரை எதிர்நோக்கிக் காத்திருந்ததையும்

"விருந்து எதிர்கொள்ளவும்" (கலித்தொகை-75)

"விருந்து எதிர் பெறுகதில் யானே" (புறநானூறு-306)

என்னும் பாடல் வரிகள் உறுதிப்படுத்துகின்றன.

**பொருள்வயிற்பிரிவு**

பெண் வாழ்க்கைத் துணையாக மட்டுமன்றி ஆணின் சமூக மதிப்பிற்கு பின்புலமாக அமைந்திருக்கின்றாள். உலக இயல்புகளை அறிந்து ஒழுகியுள்ளாள்.வினையே ஆடவர்க்கு உயிர் என்பதனை உணர்ந்து கடமைகளை நிறைவேற்ற உடன்பட்டிருக்கின்றாள்.ஆணின் பிரிவு துயரமளித்தாலும்,அதனைப் பொருட்படுத்தாது உயர்வுக்கு உறுதுணையாக நிற்கின்றாள்.

"உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்" (குறுந்தொகை-283)

இப்பாடல் பொருள்வயிற் பிரிவிற்குத் தலைவி உடம்பட்டமையைச் சுட்டிக்காட்டுகின்றது.

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்

பொருளல் லதில்லைப் பொருள்"( திருக்குறள்-751)

என்பதை உணர்ந்தவளாகவும் விளங்குகின்றாள்.

பொருளீட்டச் செல்லும் ஆடவனைத் தடுத்தால் உலகம் பழிதூற்றும் என்று அஞ்சும் பண்பும் மகளிரிடம் இருந்துள்ளது.

"செல்லா தீமெனச் செப்பிற் பல்லோர்

நிறத்தெறி புன்சொலின் திறத்தஞ்சுவல்" (நற்றிணை- 29)

பழியெனின் அஞ்சியும் புகழெனின் உயிரையும் கொடுக்கக் கூடிய மகளிர் சமுதாயத்தின் சிறப்புக்களை விவரிக்க இயலாது.

**கணவனை இழந்த மகளிர் நிலை**

கணவனின் இறப்பினை அறிந்தவுடன் உயிர் துறக்கும் மனைவி தலைக் கற்புடையவள் என்றும், அவனது உடலுக்கு எரியூட்டும் பொழுது தீயில் பாய்ந்து உயிர்விடும் மனைவி இடைக்கற்புடையவள் என்றும், கொழுநனை விண்ணுலகில் அடைய வேண்டும் என்று கைம்மை நோன்பு நோற்பவளைக் கடைக்கற்புடையவள் என்றும் தமிழ்ச் சமூகம் கருதியது.

கணவன் இறந்தவுடன் பெண்கள் தங்களது உயிரினை மாய்த்துக் கொண்டதை

"நல்லோள்; கணவனோடு நனியழல் புகீஇச்"

(தொல்காப்பியம் நூற்பா:1025)

என்று தொல்காப்பியரும் சுட்டியுள்ளார்.

கைம்மை நோன்பு மேற்கொண்ட மகளிர்,சமூகத்தில் அவர்கள் வகித்தநிலை, ஆற்றியத்தொழில்கள், உருவத்தோற்றம் முதலியவற்றைக் கொண்டு பருத்திப்பெண்டிர், உயவற்பெண்டிர், கழிகல மகளிர், ஆளில் பெண்டிர் என்று பல பெயர்களால் அழைக்கப்பட்டனர்.

"கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி

அல்லி உணவின் மனைவியொடு" (புறநானூறு-பா.எண்-250)

"பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்" (புறநானூறு-பா.எண்-62)

'நறுநெய் தீண்டா" (புறநானூறு -பா.எண்-246)

என்று கைம்மை மகளிருக்கு விதிக்கப்பட்ட கொடுமைகளை புறநானூறு குறிப்பிடுகின்றது.

**புறவாழ்க்கை**

நாட்டுப்பற்று

பெண்கள் அகவாழ்க்கையில் மட்டுமின்றி புறவாழ்க்கையிலும் சிறந்து விளங்கினர். அவர்களிடையே நாட்டுக்காக உழைக்கும் தன்னார்வம் மிகுந்து காணப்பட்டது.மறவர் குடியில் பிறந்த ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் வீரத்தில் சிறந்து விளங்கியதை மூதின்முல்லை என்னும் துறை தெரிவிக்கின்றது.

போர்க்களத்திற்கு விருப்பத்தோடு தன் குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் அனுப்பி வைக்கும் பெண்ணைப்பாருங்கள்

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே

செருமுக நோக்கிச் செல்கென விடுமே" (புறநானூறு-பா.எண்-279)

முதல்நாள் போரில் அவளுடைய தந்தை இறக்கின்றான். இரண்டாவது நாள் கணவன் மாய்ந்துவிட்டான். மூன்றாம் நாள் விளையாடிய தன் மகனையும் வேல் கொடுத்து போருக்கு அனுப்பும் பெண்ணின் நெஞ்சுரமிக்க நாட்டுப்பற்று கண்முன் நிழலாடுகின்றது.

போர்க்களத்தில் பகைவர் யானைகளைத் கொன்று தன்மகன் விழுப்புண்ணுடன் இறந்தான் என்பதை அறிந்த தாய் பெற்றெடுத்த நாளை விட பேருவுவகைக் கொள்கின்றாள்.

மற்றொரு தாய் இறந்த மகனைக் கண்டு வியப்புற்றுப் பாடுகின்றாள்

"களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை

ஈன்ற ஞான்றினும் பெரிதே" (புறநானூறு -பா.எண்-277)

முதுமையில் தன்மகன் தனக்கு துணையாக இல்லையே என்று வருந்தவில்லை. விழுப்புண் பட்டு நாட்டுக்காக உயிரிழந்ததுக் கண்டு பெருமிதம் அடைகின்றாள். இதுவல்லவோ நாட்டுப்பற்று.
மகன் எங்கே என்று வினவியதற்கு மறவர்குலப் பெண் ஒருத்தி அளிக்கும் பதில் நெஞ்சை பதைபதைக்கச் செய்கின்றது.

"------------என்மகன்

தோன்றுவன் மாதே போர் களத்தானே" (புறநானூறு-பா.எண்-86)

நாட்டுப்பற்றும் வீரமும் நிறைந்த தன்மகன் போரிடுவதற்காக போர்க்களத்தில் இருப்பான் என்று தெளிவாகக் குறிப்பிடுகின்றாள். ஈன்று புறத்தருதல் என் தலைகடனே என்று நில்லாது களிறெறிந்து பெயர்தல் காளைக்கு கடனே என்பதையும் கற்பிக்கும் திறம் சிலிர்ப்பூட்டுகின்றது.

**தொழில்**

குடும்பச் சூழலுக்கும் நிலச்சூழலுக்கும் ஏற்ப பெண்கள் தொழில் புரிந்துள்ளனர். குறிஞ்சிநிலக் கொடிச்சியர் பகற்பொழுதில் தினைக்கதிரை உண்ணவரும் பறவைகளை விரட்டினர். இத்தொழிலுக்கு தட்டை, தழல், குளிர் ஆகிய கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

"தழலை வாங்கியும் தட்டை ஓப்பியும்
குறமகள் காக்கும் ஏனல்" (பெரும்பாணாற்றுப்படை-பா.எண்-55)

அறுவடை செய்த தினைகளை மான்தோளிலும் பாறைகளிலும் பரப்பிக் காயவைத்ததை

"மான்அதள் பெய்த உணங்குதினை வல்சி"

(புறநானூறு -பா.எண்-320:10)

என்ற பாடல் புலப்படுத்துகின்றது.

தினையை உலர வைப்பதற்கு அடிக்கடி கையால் துழாவியதை (நற்றிணை-267) வது பாடலும், காய வைத்தத் தினைகளை கூட்டி குவித்து வைத்ததை (நற்றிணை 344) வது பாடலும், பாறையில் இட்டு குற்றியதை (கலித்தொகை 41)வது பாடலும் குறிப்பிட்டுள்ளது.

குறமகளிர் அகன்ற பாறைகளை உரலாகவும், யானையினது கொம்பினை உலக்கையாகவும் கொண்டு மூங்கில் நெல்லைக் குற்றி சேம்பினது இலைகளை முறமாகக் கொண்டு புடைத்ததை

"பாடுகம் வா வாழி தோழி வயக்களிற்றுக்
கோடு உலக்கை யாகறல் சேம்பின் இலை"

(கலித்தொகை-பா.எண்-41)

என்பதால் தெளிவாகின்றது.

முல்லை நிலப் பெண்கள் குறிஞ்சி நில ஊர்களுக்குச் சென்று மோர் விற்றனர். அதற்கு ஈடாக நெல்லைப் பெற்றனர்.நெய்விற்றதற்கு விலையாகப் பொன்னைப் பெறாமல் பால் கொடுக்கும் பசுக்களையும், எருமைகளையும் வாங்கி வந்து குடும்ப வருமானத்தைப் பெருக்கினர். சுற்றத்தினருக்கு உணவளித்துள்ளனர்.

"நெய்விலைக்கட்டி பசும்பொன் கொள்ளா
எருமை நல்லான் கருநாகு பெறூஉ"

(பெரும்பாணாற்றுப்படை பா.எண்-160-161)

என்னும் பாடல் பெண்கள் பண்டமாற்று செய்து பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளனர் என்பதை உரக்கச் சொல்கின்றது.

"முடிநா றழுத்திய நெடுநீர் செறுவிற்"

(பெரும்பாணாற்றுப்படை - பா.எண்-212)

"குடகாற் றெறிந்த குப்பை வடபாற்"

(பெரும்பாணாற்றுப்படை - பா.எண்-240)

மருதநிலப் பெண்கள் நாற்று நடுதலையும், நெல்லைத் தூற்றும் தொழிலையும் ஆற்றியுள்ளனர். ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் பண்டு மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டனர்.

"--------------------மீன்கொள் பாண்மகள்

தான்புனல் அடைகரைப் படுத்த வராஅல்"

(அகநானூறு-பா.எண்-216)

இப்பாடல் பரதவகுலப் பெண்ணொருத்தி மீன்பிடித்ததை வெளிப்படுத்துகின்றது.

கடைகள் வைத்துப் பொருட்களை விற்ற பெண்கள் முதல் யாமம் கழிந்து பின்னரே கடைகளை அடைத்துவிட்டு வீடுகளுக்குச் சென்றதை

"முந்தை யாமம் சென்ற பின்றைப்

நொடை நவில் நெடுங்கடை அடைத்து மடமாதர்

நள்ளிழை மகளிர் பள்ளி அயர" (மதுரைக்காஞ்சி - பா.எண்-620:23)

என்று மதுரைக்காஞ்சி சுட்டுகின்றது.

**கல்வி**

பெண்கள் கல்வியிலும் சிறந்து விளங்கியுள்ளனர். சங்க இலக்கியத்தில் ஐம்பதிற்;கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் அரசரைப் புகழ்ந்துப் பாடி பரிசுப் பெறுவதுமட்டுமன்றி அரசவைப் புலவர்களாகவும் இருந்துள்ளனர். பொன்முடியார் சமுதாயக் கடமைகளை

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே

சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே

நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே" (புறநானூறு -பா.எண்-312)

என்று எடுத்துரைக்கின்றார்.

ஔவையார் அதியமானின் பொருட்டுத் தொண்டைமானிடம் தூது சென்றது, ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் காக்கைப் பாடினியார்க்கு ஒன்பது காப்பொன்னும் நூறாயிரம் கழஞ்சும் கொடுத்தது, ஔவைக்கு அதியமான் நெல்லிக்கனி வழங்கியது முதலிய நிகழ்வுகளிலிருந்து பெண்பாற் புலவர்கள் பெற்ற அரசியல் செல்வாக்கு தெரிகின்றது. ஆனால் தன்மானத்துக்கு இழுக்கு நேரிடும் பொழுது உள்ளகிடக்கையை பெருமிதத்துடன்

"எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே"(புறநானூறு- பா.எண்-206)

என்று துணிவுடன் வெளிப்படுத்தியுள்ளனர்.

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே

மன்னன் உயிர்த்தே மலர்த்தலை உலகம்" (புறநானூறுபா.எண்-186)

உலக உயிர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசனின் கடமை என்பதை ஔவையார் வலியுறுத்தியுள்ளார்.அரசர்களுக்கிடையே தூது செல்லும் உரிமையைப் பெண்கள் பெற்றிருந்ததை

"இவ்வே பீலியணிந்து மாலை சூட்டிக்

கண்டிர ணோன்காழ் திருத்தி நெய்யணிந்து

கடியுடை வியனக ரவ்வே" (புறநானூறு- பா.எண்-95)

என்னும் பாடல் வெளிப்படுத்துகின்றது.

சங்கமகளிர் பிறந்தகத்தில் தோழியோடு மகிழ்ந்து விளையாடியும், நற்றாய், செவிலித்தாய் அரவணைப்பில் நற்பண்புகளில் சிறந்தும் வளர்ந்துள்ளனர். அதனால் களவு, கற்பு என்ற இருநிலைகளிலும் அறநெறியிலிருந்து வழுவாதிருந்தனர். நிலச்சூழலுக்கேற்ப தொழிலாற்றியும், குடும்பத்தை நன்முறையில் நிர்வகித்தும் வந்துள்ளனர். இதனால் உயர்ந்த வாழ்வியல் விழுமியங்களும் இலக்கு நோக்கிய சிந்தனைகளும் அவர்களிடம் மேம்பட்டுக் காணப்படுகின்றன.ஆண்களுக்குச் சரி நிகராக பெண்களும் விழாக்கள், காதல், பொழுதுபோக்கு முதலியவற்றில் ஈடுபட்டுள்ளனர். மேலும் அகவாழ்க்கையையும் புறவாழ்க்கையையும் இருகண்களாகக் கருதினர்.எனவே கடமை உணர்ச்சியிலிருந்து பிறழாதிருந்தனர். இவ்வாறு கட்டுக்கோப்பான வாழ்வியல் கட்டமைப்பு முறைகளை உருவாக்கிக் கொண்டு (பேதை முதல் பேரிளம்பெண் ஈறாக) மண்ணின் மறத்தியர்களக உயரிய தலைமக்களாக விளங்கியுள்ளனர். எனவே மங்கையராகப் பிறப்பதற்கே நல்மாதவம் செய்திடல் வேண்டும் என்னும் கவிமணியின் கூற்று இவர்களுக்குச் சாலப் பொருந்தும். ஆகவே தான் ‘உயிரினும் இந்த பெண்மை இனிதடா’ என்று பாரதியாரும் வியந்துரைக்கின்றார்.எனவே பெண்ணின் பெருந்தக்க யாவுள என்று பெருமையோடு வாழ்வோம். உலகம் நம்மைக் கண்டு வியக்கட்டும்.

9.ஓவியக்கலை

மனிதனின் பண்புகளைத் தனித்துவமாகக் காட்டுவது கலை.மனிதன் கண்களால் கண்டு , உள்ளத்தால் உய்த்துணர்ந்ததை சிற்பமாக, ஓவியமாக, கல்வெட்டாக பல்வேறு பரிமாணங்களில் இயல்பூக்க வடிவங்களில் வெளிக்கொணர்கின்றான். அவை ஒவ்வொன்றிலும் அழகுணர்ச்சி நிரம்பி நிற்கின்றது.முன்னோர்கள் பேச்சாற்றல், ஆடல், பாடல், வரைதல், சமைத்தல்,நெய்தல் என்று ஆயக்கலைகள் 64 என்று கலைகளை வகைப்படுத்தி உள்ளனர்.மனிதன் வேட்டையாடி வாழத் தொடங்கிய காலத்திலிருந்தே கலை உணர்வு மிக்கவனாக இருந்திருக்கின்றான்.அதனால் அவன் தங்கியிருந்த குகைகளிலும்,தனது வளர்நிலைக்கேற்ற அமைவிடங்களிலும் ஓவியங்களை வரைந்திருக்கின்றான். வழிபாட்டுத் தலங்களை உருவாக்குதல், உணவுப்பொருட்களை சமைத்தல்,பயன்பாட்டுப் பொருட்களின் நுட்பமான வேலைபாடுகள் என்று அனைத்திலும் கலை ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.தமிழரின் நுண்கலைகளுள் ஒன்றாகிய ஓவியக்கலையின் வளர்ச்சியைக் காண்போம்.

**ஓவம்:**

ஓவியத்திற்கு ஓவு,ஓவம்,ஓவியம்,சித்திரம்,படம்,வட்டிகைச்செய்தி எனப் பலப்பெயர்கள் உண்டு.ஒவ்வு என்னும் வினையடியாகப் பிறந்த ஓவு,ஓவம்,ஓவியம் மூன்று சொற்களுமே சித்திரத்தையேக் குறிக்கின்றன.ஓவியன் உள்ளத்து உள்ளியது வியப்போன் என்று மணிமேகலையில் மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை கூறுவதிலிருந்து ஓவியர்கள்

புறக்கண் கண்டதை அகக்கண் கொண்டு நோக்கி அதை அகத்தின் தீட்டிப் பின்னர் வரைந்தனர் என்பது தெரிகின்றது.

ஓவம் என்ற பொருளில் ஓவியம் என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. இதற்கானச் சான்றுகள் இலக்கியங்களில் மிகுதியாக உள்ளது. ஓவியம் என்னும் சொல்லை அழகு என்னும் பொருளில் கையாண்டுள்ளனர். அழகிய வீடுகளுக்கு ஓவியத்தை உவமையாக்கி உள்ளது குறிப்பிடத்தக்கது.

“ஓவத் தன்ன வுருகெழு நெடுநகர்” (பதிற்றுப்பத்து - 88:28)

“ஓவத் தன்ன இடனுடை வரைப்பின்” (புறநானூறு - 251: 1)

“ஓவத் தன்ன வினைபுனை நல்லில்” (அகநானூறு - 98: 11)

“ஓவத் தன்ன வினைபுனை நல்லில்” (பதிற்றுப்பத்து - 61)

“ஓவச்செய்தி ” (அகநானூறு - 5:20)

“வேறுபட்ட வினையோவத்து” (பட்டினப்பாலை-49)

“ஓவுறழ் நெடுஞ்சுவர்” (பதிற்றுப்பத்து - 68 :17)

என்ற அடிகள் சித்திரத்தில் தீட்டப்பெற்றாற் போன்ற அரண்மனையின் நெடுநகர், செய்திகளைப் பேசும் சொல்லோவியம், ஓவியத்தில் எழுதியது போன்ற வேலைப்பாடமைந்த நல்ல மனை என்பதனைச் சுட்டுகின்றது.இதிலிருந்து வீடுகளின் அழகியல் புனைவுகளையும், அவற்றை ஓவியத்துடன் ஒப்புமைப்படுத்தியுள்ள மாட்சியினையும்,ஓவியம் புழங்குநிலை குறியீடுகளாக இருந்துள்ளமையும் புலனாகின்றது.

கடம்ப மரங்கள் சூழ நிற்கும் நறுநீர்ப்பொய்கை கடம்பினுடைய மாலை போன்ற மலர்கள் இந்திரக்கோபம் போன்ற தாதினை உதிர்த்ததால் ஓவியத்தை ஒத்து விளங்குவதை

“நறுநீர்ப் பொய்கை அடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் துணை ஆர்கோதை
ஓவத்து அன்ன உண்துறை மருங்கில்”

(சிறுபாணாற்றுப்படை : 68-70)

என்று சித்திரிக்கப்பட்டுள்ளது.வண்ணப்பூக்களுடன் காட்சியளிக்கும் நீர்நிலையினை ஓவியமாகத் தீட்டுவது ஓவியமாக்களின் நுட்பத்தினை மட்டுமல்லாது பல வண்ண நிறங்களைப் பயன்படுத்தியுள்ளமையையும், இயற்கையை நேசிக்கும் பண்பும் புலப்படுகின்றது.

ஓ என்ற எழுத்தே ஓவியத்தைக் குறிக்கின்றது,சங்க இலக்கியத்தில ஓவு என்ற சொல் 7 இடங்களிலும் ,ஓவம் என்ற சொல் 9 இடங்களிலும் வந்துள்ளதை பெ. மாதையன் குறிப்பிடுகின்றார்.

சித்திரம்:

பூம்புகாரில் இருந்த உவவனம் சித்திரம் வரைவதில் வல்ல ஓவியர் தம் கைத்தொழிலால் சிறப்புடன் வரைந்து வைத்த ஓவியச் சீலையைப் போர்த்தியது போன்று இருந்ததாகக் கூறப்படுகின்றது.

“வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம்”

(மணிமேகலை - மலர்வனம் புக்க காதை3:167-169)

“சித்திரக் கைவினை திசைதொறும்”

(மணிமேகலை - மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை -11)

அரசப்பதவியை ஏற்றுக்கொள் என்ற பொழுதிலும், கானகம் செல் என்ற பொழுதிலும் இரமனது முகமானது சுவரில் வரைந்த ஓவியத்தில் மலர்ந்திருந்த செந்தாமரைப்போல் இருந்ததைக் கம்பர்

“சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை”

(கம்பராமாயணம் -5088)

என்கிறார்.

மாணவன் பாடங்கேட்கும் முறையைச் சொல்லுமிடத்து நன்னூலார் சித்திரம் என்ற சொல்லைப் பயன்படுத்தி உள்ளார்.

“சித்திரப் பாவையின் அத்தகத்து மடங்கி
செவிவா யாக நெஞ்சுக்களன் ஆகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்து” (நன்னூல் - 40)

என்ற நூற்பா சித்திரப்பாவை போல ஆசிரியன் முன் மாணவன் அடக்கத்துடன் இருக்க வேண்டும் என்று சுட்டுகின்றது.

கண்ணுள் வினைஞர்:

சிறந்த ஓவியர்கள் தாம் வரைந்த காட்சியைக் கண்ணில் நிறுத்தும் திறன் படைத்தவர்கள்.இவர்களைக் கண்ணுள் வினைஞர் என்று அழைக்கப்படுகின்றனர். தாம் காணும் காட்சிகளைத் துல்லியமாகத் தமது ஓவியத்திற்குள் கொண்டு வரும்திறன் படைத்தவர்கள் ஓவியர்கள் என்பதை மாங்குடிமருதனார்

“எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி
நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞர்”(மதுரைக்காஞ்சி :516-518)

என்று குறிப்பிடுகின்றார்.பத்துப்பாட்டுக்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் கண்ணுள் வினைஞர் என்ற சொல்லுக்கு “நோக்கினார் கண்ணிடத்தே தம்தொழிலை நிறுத்தலின் கண்ணுள் வினைஞர் என்று உரை எழுதியுள்ளார்.

**ஓவமாக்கள்:**

வண்ணம்தீட்டும் கோல், துகிலிகை, தூரிகை, வட்டிகை எனப்பட்டது.வண்ணங்கள் தீட்டும் பலகைக்கு வட்டிகைப் பலகை என்று பெயர். ஓவியர்கள் ஓவியம் வரைவதற்காகப் பயன்படுத்தியத் தூரிகையைப் பாதிரி மலரோடு ஒப்பிட்டு, தூரிகைக்குரிய இறகுகளை அரக்கைக் கொண்டு ஒட்டிச் சேர்த்து ஓவியங்களை உருவாக்கியுள்ளமையை பாலை பாடிய பெருங்கடுங்கோ

“ஓவ மாக்கள் ஒள்ளரக் கூட்டிய
துகிலிகை யன்ன துய்த்தலைப் பாதிரி”

(நற்றிணை - 118:7)

என்று உரைப்பதிலிருந்து ஓவியர்களை ஓவமாக்கள் என்று அழைத்துள்ளமையையும் அவர்களது கலைத்திறனையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

“வரம் தர எழுதிய ஓவிய மாக்களும்”

(மணிமேகலை - கச்சி மாநகர் புக்க காதை -38)

என்ற பாடலடியில் இருந்து ஓவியமாக்கள் இறைவனின் வரம் பெற்றவர்கள் என்பது வெளிப்படுகின்றது.

**வட்டிகை:**

வட்டிகை என்பது வண்ணங்களைக் குழைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வட்டிகை என்ற சொல்லாட்சி மணிமேகலையில் காணப்படுகின்றது.

“தகரக் குழலாள் மன்னொடு மயங்கி
மகர யாழின் வான்கோடு தழீஇ
வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவையின்
எட்டிக் குமரன் இருந்தான்”

(மணிமேகலை -பளிக்கறைப் புக்கக்காதை :55 -58)

என்று சாத்தனார் கூறுமிடத்து காவிரிபூம்பட்டினத்தில் தன் காதலியுடன் அமர்ந்து யாழ் வாசித்துக்கொண்டிருந்த எட்டிக்குமரன் ஏதோ ஓர் சிந்தனையில் ஆழ்ந்து ஓவியம் போன்று அசைவற்றிருந்ததை வட்டிகைச் செய்தி போல் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். வட்டிப்பலகை என்பது வண்ணங்களைக் குழைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஓவியர்:**

சீவகன் பல இடங்களில் ஓவியம் தீட்டுவதில் வல்லவனாகப் பாராட்டப்படுகின்றான்.யானைமுன் நடுங்கி நின்ற குணமாலையின் உருவத்தை சீவகன் மனதில் பதித்து அதை அப்படியே படைத்ததை

“கூட்டினான் மணிபல தெளித்துக் கொண்டவன்
தீட்டினான் கிழிமிசைத் தழலக வாள்நுதல்
வேட்டமால் களிற்றிடை வெருவி நின்றதோர்
நாட்டமும் நடுக்கமும் நங்கை வண்ணமே”

(சீவகசிந்தாமணி - 1003

என்பதிலிருந்து தெரிந்துகொள்ள இயலுகின்றது.

சங்ககாலத்தில் பெண்களின் அழகிற்கு ஓவியத்தை உவமையாகக் கூறும் வழக்கம் இருந்துள்ளது.

“வல்லோன் எழுதியன்ன காண்டகு
வனப்பின் ஐயள் மகள்” (நற்றிணை –146)

“ஓவியர் தம் பாவையினொடு ஒப்பரிய நங்கை”

(சீவகசிந்தாமணி – 2016)

“உயிர்பெற எழுதப்பட்ட ஓவியப் பாவை யொப்பாள்”

(சீவகசிந்தாமணி – 2048)

அழகுமிகுந்த பெண்ணின் தோற்றத்தை ஓவியப்பாவைக்கு ஒப்பாகக் கூறுகின்றனர்.

மடலேறுதல்:

தலைவன் தனக்குப் பிடித்தப் பெண்ணை திருமணம் செய்ய இயலாத சூழலில் அவளின் உருவத்தை ஒரு துணியில் வரைந்து ஊரார் முன்னிலையில் தலைவன் மடலேறுவான் .

“வில்லாப் பூவின் கண்ணிசூடி
நல் முறுவல் என, பல் ஊர் திரிதரு
நெடு மாப்பெண்ணை மடல் மானோயே”(நற்றிணை - 146: 1-3)

ஆகவே அன்றையக் காலத்தில் குறித்தப் பெண்ணின் உருவத்தை அப்படியே எழுதி தரும் ஓவியக்கலைஞர்கள் இருந்துள்ளனர் என்பது புலனாகின்றது.

“நல்லேம் என்றும் கிளவி வல்லோன்
எழுதி அன்ன காண்தகு வனப்பின்
ஐயள் மாயோள் அணங்கிய

மையல் நெஞ்சம் என் மொழிக் கொளினே” (நற்றிணை:146-9-12)

தலைவியானவள் அழகானத் தோற்றமும்,மெல்லிய தன்மையும், மாமை நிறமும் கொண்டு அசைவற்று வருத்தத்துடன் நிற்கிறாள். இதனை ஓவிய வல்லான் எழுதிய ஓவியம் போன்று இருந்ததாக புலவர் கூறுகிறார்.கிளவி வல்லோன் என்ற சொல் ஓவியனைக் குறிக்கின்றது.

**ஓவியநூல்:**

நாட்டிய மகளிர் ஓவியநூலினைக் கற்றுத் தேர்ந்திருத்தல் வேண்டும் என்ற மரபு இருந்திருக்கின்றது. அதனால் மாதவி ஓவியநூலினைக் கற்றிருந்திருக்கின்றாள். இதனை மணிமேகலை

“ஓவியச்செந்நூல் உரைநூல் கிடக்கையும்
கற்றுத்துறை போகப் பொற்றொடி மடந்தையாக
இருந்தனள்” (மணிமேகலை -ஊரலர் உரைத்த காதை - 30-32)

என்று பதிவு செய்திருக்கின்றது.

“சிலம்பின் உரையாசிரியர் பல்கலை வல்லுநர் அடியார்க்கு நல்லார் .அவர் காலத்திலிருந்த ஓவிய நூலிலிருந்து மேற்கோள் காட்டுவது நினையத்தக்கதாகும்.ஓவிய நூலுள் நிற்றல், இருத்தல், கிடத்தல்,இயங்கல் என்னும் இவற்றின் விகற்பங்கள் பலவுள.அவற்றுள் இருத்தல் திரிதரவுடையனவும் திரிதரவில்லனவும் என இருபகுதியே.அவற்றுள் திரிதரவுடையன தேர், புரவி, பூனை முதலியன.திரிதரவில்லனஎன்பது ஒன்பது வகைப்படும்.அவைபது முகஉற்கட்டிதம்,ஒப்படியிருக்கை,சம்புடம்,அயமுகம்,சுவத்திகம்,தனிப்புடம்,மண்டிலம்,ஏகபாதம் எனும் இவை.இம்மேற்கோளில் வரும் சொற்கள் வடசொற்கள் எனினும், இதனை எழுதிய ஓவியப் புலவன் தமிழன் என்றுணர வேண்டும்.”

(தமிழர் நாகரிகமும் பண்பாடும் - முனைவர் அ.தட்சிணாமூர்த்தி - பக்கம் - 285)

**கோட்டோவியம்:**

ஓவியம் வரைவதற்கு நேர்க்கோடுகள், வளைகோடுகள் முதலியவற்றைப் பயன்படுத்தி உள்ளனர்.இவ்வாறு வரையப்படும் ஓவியங்களுக்கு கோட்டோவியங்கள் என்று பெயர்.ஓவியங்களில் வரைய நினைத்த உருவங்களை முதலில் கோடுகளாக வரைந்து,பின்பு அதற்கு வண்ணம் தீட்டியுள்ளனர். வண்ணம் தீட்டப்படாத ஓவியத்தைப் புனையா ஓவியம் என்று அழைத்திருக்கின்றனர்.நெடுநல்வாடையில் தலைவனைப் பிரிந்த பாண்டிமாதேவி மிகுந்த ஒப்பனை இன்றி எளிமையாக இருந்தமையை ‘புனையா ஓவியம்’ என்று நக்கீரர் சுட்டுகின்றார்.

“புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்”

(நெடுநல்வாடை -147)

என்பதற்கு நச்சினார்க்கினியர் வண்ணங்களைக் கொண்டு எழுதப்படாத ஓவியம் என்று பொருளுரைக்கின்றார்.

மனைக்கண் இருந்த மணிமேகலை எளிய கோலத்துடன் ஒப்பனை எதுவுமின்றி இருந்ததை புனையா ஓவியத்தோடு ஒப்பிடுகின்றார் சாத்தனார்.

“புனையா ஓவியம் புறம்போந் தன்ன”

(மணிமேகலை – சிறை செய் காதை: 22-88)

“மனையகம் புகுந்த மணிமேகலைதான்
புனையா ஓவியம் போல நிற்றலும்”

(மணிமேகலை - ஆதிரை பிச்சையிட்ட காதை 130-131)

"ஓவியத்தில் ரேகை,உருவஅமைப்பு,வடிவம்,நிறம்,மேற்பரப்புத்தன்மை ,வெளி இவையே அடிப்படையான கட்புல அலகுகளாகும் என கொண்ஸ்ரன்ரைன் கூறுகிறார்."

(20 ஆம் நுற்றாண்டு ஓவியம் சில குறிப்புகள்- பக் 9)

**ஓவியவிதானம்:**

அரசர் வாழும் அரண்மனை அந்தபுரங்கள்,செல்வர் வாழும் வளமனைகள், மாளிகைகள், ஆடலரங்குகள், கோவில் மண்டபங்கள், பொதுமன்றங்கள், கட்டடச்சுவர்கள், மேற்கூரைகள்,தூண்கள்,வீடுகள் முதலியவற்றில் ஓவியம் புனைந்துள்ளனர்.

காண்போரின் கண்களை கவர்ந்திழுக்கும் ஓவியங்கள் வரையப்பட்ட மேற்கூரைக்கு ஓவியவிதானம் என்று பெயர்.மாதவியின் நடன அரங்கேற்றம் நிகழ்ந்த அரங்கின் மேல்நிலை மாடத்தில் அனைவரும் வணங்குமாறு நால்வகை வருணப்பூதங்களின் உருவங்களை வரைந்திருக்கின்றனர்.தூண்களின் நிழல் அரங்கத்தில் விழாதபடி மாட்சிமைப்பட்ட நிலைவிளக்குகளை நிறுத்தி வைத்திருக்கின்றனர். ஒரு பக்கமிருந்து திரை இழுக்கப்படும் வகையில் அமைக்கப்படும் திரைச்சீலை (ஒருமுக எழினி) இரண்டு பக்கங்களில் இருந்தும் நடுவில் ஒன்றோடொன்று பொருந்தும் வகையில் அமைவது, (பொருமுக எழினி) மேலிருந்து கீழே வரவும் கீழிருந்து மேலே செல்லக்கூடியதாக அமைவதுமாகிய (கரந்துவரல் எழினி) திரைச்சீலைகளைப் பாங்குற அமைத்திருக்கின்றனர்.அதன்பின் ஓவியத்துடன் கூடிய மேல்விதானத்தை கட்டமைத்திருக்கின்றனர். இவ்வாறு மாதவியின் ஆடலரங்கு வடிவமைக்கப்பட்டிருந்ததை இளங்கோவடிகள்

"பூதரை எழுதி மேனிலை வைத்துத்
தூண்நிழற் புறப்பட மாண்விளக் கெடுத்தாங்கு
ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்;
கரந்துவர லெழினியும் புரிந்துடன் வகுத்தாங்கு
ஓவிய விதானத்து உரைபெறு நித்திலத்து"

(சிலப்பதிகாரம் - புகாரக்காண்டம் -அரங்கேற்ற காதை -107 -112)

என்று நுகர்வோரின் உள்ளத்திற்கு உற்சாகம் நல்கும் ஆடலரங்கின் அமைப்பினை ஓவிய ஆசானைப் போன்று காட்சிப்படுத்தியிருப்பது வியப்பூட்டுகின்றது.

ஆடல்வல்லார் தங்கி வேடம் புனைதற்கு தனி அறைகள் இருந்தன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.இவ்வகையில் தான் நாடகமேடைகள் அமைக்கப்பட்டிருந்தன.அடியார்க்கு நல்லார் உரையில் ஆகாயசாரிகளாய்த் தோன்றுவார்க்கு எனக் கொள்க, என்ற மேற்கட்டுத்திரைபற்றிய குறிப்பொன்று உள்ளது,இதைக் கொண்டு பழந்தமிழ் நாட்களில் ஆகாயசாரிகட்கும் இடம் இருந்தது என்பது விளங்குகின்றது.

பழந்தமிழ் நாடக மேடையில் கதைக்கு ஏற்பப் பின்னணிக் காட்சிகளாக செடி கொடி, மலர்கள், பெண்யானை,ஆண்யானை இவையெல்லாம் நிரம்பிய சோலைகள் சித்திரமாக வரையப்பட்டிருந்ததை பெருங்கதைக் குறிப்பிடுகின்றது.

"கொடியும் மலரும் கொள்வது எழுதிப்
பிடியும் களிறும் பிறவும் இன்னவை - வடிமாண்
சோலையொடு வகைபெற வரைந்து"

(பெருங்கதை உஞ்சைக்காண்டம் 65)

அரண்மனை ஓவியங்கள்:

பழங்காலத்தில் அரசனுடைய அரண்மனையில் சித்திரமாடம் என்று ஓவியங்கள் தீட்டப்பட்ட கட்டடம் தனியே அமைக்கப்பட்டிருந்தது. பாண்டியனுடைய அரண்மனையில் செம்பால் செய்யப்பெற்ற சுவர்களில் சித்திரம் எழுதப்பெற்றிருந்ததை

“கயங்கண்ட வயங்குடை நகரத்துச்

செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து”( மதுரைக்காஞ்சி484-485)

என்கறார் மாங்குடிமருதனார். இதற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் ”குளிர்ச்சியாற் கயத்தைக் கண்டார் போன்ற விளங்குதலையுடைய கோயிலிடத்து (அரண்மனையில்) செம்பாற் செய்தால் ஒத்த செவ்விய சுவர்களைச் சித்திரம் எழுதி என்கிறார்.

நெடுநல்வாடையிலும் பாண்டியனுடைய சித்திரமாடம்

“செம்பு இயன்றன்ன செய்யுறு நெடுஞ்சுவர்

உருவப் பல்பூ வொருகொடி வளைஇக்

கருவொடு பெயரிய காண்பின் நல்லில்” (நெடுநல்வாடை -110- 114)

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.இப்பாடல் பாண்டியரின் அரண்மனையில் வெண்மையான சுதை பூசிய சுவர்கள் மீது மலர்கள்,பூத்துக் குலுங்கும் கொடிகள் போன்றவை வண்ண ஓவியமாக வரையப்பட்டிருந்ததைக் காட்சிப்படுத்துகின்றது.

சங்கத்தமிழர்கள் இயற்கைக்காட்சிகளை ஓவியமாக வரைவதில் ஆர்வம் கொண்டவர்களாக இருந்துள்ளனர்.பாண்டிமாதேவியின் பள்ளியறையில் இருந்த விதானத்தில் இராசிகளின் உருவங்கள், வரையப்பட்டிருந்தன.பாண்டியர்களின் குலமுதல்வனான சந்திரனோடு அவனது காதல் மனைவி உரோகினி சேர்ந்திருக்கும் காட்சித் தீட்டப்பட்டிருந்தது.அக்காட்சியைக் கண்ட பாண்டிமாதேவி தானும் கணவனோடு எப்போதும் சேர்ந்திருக்க இயலவில்லையே என்று வருந்துகிறாள்.இதனை

“புதுவது இயன்ற மெழுசெய் படமிசைத்
திண்நிலை மருப்பின் ஆடுதலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பின் செல்வனோடு நிலைஇய
உரோகினி நினைவனள் நோக்கி நெடிதுயர” (நெடுநல்வாடை -159-163)

என்பதின் வழி அறியமுடிகின்றது.

பட்டினப்பாலையில் காவிரிப்பூம்பட்டினத்தின் அரண்மனையின் வெளிப்புறச் சுவர்களின் மீது ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்ததையும், அதன் வழியே சென்ற தேர்களால் சேறும் தூசியும் எழும்பி அவ்வோவியங்கள் மீது படிந்திருந்ததையும், ஓவியங்கள் வரையப்பட்டிருந்த வெண்மை நிறச்சுவர் சாம்பலில் புரண்ட ஆண்யானைப் போன்று தோன்றியதையும் கடியலூர் உருத்திரங்கண்ணணார்

“தேரோடத் துகள்கெழுமி
நீராடிய களிறு போல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயில் மாசூட்டும்” ((பட்டினப்பாலை: 47-50))

என்று வருணிக்கின்றார்.

மண்டபம்:

சங்கத்தமிழர்கள் தாம் வரைந்த ஓவியத்திற்கு முதலில் கண்ணெழுத்து என்றே வழங்கியுள்ளனர்.தமிழ் இலக்கியத்தில் எழுத்து என்பதற்கு ஓவியம் என்று சுட்டப்பட்டுள்ளது. முருகனின் அறுபடைவீடுகளில் ஒன்றாகிய திருப்பரங்குன்றத்தில் ஓவியங்கள் வரையப்பட்ட மண்டபம் ஒன்று இருந்ததையும்,அதற்கு எழுத்துநிலை மண்டபம், எழுதெழில் அம்பலம் என்று

பெயர்கள் இருந்தமையையும், காமன் தனது மெல்லிய மலர்க்கணையைக் கொண்டு அவனது தொழில்நுட்பம் விளங்கும்படி வண்ண ஓவியம் வரைந்தக் காட்சிகளையும்

“நின் குன்றத்து
எழுதெழில் அம்பலங் காமவேள் அம்பின்
தொழில் வீற்றிருந்த நகர் ” (பரிபாடல் - 18:27- 29)

என்று பரிபாடல் தெரிவிக்கின்றது.

மேலும் திருப்பரங்குன்றத்தில் இரதி, மன்மதன் உருவங்கள் வரையப்பட்டிருந்தன.கௌதமனின் மனைவி அகலிகை மீது ஆசைக் கொண்டு இந்திரன் பூனை வடிவில் வந்த கௌதமன் வீட்டில் நுழைந்தது, அகலிகையின் கோலம்,வீட்டிற்கு திரும்பி வந்த கௌதமன்,அகலிகை மீது கோபம் கொண்டு அவளைக் கல்லாக்கியது முதலிய காட்சிகள் திருப்பரங்குன்றத்து எழுத்துநிலை மண்டபத்து ஓவியத்தில் இடம்பெற்றிருந்தன.இக்காட்சியை

“இரதி காமன் இவளிவன் எனாஅ
விரகியர் வினவ வினாவிறுப் போரும்
இந்திரன் பூசை இவளக லிகைஇவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படிவிதென் றுரைசெய் வோரும்
இன்ன பலபல யெழுத்துநிலை மண்டபம்”
(பரிபாடல் - 19:48 - 53)

என்ற பாடல் காட்சிப்படுத்துகின்றது. திருப்பரங்குன்றத்துக்கு வருபவர்கள் ஓவியக்காட்சிகளைப் பற்றி ஆவலுடன் பேசுவதிலிருந்து ஓவியத்தின் உயிரோட்டத்தினை உணரமுடிகின்றது.

**தவச்சாலை:**

வஞ்சிமாநகரில் புத்தத் துறவிகள் இருக்கும் தவச்சாலையில் ஓவியம் வரையப்பட்டிருந்ததை

“சாலையும் கூடமும் தமனியப் பொதியிலும்
கோலங் குயின்ற கொள்கை யிடங்களும்” ( மணிமேகலை:28: 66- 67)

மணிமேகலைத் துறவு சுட்டிக்காட்டுகின்றது.

**வீடுகள்:**

செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகளின் வெளிப்புறச் சுவர்களில் பூசப்பட்ட வெண்சுதையில் வானவர்களையும், பல்வகை உயிரினங்களையும் வரைந்திருக்கின்றனர்.அவ்வழியேச் செல்பவர்கள் அவ்வோவியங்களைக் கடந்து செல்ல இயலாது கண்களால் நுகர்ந்து ,மகிழ்ந்து , நின்று கொண்டிருந்ததை சாத்தனார்

“வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்
சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமங்காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியங் கண்டுநிற் குநரும்”
(மணிமேகலை – மலர்வனம் புக்க காதை:126- 131)

என்று குறிப்பிடுவதிலிருந்து ஓவியத்தின் கவினழகினையும்,அதன் ஈர்ப்புத்தன்மையையும் அறிந்துகொள்ள இயலுகின்றது.

**திரைச்சீலைகளில் ஓவியம்:**

சிலப்பதிகாரத்தில் கடலாடு காதையில் கோவலனும் மாதவியும் காவிரி பூம்பட்டினத்துக் கடற்கரையில் புன்னை மரத்து நிழலில் ஓவியம் வரையப்பட்ட திரைச்சீலைகளை அறை போன்று கட்டி மறைவாக்கி அதனுள் கட்டிலின் மீது இருந்ததை

"புன்னை நீழற் புதுமணல் பரப்பில்
ஓவிய எழினி சூழவுடன்போக்கி
விதானத்துப் படுத்தவெண்கால் அமளிமிசை" (சிலம்பு6:168-170)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

சங்ககாலத்தில் பெரும்பாலும் சுவர் ஓவியங்களே மிகுதியாகக் காணப்பட்டன. சிறுபான்மையாக மரப்பலகைகளிலும் துணிச்சீலைகளிலும் எழுதப்பட்டன.படம் அல்லது படாம் என்பது சித்திரம் எழுதப்பட்ட துணிச்சீலை என்னும் பொருளுடையது என்கிறார் மயிலை. சீனி. வேங்கடசாமி.

"நீலத்து அன்ன பைம்பயிர் மிசை தொறும்
வெள்ளி அன்ன ஒள்வீ உதிர்ந்து
சுரி முகிழ் முசுண்டையொடு முல்லை, தாஅய்
மணிமருள் நெய்தல், உறழ,காமர்
துணிநீர் மெல் அவல் ,தொய்யிலொடு மலர
வல்லான் தைஇய வெறிக்களம் கடுப்ப"
( மதுரைக்காஞ்சி - 279 -284)

போர்க்களமானது பல வண்ணக்கலவைகளைக் கொண்டு துணியல் எழுதப்பட்ட ஓவியத்தைப் போல் இருந்தது என்று ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது.

**வண்ணம்:**

திருமூலர் எவ்வண்ணம் அவ்வண்ணம் ஈசன் என்ற பாடலில் நான்கு வரிகளில் ஆறு இடங்களில் வண்ணம் என்ற சொல்லால் எண்ணம்,நிறம்,நிலை போன்ற பல்வேறு பொருட்களில் பாடியுள்ளார்

"நிறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் ஈசன்
அறம்பல எவ்;வண்ணம் அவ்வண்ணம் இன்பம்
மறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் பாவம்
புறம்பல காணினும் போற்றகி லாரே"
(திருமந்திரம் - எட்டாம் தந்திரம் 37)

**ஒப்பனை:**

செம்பஞ்சுக் குழம்பும்,குங்குமக் குழம்பும் கொண்டு நகம்,நெற்றி,மார்பகங்களில் பூசிக்கொள்ளுதலும், வரிக்கோடுகளாய் தீட்டிக்கொள்ளும் வழக்கமும் இருந்துள்ளதை

"சாறும் சேறும் நெய்யும் ஒப்பனைக்கு உகந்தது"
(பரிபாடல் -6:41)

என்ற பாடலடி உறுதிப்படுத்துகின்றது

தமிழரின் கவின்கலைகளுள் ஒன்றாகிய நுண்கலையாம் ஓவியக்கலையின் மரபினையும் நீட்சியினையும் இலக்கியங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.ஓவியக்கலையில் வல்லோரின் ஆற்றல்,அரசன் முதல் மக்கள் வரை ஓவியக்கலையில் கொண்ட நாட்டம், அவற்றின் வெளிப்பாடுகள் முதலியவற்றைத் தெரிந்துகொள்ள இயலுகின்றது.காலந்தோறும் தம் புகழை நிலைத்து நிற்கும் கலைவல்லுநர்கள் தமிழர்கள் என்பதையும், அவர்களது விந்தை மொழி ஓவியம்

என்பதையும் பல்வேறு இலக்கியச் சான்றுகள் பறைசாற்றுகின்றன.தமிழர்கள் உள்ளவரை அவர்களது கலைகளும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

10. பண்பாட்டுக் கூறுகள்

காலந்தோறும் மக்களின் பழக்கவழக்கங்கள், சூழல்கள், கலாச்சாரங்கள், பண்பாட்டு பரிவர்த்தனைகள் மாறிகொண்டே வருகின்றன. ஆனால் தங்கம் நிகர் சங்கத் தமிழர்களின் அகம், புறம் சாரந்த பொருண்மைகளைக் கருவாகக் கொண்டு முகிழ்த்த சங்க இலக்கிய நூல்கள் எக்காலத்தவர்களும் மறவாது பின்பற்ற வேண்டிய ஒழுகலாறுகளை எடுத்துரைத்து உள்ளமையால் பண்டும் சிறந்து இன்றும் உயர்ந்து நிலைத்தன்மைப் பெற்றுள்ளது. இந்நிலைப்பாடுகளின் பின்புலமாக அமைந்திருக்கின்ற பண்பாட்டுக் கூறுகளாகிய வந்தோரை உபசரிக்கும் விருந்தோம்பல்,வறுமை நீங்க அரசர்களைப் புகழ்ந்து பாடிய புலவர்களுக்கும், இசைக் கலைஞர்களுக்கும் அரசன் அளித்த விருந்தோம்பல், எவ்வுயிர்க்கும் இரங்கி தம்மிடம் உள்ளப் பொருட்களை வழங்கிய வள்ளல்களின் கொடைமடம், புகழுக்காக உயிரையும் கொடுக்கும் பேருள்ளம், பழியெனின் உலகையே கொடுத்தாலும் வெறுக்கும் மனத்திட்பம், பொருளீட்டலைத் தலையாயக் கடமையாகக் கருதும் பேராண்மை, உயிருடன் இரண்டறக் கலந்த உயரிய காதல் நிலைப்பாட்டுக் கூறுகள், புறமுதுகுக் காட்டாத மறவர்களின் வீரச்செயல்கள்,நாட்டிற்காக தங்கள் குடும்பத்தினரை அர்ப்பணிக்கும் மறக்குடி மகளிரின் மாண்புகள், குறியெதிர்ப்பு இல்லாது வறியோர்க்கு ஈயும் ஈகை, வறுமையை வெளிக்காட்டாது மறைத்து நிற்கும் தன்மானம், பண்பாட்டு வாயில்களாகிய உணவு, உடை, உறைவிடம், நம்பிக்கைகள், வழிபாடு, காலந்தோறும் போற்றப்படும் நற்றமிழரின் ஒழுகலாறுகள் முதலியவற்றை உள்ளடக்கமாக் கொண்ட செய்திகளின் விரிவாக்கங்களை காண்போம்.

**விருந்தோம்பல்:**

தமிழரின் பண்பாட்டுக் கூறுகளில் முதன்மையானதும் சிறந்ததுமாகிய பண்பு விருந்தோம்பல். இச்செயலினை மேற்கொள்வதற்காகவே இல்லற வாழ்வில் தங்களை ஈடுபடுத்திக்

கொண்டனர். இல்லறத்தில் சிறந்த நல்லறமாக கருதப்பட்டது புதியவர்களை வரவேற்று உபரசித்தல் என்பதாகும்.

“உண்டி மருந்தோடு உறையுள் உபகரணம்
கொண்டுஉய்த்தல் நான்காம் வதம்”

(அருங்கலச்செப்பு -134)

என்கிறது.

தெய்வப்புலவர் விருந்தோம்பலைப் பற்றி ஓர் அதிகாரமே படைத்துள்ளார்.அவ் அதிகாரத்தில் வேளாண் தொழில் செய்பவர்களிடமிருந்தே இருப்பதைப் பகிர்தல்,விருந்து கொடுத்தல் என்ற பண்புகள் முகிழ்த்தன என்பதையும்,விருந்தினரை எதிர்ப்பார்ப்பவரின் வாழ்க்கை பருவகால மாற்றத்தால் பாதிக்கப்படுவதில்லை என்ற இயற்கையின் அரவணைப்பினையும், முகமலர்ச்சியுடன் விருந்தோம்பல் செய்பவர்களை சோம்பல் ஒருபோதும் அணுகாது என்ற மனவெழுச்சி சிந்தனைகளையும், விருந்தினர்கள் உண்ட பின்பு எஞ்சியதை மகிழ்ச்சியோடு உண்பவர்களுக்கு நிலத்தில் விதைக்க வேண்டிய தேவையே இராது உறுதி பயக்கும் உண்மைகளையும், வேள்வியால் விளையும் பயனை விருந்தோம்பல் செய்வதால் பெற இயலும் என்ற மாற்றுக்கருத்தினையும் விதைத்துள்ளார்.

‘இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு” (குறள் - 81)

என்னும் குறளில் இல்லறத்தைப் போற்றி வாழ்வது விருந்தினரை வரவேற்று அவர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்காகவே என்று உரைக்கப்பட்டுள்ளது.

அரசனின் விருந்தோம்பல்:

பொருநராற்றுப்படையில் முடத்தாமக்கண்ணியார் கரிகாலச்சோழனின் விருந்தோம்பலை

“ …………………..ஒன்றிய
கேளிர்போல,கேள்கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறி
கண்ணில் காண நண்ணுவழி இரீஇ
பருகு அன்ன அருகா நோக்கமோடு
உருகுபவை போல்என்பு குளிர்கொளீஇ”

(பொருநராற்றுப்படை :75 -79)

“எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி” (பொருநராற்றுப்படை 118)

“எம் தொல்பதிப் பெயர்ந்து என
மெல்லெனக் கிளந்தனம் ஆக
அகறிரோ எம் ஆயமிட்டு? என”(பொருநாராற்றுப்படை : 121- 123)

என்று சுட்டுகின்றார். வேளாண்வாயில்,பருகு அன்ன அருகா நோக்கு, ஊன்தின்று மழுங்கி, அகறிரோ என்ற சொற்கள் அரசனின் விருந்தோம்பல் திறனையும்,பொருநர்கள் விருந்துண்டு மகிழ்ந்ததையும் சுட்டுகின்றன.

“விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும் ”

(கம்பராமாயணம்- காட்சிப்படலம் -15 )

“அறவோரக்;கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்

துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர்க்கோடலும் இழந்த என்னை”

(சிலப்பதிகாரம்- கொலைக்களக்காதை : 71 -73)

என்ற இலக்கிய அடிகள் விருந்தோம்பல் தமிழரின் இன்றியமையாத கடமையாக இருந்துள்ளமையை உணர்த்துகின்றன.மலைவாழ் குறமகளிர் விருந்தினர்களை மகிழ்வுடன் வரவேற்று இல்லில் சமைத்த மாமிசத்தையும்,தினையரிசிச் சோற்றையும் வழங்குவர்.பல நாள் உறவுடையவர் போல் புதியவர்களை ஏற்றுக் கொண்டனர் என்பதை ஆற்றுப்படை

'நும்இல் போல கேளாது கெழீஇ
சேட்புலம்பு அகல இனிய கூறி
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர்"

(மலைபடுகடாம் - 168 - 169)

என்று சுட்டுகின்றது.இதிலிருந்து தாம் உண்ணும் உணவினை வந்த விருந்தினருக்கு சிறிதும் தயக்கமின்றி உபசரித்து மகிழும் மலைவாழ் மக்களின் விருந்தோம்பல் பண்பாடு வெளிப்படுகின்றது.

'எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை ஆயமொடு
ஆமான் சூட்டின் அமைவர பெறுகுவீர்"

(சிறுபாணாற்றுப்படை - 175-77)

என்ற பாடல் புளிக்கறி சேர்த்து நெற்சோறும், மான் இறைச்சியையும் தம் குடிக்கு வரும் புதியவர்களுக்கு எயிற்றியர் வழங்கியத் தன்மையைச் சுட்டுகின்றது.எயினர் வீடுகளில் ஈந்தின் விதை போன்ற சிவந்த சோற்றினையும் வேட்டை நாய்கள் பிடித்துக் கொடுத்த மாமிசத்தையும் உணவாகக் கொடுத்ததைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார்

'சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூல் உடும்பின்"

(பெரும்பாணாற்றுபடை - 131- 133)

என்கிறார்.வந்த விருந்தினர் உண்டு மகிழுமாறு உணவு சமைத்ததைப் பதிற்றுப்பத்து

'வருநர் வரையார் வார வேண்டு
விருந்துகண் மாறாது உணீஇய பாசவர்
ஊனத்தழித்த வான்நினக் கொழும்குறை
குய்யிடுதோறும் ஆனாது ஆர்ப்ப "(பதிற்றுப்பத்து - 21: 8-11)

என்று சுட்டுகின்றது.விருந்தினர்க்கு சமைக்கும் செயலானது அந்தணர் தம் வேள்விக்கு ஒப்பானது என்பதை

'நடுவண் எழுந்த அடுநெய் ஆவுதி'(பதிற்றுப்பத்து - 21: 13)

என்று சிறப்பிக்கின்றது.கூகைக்கோழியார் பாடிய பொதுவியல் திணைப்பாடலில்

'உண்டும், தின்றும்,இரப்போர்க்கு ஈந்தும்
மகிழ்கம் வம்மோ"(புறம் 364)

என்று இரப்போர்க்கு ஈந்து வாழ்வதே நிலையற்ற வாழ்வில் நிலையான மகிழ்ச்சியைத் தருவது என்கிறார்.மதுரை நகருக்குள் ஏராளமான விருந்து களங்கள் இருந்திருக்கின்றன.வீரர்கள் களம் கண்ட இடங்களிலெல்லாம் கள்விருந்து,மர நிழல் கண்ட இடங்களிலெல்லாம் ஆட்டிறைச்சி,பாறை கண்ட

இடங்களிலெல்லாம் நெய் வழிய தரும் நிணவூண் விருந்து,வீடு இருக்கும் இடங்களிலெல்லாம் மழை மேகம் போல புகை எடுப்ப சமைத்துத் தரும் உணவு விருந்து என்று மதுரை நகரம் விளங்கியதை

'களந்தோறும் கள்ளரிப்ப
மரந்தோறு மை வீழ்ப்ப
நிணவ+ண் சுட்டுருக்கமைய
நெய்கனிந்து வரையார்ப்ப
குழூஉக் குய்ப்புகைமழை மங்குலிற்
பரந்து தோன்றா வியனகராற்"(மலைபடுகடாம் - 753-58)

என்று சுட்டும் பாடல் விருந்தினைக் கண்முன் காட்டுகின்றது. அரசனுக்கு வரி செலுத்துவது போல விருந்துணவு கொடுப்பதைக் கடமையாகக் கருதி செய்பவர்கள் உங்களை விருப்பதோடு பார்ப்பார்கள்,அவர்கள் பொது மன்றத்தில் இருப்பார்கள் என்பதை

'விருந்து இறை அவரவர் எதிர்கொள
குறுகி"(மலைபடுகடாம் - 496)

என்று கூறுவதிலிருந்து பழந்தமிழரின் விருந்தோம்பல் மாண்பு புலனாகின்றது.
உங்களது இல்லங்களில் உள்ளவர்களோடு அளவளாவது போல உரையாடலாம்.நெடுந்தொலைவு நடந்து வந்த வருத்தம் தீரும்படி இனிமையாக பேசுவார்கள்.அத்துடன் ஆட்டுக்கறியுடன் நெய் இட்டு சமைத்த தினையரிசிப் பொங்கலைத் தருவார்கள் என்று ஆற்றுப்படுத்துகின்றான் ஒரு கூத்தன்.

'நும் இல்போல் நிக்காது புக்கு
கிழவர் போல கேளாது கெழீஇ
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் பொம்மல் பெறுகுவீர்"
(மலைபடுகடாம் - 165-169)

இதுவல்லவா தமிழ்ப் பண்பாட்டின் உச்சம் தொட்ட உபசரிப்பு பாடல்.தமிழன் உலகின் பார்வையில் உயர்ந்து நிற்பது இதனால் தான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

'சாறு அயர்தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர்ப் பொற்ப
விருந்து உண்டு எஞ்சிய மிச்சில்"(மதுரைக்காஞ்சி-199-208)

என்;ற பாடலும் விழாக் கொண்டாடினாற் போன்று பெரிய பானையில் உணவு சமைத்து விருந்தளித்ததை சுட்டிக்காட்டத் தவறவில்லை.

**பாதீடு:**

இனக்குழு சமுதாயத்தில் பாதீடு அடிப்படை பண்பாக இருந்துள்ளது.ஆநிரைக் கவர்தல் என்ற வெட்சித்திணையின் துறைபாகுபாடுகளைக் கூறுமிடத்துத் தொல்காப்பியர்

"தந்துநிறை பாதீடு உண்டாட்டு கொடையென"
(தொல்காப்பியம் - புறத்திணையியல்-3)

என்று பங்கிட்டு வழங்கும் முறையைக் குறிப்பிடுகின்றார்.
பண்டையக்காலத்தில் மன்னர்கள் போரில் பெற்ற செல்வங்களை வீரர்களுக்கும் புலவர்களுக்கும் வாரிவழங்கியதுடன் பெருஞ்சோறு அளித்து மகிழ்ந்தனர் என்பதற்குச் சான்றாக அமைந்த பாடலில் ஔவையார் அதியமானின் அன்புத்திறத்தினையும்,உபசரிக்கும் பெருந்தன்மையினையும்

'சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே
பெரியகட் பெறினே யாம்பாடத் தாம்

மகிழ்ந்துண்ணும் மன்னே" ( புறநானூறு - 235:1-6)

என்று புகழ்ந்துரைக்கின்றார்.

வேட்டைக்குச் சென்ற கானவன் கொணர்ந்த முள்ளம் பன்றியின் இறைச்சியை கொடிச்சி சிறுகுடியினர் பலருக்கும் பகிர்ந்து அளித்தலை நல்விளக்கனார்

'கானவன் எய்த முளவு மான் கொழுங்குறை
தேங்கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு
காந்தள் அம் சிறுகுடிப் பகுக்கும்"

( நற்றிணை 85:8- 10)

என்று காட்சிப்படுத்துகின்றார்.

**காதல்:**

காதல் என்னும் உணர்வு உயிருடன் பிணைந்தது.களவில் தொடரும் நட்பு கற்பில் மலரும் காலம் வரை காத்திருந்தனர்.பல்வேறு இன்னல்களையும் பொறுத்துக் கொண்டனர்.எண்ணிலா துயர்களை அடைந்த பொழுதும் கொண்ட கொள்கையில் இருந்து மாறாது இருந்தனர்.சென்ற பிறவியல் கணவன் மனைவியாக இருந்தவர்கள் தாம் இந்த பிறவியிலும் கணவன் மனைவி ஆகிறார்கள் என்னும் நம்பிக்கை தமிழர்களின் பண்பாட்டில் இடம்பெற்றிருந்தது.

“இம்மைமாறி மறுமை ஆயினும்
நீயாகியர் என்கணவனை
யானாகியர் என் நெஞ்சு நேர்பவளே”( குறுந்தொகை- 49)

இருவர் சந்திப்பில் விளைவது தான் காதல் என்பதை எடுத்துரைக்கும் திறம் வியத்தற்குரியது.காதல் நிலைப்பாடுகள் நிலைபேறுடையதாக இருந்துள்ளமையால் தான் ஈராயிரம் ஆண்டுகள் கடந்தும் இன்றும் செழிப்புற்றுத் திகழ்கின்றது.

**வடக்கிருத்தல் :**

தன்னிலையில் இருந்து தாழாதிருத்தல் மானம் என்னும் பண்பாகும்.மானமிழந்து வாழ்தலை ஒருபோதும் விரும்பாதவர்கள் தமிழர்கள்.தன்மானத்திற்கு இழுக்கு ஏற்பட்ட நிலையில் வடக்கு திசை நோக்கி அமர்ந்து உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்திருக்கின்றனர். வடக்கிருத்தலை எப்பொழுது மேற்கொள்ள வேண்டும் என்று அருங்கலச்செப்பு என்னும் சமணநூல்

“இடையூறு ஒழிவில்நோய் மூப்பு இவை வந்தால்
கடைதுறத்தல் சல்லே கனை” (அருங்கலச்செப்பு- 145)

என்று குறிப்பிடுகின்றது. சல்லே கனை என்னும் சொல்லின் பொருள் வடக்கிருத்தல். அருங்கல செப்பினை அடியார்க்குநல்லார் பெறுதற்கரிய மணிக்கலம் பெய்த மணிப்பெட்டகம் என்று கூறுகின்றார்.

சேரமான் பெருஞ்சேரலாதனும் சோழன் கரிகாற் பெருவளத்தானும் வெண்ணிப்பறந்தலை என்னும் இடத்தில் போர் செய்தனர்.அப்போரில் வலிமையுடைய கரிகாலன் செலுத்திய வேல் சேரமான் பெருஞ்சேரலாதனின் முதுகில் புறப்புண் ஏற்படுத்தியது.இதனை சேரமான் பெருஞ்சேரலாதன் தன் வீரத்தின் இழிநிலையாகக் கருதினான்.எனவே தன் வாளை முன்னிறுத்தி வடக்கிருந்து உயிர்விட்டான். இதனை கழாஅத்தலையார்

“புறப்புண் நாணி, மறத்தகை மன்னன்
வாள் வடக்கு இருந்தனன் ஈங்கு”

(புறநானூறு - 65:10-11)

என்று குறிப்பிடுகிறார்.

வெண்ணிக்குயத்தியார் சோழன் கரிகால் பெருவளத்தானிடம் போர்க்களத்தில் உன் வலிமை மிக்க தாக்குதலால் புறப்புண்பட்டு அதற்காக நாணி சேரமான் பெருஞ்சேரலாதன் வடக்கிருந்து உயிர்

துறந்தான். அவன் நின்னைக் காட்டிலும் சிறந்தவன் என்று உரைக்கும் பாடலில் சேரனின் வடக்கிருத்தலை தன்மானச் சிறப்புடையது என்று குறிப்பிடுவதிலிருந்து தமிழர்களின் பண்பாடு வெளிப்படுகின்றது.

“வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப் புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி,வடக்கிருந்தோனே”

(புறநானூறு - 66: 5 -8)

என்பதிலிருந்து வடக்கிருத்தலின் சிறப்பு புலப்படுகின்றது.
சிறுபஞ்சமூலத்தில் காரியாசான்
“வலியிழிந்தார், மூத்தார்,வடக்கிருந்தார்’’

( சிறுபஞ்சமூலம்-71)

என்று வடக்கிருத்தல் பற்றி சுட்டிக்காட்டுகின்றார்.

தன்மானம்:

சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானோடு பொருதப் போரில் தோல்வியுற்று குடவாயிற் கோட்டத்துச் சிறையில் சிறைபட்டிருந்த நிலையில் காவலர் சேரமன்னனுக்குக் காலம் தாழ்த்தி அருந்துவதற்கு தண்ணீர் வழங்கியதைப் புறக்கணித்து உயிர்துறந்த தன்மையை தமிழுலகம் என்றும் மறவாது.

“மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத்தானே” (புறநானூறு - 74: 5- 7)

உயிரைக் காட்டிலும் மானமே சிறந்ததெனக் கருதிய உயரியத் தன்மையை வெளிப்படுத்த இதைவிடச் சிறந்த சான்று வேறெதுவும் இல்லை. திருவள்ளுவர் மானம் என்று அதிகாரம் வகுத்துள்ளார்.

“மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்” (குறள் : 969)

என்னும் குறள் மானம் அழிய நேர்ந்தால் உயர்ந்தவர்கள் உயிர் வாழமாட்டார்கள் என்று உரைக்கின்றது.

**நடுகல்:**

போரில் இறந்துபட்ட வீரர்களுக்கு கல் நட்டு அவர்களின் உருவம் பொறித்து தெய்வமாக வழிபட்டுள்ளனர். அக்கல்லிற்கு நடுகல் என்று பெயர். மறத்தினை வெளிப்படுத்தி இன்னுயிர் நல்கியவர்களை இறைவனுக்கு நிகராகக் கருதியுள்ளனர்.பண்டைக்காலத்தில் செல்வமாகக் கருதப்பட்ட ஆக்களைக் கவர்வதற்கு வெட்சி மறவர்களும், மீட்பதற்கு கரந்தை மறவர்களும் போரிட்டனர். அப்போரில் ஆக்களை மீட்கும் முயற்சியில் இறந்துபட்ட கரந்தை வீரர்களுக்கு நடுகல் எடுக்கப்பட்டுள்ளதையும் நடுகற்களில் வீரனுடைய பெயர் பொறிக்கப்பட்டிருந்ததற்கானச் சான்றினையும்

“நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல் ”( அகநானூறு - 67)

என்ற அகப்பாடலில் காணமுடிகின்றது. மேலும் வரிசையாக நடப்பட்டிருந்த நடுகல்லினை

"நல்லிசை நிறுத்த நாணுடை மறவர்
நிரை நிரை நடுகல்" (அகநானூறு :387)

என்று மதுரை மருதனிளநாகனார் குறிப்பிடுகின்றார்.நடுகல் பற்றிய குறிப்புகள் இவ் இலக்கியங்களில் (புறம் - 93,94,224,237,250,253,260,264,265,289,232,அகம்269,109)மிகுதியாகக் காணக்கிடக்கின்றன.

இல்வாழ்வின் தலையாயக் கடமையாகிய விருந்தோம்பல், இன்றுவரை போற்றப்படும் காதல் ஒழுக்கம்,மறப்போரில் இறந்தவர்களின் வீரத்தை உலகிற்கு உணர்த்தும் நடுகல், தலைநிமிர்ந்து தரணியில் நிற்கும் தன்மானச்சிறப்பு முதலியவை செவ்வியல் இலக்கியங்களின் அடிநாதமாக விளங்குகின்றன. இவை அனைத்தும் தமிழரின் பண்பாட்டுச் சிறப்பினை வெளிப்படுத்தும் கருவூலங்களாகத் திகழ்கின்றன என்பது திண்ணம்.

.

11. புலால்

.பண்டைத் தமிழரின் வாழ்வியல் நிலம் சார்ந்த திணை ஒழுக்கவியல் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டது என்பதைத் தொல்காப்பியமும் சங்கச்செய்யுட்களும் சுட்டிக்காட்டி நிற்கின்றன.நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்டப் பண்டைத் தமிழ் மக்கள் இயற்கை விளைபொருட்கள் மட்டுமன்றி இறைச்சிப் பொருட்களையும் உணவாகப் பயன்படுத்தி உள்ளனர்.மேலும் இறைச்சி உணவின் இன்றியமையாமையையும் உணர்ந்திருந்தனர்.வீட்டில் வளர்த்த வளர்ப்பு விலங்குகளையும், பறவைகளையும்,வேட்டையாடிக் கொணர்ந்த விலங்குகளையும் உட்கொண்டனர்.வேடர்கள் வேட்டையாடிக் கொணர்ந்த தசையைப் பிறர்க்கும் பங்கீடுச் செய்துக் கொடுத்தனர்.இறைச்சியைப் பச்சையாகவும்,தீயில் வாட்டியும்,வேகவைத்தும் உண்ணும் பழக்கம் இருந்துள்ளது.இறைச்சியோடு கிழங்கு வகைகளையும் சேர்த்து உண்டுள்ளதை சங்கஇலக்கியம் சுட்டிக்காட்டுகின்றது.அரசர்கள் தன்னை நாடி வந்த இரவலர்களுக்கும்,விருந்தினர்களுக்கும் புலால் உணவினை வழங்குவதைப் பெருமையாகக் கருதினர்.அதுபோலவே ஐவகை நில மக்களும் தங்கள் இல்லத்திற்கு வந்த புதியவர்களுக்கு மாமிசத்தோடு உணவு படைத்து மகிழ்ந்தனர்.நீண்ட நாட்கள் வைத்து உண்பதற்காக புலாலை உணக்கிப் பாதுகாத்தனர்.தமிழர் எவ்வகை உணவோடு எவ்வகை மாமிச வகைகளைக் கலந்து உண்டனர் என்பதைப் படிக்கும் பொழுது பல உயிரினங்கள் தற்காலத்தில் இல்லை என்பது புலனாகின்றது. இத்தகையச் செய்திகளின் தரவு தொகுப்புகளைக் காண்போம்.

**முள்ளம் பன்றி:**

முளவுமா என்னும் முள்ளுடைய முள்ளம் பன்றியின் இறைச்சியை உண்டுள்ளனர். காட்டில் கானவன் அம்பு எய்து கொணர்ந்த முள்ளம் பன்றியின் கொழுத்த தசைப்பகுதியை கிழங்கோடு கலந்து தேன் மணம் கமழும் கூந்தலை உடைய கொடிச்சி அக்குடியில் வாழ்நர் பலருக்கும் பகுத்துத் தருவதை நற்றிணையும், புறநானூறும் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றது.

"கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை

--------------------------

காந்தளஞ் சிறுகுடி பகுக்கும்"

(நற்றிணை-85:8-10)1

"முளவுமான் கொழுங்குறை'' (புறநானூறு:374:11)

முள்ளம்பன்றி இறைச்சியை உணவாகக் கொள்ளும் வேடுவர்க்குத் தங்கையாகிய தலைவியைப் பெறுவதற்கு பொறுமையாக இருக்கவேண்டும் என்று தோழிக்கு உரைக்குமிடத்து

"முளவுமா வல்சி எயினர் தங்கை

இளமா எயிற்றிக்கு" (ஐங்குறுநூறு-364:1-2)

என்கிறாள்.

காரியாதியின் குடநாட்டு வேடுவர் தந்த முள்ளம்பன்றியின் கொழுமையான தசைத் துண்டங்கள் கலந்த சோற்றுத்திரளை விருந்தாக வருவோர்க்கெல்லாம் கொடுப்பர்.அதனை பனைஓலையில் செய்யப்பெற்ற பட்டையில் வைத்து உண்பர் என்னும் செய்தியை ஆவூர்மூலங்கிழார்

"------அரில் குடநாட்டு

எயினர் தந்த உய்மான் எறிதசைப்

பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் அமலை"

(புறநானூறு177:12-14)

என்று பதிவு செய்கின்றார்.

கள் அருந்தியக் குறவன் இரவு நேரத்தில் வேங்கைப் பூவைச் சூடி,தோளில் வில்லை மாட்டி,வேட்டை நாய் பின் தொடர்ந்து வர வேட்டையாடி,முள்ளம்பன்றியை வீழ்த்தினான்.குறவனால் வீழ்த்தப்பட்ட முள்ளம்பன்றியின் உடலில் இருந்து வெளியேறிய குருதி அங்கு பூத்திருந்த குளவிப் பூக்களிலெல்லாம் நிரம்பி வழிந்து ஓடிற்று.இதனை

"வேட்டம் போகிய குறவன் காட்ட

குளவித் தண்புதல் குருதியொடு துயல்வர

முளவுமாத் தொலைச்சும் குன்றநாட

----------பானாட் கங்குல்" (அகநானூறு:182:6-10)

என்று சுட்டுவதிலிருந்து இறைச்சிக்காக முள்ளம்பன்றியை வேட்டையாடியுள்ளதை அறிந்துகொள்ள இயலுகின்றது.

"முளவுமாத் தொலைச்சிய

பைந்நிண பிளவை'' (மலைபடுகடாம்-176-177)

என்னும் கூத்தாரற்றுப்படை அடி வாயிலாக முள்ளம் பன்றியைக் கொன்று பெற்ற பசுமையான நிணத்தைப் பிளந்து எடுத்த தசையினை உணவாக சமைத்து வழங்கியுள்ளது தெரிகின்றது.

"பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ " (மலைபடுகடாம் -176-177)

யானை இறைச்சி:

புலி யானையைக் கொன்று வீழ்த்தி உண்ட பின்பு எஞ்சி இருக்கும் பகுதியை அங்கு வாழும் மறவர் உப்புக்கண்டம் போட்டு காயவைத்துக் கொள்வர்.அந்த வழியில் உப்பு விற்க வரும் உமணர் அதனை ஞெலிக்கோலில் மாட்டிச் சுட்டு,சுனைநீரில் உலைவைத்துச் சமைத்து உண்பர். இக்காட்சியைப் பொருளீட்டச் சென்ற தலைவன் வழியில் கண்டதாக

“புலி தொலைத்து உண்ட பெருங்களிற்று ஒழிஊன்
கலிகெழு மறவர் காழ்க்கோத்து ஒழிந்ததை
ஞெலிக்கோல் சிறுதீமாட்டி ஒலிதிரைம்
கடல்விளை அமிழ்தின் கணம்சால் உமணர்
சுனைகொள் தீம்நீர்ச் சோற்று உலைக்கூட்டும்” (அகநானூறு169:3-7)

என்று அகப்பாடல் காட்சிப்படுத்துகின்றது.

மான் இறைச்சி:

வேட்டையாடுதலும் மீன்பிடித்தலும் முக்கியத் தொழில்களாக இருந்துள்ளன.உணவுக்காகப் பறவைகளையும், விலங்குகளையும் மிகுதியாக வேட்டையாடி உள்ளனர். இதற்கானப் பதிவுகள் ஏராளமாக காணப்படுகின்றன.இரலை,உழா,கடமா, நவ்வி, மரையான் என்று மானில் பல்வேறு வகைகள் உள்ளன.

வல்வில் ஓரி கடையேழு வள்ளல்களில் ஒருவன். இவனுக்கு வேட்டையாடும் பழக்கம் உண்டு. இவன் தொடுத்த அம்பு யானையை வீழ்த்தி, புலியைக் கொன்று, கொம்புகளையுடைய புள்ளி மானை வீழ்த்தியது. அவன் காலில் குருதிக்கறை படிந்திருந்தது.அது அவன் வேட்டையாடிய மானின் குருதிக்கறை. பல ஊர்களில் அலைந்து திரிந்த களைப்போடு கிழிந்த ஆடையுடன் பலா மரத்தடியில் வன்பரணர் என்னும் புலவர் அமர்ந்திருந்த போது இக்காட்சியைக் காண்கிறார்.இவன் யாரென்று சிந்தித்த வேளையிலேயே ஓரி வேட்டையாடிய மானின் இறைச்சியைச் சுட்டுத் தன்னுடைய காய்ப்பசி நீங்க கொடுத்து,மதுவையும் நல்கி,பொன்னையும் கொடுத்ததை

“---------வேட்டத்தில்
தானுயிர் செகுத்த மான்நிணப் புழுக்கலோடு
ஆன்உருக்கு அன்ன வேரியை நல்கி”
(புறநானூறு-152-25-27)

என்பதன் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

“மான்கணம் தொலைச்சிய குருதிங் கழற்கால்
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டு
----காய்பசிநீங்கி (புறம்-150-5-15)

குடநாட்டு எயினர்கள் மான் கறியை பசு வெண்ணைய் ஊற்றிச் சமைத்து விருந்தினர்களுக்கு வழங்குவர் என்று ஆவூர் மூலங்கிழார்

“----குடநாட்டு
எயினர் தந்த எய்மான் எறிதசைப்
பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் அமலை
வருநர்க்கு வரையாது தருவனர்”(புறம்-177:12-15)

என்று குறிப்பிடுகிறார்.

கடமானினை கடமா,கடமை,கடம்பை என்றும் இலக்கியங்கள் சுட்டுகின்றன. மான் இனத்திலேயே புவிப்பரவல் அதிகமுடையது கடமான். கடமானை ஆங்கிலத்தில ‘எல்க்’ (நுடம)

என்று அழைப்பர். கடமானினைக் கொன்று அம்மானின் கொழுத்த தசையினைக் குறவன் கொண்டு வர குறமகள் அதனை சமைத்து உணவாக்கியதை

“வருவிசை தவிர்த்து கடமான் கொழுங்குறை” (மலைபடுகடாம்-175)

என்பதின் வழி புலனாகின்றது.

பறைபோல முழங்கும் அருவிகளைக் கொண்ட ‘பாயல்’ என்னும் மலைக்குரிய மன்னன் சேரமான் வஞ்சன். அம்மன்னன் மான் இறைச்சிப் பொரியலைக் கொக்கின் நகம் போன்ற அரிசி சோற்றுடன் கலந்து உண்டதோடு, தன்னை நாடி வந்த பாணர்களுக்கும் வழங்கியுள்ளதை திருத்தாமனார் என்னும் புலவர்

“------------மான் வறைக் கருனை

கொக்கு உகிர் நிமிரல் ஒக்கல் ஆர” (புறம்-398:24-25)

என்று குறிப்பிடுகிறார்.

மான்தசை அவிக்கப் பெற்ற புலால் மணம் மாறாத பானையைப் பற்றி கருவ+ர்கதப்பிள்ளைச் சாத்தனார்

“மான்தடி புழுக்கிய புலவு நாறுகுழிசி”(புறம்:168:9)

என்கிறார்.வல்வில்ஓரி வேட்டையாடிக் கொணர்ந்த மானின் தசையைச் சமைத்து,அதனுடன் பசுவின் நெய்யுருக்குப் போல அமைந்த மதுவையும் விறலியர்க்கு வழங்கியதை

“----மான்நிணப் புழுக்கோடு

ஆன் உருக்கு அன்ன வேரியை நல்கி”(புறம்-152:26-27)

என்கிறது புறப்பாடல்.

மான்கூட்டங்களை வேட்டையாடிக் கொன்று தன் உடன்பிறந்தோர் கொண்டு வந்த கொழுப்பு மிகுந்த உணவாகிய தசைத் துண்டங்களைக் கவரும் பறவைகளை ஓட்டுகின்ற பெண் என்று தலைவன்

“கணமாத் தொலைச்சித் தன்னையர் தந்த

நிணஊண் வல்சிப் படுபுள் ஓப்பும்”(ஐங்குறுநூறு365:1-2)

என்று உரைக்கின்றான்.

குன்றின் அடிவாரத்தில் வாழும் மறவர் வேட்டையாடிக் கொணர்ந்த மானைத் தோட்டத்தில் அறுத்து உண்டனர் என்ற செய்தியை இடைக்காடனார்

“விசைத்த வில்லர் வேட்டம்போக

முல்லை படப்பை புள்வாய் கொண்டும்”(அகம்-284:9-10)

என்று சுட்டுகிறார்.

மான்கூட்டங்களை வேட்டையாடிக் கொன்று உடன் பிறந்தோர் கொண்டுவர கொழுப்பு மிகுந்த உணவாகிய தசைச் துண்டங்களைப் பெண்கள் காயவைத்தனர். அவற்றை உண்ண பறவைகள் வருகின்றன. அப்பறவைகளை விரட்டுகின்றனர்.இறைச்சியைப் பதப்படுத்தி உண்டனர் என்பதை

“கணமா தொலைச்சித் தன்னையர் தந்த

நிணவூன் வல்சிப் படுபுள் ஓப்பும்” (ஐங்குறுநூறு:365)

என்ற தலைவன் கூற்று பாடல் தெளிவுபடுத்துகின்றது.

முயல் இறைச்சி:

மருதநிலத்து உழவர்கள் முல்லை நிலத்தில் தம் எருதுகளை மேயவிட்டுச் சிறிய முயல்களின் குலைவான இறைச்சியோடு வாளைமீனைக் கொண்டு செய்த அவியலோடு பழைய சோற்றினைச் சேர்த்து உண்டதை

"மென்புலத்து வயல் உழவர்
வன்புலத்துப் பகடு விட்டு
குறுமுயலின் குழைசூட்டொடு
நெடுவாளைப் பல்அவியல்
பழஞ்சோற்றுப் புகவு அருந்தி"(புறம்-395:1-5)

என்னும் பாடல் காட்சிப்படுத்துகின்றது.புதிதாக அறுக்கப்பெற்ற வரகின் அரிக்காலில் இரையைத் தேடும் எலியைப் பிடிப்பதற்கு சிறுவர்கள் வில்லெடுத்து ஆரவாரம் செய்வர்.அவ்விடங்களில் சிறுமுயல்கள் அடுக்கி வைக்கப் பெற்ற கரிப்பிடித்த கலன்கள் காணப்படுகின்றன.

"புதுவரகு அரிகால் கருப்பை பார்க்கும்
பெருங்கண் குறுமுயல் கருங்கண் உடைய" (புறம்-322:3-5)

என்பதிலிருந்து முயல் இறைச்சியை உண்ட செய்திப் புலப்படுகின்றது.

முற்றத்தில் தினையைக் காயவைக்கும் பழக்கம் பண்டு இருந்துள்ளது.அவ்வாறு காயவைக்கும் பொழுது தினையைப் புறாக்களும்,காடைகளும் உண்ண வருகின்றன. அவற்றைப் பிடிக்காது உண்ணட்டும் என்று விட்டுவிட்டனர். பொழுது மறைந்து இரவாயிற்று. இல்லத்திற்கு விருந்தினர் வந்துவிட்டனர்.எனவே முயலையாவது சமைத்து உண்ணத் தருவோம் என்று நினைத்ததை

"படலை முன்றில் சிறுதினை உணங்கல்
புறவும் இதலும் அறவும் உண்கென
முயல்சுட்ட ஆயினும் தருகுவோம்(புறம்-319:6-8)

என்று புறநானூறு சித்திரிக்கின்றது.இதிலிருந்து தமிழர்கள் விருந்தினர்களுக்கு இறைச்சி உணவினைப் பரிமாறி மகிழ்விப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகின்றது. இளமையானக் கொழுத்த முயலின் இறைச்சியை அரிசியில் பால் விட்டு ஆக்கிய சோற்றை, தேனோடு கலந்து பொது இடத்தில் கள்ளமில்லா உள்ளத்தோடு சுற்றத்தாரோடு உண்டவன் 'வளவன்' என்பதை ஆலத்தூர்கிழார்

"பால்பெய் புன்கம்---
குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த ஒக்கலொடு"(புறம்-34:10-11)

என்று அழகுற எடுத்துரைக்கின்றார்.

நீண்ட காதுகளை உடைய சின்னஞ்சிறிய முயல்களை வளைத்துப் பிடித்தக் கடுமையான கானவர்கள் காட்டிலே கூட்டாஞ்சோற்றினைச் செய்து கூடி உண்டச் செய்தியினை

"நெடும் செவி குறு முயல் போக்கு அற வளைஇ
கடுங்கண் கானவர் கடறு கூட்டுண்ணும்
அரும் சுரம்…………"(பெரும்.பா-115-117)

என்று ஆற்றுப்படைச் சுட்டுகின்றது.

மீன்:

அயிலைமீன்,ஆரல்மீன்,வரால்மீன்,சுறாமீன்,கெடிற்றுமீன், இறால்மீன் என்று மீன்களில் பலவகை உள்ளன.இம்மீன்களை சமைத்தும்,சுட்டும் உண்டுள்ளனர்.நெய்தல் நிலப் பரதவர் உப்பை விற்று அதற்கு மாற்றாக நெல்லைப் பெற்றனர்.அந்த நெல்லினை அரிசியாக்கினர்.பின்பு அரிசியால் வெண்மையான சோறு சமைத்தனர்.அயிரைமீனை புளிக்குழம்பாக வைத்து தன்னை நாடி வந்தோருக்கு உணவு கொடுத்தனர். இத்தகைய இடமாகிய சேரனது 'தொண்டி' பட்டினம் என்பதை உள்ளீடாக கொண்ட அகப்பாடல் பின்வருமாறு

“அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து”(அகம்-60:40)

தூண்டிலால் மீனைப் பிடித்து விற்கும் பாணர் இனத்துப் பெண் தூண்டிலில் அகப்பட்ட வரால் மீனை வஞ்சி மரத்து விறகின் தீயில் சுட்டு ‘கள்’ குடித்து மயங்கிக் கிடக்கும் தந்தைக்கு ஊட்டுவதை ஐயூர்முடவனார்

“தாள்புனல் அடைகரைப் படுத்த வராஅல்

நார்அரி நறவு உண்டிருந்த தந்தைக்கு

வஞ்சி விறகின் சுட்டு வாய் உறுக்கும்”(அகம்-216:2-4)

என்று கண்முன் நிறுத்துகிறார்.

நெல்லை அறுவடை செய்வோர் பெரிய மீன் ஒன்றைப் பிடித்துத் துண்டங்களாக்கி உண்டனர்.மிச்சத்தை அங்கேயே விட்டுச் சென்றதை

“------பெருமீன்

அரிநிறக் கொழுங்குறை பெயர்நிலைப் பின்றை”(அகம்-236:2-3)

என்று நெடுந்தொகையும்,உழவர்கள் உண்கலங்களில் கெடிற்று மீன் உணவுடன் பூவுடன் கலந்த கள்ளும் இருக்கும் என்பதை

“------------உழவர் மண்டை

இருங்கெடிற்று மிசையொடுபூங்கள் வைகுந்து(புறம்:384:7-8)

என்று புறநானூறும் உழவர்கள் மீன் உண்டதைச் சுட்டுகின்றது.

“கொடுந்திமில் பரதவர் வேட்டம் வாய்த்தென

இரும்புலாக் கமழும் சிறுகுடிப் பாக்கத்துக்

--------கொழுங்கண் அயிலை பகுக்கும் துறைவன்”(அகம் 70:1-4)

இப்பாடல் வாயிலாக பரதவர் படகுகளில் சென்று கடலில் சென்று மீன் பிடித்து வந்தனர் என்றும், அயிரை(அயிலை) மீன்களைப் பலர்க்கும் பகிர்ந்தளித்தனர் என்றும்,அதனால் புலால் மணம் கடறகரை முழுவதும் வீசியது என்னும் செய்தி புலப்படுகிறது.

கோப்பெருஞ்சோழன் உழவர்க்காக வடிக்கப்பெற்ற முதிர்ந்த கள்ளை ஆமை இறைச்சியுடன் ஆசை தீர உண்டதை

“ஆரல் கொழுஞ்சூடு அம்கவுள் அடாஅ”(புறம்-212-4)

என்று பிசிராந்தையார் குறிப்பிடுகிறார்.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் கடற்கரையை ஒட்டி வாழும் மறவர் கடலில் கிடைக்கும் இறால் மீன் சூட்டினைத் தின்றதை

“கடல்இறவின் சூடு தின்றும்” (பட்டினப்பாலை-63)

என்கிறார்.உழத்தியர் வயலில் திரியும் வாளை மீனைச் சோற்றுடன் விலாப்புடைக்க உண்டனர் என்பதை

“பழன வாளைப் பரூஉக்கண் துணியல்

புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறை ஆக

விலாப்புடை மருங்கு விசிப்ப மாந்தி”(புறம்-61:4-6)

புறப்பாடல் உணர்த்துகின்றது.விழாக்கள் இல்லை என்றாலும் உழவரின் உண்கலங்களில் கெடிற்றுமீன் உணவுடன் பூவுடன் கலந்த கள்ளும் இருக்கும் கரும்பனூர் கிழானின் கினையர் நாங்கள் என்று

“விழவுஇன்றாயினும் உழவர் மண்டை

இருங்கெடிற்று மிசையொடு பூங்கள் வைகுந்து

--------கிணையேம்” (புறம்-384:8-10)

நெய்தல் நிலப் பரதவர் கடலில் பிடித்துக் கொணர்ந்த மீன்களை உணர்த்திய வற்றலுடன் ,இறால்மீன் வற்றலும் மணல்மேடு முழுவதும் காணப்பட்டது என்பதிலிருந்து பதப்படுத்திய மீனையும் விரும்பு உண்டனர் என்பதை கீழ்க்காணும் பாடல்கள் வழி அறியமுடிகின்றது.

“பெருங்கடற் பரதவர் கோள்மீன் உணங்கலின்

இருங்கழிக் கொண்ட இறவின் வாடலொடு”(குறு-320-1-2)

“கொழுமீன் உணங்கற் படுபுள் ஓப்பி”(அகம் 20:2)

“வாராது அட்ட வாடுஊன் புழுக்கல்” (பெரும்.பா:100)

வரால்மீனின் பெரிய துண்டங்களைப் போட்டு வைத்தக் குழம்புடன் அரிசி சோற்றின் திரளை விரும்பி உழவர்கள் உண்டுள்ளச் செய்தியை

“கருங்கண் வராஅல் பெருந்தடி மிளிர்வையொடு

புகர்வை அரசிப் பொம்மற் பெருஞ்சோறு

கவர்படு கையை கழும மாந்தி”(நற்-60:4-6)

தூங்கலோரியார் குறிப்பிடுகின்றார்.

ஈசல்:

முல்லை நிலப்பெண்கள் தயிரை உலையில் ஊற்றி வரகு அரிசியுடன் செம்மறியாட்டின் தசையை வேகவைப்பர்.அத்துடன் கார்காலத்தில் மழை பெய்து நீங்கிய பின்பு,நனைந்த வாயினை உடைய புற்றில் இருந்து வெளிப்பட்ட ஈசலை எடுத்து அதனுடன் சேர்த்து புளிப்பு வாய்ந்த புளியஞ்சோற்றினைச் சமைப்பர் என்னும் செய்தி

“சிறுதலைத் துருவின் பழுப்புஉறு விளைதயிர்

…………

ஈயல்பெய்து அட்ட இன்புளி வெஞ்சோறு”(அகம்-394:1-5)

இதன் வழி வெளிப்படுகிறது.

**மாட்டிறைச்சி:**

ஆமான் என்று அழைக்கப்படுவது காட்டுப்பசுவின் இறைச்சி. எயினர் குலப்பெண்டிர் தித்திப்பான புளிக்கறியிட்ட சுடு சோற்றை ஆமான் இறைச்சியோடு கொடுத்துப் பசியாரச் செய்வர் என்று பாணன் ஆற்றுப்படுத்துவதை

“எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு

தேமா………

ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்”(சிறு.பா:175-177)

ஆற்றுப்படைவழி அறியமுடிகின்றது.

வெட்சி வீரர்கள் பாலைநிலக் காட்டரண்களில் உள்ளவர்களைக் கொன்று பசுவைக் கவர்ந்ததோடு, மாட்டிறைச்சியை அறுத்துத் தின்றதை மாமூலனார்

“இரவுக் குறும்பு அலற நூறி,நிறைபகுத்து

இருங்கல் முடக்கர்த் திற்றி கெண்டும்(அகம்-97:4-5)

என்று மாமூலனாரும்,மழவர் காட்டில் இளம் பசுவைக் கொன்று அதன் ஊனை உண்டதை

“……….மழவர்

நாகுஆ வீழ்த்து திற்றி தின்ற”(அகம்-249:12-13)

என்று நக்கீரனாரும் குறிப்பிடுகின்றனர்.

"இன்சிலை எழில்ஏறு கெண்டி நிணம்;பொதி
விழுத்தடி நெருப்பின் வைத்தெடுத்து"(அகம்-265:12-13)

இப்பாடல் வாயிலாக காட்டுவழியில் வளைந்த வில்லை கையில் ஏந்திய வழிப்பறி கொள்ளையர் குன்றத்தின் உச்சியில் ஒரு காளையைக் கண்டு, அதைக் கொன்று, பருத்த மாமிசத் துண்டங்களை நெருப்பில் சுட்டு தின்றனர் என்பதை தெரிந்துகொள்ள இயலுகின்றது.

பசுக்களைக் கவர்ந்த வெட்சி வீரர்கள் மீட்க வந்த கரந்தை வீரர்களை வாள் கொண்டு வீசியும் அம்பு கொண்டும் விரட்டினர்.ஆநிரையை வலிமையானக் காட்டில் செலுத்தினர்.தெய்வம் உறையும் பருத்த வேப்ப மரத்தடியில் கொழுப்பு மிக்க பசுவைக் கொன்று அதன் குருதியைத் தூவித் தெளித்துப் பலியிட்டனர். பின்பு புலாலைப் புழுக்கித் தின்றனர்.இச்செய்தியை

"தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்
புலவுப் புழுக்குண்ட வான்கண் அகல்அறை"(அகம்-309:4-6)

என்று எடுத்துரைக்கின்றது.

"வலி கூட்டுணவின் வாள் குடி பிறந்த
புலி போத்து அன்ன புல் அணல் காளை"
(பெரும்பாணாற்றுப்படை-137-138)

இப்பாடலில் இடம்பெற்றுள்ள கூட்டுணவு என்னும் சொல் கூட்டாஞ்சோற்றினைக் குறிக்கின்றது.வாள் குடியில் பிறந்த ஒரு மறவர் பகைவன் நாட்டு மன்னனின் ஆநிரைக் கவர்ந்து, அவற்றில் வலிமையான ஒரு காளையை ஊர் அம்பலத்தில் அடித்துத் துண்டு துண்டாக்கி கூட்டுணவு ஆக்கி உண்ட செய்தியைக் குறிக்கும் பாடல் வாயிலாக மறத்தை அணியாகக் கொண்ட ஆண்மகனின் வீரத்தையும், கூட்டாஞ்சோறு உண்ணும் பண்பினையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

**ஊன்:**

ஊன்சோறு அல்லது,புலவு பண்டைக் காலத்தில் தமிழகத்தில் தோன்றி பின்பு வழக்கற்று விட்டது.இதனை சங்கப்பாடல்கள் மெய்ப்பிக்கின்றன. உப்பு வணிகர் சமைத்துவிட்டுப்போன அடுப்பில் ஊன்கலந்த உணவைச் சமைக்கும் மறவர்கள் திரியும் காட்டினையும், திருமணத்தின் பொழுது ஊனும் நெய்யும் சேர்த்து சமைத்தப் புலால் உணவைச் சுற்றத்தார்க்கு விருந்தாக வழங்கியதையும்

"உமண்சாத்து இறந்த ஒழிகல் அடுப்பில்
--------ஊன்புழுக்கு அயரும்"(அகம்-119:8-9)

"மைப்புஅறப் புழுக்கின் நெய்க்கனி
--------- வெண்சோறு"(அகம்-136:1)

என்னும் அகப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

தேக்கு மரத்தின் அகன்ற இலையில் வதக்கிய ஊனை உண்ணும் சிற்றூர் என்பதை குடவாயிற்கீரத்தனாரும்,

"ஊன்புழுக்கு அயரும் முன்றில்
கான்கெழு வாழ்நர் சிறுகுடியானே"(அகம்-315:17-18)

அதியமான் நெடுமான்அஞ்சி ஊன் சோறு வழங்கியதை ஔவையாரும்

"என்பொடு தடிபடு வழிஎல்லாம் எமக்கு ஈயும்";(புறம்-235:6)

என்கின்றனர்.

தொடரிப்பழம்,களாம்பழம் ஆகியவற்றோடு கலந்து புளிப்பேறிய கள்ளொடு வாட்டப்பெற்ற ஊன்துண்டு நெல்லரிசி சோற்றொடு வழங்கியதையும்

“களவுப் புளியன்ன விளை

----------வாடுஊன் கொழுங்குறை”(புறம்-328:8-10)

தாளித்த வளமான ஊனை வழங்கியதையும்

“கனிகுய்யான் கொழுந்துவையர்”;(புறம்-360:5)

அரிசிசோற்றோடு பெரிய இறைச்சித் துண்டங்களை வெட்டிப் போட்டுக் கிண்டி மதுவோடு உண்டதையும்

“திருந்தா மூரி பரந்து படக் கெண்டி

அரியல் ஆர்கையர்(புறம்-391:5-6)

மதுவுடன் ஊன் உண்டதையும் “அமிழ்து அனமரபின் ஊன்துவை அடிசில்”(புறம்-39:18)என்று புறப்பாடல்கள் தெளிவுப்படுத்துகின்றன.

நெய்யில் பொரித்த வறுவல்கள்,சூட்டுக்கோலால் குத்திச் சூடுபடுத்திய ஊன் முதலியவற்றை கிள்ளிவளவன் வழங்கியதைக் கோவூர்கிழாரும்

“நெய்துள்ளிய வறைமுகக்கவும்

சூடுகிழித்து வாடுஊன் மிசையவும்”(புறம்-86:4-5)

நெய்யால் தாளித்த ஊன் உணவினை வழங்கியதைச் சோழன் நலங்கிள்ளியும்

“நெய்ய குய்ய ஊன் நவின்ற

பல்சோற்றான்-----------(புறம்-382:8-9)

என்று உரைக்கின்றனர். “சோறு வேறு என்னா ஊன்துவை அடிசில்” (பதிற்-45)

என்னும் பாடல் பகைவரை வென்ற வீரர்களுக்கு சோறு வேறு ஊன் வேறு என பிரித்து அறியா வண்ணம் ஊன் நிறைந்த சோற்றைப் பெருவிருந்தாக மன்னன் கொடுத்ததைச் சுட்டுகின்றது. பொன்னை நறுக்கினார் போல் நுண்ணிய நேரான அரிசியை வெண்மை நிறமுடையதாய் ஆக்கி அதனுள் நன்கு சமைக்கப்பட்ட நெய் செறிந்த கறித்துண்டுகளை இடைஇடையே வைத்து நாள்தோறும் உண்ணும்படி பெறுவீர் என்று உரைத்ததைக் கூத்தராற்றுப்படை

“பொன் அறைந்தன்ன நுண்நேர் அரிசி

வெண் எறிந்து இயற்றிய மாக்கண் அமலை

தண்ணென் நுண் இழுது உள்ளீடு ஆக

அசையினிர் சேப்பின் அல்கலும் பெறுகுவீர்” (மலைபடு-440-443)

என்று குறிப்பிடுகின்றது.

மேற்கண்ட இருபாடல்களுமே அரிசிச் சோற்றினை ஊன் கலந்து வேகவைத்து உண்ணும் முறை இருந்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது.இதற்கு ஊன்துவை அடிசில் என்று பெயர். தற்காலத்தில் அதுவே பிரியாணி என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இறைச்சியைப் பொரிக்கும் ஒலியை உடைய முன்பக்கம் என்ற செய்தியால் பொரித்த இறைச்சியை உண்ட செய்தியைப் பட்டினப்பாலை மூலம் அறியமுடிகின்றது.

“ஊன் பொரிக்கும் ஒலி முன்றில்” (பட்டி-177)

பாலைநிலத்துப் பெண் ஒருத்தி நீர் குறைந்து வற்றிப் போகும் நிலையிலுள்ள ஒரு கிணற்றிலுள்ள உவர் நீரை எடுத்து வந்து விளிம்பு உடைந்துபோன ஒரு பழைய பானையில் ஊற்றி சிதைந்து போன

அடுப்பில் வைத்து அரியாது சமைத்த, அந்த சோற்றை காய்ந்துப்போன மாமிசத்துடன் உண்டனர் பாலைநிலமக்கள் என்றும் கூறுகின்றது.

**பன்றி இறைச்சி:**

குட்டையான கால்களையுடைய கொழுத்தப் பன்றியின் இறைச்சியை நல்ல நெய்யுருக்கிப் பெய்து காலை உணவுடன் பரிசிலருக்கு ஓய்மான் வில்லியாதன் என்னும் வள்ளல் வழங்கியுள்ளதையும், மதுவுடன் சுட்ட இறைச்சியை வழங்கி பாணர்களின் வறுமையை நன்னாகனார் நீக்கியதையும்

"குறுந்தாள் ஏற்றைக் கொழுங்கண் அவ்விளர்

நறுநெய் உருக்கி"(புறம்:379:8-9)47

"அரவு வெகுண்டன்ன தேறலொடு சூடு தரு"(புறம்-376:14)

என்னும் பாடலடிகள் வாயிலாக உணர்ந்துகொள்ள முடிகின்றது.

வேடுவர்கள் பன்றியைப் பிடிக்க சுருக்குவார் வைப்பர்.அதில் விழுந்தவுடன் வாரினை விலக்க காட்டு நாய்கள் சூழ்ந்து பன்றியைக் கொல்லும். நாய்கள் பற்றிக் கொண்ட தசைகளை அவை கொண்டு செல்லாத வண்ணம் விலக்குவர்.பிறகு அவ்விறைச்சியைச் சிறுகுடிக்கு கொண்டுச் சென்று உண்டு மகிழ்வர். இதனை

"சிறுகண் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்

கோள்நாய் கொண்ட கொள்ளை

கானவர் பெயர்க்குஞ் சிறுகுடி யானே"(நற்றிணை:82:7-11)

என்னும் நற்றிணைப் பாடல் அறிவிக்கின்றது.தினைக்கதிரை உண்ட பன்றியைக் குறவன் அம்பெய்தி வீழ்த்தினான்.அவ்வாறு வீழ்த்தியப் பன்றியைக் கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்தான். அவள் பன்றியை அறுத்து அதன் தசையைத் தன் குடியினர் அனைவருக்கும் பகுத்துக் கொடுத்ததை

"புனைஇருங் கதுப்பின் மனையோள் கெண்டி

குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட"(நற்-336:5-6)

என்று தோழி கூறுகிறாள்.

நீர்ப் பெயற்றுத் துறையென்னும் பட்டினத்தில்,ஆண்பன்றிகளைப் பெண் பன்றிகளோடு சேர விடாது தடுத்து,நெல்லை இடித்து மாவாக்கி அதனை உண்ணச் செய்தனர்.ஒரு குழியின் கண் அதனைப் பல நாள் நிறுத்திப் பாதுகாத்தனர். அங்ஙனம் நின்ற கொழுத்தப் பன்றியினைக் கொன்று அதன் இறைச்சியைக் கள்ளொடு உண்டனர் என்றதை

"பல்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது

நெல்மா வல்சி தீற்றி,பல

கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவிர்"(பெரும்.பா-342-345)

ஆற்றுப்படை எடுத்துரைக்கின்றது.

**ஆட்டிறைச்சி:**

விலங்குகளின் இறைச்சியில் ஆட்டிறைச்சி முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. ஆட்டுக் கடாவை வெட்டி ஊனைச் சுட்டு அவற்றை வேண்டுவார்க்கு இலையில் குறையாது கொடுத்து, சோறு வேண்டுவோர்க்கு தந்து உண்ணச் செய்து நீயும் உண்பாயாக என்று உலக நிலையாமையைத் தருமபுத்தினன் என்னும் அரசனுக்கு உணர்த்தும்பொழுது கோதமனார்

"மடை வேண்டுநர்க்கு இடை அருகாது

விடை வீழ்த்துச் சூடு கிழிப்ப" (புறம்-366:18-20)

என்கிறார்.

பெரிய ஆட்டுக்கடா ஊனைத் தீயில் வாட்டிக் காயமிட்டு ஆக்கிய பெரிய உணவை, மது உண்ணும் சிவந்த வாயில் இட்டு நாவால் அசைத்து, உண்டும் தின்றும், இரவலர்க்குத் தந்து மகிழ்வோம் என்று கூகைக்கோழியார் நிலையாமையைக் குறித்து உரைக்கும்பொழுது

"---------இரும்போத்து செந்தீச் சேர்த்தி
காயம் கனிந்த கண்அகன் கொழுங்குறை
நறவு உண் செவ்வாய் நாத்திறம் பெயர்ப்ப"(புறம்-364:4-6)

என்று ஆட்டிறைச்சியைப் பற்றிய செய்தியைப் பதிவுச் செய்கிறார்.

ஆட்டுக்கடாவை வெட்டி ஊனைச் சுட்டு சோற்றை வேண்டுவோர்க்கு இலையில் வைத்து குறையாது கொடுத்ததை

"அவிழ் வேண்டுவோர்க்கு இடை அருளி
விடை வீழ்த்துச் சூடு கிழிப்ப" (புறம்-366-18-19) கோதமனாரும் "நெய்உலை சொரிந்த மைஊன் ஓசை"(புறம்-261:8) ஆவூர்மூலங்கிழாரும் சுட்டுகின்றனர்.

மதுப்பானையைத் திறந்து செம்மறிக் கடாயை வெட்டித் தள்ளவும் காய்ச்சிய அளவில்லாத ஊன் உணவை விரும்பியவாறும் தரும் பெருவளம் நிறைந்தவன் பாரி என்பதை

"மட்டுவாய் திறப்பவும்,மைவிடை வீழ்ப்பவும்
-----------கொழுந்துவை ஊன்சோறும்"(புறம்-113:1-2)

என்னும் பாடல் வழி அறியமுடிகின்றது.

ஆட்டிறைச்சியுடன் நெய் கலந்தும் வெண்மையான சோற்றில் வெள்எலியின் சூட்டிறைச்சியையும் சேர்த்து உன் வயிறும் மனமும் நிறையுமாறு தருவோம் என்று தோழி இரவுக்குறி வந்த தலைவன் சிறைப்புறமாக நிற்க கூறுகிறாள்.

"மைஊன் தெரிந்த நெய்வெண் புழுக்கல்
எலிவான் சூட்டொடு மலியப் பேணுதும்"(நற்-83:5-6)

விழா நிகழ்ச்சிகள் இல்லையெனினும் எல்லோரும்; தவறாமல் ஆட்டுக்கடாவின் ஊன் உணவினை உண்ணுவதை ஔவையார்

"விழவின்று ஆயினும்,படுபதம்பிழையாது
மைஊன் மொசித்த ஒக்கலொடு(புறம்-96:6-7)

பகைவரை வென்று பசுவுடன் திரும்பும் வீரர்கள் மதுவுடன் ஆட்டிறைச்சியை உண்டுள்ளனர்.

"நறவும் தொடுமின் விடையும் வீழ்மின்"(புறம்-262:1)

சோற்றோடு ஆட்டின் இறைச்சியைக் கலந்து உண்டமுறையை

"எயிற்றியர் அட்டஇன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்விளை யாயமொடு
ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்" (சிறுபா-113)

நெய்யில் பொரித்த கறியைத் தமிழர்கள் விரும்பி உண்டனர்.வெள்ளரிப் பிஞ்சைக் குறுக்கே அறுத்தால் தோன்றும் விதை போன்ற வெளிறிய நறுநெய்யையே அவர்கள் பயன்படுத்தியுள்ளமைக்குச் சான்றாக

"அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய்"(புறம்-246)

இப்பாடலடிகள் அமைகின்றன.

**உடும்பு:**

இறைச்சி வகைகளுள் உடும்பிறைச்சியைத் தலைசிறந்ததாகத் தமிழர் கொண்டமை, " முழுவுடும்பு, முக்காற்காடை, அரைக்கோழி, காலாடு" என்னும் பழமொழியால் தெரியவருகின்றது. நெடுந்தொலைவு செல்லாது மடைப் பகுதியில் பிடித்த குட்டையான கால்களை உடைய உடும்பின் தசையை இட்டு சமைக்கப் பெற்ற தயிரோடு கூடிய கூழையும் பாணர்க்கும் மற்றைய விருந்தினருக்கும் கொடுத்ததைக் கீழ்க்காணும் புறப்பாடல் உணர்த்துகின்றது.

"படுமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்

விழுக்கு நிணம் பெய்த" (புறம்:326:9-10)

வேடர்கள் அறுத்தெடுத்த உடும்பின் தசையை ஒடுமரக்கழிகளால் அமைத்த தடுக்குகள் கட்டிய சிறிய வீட்டின் முற்றத்தில் கூறுவைத்துக் காயவைப்பர். பிறகு நெருப்பில் வாட்டுவர். அவ்வாறு வாட்டிய ஊனின் மணம் தெருவெங்கும் வீசுவதை

"உடும்பிழு தறுத்த ஒடுங்காழ்ப் படலைச்
சீறின் முன்றில் கூறுசெய் திடுமார்
கொள்ளி வைத்த கொழுநிண நாற்றம்
மறுகுடன் கமழும் மதுகை மன்றத்து"(புறம்:325:7-8)

என்னும் புறப்பாட்டடிகள் உணர்த்துகின்றன.

"உடும்பு கொளீஇ வரிநுணல் அகழ்ந்து
நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல்
கொண்டி எல்லுமுயல் எறிந்த
வேட்டுவன்" (நற்-59)

என்னும் நற்றிணைப் பாடலில் உடும்பு,முயல்,நுணல்,ஈயல் முதலியவற்றை வேட்டையாடிவரும் வேட்டுவனின் செயல் சுட்டப்பட்டுள்ளது.

எயினரது குடியிருப்புக்கு சென்றால் மேட்டு நிலத்தில் விளைந்த ஈந்தின் விதை போன்ற சிவந்த நெல்லால் சமைத்த சோற்றை,நாய் கவர்ந்து கொண்டு வந்த உடும்பின் கறியோடு கொடுப்பர் என்று பாணனிடம்

"கொடுவில் எயினக் குறும்பில் சேப்பின்

……………

ஞமலி தந்த மனவுச்சூழ் உடும்பின்"(பெரும்.பா:129-132)

என்று உரைப்பதாக அமைந்துள்ளது.பெண்நாய் ஓடிக் கடித்த உடும்பின் தசையினை உணவாக வழங்கியுள்ளதைக் பெருங்குன்றூர் கௌசிகனார் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

" பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ" (மலைபடு -176-177)

"நாய்கொண்டால்,பார்ப்பரும் தின்பர் உடும்பு"(பழமொழி-35)

என்னும் பழமொழி நானூறும் இதற்குச் சான்று பகர்கின்றது.

குறும்பூழ் இறைச்சி: (காடை)

நெய்யில் வெந்த அவன் விரும்புகின்ற காடைப் பறவையின் இறைச்சியைக் குழம்பாகக் கொண்டு விருந்தாகப் பெறுமாறு செய்க என்று தோழி கூறுகின்றாள்.

"நெய்கனி குறும்பூழ் காய மாக

ஆர்பதம் பெறுக "(குறு:38:1-2)

கானவன் குறும்பூழ் பறவையினை வேட்டையாடச் சென்றதைக் கோப்பெருஞ்சோழன்“குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே”(புறம்:214-6) என்று சுட்டுகின்றார்.

**ஆமை:**

முதிர்ந்த கள்ளுடன் ஆமை இறைச்சியை மிகுதியை உண்டு ஆரல் மீனின் வாட்டலைக் கன்னத்தில் அடக்கி வைத்து அரசனுக்குரிய தொழிலைச் செய்யாது மகிழ்ந்து மயங்கி கிடக்கும் வளமான சோழநாட்டின் தலைவன் கோப்பெருஞ்சோழன் என்பதைப் பிசிராந்தையார்

“------விளையல் வெங்கள்
யாமைப் புழுக்கின் காமர் வீட ஆரா
ஆரல் கொழுஞ்சூடு அம்கவுள்” (புறம்:212:2-4)

என்கிறார்.கடைமடையில் பிடித்த வாளைமீன்,உழுவோர் கலப்பையில் தட்டுப்படும் ஆமையும்,கரும்பு அறுப்போர் கரும்பில் எடுத்த தேனும் கொடுத்து கிள்ளிவளவன் உபசரிப்பதை இடைக்காடனார்

“கீழ்மடைக் கொண்ட வாளையும் உழவர்
படைமிளிர்ந் திட்ட யாமையும்”;(புறம்:42:13-14)

என்று கூறுகிறார்.முதிர்ந்த கள்ளுடன் ஆமை இறைச்சியை ஆசை தீர உண்டு கோப்பெருஞ்சோழன் மகிழ்ந்து இருந்தார் என்பதை

“யாமைப் புழுக்கின் காமர் வீட ஆரா” (புறம்-212-3)

என்னும் பாடல் வழி தெளிவாகின்றது.

வளையணிந்த மகளிர் பன்றி கிளறிய கருமையான சேற்றைக் கிளைத்தனர்.அவ்விடத்து ஆமையிட்ட புலால் மணக்கும் முட்டையை த் தேன் மணக்கும் ஆம்பல் கிழங்குடன் பெறுவர் என்பதை புறத்திணை நன்னாகனார்

“கேழல் உழுத--------
யாமை ஈன்ற புலவு நாறு முட்டையைத்
தேன்நாறு ஆம்பற் கிழங்கொடு பெறூஉம்’’(புறம்-176:2-4)

என்று ஆமை இறைச்சியைப் போலவே அதன் முட்டையையும் விரும்பி உண்டதை எடுத்துரைக்கின்றார்.காவிரிக் கரையில் வாழும் மறவர் வயலில் கிடக்கும் ஆமை இறைச்சியைப் புழுக்கி உண்டனர் என்பதை உருத்திரங்கண்ணனார்

“வயல் ஆமைப் புழுக்கு உண்டும்” (பட்டின-64) என்று மொழிகின்றார்.

**கோழி:**

பறவைகளுள் அளகின் வாட்டு இறைச்சிப் பெரும்பான்மையாக உண்ணப்பட்டுள்ளது. மான்தோலை விரித்துக் காயவைத்திருந்த தினை அரிசியைக் காட்டுக் கோழியுடன் காடைப்பறவையும் கவர்ந்து உண்டதால் அவை பிடிப்பட்டன. அவற்றை துண்டு துண்டாக்கி சந்தன விறகு தீயில், ஆரல்மீன் மணத்துடன் வேகவைத்த உணவை சுற்றத்தாருடன் உண்ணுமாறு பாணரிடம் கூறுவதை உணர்த்தும் புறப்பாடல் கீழ்வருமாறு

“கானக் கோழியோடு இதல்கவர்ந்து உண்டென
ஆர நெருப்பின் ஆரல்நாற
தடிவார்ந் தட்ட முழுவள்ளூரம்”(புறம்:320:11-13) உணர்த்துகின்றது.

பெரும்பாணாற்றுப்படையில் உழவர்களின் ஊரில் தங்கினால் வெண்மையான சோற்றுடன் வீட்டில் வளர்த்த கோழிப் பொறியலுடன் தருவர் என்பதை

“வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி

மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவீர்"(பெரும.;பா:255-256)
என்ற அடிகள் செப்புகின்றன.

**கோழ்**

கோழ் என்னும் சொல்லுக்கு கொழுத்த இறைச்சி என்று பொருள்.இரும்புக் கம்பியில் கோர்த்துச் சுட்ட கொழுத்த இறைச்சிகளாகிய பெரிய தசைத் துண்டங்களை உண்டதற்கான குறிப்புகள் பொருநராற்றுப்படையில் இடம்பெற்றுள்ளது.

"காழின் சுட்ட கோழ் ஊன் கொழும் குறை"(பொருநராற்றுப்படை-105)

நிணம் மிக்க புதிய வெண்சோற்றுத் திரளை என்று புறமும்,குறிஞ்சிப்பாட்டும் உரைக்கின்றது. கொழுத்த என்ற சொல்லில் ஞிணம் என்ற சொல் கையாளப்பட்டுள்ளது.

"பைம்ஞிணம் பெருத்த பசுவெள் அமலை"(புறநானூறு-177:14)

"பைம்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்"(குறிஞ்ஞிக்கலி -204)

**எலி இறைச்சி:**

இரவுக்குறி வந்த தலைவன் சிறைப்புறம் நிற்க தோழி அவனிடம் நாங்கள் ஆட்டிறைச்சியுடன் நெய் கலந்தும்,வெண்மையானச் சோற்றில் வெள் எலியின் சூட்டிறைச்சியைச் சேர்த்தும் உன் மனமும் வயிறும் நிறையுமாறு தருவோம் என்று உரைக்கின்றாள்.

"மைஊன் தெரிந்த நெய்வெண் புழுக்கல்
எலிவான் சூட்டொடு மலியப் பேணுதும்" (நற்-83-5-6)

என்னும் பாடல் எலியின் இறைச்சியை உட்கொள்ளும் வழக்கம் இருந்துள்ளதைத் தெரிவிக்கின்றது.

**புறவு,இதல் (கௌதாரி):**

பெண்கள் வீட்டின் முற்றத்தில் தினையைக் காயவைத்தனர்.அவற்றைப் புறாக்களும், காடைகளும் முழுவதுமாக உண்டன.அப்பறவைகளைப் பிடித்து சமைப்பதற்காகவே விரட்டாது விட்டு விட்டனர் என்பதை ஆலங்குடி வங்கனார் என்னும் புலவர்

"படலை முன்றில் சிறுதினை உணங்கல்
இதலும் அறவும் உண்கென"(புறம்-319-5-6)

என்று கண்முன் நிறுத்துகின்றார்.

**நண்டு :**

நண்டிற்கு அலவன்,கள்வன்,ஞெண்டு என்று பல்வேறு பெயர்கள் உண்டு.வலையோர் தூண்டில் போட்டு வாளை மீனையும்,வரால் மீனையும் பிடித்து வருவர்.மகளிர் வாளைமீன்களைத் துடியின் வாய் போல் நறுக்கி, வயலில் பிடித்து வந்த நண்டையும் சேர்த்து சமைப்பார்கள்.சமைத்த அந்த குழம்பை தராய் என்னும் தூக்குப் பாத்திரத்தில் வைக்கோல் போரின் ஓரத்தில் வைத்துக் கொண்டு வழங்குவார்கள் என்பதை பெருங்குன்றூர் கௌசிகனார்

மகளிர்
ஞெண்டு ஆடு செறுவில் தராய்க்கண் வைத்த
விலங்கல் அன்ன, போர்முதல் தொலைஇ
வளம்செய் வினைஞர் வல்சி நல்க" (மலைபடு.459-461)

என்று சுட்டுகின்றார்.

வெண்சோறோடு நண்டுக் கலந்து உண்டதை சிறுபாணாற்றுப்படை

"அவைப்புமாண் அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையோடு பெறுகுவீர்"(சிறு-194-195)

என்று குறிப்பிடுகின்றது.

**தொகுப்புரை:**

அரசர்கள் வேட்டையாடச் சென்றுள்ளனர்.குறிஞ்சி நிலப்பெண்கள் தானியங்களை உலர்த்தும் பொழுது அவற்றை உண்ணவரும் பறவைகளைப் பிடித்துள்ளனர்.உழவர்கள் வயல் வேலைகளில் ஈடுபடும் பொழுது மீனைப் பிடித்துள்ளனர்.வேடுவர்கள் உடும்பு, பன்றி முதலியவற்றை வேட்டையாடி உள்ளனர்.வெட்சி வீரர்கள் மாட்டு இறைச்சியை உண்டுள்ளனர்.பண்டைத் தமிழர்கள் அன்றாட வாழ்க்கையில் மான், முயல், ஆமை,முள்ளம் பன்றி, பன்றி, காடை, கோழி, மாடு, ஆடு, யானை, நண்டு, மீன் முதலியவற்றின் இறைச்சியை நெய்யில் வதக்கியும், தாளித்தும், சுட்டும் உண்டுள்ளனர். தேக்கு இலையில் புலால் உணவினைப் பரிமாறியுள்ளனர்.இதிலிருந்து புலால் உணவின் புழக்கமும்,பதப்படுத்தி நீண்ட நாட்களுக்கு வைத்துக் கொள்ளும் பழக்கமும், மதுவுடன் இறைச்சியை உட்கொள்ளும் வழக்கமும், வலிமையான உடற்கட்டுடனும் இருந்துள்ளமையும் புலப்படுகின்றது. விருந்து உபசரிப்பில் இறைச்சி முக்கியப் பங்கு வகித்துள்ளது.

## 11. தமிழில் சாரியைகளின் பயன்பாடு

**முன்னுரை**

சாரியை என்பது தமிழில் ஒரு சொல்.இச்சொல் தனித்து நின்று பொருள் தராது.பிற சொற்களோடு சேர்ந்து வரும் பொழுது மட்டுமே பொருள் தரும்.தமிழில் சில சொற்களை ஒலிப்பதற்கு சற்று எளிமையாக இருக்கும் பொருட்டு இடையே இடப்படும் சொற்கள் சாரியை எனப்படும்.இத்தகைய சாரியயை வகைப்படுத்தியும்,பயன்பாட்டு அடிப்படையில் வரும் முறைமைப் பற்றியும், இலக்கண நூலாசிரியர்களின் விளக்கம் குறித்தும் ஆராய முனைவதே கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**சாரியை:**

சாரியை என்பது தமிழில் பெயர்ச் சொல்லையோ, வினைச்சொல்லையோ சார்ந்து வரும் இடைச்சொற்களில் ஒன்று.தனி எழுத்தினைக் குறிக்கவும் இது பயன்படுத்தப்படும்.ஒரு சொல்லைப் பிரிக்கும் பொழுது பொருளை உணர்த்தாமல் சார்ந்து வரும் இடைச்சொல்லையும் நன்னூல் சாரியை என்று குறிப்பிடுகிறது.சாரியை பெரும்பான்மையாக விகுதிக்கு முன்பு நிற்கும். இனிய ஓசைக் காரணமாகவோ,புணர்ச்சியின் நிமித்தமாகவோ சாரியை வரும்.சிறுபான்மையாக சொல்லின் இறுதியில் நின்று இன்னோசை உணர்த்தி வருதலும் உண்டு.

**சாரியை :**

ஒரு பதம் மற்றொரு பதத்துடனோ,ஒரு சொல் வேற்றுமை உருபுடன் புணரும் போதோ,ஒரு மொழி விகுதியுடன் சேரும்பொழுதோ இடையே சாரியைகள் தோன்றும்.இதனை நன்னூலார் எழுத்ததிகாரத்தின் ஐந்தாவது இயலாகிய உருபு புணரியலில்

"பதமுன் விகுதியும் பதமு முருபும்
புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை
வருதலும் தவிர்தலும் விகற்பமு மாகும் "(நன்-நூற்:243)

என்று குறிப்பிடுகிறார்.ஒரு பதத்தின் முன் விகுதி அல்லது பதம் அல்லது உருபு சேரும்போது ஒரு சாரியையோ பல சாரியையோ வரலாம், வராமலும் இருக்கலாம்.சில இடங்களில் சாரியை பெறாமலும் வரலாம். சாரியை பொதுச்சாரியை, எழுத்துச் சாரியை என்று இருவகைப்படும்.

**விகுதிப்புணர்ச்சி:**

காலத்தை உணர்த்தும் வினைச்சொல்லில் சாரியை இடைநிலைக்குப் பின்பும் விகுதிக்கு முன்பும் வரும்.சாரியைக்கு என்று தனிப்பட்ட பொருள் இல்லை.

வந்தனன் = வா + த் (ந்) + த் +அன் +அன்

வா- பகுதி
த் - சந்தி
த் - ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அன் - சாரியை
அன் -ஆண்பால் விகுதி

'வந்தனன்' என்னும் வினைச்சொல்லில் இடைநிலைக்குப் பின்பும்,விகுதிக்கு முன்பும் சாரியை வந்துள்ளதை அறியமுடிகின்றது.

நடந்தான் = நட + த் (ந்) + த் +ஆன்

நட - பகுதி
த் - சந்தி
த் - ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
ஆன் - ஆண்பால் விகுதி

இதில் சாரியை இடம் பெறவில்லை.

**உருபு புணர்ச்சி:**

ஒரு சொல்லுடன் ஒரு வேற்றுமை உருபு இணைவது உருபு புணர்ச்சி.

தன் + அது = தனது (சாரியை பெறாது) தன் - பகுதி

அ + வ் + அற்று + ஒடு =அவற்றொடு (சாரியை பெறும்)

ஆ+ இன் + உ+ கு = ஆவினுக்கு (இன்,உ,கு பல சாரியைகள்)

இவ்வாறு சொற்கள் வேற்றுமை உருபுடன் புணரும் உருபு புணர்ச்சியில் சாரியைப் பெறாமலும்,சாரியைப் பெற்றும்,பல சாரியைகள் பெற்றும் புணர்வதைக் காணமுடிகின்றது

**பொதுச்சாரியைகள்:**

"அன்ஆன் இன்அல் அற்று இற்று அத்து அம்
தம்நம் நும்ஏ அஇ ஐகுன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே"(நன்-நூற்:244)2

இந்நூற்பாவில் பொதுச் சாரியைகள் பதினேழு என்றும்,பிற என்று சொல்லப்பட்டு இருப்பதிலிருந்து தன்,தான்,தாம்,ஆம்,ஆ,து என்பனவும் பொதுச்சாரியைகளாக சுட்டப்படுகின்றன.

ஒன்று +அன் + கூட்டம் = ஒன்றன்கூட்டம்

கூட்டு+ ஆம் + சோறு = கூட்டாஞ்சோறு

ஆ + ன் = ஆன்

எல்லார் + தம்+ ஐ+ உம் = எல்லார்தம்மையும்

இவ்வாறு சாரியைகள் சொல்லுக்கு இடையிலும்,சில இடங்களில் சொல்லுக்கு இறுதியிலும் சார்ந்து நின்று வருவதால் இவை பொதுச்சாரியைகளாகும்.

**புணர்ச்சியில் சாரியை:**

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணர்வது புணர்ச்சி எனப்படும்.புணர்ச்சியில் பொருள் தருவதற்காக சாரியைப் பயன்படுகிறது.

நகரம் + அத்து + ஆன் = நகரத்தான்

இச்சொல்லில் ஊரின் பெயரால் ஒருவனை அழைக்க 'நகரம், ஆன்' என்னும் இரு சொற்களையும் இணைத்துப் பொருள்தர 'அத்து' சாரியைத் துணைபுரிகிறது.இதிலிருந்து சாரியைப் புணர்ச்சி காரணமாக வந்துள்ளது என்பது புலனாகின்றது.

**பதம்:**

பதம் என்பதன் பொருள் சொல் என்பதாகும்.சொல்லினைக் குறிக்க மொழி, கிளவி என்ற வேறு சொற்களும் உள்ளன.பதம் இரண்டு வகைப்படும்.பகுத்துப் பார்க்கக்கூடிய சொல் பகுபதம் என்றும், பகுக்க முடியாத சொல் பகாப்பதம் என்றும் அழைக்கப்படுகின்றது. பகுபதம் பல உறுப்புகளைக் கொண்டிருக்கும்.அவை பகுதி, விகுதி, சந்தி, சாரியை, இடைநிலை என்பனவாகும்.இவற்றுள் விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை நான்கும் இடைச்சொற்கள் ஆகும்.

**பதப்புணர்ச்சி:**

ஒரு சொல்லுடன் மற்றொரு சொல் இணைவது பதப்புணர்ச்சி.

புளி + பூ (புளியம்பூ) 'அம்' சாரியை இதில் புளி என்னும் ஒரு சொல் பூ என்னும் மற்றொரு சொல்; இரண்டும் சேரும்பொழுது இடையில் அம் சாரியை பெற்று வந்துள்ளது.

எள் + குப்பை (எள்ளின் குப்பை) 'இன்' சாரியை

புளி + சோறு (புளிச்சோறு) சாரியைப் பெறாது

இவ்வாறு பதப்புணர்ச்சியில் சாரியைப் பெறாமலும்,பெற்றும் வருவதை உணரமுடிகின்றது.

**பதச்சாரியை:**

பதங்கள் சேரும்பொழுது வரும் சாரியை பதச்சாரியை.பகுபதத்தின் ஓர் உறுப்பு சாரியை.பகுபதத்தில் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.சான்றாக 'படித்தனன்' என்ற சொல்லுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் பிரித்தால்

படி + த் + த் + அன் + அன

படி - பகுதி

த் - சந்தி

த் - இறந்தகால இடைநிலை

அன் - சாரியை

அன் -விகுதி

இச்சொல்லில் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் அன் சாரியை வந்துள்ளது.

**தொல்காப்பியத்தில் சாரியை:**

புணரியல் என்பது மொழியில் வழங்கும் ஒலியன்கள் (ிாழநெஅநள) அவற்றின் பகிர்வு (ிாழநெஐஉ னளைவசைடிரவழைெ) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உருபன்களுக்குரிய (அழசிாநஅநள) அடிப்படை வடிவங்களையும், அடிநிலைக் கிளவிகளையும், அக்கிளவிகள் மாற்றம் பெற்று வரும் மாற்றுருபுகளையும் (யடடழஅழசிாள) விளக்குவதாகும். இன்றைய தமிழில் ஒலியன்கள், ஒலியன்களின் வருகை, அடிநிலைக் கிளவிகள்,மாற்றுருபுகள் ஆகிய அனைத்து நிலைகளிலும் புதிய விதிகள் தோன்றி வருகின்றன.

**புணர்ச்சி – வகை:**

தொல்காப்பியர் புணர்ச்சியை இரண்டாகப் பிரித்துக் காட்டுகிறார்.அவை வேற்றுமைப் புணர்ச்சி,அல்வழிப்புணர்ச்சி என்பனவாகும்.அப்புணர்ச்சியில் எழுத்துப் பெறுதலும் உண்டு.எழுத்தொடு சாரியைப் பெறுதலும் உண்டு.

தொல்காப்பியர் இதனை

"வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை அல்வழிப் புணர்நிலை மொழியும்
எழுத்தே சாரியை ஆயிரு பண்பில்
ஒழுக்கல் வழிய புணரும் காலை" (தொல்-112)

என்ற நூற்பாவில் சுட்டுகின்றார்.

மர + கிளை + மரக்கிளை(எழுத்துப் பெற்றது)

மக + கை = மகவின் கை(சாரியைப் பெற்றது)

அவ் + கோடு =அவற்றுக்கோடு(எழுத்தும் சாரியையும் பெற்றது)

**அல்வழி:**

மர + குறிது = மரக்குறிது(எழுத்துப் பெற்றது)

பனை + குறை = பனையின் குறை(சாரியைப் பெற்றது)

கலம் + குறை = கலத்துக்குறை(எழுத்தும் சாரியையும் பெற்றது)

எழுத்துச் சாரியை:

எழுத்துக்களைக் கற்பிக்கும்போது எழுத்துக்களை மட்டும் சொல்லாது சில ஒலிகளைச் சேர்த்துச் சொல்கின்றோம்.அவ்வாறு சொல்லும் ஒலிகளே சாரியைகள் ஆகும்.எழுத்துக்களை எளிதாகக் கூறுவதற்கு பயன்படும் சாரியைகள் எழுத்துச் சாரியைகள்.ஒலியின் அடிப்படையில் எழுத்துகளை குறில்,நெடில்,ஒற்று என்று மூவகைப்படுத்துவர்.எழுத்துக்களுக்குரிய சாரியை கரம்,காரம்,கான் என்பனவாகும்.எழுத்துச் சாரியைப் பற்றி தொல்காப்பியர்

"காரமும் கரமுங் கானொடு சிவணி
நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை" (புணரியல்-134)

என்றுரைக்கின்றார்.

"அவற்றுள்
கரமும் கானும் நெட்டெழுத்து இலவே"(புணரியல்-135)

"வரன்முறை மூன்றும் குற்றெழுத்துடைய"(புணரி-136)

"ஐகார ஔகாரம் கானொடும் தோன்றும்"(புணரி-137)

என்னும் நூற்பாக்களில் குறில் எழுத்துக்கள் கரம்,காரம்,கான் என்ற மூன்று சாரியைகளைப் பெற்று வரும் என்கிறார்.சான்றாக 'அ' என்ற குறில் எழுத்தை அகரம்,அகாரம், அ:கான் என்று கூறலாம்.நெட்டெழுத்துக்கள் காரம் என்னும் சாரியைப் பெற்றும்(ஆகாரம்),ஐ,ஔ என்ற நெட்டெழுத்துக்கள் காரம்,கான் என்னும் சாரியைப் பெற்றும்(ஐகான்,ஔகான்) வரும்.

**சாரியை வருமிடம்:**

பெயர்களின் வகைகளையும்,பெயர்களின் பின்னே சாரியை வருவதையும்

"உயர்திணைப் பெயரே அ:றிணைப் பெயர் என்று

ஆயிரண்டு என்ப பெயர்நிலைச் சுட்டே"(தொல்-புணரி-117)

அவற்று வழி மருங்கின் சாரியை வருமே" (தொல்-புணரி-118)

என்னும் நூற்பாக்கள் சுட்டுகின்றன.

சாரியைகள்:

"அவைதாம்
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி உளப்பட பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே"(தொல் -புணரி-119)

இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன் என்பவற்றோடு பிறவற்றையும் சாரியை என்று குறிப்பிடுகிறார் தொல்காப்பியர்.பிற என்பதால் தம், நம், நும், உம், கெழு, ஏ, ஐ, ஞான்று என்பனவற்றை கொள்ளலாம் என்று இளம்பூரணர் உரைக்கின்றார். மேலும் இன்னும்,அன்னும் சிறந்தன ஆதலால் முன்னும் பின்னும் வைத்தார் என்று வைப்பு நயம் கூறுகிறார்.

சாரியையானது வேற்றுமை உருபோ,பொருளோ வரும்போது பெயரின் வழியே வரும்.

உயர்திணையில் இன் சாரியை வரும்.

(ஆடூஉவின் கை,மகடூஉவின் கை)

அ:றிணையில் சாரியை(ஆன் கோடு,ஆவின் கோடு)

ஐந்தாம் வேற்றுமை உருபு தொகைநிலையில் சாரியை(கலத்துக்குறை)

வல்லினம் வரும்போது சாரியை(புளியங்கோடு,புளியஞ்செதில்,புளியந்தழை)

மெல்லினம் இடையினம் வரும்பொழுது சாரியை வராது(புளியஞெரி,புளிய வட்டு)

**அளவும் நிறை எண்ணுப்பெயர்கள்:**

உயிரும் புள்ளியும் இறுதியாகி
அளவும் நிறையும் எண்ணுமம் சுட்டி
உளவெனப்பட்ட எல்லாச் சொல்லும்
தத்தம் கிளவி தம்மகப்பட்ட
முத்தை வரூஉம் காலம் தோன்றின்
ஒத்ததென்ப ஏஎன் சாரியை (தொகைமரபு – 164)

உயிரும் புள்ளியும் இறுதியாகிய அளவு,நிறை ,எண்ணுப்பெயர்கள் நிலைமொழியில் நிற்க வருமொழியில் தமக்கு கீழளவைகள் வரும்போது ஏகாரச் சாரியைப் பெறும்.

ஒன்று+ கால் = ஒன்றேகால்

இரண்டு+ முக்கால் = இரண்டே முக்கால்

"பனையென் அளவும் காவென் நிறையும்

நினையுங்காலை இன்னொடு சிவணும்" (தொல் -தொகைமரபு-169)12

பனை என்னும் அளவைப் பெயரும்,கா என்னும் நிறையின் பெயரும்குறை என்பதோடு புணரும்போது இன் சாரியையோடு பொருந்தி வரும்

பனை + இன் + குறை = பனையின் குறை

கா+ இன் + குறை = காவின் குறை

**கலம்:**

"அத்திடை வரூஉம் கலமென் அளவே"(தொல்-தொகைமரபு-168)

பன்னிரண்டு மரக்கால் (குறுணி)கொண்டது ஒரு கலம்.கலம் என்னும் அளவுப்பெயர் குறை என்பதோடு வரும்போது அத்துச் சாரியை இடையே வரும். (கலத்துக்குறை )

**திங்கள்:**

மாதத்தினை உணர்த்தும் திங்கட்பெயர்கள் இக்குச் சாரியைப் பெற்று வரும்.

"திங்கள் முன்வரின் இக்கே சாரியை"

(தொல்-உயிர் மயங்கியல் -248)

ஆடிக்குக் கொண்டான்

சித்திரைக்குக் கொண்டான்

என்னும் திங்கட் பெயர்கள் இக்குச் சாரியை பெற்று வந்துள்ளது தெளிவாகின்றது.

**காலப்பெயர்:**

பனி:

"பனியென வரூஉங் காலவேற்றுமைக்கு

அத்தும் இன்னுஞ் சாரியை யாகும்"(தொல் உயிர்மயங்கியல்-241)

பனியென்னும் காலத்தை உணர்த்துகின்ற இகர ஈற்றுச் சொல்லிற்கு அத்தும்,இன்னும் சாரியையாக வரும்.

(பனியத்துக்கொண்டான்,பனியிற் கொண்டான்)

**வெயில்:**

"வெயிலென் கிளவி மழையியல் நிலையும்"(தொல் -புள்ளி-377)

வெயில் என்னும் சொல் மழை என்னும் சொல்லை;ப் போல அத்தும்,இன்னும் பெற்று முடியும்.

வெயில் + அத்து + க் + கொண்டான் = வெயிலத்துக் கொண்டான்

**பூதம்:**

ஐம்பெரும் பூதங்களில் ஒன்றான வளியென்னும் சொல் அத்துச் சாரியையும் ,இன் சாரியையும் பெற்று வருவதனை

"வளியென வரூஉம் பூதக்கிளவியும்

அவ்வியல் நிலையல் செவ்விதென்ப"(தொல்-உயிர்-242)

என்ற நுற்பா உணர்த்துகின்றது.

வளி + அத்து +கொண்டான் = வளியத்துக் கொண்டான்,

வளி + இன் +கொண்டான் =வளியிற் கொண்டான்

**மரப்பெயர்:**

"புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை"(தொல் உயிர்-244)

சுவையன்றிப் புளியென்னும் மரத்தினை குறிக்கும் சொல் அம் சாரியைப் பெற்று வரும்.(புளியங்கோடு)

"ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே"(தொல் புள்ளி-304)

ஆண் என்னும் மரத்தினை உணர்த்தும் சொல் அம் சாரியைப் பெறும்(ஆணங்கோடு)

"எகின் மரமாயின் ஆண்மர இயற்றே"(தொல் -புள்ளி-336)

எகின் என்பது மரப்பெயராக வருமிடத்து ஆண்மரத்தினைப் போல் அம் சாரியைப்பெற்று வரும்.(எகினங்கோடு)

**ஆகாயம்:**

விண் என்று ஆகாயத்தை உணர்த்துகின்ற பெயர் அத்துச் சாரியைப் பெறுவதனை

"விண்ணென வரூஉங் காயப் பெயர்வயின்
உண்மையு முரித்தே அத்தென் சாரியை
செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை"(தொல் புள்ளி-305)

என்னும் நூற்பா தெளவுபடுத்துகின்றது.

"விண்ணத்துக் கொட்கும் வண்ணத்தமரர்";(நாலடியார்-226)

என்ற பாடல் இதற்கு சான்றாக அமைகின்றது.

**கொடி:**

"பீரென் கிளவி அம்மொடுஞ் சிவணும்"(தொல் -புள்ளி-365)

பீர் என்னும் சொல் அம் சாரியைப் பெற்று புணரும். (பீரங்கொடி)

தாழ்:

"தாழென் கிளவி கோலொடு புணரின்
அக்கிடை வருதல் உரித்து மாகும்"(தொல் -புள்ளிமயங்கியல்-384)

தாழ் என்னும் சொல் கோல் என்னும் சொல்லோடு புணரும் பொழுது அக்குச் சாரியைப் பெற்றுவரும்.(தாழக்கோல்)

**எண்ணுப்பெயர்:**

ஆயிரம்:

"அத்தொடு சிவணும் ஆயிரத் திறுதி
ஓத்த எண்ணு முன்வரு காலை"(தொல் – புள்ளி மயங்கியல்-317)25

ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர், எண்ணுப்பெயரோடு புணருமிடத்து அத்துச் சாரியைப் பெறும். (ஆயிரத்தொன்று)

"அடையொடு தோன்றினும் அதனோ ரற்றே"
(தொல் புள்ளி மயங்கியல் -318)

அடையடுத்த மொழியொடு வரினும் ஆயிரம் என்னும் எண்ணுப் பெயர் அத்துச் சாரியைப் பெற்று வரும்.(பதினாயிரத்தொன்று)

**திசைப்பெயர்:**

திசைப்பெயர்கள் தம்முள் தாம் புணருடத்து ஏகாரச் சாரியை பெறும் என்பதை

"இருதிசை புணரின் ஏ இடை வருமே" (குற்றியலுகரப்புணரியல் 431)

என்ற நூற்பா சுட்டுகிறது.

பெயர் ,உருபு இவற்றின் இடைவரும் சாரியை:

விள + வ் + இன் + ஐ = விளவினை (இன்சாரியை)

பலா + வ் + இன் + ஐ = பலாவினை (இன்சாரியை)

" பலவின் பழுப்பயம் கொண்மார்"( அகநானூறு – 12)28

இப்பாடலில் பலாப்பழம் தரையில் விழாமல் இருக்க குறவர் குரம்பை ஊன்றுவர் என்று சொல்லுமிடத்து இன் வந்துள்ளதை அறியமுடிகின்றது.

அவையற்றை - அவை + வற்று + ஐ (வேற்றுமை உருபு). அவை என்னும் சொல் முன் வற்று என்னும் சாரியை அற்று என புணரும்.

அவற்றுக்கோடு - அவை + வற்று + கோடு (வேற்றுமைத்தொகை)

சாரியைக்குப் புறனடை:

இதற்கிது சாரியை யெனின் அளவு இன்மையின்
விகுதியும் பதமு முருபும் பகுத்திடை
நின்ற வெழுத்தும் பதமு மியற்கையும்
ஒன்ற வுணர்த்த லுரவோர் நெறியே(நன்னூல்-நூற்:253)

விகுதிப் புணர்ச்சி , பதப்புணர்ச்சி , உருபு புணர்ச்சி போன்றவற்றிற்கு இவைதாம் சாரியை என்று சொன்னால் அதற்கு எல்லை இல்லை.எனவே அவ்வகைப் புணர்ச்சிகளைப் பிரித்து அவற்றின் இடையே தோன்றும் ஏ,அ முதலிய எழுத்துச் சாரியைகளையும் அன், ஆன் முதலிய பதச்சாரியைகளையும் அறிந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்.

**நிறைவுரை:**

இவ்வாறு புணர்ச்சியிலும், பெயர் உருபு இடையேயும் ,அளவு ,நிறை, எண்ணுப் பெயர்களிலும்,காலப்பெயர், திங்கட்பெயர்களிலும் சாரியைகள் பயின்று வந்துள்ள முறைமையினையும், எழுத்துச் சாரியைகள் குறித்தும் , பொதுச்சாரியைகள் பற்றியும் , நன்னூலாரும், தொல்காப்பியரும் சாரியைகளின் தன்மைகளாக சுட்டுவனவற்றையும் உணர்த்திக் கட்டுரை நிறைவுறுகின்றது.

## 12. சங்ககால பண்டுவம்

அன்று முதல் இன்று வரை காலங்காலமாக மக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆட்படவேண்டிய சூழல் நிலவி வருகின்றது.அவர்கள் நோயினால் ஏற்பட்ட துன்பத்தை நீக்குவதற்கு பல்வேறு பண்டுவ முறைகளைப் பின்பற்றி உள்ளனர்.இதனை இலக்கியங்கள், கல்வெட்டுகள், திருக்கோயில்கள் முதலியவை எடுத்தியம்புகின்றன.பழந்தமிழகத்தில் பயன்பாட்டில் இருந்து வந்த மருத்துவம் தமிழ் மருத்துவம் என்று அழைக்கப்படுகின்றது.அதற்கானச் சான்றுகளைக் சங்க இலக்கியத்தில் காணமுடிகின்றது.பதினெண் கீழ்க்;கணக்கு நூல்களில் ஏலாதி, சிறுபஞ்சமூலம்,திரிகடுகம் என்ற நூலின் பெயரிலேயே மருத்துவம் இடம்பெற்றிருக்கின்றது. இதிலிருந்து பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மருத்துவத்துறையில் தமிழரின் வளர்ச்சியைக்

காணமுடிகிறது.உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்ற திருமூலர் உடம்பை வளர்க்கும் வழியைக் கூறுகின்றார்.அவ்வகையில் சங்ககாலத்தில் நடைமுறையில் இருந்த பண்டுவ முறைகளைக் காணலாம்.

**மருந்து:**

பொருட்பாலில் மருந்து என்று ஓர் அதிகாரமே உள்ளது.நோய் என்று ஒன்று இருந்துள்ளமையால் தான் மருந்து பற்றி எழுதப்பட்டுள்ளது.உணவே மருந்து மருந்தே உணவு என்பதை அனுபவத்தால் உணரந்;து சொல்லி இருக்கின்றனர்.வள்ளுவர் அளவோடு உண்பதால் உடலுக்கு உணவு ஊறு விளைவிக்காது என்பதையும்,பசித்தப் பின்பு உண்பது சிறந்த உணவு பழக்கம் என்பதையும்,உண்ணும் காலம் அறிந்து செரித்த பின்பு உண்பதால் நோயின்றி வாழலாம் என்றும் மருத்துவக் குறிப்புகளை அடுக்கிக் கொண்டே செல்கின்றார்.இதனை

"அருந்தியது அற்றது போற்றி உணின்"(திருக்குறள் - 941)

"அளவறிந்து உண்க "(திருக்குறள் -943)

"துய்க்க துவரப் பசித்து"(திருக்குறள் - 944)

என்னும் குறட்பாக்கள் மெய்ப்பிக்கின்றன.

பிணிக்கு மாறுபட்ட மருந்துகள் இருந்திருக்கின்றன என்பதை வள்ளுவம் கீழ்க்காணும் குறளில் சுட்டுகின்றது.

"பிணிக்கு மருந்து" (திருக்குறள் - 1102)

மரத்தின் அனைத்து உறுப்புகளும் மருந்தாகப் பயன்படுவதை நற்பண்புகளும் பெருந்தன்மையும் உடையவனிடம் இருக்கும் செல்வத்தோடு ஒப்பிடுகின்றது உலகப்பொதுமறை

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்"( திருக்குறள் - 217)

வாழ்க்கையில் இன்பமும்,துன்பமும் மாறி மாறி வருவது உலகியல் இயல்பு.ஒருவர் இடுக்கண் உற்றக்கால் அவருடைய உறவினர் ஒருவர் முயன்று துன்பத்தை நீக்குகின்றார்.இச்செயலை

"அல்லல் ஒருவர் அடைந்தக்கால்,மற்றவர்க்கு
……
மனைமரம் ஆய மருந்து"(பழமொழி - 53)

என்கிறார் முன்றுரையரையனார்.இதில் துன்பத்தை நோயாகவும், உதவி செய்தவரை நோய் நீக்கும் வீட்டில் உள்ள மருந்து மரமாகவும் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.மேலும் புழக்கடையில் மூலிகைச் செடிகளை வைத்து வளர்த்தார்கள் என்றும்,அவை நோய் கண்ட காலத்து அவசர மருந்தாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதும் தெரிகின்றது.

தம்முடைய நட்பை நீக்கியதற்கு தாமும் அந்த நட்பை நீக்குதல் மருந்தாகும் என்ற நட்பு மருந்தினை

"கண்டு அறியார் போல்வர்கெழீஇயின்மை செய்வாரை
…….
விண்டற்கு விண்டல் மருந்து"( பழமொழி - 251)

என்கிறது. குழந்தைக்கு நோய் வந்தால் அந்நோயினை ஆராய்ந்து அறிந்து மருந்து கொடுத்தல் பெரிய அறமாகக் கருதப்படுவதோடு புகழையும் நிலைநாட்டும் என்பதை

"குழவி மருந்து"(சிறுபஞ்சமூலம் -72)

காரியாசான் குறிப்பிடுகின்றார்.

நோயாளிகளின் துன்பத்தையும் வருத்தத்தையும் நீக்குவது மருந்து என்கிறது நற்றிணைப்பாடல் ஒன்று.

"அருந்துயர் அவலம் தீர்க்கும் மருந்து"(நற்றிணை 140:10-11)

இக்கருத்தினைக் கலித்தொகை

"அருந்துயர் ஆரஞர் தீர்க்கும் மருந்து"

(கலித்தொகை -குறிஞ்சிக்கலி: 20-21)

"இன்னுயிர் செய்யும் மருந்து"(கலித்தொகை பாலைக்கலி -31:14)

"திருந்திய யாக்கையும் மருத்துவன் ஊட்டிய
மருந்து போல் மருந்தாகி மனன் உவப்ப"

(கலித்தொகை பாலைக்கலி -16:19 -21)

என்கிறது. மேலும் உயிர்க் காக்க வல்ல மருந்தும்,நோயுற்றவனின் பிணியினை நீக்கவல்ல மருந்தினைக் கண்டறிந்து வழங்கக்கூடிய மருத்துவரும் இருந்துள்ளமைப் புலனாகின்றது.

**அறுவை சிகிச்சை:**

இன்றையக் காலத்தில் மருத்துவர்கள் மேற்கொள்ளும் நவீன அறுவை சிகிச்சையானது கம்பராமாயணம் எழுதப்பட்டக் காலத்திலேயே நடைமுறையில் இருந்துள்ளது.உடலில் தோன்றிய கட்டியை அறுத்து அதனுள் இருக்கும் இரத்தத்தை வெளியேற்றி நெருப்பில் வாட்டி கிருமிகளைக் கொன்று மருந்து வைக்கும் முறை இருந்தமையைக் கம்பர்

"உடலிடைத் தோன்றிற்று ஒன்றை அறுத்து
அதன் உதிரம் ஊற்றிச் சுடலுறச் சுட்டு
வேறோர் மருந்தினால் துயரம் தீர்ப்பர்"

(கம்பராமாயணம் - கும்பகர்ணன் வதைப்படலம் 7147)

என்கிறார்.இச்செயலானது தமிழர்களின் மதிநுட்பமிக்க மருத்துவ அறிவைக் காட்டுகின்றது.

இந்திரசித்தின் பிரமாத்திரத்தால் தாக்குண்டு இலக்குவன் உள்ளிட்ட அனைவரும் உயிரற்ற உடல்களாகத் தரையில் வீழ்ந்துக் கிடப்பதைக் கண்ட இராமனும் மண்ணில் சாய்ந்தான்.இதனைக் கண்ட அனுமன் செய்வதறியாது சாம்பனிடம் சென்று சொல்கிறான்.அப்போது சாம்பன் அனுமனிடம் மேருமலையையும் அதற்கு அப்பால் உள்ள நீலகிரி மலையையும் கடந்து சென்றால் மருந்துமலை ஒன்று உள்ளது.இறந்தவரை உயிர்ப்பெறச் செய்யும் மருந்து ஒன்றும் (சஞ்சீவகரணி),உடம்பு வெவ்வேறு பிளவுகளாகக் கிழிந்தாலும் முன்பு போல் பொருந்தச் செய்யும் மருந்து ஒன்றும்,உடம்பில் தைத்திருக்கும் படைக்கலங்களை வெளிப்படுத்தும் மருந்து ஒன்றும்,பண்டைய உருவை மீட்டளிக்கும் மருந்து ஒன்றும் உள்ளன என்று சொல்லி அனுப்புகிறான்.

"மாண்டாரை உய்விக்கும் மருந்து ஒன்றும்
உடல்வேறு வகிர்களாகக் கீண்டாலும்
பொருந்துவிக்கும் ஒரு மருந்தும்
படைக்கலங்கள் கிளைப்பது ஒன்றும்
மீண்டேயும் தம் உருவை அருளுவது ஓர்
மெய்மருந்தும் உள"

(கம்பராமாயணம் - யுத்தகாண்டம் - மருத்துமலைப் படலம் -27)

என்னும் பாடலில் நால்வகை மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

"சல்லியம் அகற்றுவது ஒன்று சந்துகள்
புல்லுறப் பொருத்துவது ஒன்று போயின

நல்உயிர் தருவது ஒன்று நல்நிறம்
தொல்லையது ஆக்குவது ஒன்று தொல்லையோய்"

(கம்பராமாயணம் - யுத்தகாண்டம் - மருத்துமலைப் படலம் -90)

என்ற பாடல் உடலில் பாய்ந்த படைக்கலங்களை நீக்கும் சல்லியகரணி,உடம்பு வெவ்வேறு பிளவுகளாகக் கிழிந்தாலும் முன்பு போல் பொருந்தச் செய்யும் சந்தானகரணி,இறந்தவரை உயிர்ப்பெறச் செய்யும் மருந்து சஞ்சீவகரணி,பண்டைய உருவை மீட்டளிக்கும் மருந்து சாவரணியகரணி என்று மருந்தின் ஆற்றலையும் அவற்றின் அளவுகளையும் உரைக்கின்றது.இம்மருந்துகளைக் கொண்டு அவசரகால மருத்துவம் மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை,உயிரூட்டும் மருத்துவம் இவையெல்லாம் நம் முன்னோர்களின் வியக்க வைக்கும் கண்டுபிடிப்புகள் ஆகும்.

இறந்தவரை உயிர்ப்பெறச் செய்யும் சஞ்சீவகரணி மருந்தினைப் பற்றியக் குறிப்பு இடம்பெற்றுள்ளதை

"வீயும் உயிர் மீளும் மருந்தும் எனல் ஆகியது
வாழி மணியாழி"(சுந்தரக்காண்டம் - உருக்காட்டுப்படலம் - 5295)

என்பதின் வழி காண இயலுகின்றது.

நிகண்டு மருந்தினை

"சல்லிய கரணி,சந்தான கரணி
சமனிய கரணி,மிருத சஞ்சீவி
இவையே நால்வகை மருந்தென செப்புக"

(பொருட்தொகை நிகண்டு- நூற்பா – 349)

என்று உறுதியாக உரைக்கின்றது.

சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் தம்பதியர் இடையே உண்டாகும் ஊடல் பற்றி விரித்துரைக்கும் பொழுது இத்தகு ஊடல்களினால் தம்பதியர்களுக்கு நேரும் துயரங்களைக் களைய தக்கதொரு மருந்து சல்லிய கரணி,சந்தான கரணி,சாமந்திய கரணி, மற்றும் மிளகு சஞ்சீவினி போன்ற சக்திமிகு மருந்துகளைக் கொண்டுள்ள இப்பரந்த உலகினில் காணமுடியவில்லையே என்று வருத்தத்துடன் குறிப்பிடுவதுடன்,மிருத சஞ்சீவினி எனும் மருந்து பிரிந்து கொண்டிருக்கும் உயிரினைக் கண் சிமிட்டும் நேரத்திற்குள் மீட்டு நிலைநிறுத்தும் தன்மைப் பெற்றிருத்தலால் அதை உயிர் மருந்து என்றும் குறிப்பிடுகின்றார்.

"பழங்கால தமிழகத்தில் வாழ்ந்து வந்த சித்தர்கள் கொங்குநாடு, குடகு நாடு,சேர நாடு ஆகியவற்றில் இக்கிடைத்தற்கரிய மூலிகைகள் கிடைக்கக்கூடியவைகளாகத் தங்கள் சித்த மருத்துவ நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். மூலிகைகள் வளரக்கூடிய இடங்களுக்கு அட்டமங்கலம் எனப் பெயரிட்டுள்ளனர்."(தமிழ் இலக்கியத்தில் சித்த மருத்துவம் - பக்கம் -237)என்கிறது.

வாளால் வெட்டி, தீயால் வாட்டி உடலுக்குத் துன்பத்தைக் கொடுத்தாலும் அதனைப் பொறுத்துக் கொண்டு மருத்துவனிடத்து நோயாளி தீராத விருப்பம் உடையவனாக இருப்பது போல் எனக்குத் தொடர்ச்சியாகத் துன்பங்களைத் தரினும் உன்னை வெறுக்காது அருளை மட்டுமே எதிர்ப்பார்த்திருப்பேன் என்று குலசேகராழ்வார் வித்துவக்கோட்டம்மானை வேண்டுமிடத்துக் குறிப்பிடுகின்றார்.

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாக் காதல் நோயாளன்போல் மாயத்தால்
மீளாத்துயர் தரினும் வித்துவக்கோட்டம்மானே நீ

ஆளா உனதருளே பார்ப்பன் அடியனே"

(பெருமாள் திருமொழி - ஐந்தாம் பதிகம் - 4)

குமரகுருபரர் நீதிநெறி விளக்கத்தில் புண்ணை அப்படியே மூடி வைக்கமாட்டார்கள் என்பதையும், அதனைக் கருவியினால் அறுத்து,உள்ளே இருக்கின்ற கெட்ட இரத்தத்தை வெளியேற்றி மருந்துவைத்து ஆற்றும் அறிவு வழக்கத்தில இருந்துள்ளதை

"கருவியிட்டாற்றுவார் புண்வைத்து
மூடார் பொதிந்து" (நீதிநெறி விளக்கம் -55)

என்று உரைக்கின்றார்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"(குறள் -948)

இக்குறளில் வாய்ப்பச்செயல் என்பதற்கு விளக்கம் தரும் பரிமேலழகர் மருந்து செய்தல்,உதிரங்களைதல்,அறுத்தல்,சுடல் என்னும் முறைகளில் ஏற்பது செய்தல் வேண்டும் என்று சொல்வது சிந்திக்கத்தக்க வகையில் இருக்கின்றது.

உடல் முழுவதும் மரப்பொந்து போல ஏற்பட்ட புண்களுக்கு கவளம் போல் மருந்தை வைத்து,நெய்யி;ல் தோய்த்த துணியினைப் புண்ணின் மேல் வைத்தும், புண்பட்டவரை நெய்ப்பத்தலில் கிடத்தியும், புண்ணுக்கு உள்ளே இருக்கும் இரும்புத் துண்டுகளை அறுவை சிகிச்சை முறையினால் அறுத்தெடுத்தும், எலிமயிரினால் நெய்யப்பட்ட ஆடையினால் போர்த்தி புண்ணில் காற்று உட்புகாதவாறும் மருத்துவம் செய்துள்ள நுட்பத்தைத் திருத்தக்கத்தேவர்

"முதுமரப் பொந்து போல
முழுமெய்யும் புண்களுற்றார்க்கு
இதுமருந்தென்ன நல்லார்
இழுதுசேர் கவளம் வைத்து
பதுமுகன் பாவை மார்பில்
நெய்க்கிழிப் பயிலச் சேர்த்தி
நுதிமயிர்த் துகிற்குப் பாயம்
புகுகென நூக்கினானே"(சீவகசிந்தாமணி- 818-819)

என்று சுட்டுகின்றார்.நெய் மருத்துவப் பொருளாக இருந்துள்ளமையையும்,நோயாளி எலி மயிரினால் செய்யப்பட்ட ஆடையை அணிந்திருந்ததும்,அறுவை சிசிச்சை மருத்துவர்கள் இருந்தமையையும் உணரமுடிகின்றது.

சொல்லதிகாரத்தில் வேற்றுமையியலில் இரண்டாம் வேற்றுமை பாகுபாடுகளை வகைபடுத்தும் பொழுது

"அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் விரித்தலின்"

(தொல்காப்பியம் -சொல்லதிகாரம்; - 72)

என்கிறார் தொல்காப்பியர்.இதற்கு விளக்கம் சொல்லும் உரையாசிரியர் சிறிதிழக்கச் சிதைத்தலாவது ஒரு பகுதியை மட்டும் நீக்குதல் என்கிறார்.இதிலிருந்து உடல் உறுப்புக்களைக் குறைத்தல் அல்லது உடலின் ஒரு பகுதியைக் குறைத்தல் என்பது புலனாகின்றது.

மெய்ப்பாட்டியலில் வெகுளி என்ற மெய்ப்பாடு தோன்றக் காரணமாக

"உறுப்பறை குடிகோல் அலைகொலை என்ற
வெறுப்ப வந்த வெகுளி நான்கே"

(தொல்- பொருள்-மெய்ப்பாட்டியல் - 10)

என்கிறார் தொல்காப்பியர்.உறுப்பறை என்பதற்கு அங்கங்களை அறுத்தல் என்று உரையாசிரியர்கள் பொருள் கூறுகின்றனர்.

பஞ்சு மருத்துவம்:

சங்ககாலத்தில் பஞ்சினால் புண்ணைத் துடைத்து புண் ஆறுவதற்கும் பஞ்சு வைத்துக் கட்டியுள்ளனர்.

“செருவா யுழக்கி குருதி யோட்டி

கதுவாய் போகிய துதிவா யெ:. கமொடு

பஞ்சியும் களையாப் புண்ணர்”(புறநானூறு – 353-16)

என்னும் பாடல் பஞ்சு வைத்துக் கட்டிய புண் ஆறும் முன்பே மறுபடியும் போர்க்களத்திற்கு வந்து பஞ்சுக் கட்டுடனேயே வாளேந்தி போர் புரிந்த வீரர்கள் என்று குறிப்பிடுகின்றது.இதிலிருந்து பஞ்சினால் கட்டுப்போடுகின்ற இன்றைய முறையினைப் பல ஆண்டுகளுக்கு முன்பே உலகிற்கு அறிமுகப்படுத்தி இருக்கின்றனர் என்பதை பெருமையோடு சொல்ல இயலும்.

**தையல்:**

போரிலே புண்பட்டு பிளந்த காயங்களை மருத்துவர் ஊசியும் நூலும் கொண்டு தைத்துக் குணப்படுத்தி இருப்பதை

“மீன்தேர் கொட்பிற் பனிக்கயம் மூழ்கிச்

சிரல்பெயர்ந் தன்ன நெடுவெள்ளூசி

நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்

அம்புசேர் உடம்பினர்”(பதிற்றுப்பத்து -42)

என்னும் பாடல் காட்சிப்படுத்துகின்றது.பிளவுப்பட்ட தசையினுள் ஊசியை உள்ளே புகுத்தி வெளியே எடுத்ததை தண்ணீருக்குள் இருக்கின்ற மீனைக் கொத்தி உண்பதற்காக நீரில் பாய்ந்து அடுத்த நொடியிலேயே நீரைவிட்டு மேலே பறந்து வருகிற சிரல் பறவையின் செயலோடு ஒப்பிடப்பட்டுள்ளது. இந்த முறையில் தான் அக்காலத்தில் தையல் போடப்பட்டிருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட பதிற்றுப்பத்து பாடலுக்கு 1942 இல் வெளிவந்த தமிழ் மருத்துவப் பொழில் என்னும் திங்கள் வெளியீட்டு இதழ் “மீனைத்தேடிச் சுழன்று குளிர்ந்த குளத்திலே மூழ்கி,மீன்கொத்திப் பறவை எழுகின்ற காலத்து அப்புண்ணில் உதிரத்திலே மறைந்தெழுகின்ற ஊசியினாலேற்பட்ட ஊசித்தழும்பும் புண்ணின் வடுவும் பொருந்திய மார்பு என்பது பொருள்.இச்சங்க நூலிலிருந்து ‘நெட்டை’ என்ற பெயரையுடைய புண்ணைத் தைக்கும் கருவியான நெடுவெள்ளூசியை அறிகிறோம்”(தமிழ் மருத்துவப் பொழில் - னுச. சுப்பிரமணியம்,டு.ஐ.ஆ - 56)என்று விளக்கம் அளிக்கின்றது.

கானல் நீரை அருந்தி ஏமாந்திருக்கும் பெண்மானை,இரும்பை அறுக்கும் அரம் போன்ற பற்களை உடைய செந்நாய் துரத்தும்,அந்தப் பெண்மான் காற்றில் பறக்கும் பூளைப்பூ போலப் பறந்தோடி ஒய் என அலறும் என்று கல்லாடனார் கூறும் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைவன் சொல்லும் பாடலில் தையல் போடுவதற்குப் உருவாக்கப்பட்ட ஊசிகள் செந்நாயின் கூரியத்தன்மையுடையதாக இருந்தது என்ற குறிப்புக் காணக்கிடக்கின்றது.

“அரம் தின் ஊசித் திரள் நுதியன்ன

திண்ணிலை எயிற்ற செந்நாய் எடுத்தலின்

வளிமுனைப் பூளையின் ஒய்யென்று அலறிய”(அகநானூறு -199: 8-9)

**மகப்பேறு சிகிச்சை:**

காந்தபுரம் என்ற ஒரு பகுதியை ஆண்ட வேந்தனின் மகள் பிள்ளையைப் பெற்றெடுக்க முடியாமல் பேறுகால வேதனையால் துன்பப்படுகிறாள்.அப்பெண்ணின் வயிற்றைக் கிழித்துக் கொங்கு நாட்டைச் சேர்ந்த நறையூரில் வாழ்ந்த மருத்துவச்சி தன் திறமையால் குழந்தையை வெளியில் எடுத்ததைக் கொங்குமண்டல சதகம்

"குறைவறு தெண்ணீர் நதியணை காந்தபுரத் தொருநல்

இறைமகளார் மகவீனப் பொறாது உடல் ஏங்க வகிர்

துறைவழி ஏற்று மகிழ்வூட்டும் அங்கலை தோன்றி வளர்

மறைவழி நேர் நறையூர்

நாடுசூழ் கொங்கு மண்டலமே"(கொங்குமண்டல சதகம்)

என்று குறிப்பிடுகின்றது.மேலும் "கொங்குமண்டல சதகச் செய்யுளில் வயிற்றைக் கிழித்துக் குழந்தையை எடுத்து பின் வயிற்றைத் தைக்கும் முறையைப் பற்றி உணருகிறோம்" என்று (தமிழ் மருத்துவப் பொழில் -56) விளக்கம் அளிக்கின்றது.

இச்சதகத்தில் இடம்பெற்றுள்ள வகிர் துறைவழி என்பது வயிற்றைக் கிழித்துக் குழந்தையை வெளியல் எடுக்கும் முறையைக் குறிக்கின்றது.அறுவை மருத்துவத்துறை இருந்ததையும் அக்கலைக் கொங்கு நாட்டைச் சேர்ந்த நறையூரில் வளர்ந்திருந்ததையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

கருவுற்றப் பெண்கள் புதல்வரைப் பெற்ற காலத்து நடைபெறும் மருத்துவ முறைகளில் ஒன்று சிறுவெண்கடுகு பூசிப் படுக்க வைத்திருந்த செய்தியை

"……புனிற்று மகள்

பூணா ஐயவி தூக்கிய "(பதிற்று: 16: 3-4)

"நெய்யொடு இமைக்கும் ஐயவித் திரள்காழ்

விளங்குநகர் விளங்க கிடந்தோட் குறுகிர்

புதல்வன் ஈன்றென" ( நற்றிணை -1: 5)

என்னும் அடிகள் மெய்ப்பிக்கின்றன.

இறந்த உடலைப் பதப்படுத்துதல்:

இராமன் காட்டிற்கு சென்றுவிட்டான்.தசரதன் இறந்து விட்டான்.பரத சத்துருக்கனர் கேகய நாட்டுக்குச் சென்றிருந்தனர்.அவர்கள் வந்து ஈமக்கடன் செய்யும்வரை கெடாமல் இருப்பதற்காக .இறந்து போன தசரதன் உடம்பினைத் தைலத்தில் இட்டு வைத்ததைக் கூறும் படலத்திற்கு தைலம் ஆட்டுப் படலம் என்றே பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது.

"தையற் கடல்நின்று எடுத்து அவனைத்

தயிலக் கடலின்தலை உய்த்தான்"(தைலம் ஆட்டுப் படலம்; - 1914)

என்னும் செய்யுள் அரசனது இறுதி கடமைகளை செய்வதற்காக கோசலை,சுமித்திரை,கைகேயி மற்றும் அறுபதினாயிரம் மகளிர்களாகிய பெருங்கடலில் இருந்து தசரதனை எடுத்து கடல் போல் மிகுந்த தயிலத்தினிடத்தில கொண்டு சேர்த்ததை சுட்டுகின்றது.பதப்படுத்தலுக்குரியக் கலவைகளை அறிந்து வைத்துதிருக்கின்றனர்.இவ்வாறு முன்னோர்கள் இறந்தவர்களின் உடலைப் பாதுகாக்கப் பயன்படுத்திய முறையின் மாற்றுவடிவமே இன்றைய நடைமுறையில் உள்ள குளிரூட்டிகள்.

"இந்திய மருத்துவ முறைகளில் இறந்தோரின் ஆவிகளின் இயல்பு,அவற்றின் பார்வையால் நோய் ஏற்படுதல்,அவற்றிற்குரிய மந்திரப் பிரயோகம் சடங்குகள் முதலாம் விடயங்களும் பண்டைநாளில் பின்பற்றப்பட்டு வந்தன.இவ் விடயங்களைச் சங்க இலக்கியங்கள் அகவாழ்விலும் - புறவாழ்விலும் இணைத்துக் காட்டுகின்றன.காதல் நோய்க் கொண்ட பெண்ணுக்கு வேலன் என்ற உளநோய் வைத்தியன் மந்திர உருப்பெற்றுப் பரிகாரம் செய்தலைக் குறிப்பிடலாம்.அது போன்றே

போர்க்களத்தில் புண்பட்டவர்களிடம் கெட்ட ஆவிகள் அணுகாவண்ணம் வீட்டிலே வேப்பிலை தூக்குதல்,அகிற்புகை பிடித்தல்,இசைபாடுதல் என்பன நடைபெற்றுள்ளன"

(சங்க இலக்கியத்தில் மருத்துவக் கருத்துக்கள் - பக்கம் 10)

**சமய மருத்துவம்:**

சங்ககால மக்கள் சமய நம்பிக்கைப் பெரிதும் போற்றிப் பாதுகாத்தனர்.இதற்குச் சான்றாக ஏராளமான சங்க இலக்கியப் பாடல்களைக் காணமுடிகின்றது.அவ்வகையில் இரவ இலை,வேப்பிலை மனையிலே செருகுதல், இசைகளை யாழ் ,பல்லியம் போன்ற இசைக்கருவிகளை வாசித்தல், கண்ணுக்கு மையிடுதல், ஆம்பல் குழலினை ஊதுதல்,வெண்கடுகு சிதறுதல், மணிகள் இசை முழங்க காஞ்சிப்பண் பாடுதல்,வீட்டில் அகிற்புகை ஊட்டுதல்,முதலிய செயல்களால் போரில் புண்பட்ட வீரர்களை இல்லங்களில் பெண்கள் பாதுகாத்தமையை கீழ்க்காணும் பாடல் சுட்டுகின்றது.

"தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்குமருப்பு யாழொடு பல்லியம் கறங்கக்
கைபயப் பெயர்ந்து மைஇழுது இழுகி
ஐயவி சிதறி ஆம்பல் ஊதி
இசைமணி எறிந்த காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பின் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமம் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே" ( புறநானூறு :281)

வேம்பு கிருமி நாசினியாக கருதப்பட்டுள்ளமையால் மக்கள் பலர் கூடுகின்ற மன்றங்களில் வளர்க்கப்பட்டுள்ளன.இச்செய்தியினை

"மன்ற வேம்பின் மாச்சினை ஒண்டொளிர் "(புறநானூறு – 76:4)

"மன்ற வேம்பின் மலைத்து"(புறநானூறு – 79:2)

"மன்ற வேம்பின் ஒண்பூ வுறைப்ப "(புறநானூறு – 371:7)

என்னும் புறப்பாடல்கள் மெய்ப்பிக்கின்றன.

'வேம்பும் கடுவும் தமிழரின் ஆதி மருந்துகளாக,கற்ப மருந்துகளாகத் திகழந்;தன' என்பார் முனைவர் வே. நெடுஞ்செழியன்.(தமிழர் கண்ட தாவரவியல் பக்கம் - 50)

தமிழுக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் முதன்மையாகப் போற்றப்பெறுகின்ற தொல்காப்பியத்தில் வேம்பும் கடுவும் மருந்துப் பொருளாகப் பயன்படுத்திய குறிப்புக் காணக்கிடக்கின்றது.

"வேம்பும் கடுவும் போல வெஞ்சொல் "

(தெல்காப்பியம் - செய்யுளியல் - 111)

இத்தொல்காப்பிய நூற்பாவிற்கு பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் 'முற்பருவத்துக் கைத்துப் பிற்பருவத்து உறுதி பயக்கும் வேம்பும் கடுவும் போல வெய்யவாய சொல்லினைத் தடையின்றிப் பிற்பயக்குமெனக் கருதிப் பாதுகாத்து' என்று உரைவகுத்திருக்கின்றனர்.

வேம்பு இக்காலத்தில் உயிர்க்கொல்லி மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.இதன் தொடக்கம் சிந்துவெளி நதிக்கரை நாகரிக மக்களிடத்துத் தொடங்கியது என்பதை 'சிந்துவெளி மக்கள் வேப்பிலையைச் சிறந்த மருந்தாக இல்லங்கள் தோறும் பயன்படுத்தி வந்திருக்கின்றனர் என்று அறிஞர் தீட்சித் கூறுவதிலிருந்து தெரிகின்றது.

வேம்பு, கடுகு போன்று ஐயவி என்ற வெண்சிறு கடுகு நோய் எதிர்ப்புப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதை

"நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்"( புறநானூறு – 281-:4)

என்று பதிவு செய்திருக்கின்றது. சித்த வைத்திய முறைகளில் மணி, மந்திரம்,ஔடதம் ஆகிய மூன்று வகைப் பற்றி

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்
மறைமெழி தானே மந்திரம் என்ப"

(தொல்காப்பியம் - செய்யுளியல் -178)

என்னும் தொல்காப்பியச் சூத்திரம் கூறுகின்றது.இது மேற்குறிப்பிட்டுள்ள புறப்பாடலோடு ஒப்புநோக்கத்தக்க வகையில் உள்ளது.

"பண்டைத்தமிழர் மத்தியில் வழக்கிலிருந்த மணி- மந்திர – ஔடத விடயங்களைக் கருத்தில் கொண்டு,இலக்கியபாணியலமைந்த மந்திரங்களுக்கு விளக்கம் கூறும் பான்மையில் தொல்காப்பியர் சித்த வைத்தியக் கோட்பாட்டிலிடம் பெறும் மந்திரம் பற்றிக் குறிப்பிடலானார்."

(சங்க இலக்கியத்தில் மருத்துவக் கருத்துக்கள் - பக்கம் 17)

மருந்து மரங்களின் பட்டைகள், பால்,இலைச்சாறு முதலியவற்றில் பெறப்படும் மருந்துகளில் இருந்து புண்ைணை வடுவின்றி ஆற்றியுள்ளனர்.போர்க்களத்தில் வீரர்கள் விழுப்புண்ணை ஏற்றுக்கொண்டமையால் மருந்திற்காக வெட்டப்பட்ட மரங்களின் இடங்களில் தோன்றிய வடுக்கள் நிரம்பி இருந்தன.இப்போது வடுவின்றி அழகாகக் காட்சியளிக்கின்றது என்று மருந்துமரம்,மருந்து சேகரிப்பு முறை முதலியவற்றிற்கு

"இரும்புச்சுவை கொண்ட விழுப்புண் நோய் தீர்;த்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்றி மயங்கிய யாக்கையின் (புறநானூறு- 180: 4-6)

இப்பாடல் சான்றாக அமைகின்றது.

"மரம்சா மருந்தும் கொள்ளார் மாந்தர்" (நற்றிணை:226: 1)

பிணி நீக்கும் மரம் என்பதற்காக மரங்களை வேருடன் வெட்டாது எதிர்காலத்திற்கு வேண்டுமென்று சேகரித்து வைத்த தொலைநோக்குச் சிந்தனை வெளிப்படுகின்றது.

மனிதர்களின் மரணத்தை தள்ளி வைக்கும் சாவா மருந்தாகிய நெல்லிக்கனியின் மகத்துவத்தை தமிழர்கள் அறிந்திருந்தனர்.ஆகையால் தான் மலைப்புறத்து விளைந்த நெல்லிக்கனியை அதியமான் உண்ணாது ஔவையார்க்கு ஈந்தார்.இதற்குச் சான்றாக

"பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின் னகத்து அடங்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே"(புறநானூறு- 91)

என்னும் பாடல் திகழ்கின்றது.

**அறவோன்:**

பிணியுற்றோர் விரும்பியதை எல்லாம் கொடுத்தால் நோயின் தாக்கம் தணியாது.மேலும் அதிகரிக்கும்.ஆகவே நோய்க்கு தக்க மருந்தை மட்டுமே ஆராய்ந்து மருத்துவர் கொடுப்பர்.அவ்வாறு கொடுப்போரை அறவோன் என்று அழைப்பது முற்றிலும் பொருந்தும். இதனை

"அரும்பிணி உறுநர்க்கு வேட்டவை கொடாஅது

மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்" (நற்றிணை - 126)
என்று குறிப்பிடுகின்றது.
மருத்துவர்:
மருத்துவர் என்ற சொல்லைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் மணிமேகலையில் பயன்படுத்தி உள்ளார்.

"ஆருயிர் மருத்துவி துன்னிய

என்நோய் துடைப்பா யென்றலும்"

(மணிமேகலை: உலகவறவி புக்க காதை: 5 -17)

என்பதிலிருந்து துறவிகள் இணைந்து நடத்திய சக்கரவாளக்கோட்டம் என்ற மருத்துவமனை இருந்துள்ளது என்பது புலனாகின்றது.

நோய் தீர வேண்டும் என்று எண்ணுபவர் மருத்துவரிடம் நோயை மறைக்கமாட்டார். அது போல நோயின் தன்மை அறிந்து அதனை நீக்கவல்ல மருத்துவர் இருந்துள்ளனர் என்பதை

"தீர்தல் உறுவர்

மறையார் மருத்துவர்க்கு நோய்"(பழமொழி - 88)

"நோய்த் தணி மருந்தும் தாமே"

(சிறுபாணாற்றுப்படை தனிவெண்பா -1)

"நோய் தீரும் மருந்து" (கலித்தொகை - 60)

என்று இலக்கியங்கள் சுட்டுகின்றன.

நோய் வருமுன் காத்தல்,வந்தபின் போக்கும் மருத்துவ சிகிச்சை முறை என சிகிச்சை இருவகைப்படும்.நோய்க்கண்டவுடன் அதனை தணிக்க மருந்து காணுதல் வேண்டும். அது முற்றியப் பின்பு மருந்தளித்தல் பயனற்றது.இதனை நல்லந்துவானர்

"வருந்தியசெல்லல் தீர்த்த திறன் அறிஒருவன்

மருந்து அறைகோடவின் கொடிதே யாழநின்

அருந்தியதோர் நெஞ்சம் அறிந்து உகவிடினே (கலித்தொகை -129)

என்று நவில்வதிலிருந்து தெளிவாகின்றது.

நோய்வராமல் தடுப்பதில் தான் பண்டுவத்தின் வலிமை உள்ளது.இதனை வள்ளுவர்

"எதிரதாக் காக்கும் அறிவினாரக் கில்லை

அதிர வருவதோர் நோய்"(குறள் -429)என்கிறார்.

சித்தர்கள் நமது தினசரி வாழ்க்கையையும் பருவ வாழ்க்கையையும் நோய் அணுகாது காத்து இனிய வாழ்வைப்பெறத் திட்டம் தீட்டியுள்ளதை தமிழ் மருத்துவப் பொழில் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றது.

"ஒரு ஆண்டில் மழை, பனி, வெயில் ஆகிய மூன்று காலங்களில்,தோன்றுதல்,நிலைத்தல்,மாறுதல் ஆகிய மூன்று சக்திகளையும் கண்கூடாகக் காணலாம்.இதை யொட்டியே ஒரு நாளில் காலை,நண்பகல்,மாலை ஆகிய மூன்று நேரங்களில் தக்க உணவுகளை நாம் உண்கிறோம்.உணவில் ஊன் சத்துள்ளவை உடல் வளர்ச்சிக்கும்,கொழுப்பு,சர்க்கரை,ஆகிய இரு சத்துள்ளவைகள் உடலுக்கு எரிபொருளாக உதவி செய்யுந் தொழிலுக்குத் தக்க வலிமையைக் கொடுத்து,உடல் நிலைத்தற்கு காரணமாகின்றன.கோதுமை,உழுந்து,பருப்பு இவை ஊன்சத்து மிக்கவை.அவற்றைக் காலை உணவில் நாம் சேர்த்துக் கொள்ளுகிறோம்.ஒரு அவுன்ஸ்' பருப்பில் ஒரு 'அவுன்ஸ்' ஊன் சத்துள்ளதென இப்போது ஆராய்ச்சியில் கண்டுள்ளதை, 'பிடிக்குப்பிடி சதையாம் பேசு'டின்று

சித்தர்கள் குறித்துள்ளார்கள்.இம்முறை நவீன சத்துணவு ஆராய்ச்சியாளர் ஆச்சரியப்படும்படி இருக்கின்றது, (தமிழ்மருத்துவப் பொழில் - 53 -54)

மருந்துப் பொருட்களின் பண்பினை எடுத்துரைக்கும் பதார்த்த குணசிந்தாமணியில் 1508 பாடல்கள் உள்ளன.அதில் அத்திப்பாலும் அத்திப்பட்டையும் கடுப்பு, இரத்தப்போக்கு,சீதளம்,முற்றிய இரணம், மேகம் ஆகிய நோய்களைத் தீர்க்குமெனக் கூறப்பட்டுள்ளது.

“வீறு கடுப்பிரத்தம் வெண்சீத ரத்தமொடு
நாறுவிர ணங்களெல்லாம் நாடாவாம் கூறுங்கால்
அத்திதரு மேகம்போம் ஆயிழையே!எஞ்ஞான்றும்
அத்திப்பாற் பட்டைக் கறி”(பதார்த்த குணசிந்தாமணி – 505)

பல்லவர் கல்வெட்டுகளில் மருந்துச் செடிகளைப் பயிரிடுவதற்கு விதிக்கப்பட்ட வரிகளுள் ஒன்று செங்கொடிக்காணம்.செங்கொடிக்குச் சித்திரமூலம், செங்கொடி வேலி என்னும் பெயர்கள் உண்டு.இவ்வாறு கண்ணிட்டுகானம் என்னும் வரி கருச்சராங்கண்ணியை பயிரிட வாங்கியதாகும்.மருத்துவர்கட்கு மருத்துவப் பேறு என்னும் மானிய நிலம் விடப்பட்டதையும் காண்கிறோம்.எனவே மூலிகைகளைக் கொண்டு மருந்து செய்வார் பலர் அக்காலத்தில் இருந்தனர் என்பது உண்மையாகும் என்று தட்சிணாமூர்த்தி அவர்கள் குறிப்பிடுகின்றார்.(தமிழர் நாகரிகமும் பண்பாடும் - முனைவர் அ. தட்சிணாமூர்த்தி :312-313)

சங்கத் தமிழர்கள் மருத்துவர்களாகவும்,மருத்துவத்துறையில் வியக்கத்தக்க ஆற்றலையும் பெற்றிருந்திருக்கின்றனர்.இன்றைய நவீன சிகிச்சை முறைகளின் முன்னோடிகளாகத் திகழ்ந்திருக்கின்றனர்.மருந்து,மருத்துவர் பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் நிரம்பக் காணப்படுகின்றன.மூலிகைச்செடிகளைக் கொண்டு இயற்கை வைத்தியம் மேற்கொண்டிருக்கின்றனர்.வீரர்களின் விழுப்புண்களை ஆற்றுவதற்கு இசைமருத்துவம், சமய மருத்துவ முறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.சங்கத்தமிழனின் மருத்துவமுறைகள் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டு இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றது.இவ்வாறு தமிழினம் மருத்துவக்கலையில் உயரிய இடத்தைப் பெற்றிருக்கின்றது.

## 13. நடுகல்

**முன்னுரை**

சங்க காலத்தில் போரில் இறந்த வீரர்களுக்கும், மன்னர்களுக்கும் இறந்தபின் நடுகல் நாட்டும் வழக்கம் இருந்துள்ளது. இது தமிழர்களின் அறகோட்பாட்டிற்குச் சான்று பகர்கின்றது. நடுகல் வழிபாடே பிற்காலத்தில் கடவுளர் உருவங்களின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தது. நடுகற்களின் வாயிலாக தொல்குடிச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளத்தை அறிந்து கொள்ள முடிகின்றது. தொல் தமிழர் மரபில் நடுகற்கள் வீரக்கற்களாகப் போற்றப்பட்டன. போரில் உயிர் நீத்த வீரர்களுக்கும், கோப்பெருஞ்சோழன், அதியமான் போன்ற அரசர்களுக்கும் நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. நடுகல் எடுப்பதன் வாயிலாக இறந்தவர்களுக்கு விண்ணுலகம் கிட்டும் என்று நம்பினர்.தன் சமூகத்திற்காக இறந்ததால் சீறூர் மக்கள் மறவர்களைத் தெய்வமாகவே கருதினர். இறைவனுக்கு வழிபாடு நிகழ்த்தும் பொழுது மாலை அணிவித்தல், நெய்விளக்கேற்றுதல்,படையலிடுதல் பலிசெலுத்துதல், கள் படைத்தல் போன்ற முறைமைகளைப் பின்பற்றியுள்ளனர். அத்தகைய நியதிகளை நடுகல்லுக்கும் மேற்கொண்டனர். முதலில் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்ட நடுகற்கள் பின்பு வீரச்செயல்களை எழுத்துக்களாக வடிக்கும்

வளர்நிலையை எய்தியது. மக்கள் பயணிக்கும் வழிகளிலும், காட்டுப் பாதைகளிலும், ஊர் மன்றங்களிலும், ஊருக்கு வெளியிலும் நடுகற்கள் நிறுத்தப்பட்டுள்ளன. கற்குவியல்களால் அமைக்கப்பட்ட பதுக்கைக்கு அருகிலும் கல் நட்டுள்ளனர். இயற்கையாக நிற்கும் கல்லையே நடுகல்லாக மாற்றியுள்ளனர். தொல்காப்பியர் காலத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றிய இந்நடுகல் வழிபாடு தமிழகத்தின் பண்பாட்டுத் தொடர்ச்சியையும், வீரச் செயல்களையும், இறந்துப்பட்ட மறவர்களின் புகழையும் வெளிப்படுத்தும் சாதனமாக விளங்குகின்றது.

**நடுகல்**

வீரயுகக் காலத்தில் போர்களில் விழுப்புண்பட்டு மடியும் வீரனுக்காக அவனது வீரத்தைப் போற்றுகின்ற வகையிலும் அவனது தியாகத்தை மதிக்கின்ற வகையிலும் கல் ஒன்றை நட்டு அதனை வழிபடுவது தமிழரின் மரபாக இருந்துள்ளதைச் செவ்வியல் இலக்கியங்கள் வழி அறிந்துகொள்ள முடிகின்றது. நடுகல் என்பது வீரன் இறந்த இடத்தில் அவன் நினைவாக எழுப்பப்படும் நினைவுக்கல்லாகும். இக்கல்லினை வீரக்கல், வீரன்கல், நடுகல், நினைவுத்தூண் என்று அழைத்துள்ளனர். தொடக்கத்தில் ‘நடுகல்’ செப்பம் செய்யப்படாத நினைவுக் கற்களாகவும், குத்துக் கற்களாகவும் அமைக்கப்பட்டுள்ளன. அதில் இறந்துப்பட்டோரின் வீரச்செயல் புடைப்புச் சிற்பமாக பொறிக்கப்பட்டன. பின்பு வீரர்களின் பெயரும் அவர் புகழ் மொழியும் எழுதப்பட்டன. இலக்கியத் தரவுகளையும், நடுகற்களில் காணப்படும் உருவங்களையும், எழுத்துக்களையும் ஆராய்கின்ற பொழுது ஆகோள் புரிந்தோ (ஆநிரை கவரவோ, மீட்கவோ) கொடிய விலங்குகளுடன் போரிட்டோ, தான் சார்ந்திருக்கும் சமூகத்திற்காக இறக்கும் வீரனுக்கே நடுகல் எழுப்பப்பட்டுள்ளது என்பது புலப்படுகின்றது. வீரன் சொர்க்கம் அடைவான் என்ற முதன்மையான நம்பிக்கையின் அடிப்படையிலேயே நடுகற்கள் ஏற்படுத்தப்பட்டது.‘பட்டோர் பெயரும் ஆற்றலு மெழுதி நட்ட கல்’ என்று நடுகல்லினைப் பற்றி திருவாரூர் மும்மணிக்கோவை அறிவிக்கின்றது.

“மறவர் பெயரும் பீடும் எழுதி” (அகநானூறு – 67)

என்று நடுகல்லில் மறவனின் பெயரும் ,அவன்போர் புரிந்த களமும் ,புகழும் பொறிக்கப்பட்டிருந்ததை அகநானூறு தெளிவுபடுத்துகின்றது.

“என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்ன
முன்நின்று கல்நின் றவர்”2 ( குறள்; - 771)

எனப் போரில் இறந்த பகைவர் கல்லாகி (நடுகல்) நின்றதாகத் திருவள்ளுவரும் பதிவு செய்கின்றார். எனவே நடுகல் மரபு என்பது நீண்ட வரலாற்றுப் பின்புலத்தைத் தன்னுள் இணைத்துக் கொண்டுள்ளதனை அறியமுடிகின்றது.

சங்ககால நடுகல் கல்வெட்டுப் பற்றிக் கல்வெட்டு அறிஞர் சதாசிவப்பண்டாரத்தார் அவர்கள், கல்வெட்டுக்களால் அறியக் பெறும் உண்மைகள் என்ற தமது நூலில் “கடைச்சங்க காலத்தில் பகைவரோடு அஞ்சாது போர் புரிந்து புகழுடன் இறந்த வீரர்களின் நடுகற்களின் மேல் வரையப்பெற்ற அவர்களுடைய பெயரும் பீடும் பெருமையும்,அவன் செய்த வீரச் செயலையும் சிற்பமாக வடித்துள்ளனர் என்பதையும் கூற வேண்டியுள்ளது. தமிழகத்தில் வாழும் பல்வேறு குடிகளிடத்திலும், அக்காலத்திலும் இறந்தோருக்குச் செய்யும் இறுதிக் கடனில் கல்லெடுப்பு அல்லது கல்நிறுத்தம் என்ற சடங்கு நடுகல் வழிபாட்டின் எச்சமே என்பது மறுக்கவியலா உண்மையாகும். நம் நாட்டில் முதலில் தோன்றிய தமிழ் சாசனங்கள் என்று அய்யமின்றி குறிப்பிடலாம் (பக்கம்-1) என்கிறார்.

**நடுகல்லின் வகைகள்**

நிரைமீட்டோர்க் கல்

பண்டையக் காலத்தில் வாழ்ந்த மக்கள் சிறு சிறு கூட்டங்களாக வாழத் தொடங்கிய நிலையில் தங்கள் வாழ்வியல் தேவைக்காக ஆடு, மாடுகளை வளர்த்து வந்துள்ளனர். இவற்றை ஆவு என்றும், ஆநிரைகள் என்றும் அழைத்தனர். ஆநிரைகளையே பண்டைய மக்கள் செல்வமாகக் கருதினர். இதனால் அன்றையச் சூழலில் இரண்டு சிறுகுடிகளுக்கு இடையே போர் நடந்துள்ளது. பகைவர்கள் கவர்ந்து சென்ற ஆநிரைகளை மீட்க நடந்த போரில் கரந்தை மறவன் இறக்கின்றான். அவனுக்கு நடுகல் நாட்டப்படுகின்றது. அக்கல்லிற்கு மாலை சூட்டி வழிபடுகின்றனர். இதற்கு கீழ்க்காணும் புறப்பாடல்கள் சான்று பகர்கின்றன.

“-----------------மறவர்

நிரையொடு வந்தஉரையன் ஆகி” (புறநானூறு - 260)

“நிரைஇவண் தந்து நடுகல் ஆகிய” (புறநானூறு -261)

“அணிமயில் பீலி சூட்டி ,பெயர் பொறித்து
இனி நட்டனரே கல்லும்,கன்றொடு
கறவை தந்து பகைவர் ஓட்டிய” (புறநானூறு -264)

இதிலிருந்து ‘நிரைமீட்டோர்க்கல்’ என்பது ஆநிரைகளை மீட்பதற்காக இறந்த கரந்தை மறவர்களுக்கு எடுக்கப்பட்டது என்பது தெளிவாகின்றது. ஆநிரைப் போரை ‘பூசல்’ என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். நடுகல் அமைத்தல் முதல் அதன் வழிபாடு வரை ஆறு படிமுறைகளைத் தொல்காப்பியர்

“காட்சிக் கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று வகையிற் கல்லொடு புணர”
(தொல்காப்பியம் புறத்திணையியல் -100)

என்கிறார். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தொல்தமிழர் குடிகளிடம் நடுகல் அமைக்கும் வழக்கம் இருந்துள்ளது. அது சடங்காகப் பேணப்பட்டுள்ளது. தொல்காப்பியர் கூறும் புறத்திணையியலுக்கு ஒரு வரலாற்று அடித்தளம் உண்டென்று இன்று வரை வெளிப்படுத்தப்பட்டுள்ள நடுகற்கள் உறுதி செய்கின்றன. நடுகற்கள் காலந்தோறும் மாறிவரும் கலைப் பாணிகளுக்கு ஏற்ப உருவ அமைதியிலும், எழுத்தமைதியிலும் மாற்றங்களொடு காணப்படுகின்றன என்பதில் ஐயமில்லை.

**வடக்கிருந்தோர் கல்**

ஏதேனும் ஒரு காரணம் பற்றி உயிர்த் துறக்கத் துணிந்தோர் ஆற்றிடைக் குறைபோலும் தூயதொரு, தனிஇடத்து எய்தி வடக்கு நோக்கியிருந்து, உணவு முதலியன துறந்து, கடவுள் சிந்தனையுடன் உயிர்துறத்தலே வடக்கிருத்தல். கோப்பெருஞ்சோழன் உறையூரை தலைநகராகக் கொண்டு சோணாட்டை ஆண்டு வந்தான். இவரது நண்பர் பிசிராந்தையார். கோப்பெருஞ்சோழன் வடக்கிருத்தல் மேற்கொண்ட நிலையில் பாண்டிநாட்டிலிருந்து தன் நண்பன் வடக்கிருக்க வருவார்

என்று கூறுகின்றார். அவ்வாறே பிசிராந்தையாரும் வருகின்றார். அது தனக்கு வியப்பைத் தருவதாகக் குறிப்பிடுகின்றார் பொத்தியார் என்னும் புலவர். மேலும் பாடுநர்க்கும், ஆடுநர்க்கும் பொருள் அளித்தவன். அறவோராலும், திறவோராலும் புகழப்பட்டவன். மகளிர்க்கு நிழல் போன்றவனாகிய சோழன் நடுகல் ஆகிவிட்டதை

“பாடுநர்க்கு ஈத்த பல்புக ழன்னே
நடுகல் ஆயினன் புரவலன்” (புறநானூறு-221)

என்று நவில்கின்றார்.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த போது பல புலவர்கள் வடக்கிருந்தனர். அப்பொழுது பொத்தியாரும் வடக்கிருக்க அமர்ந்தார். சோழமன்னன் புதல்வன் பிறந்தபின் வா என்று சொல்லி அனுப்பிவிட்டார். இல்லம் திரும்பிய பொத்தியார் தனக்குப் புதல்வன் பிறந்த பின் கோப்பெருஞ்சோழனின் நடுகல்லிடம் வந்தார். அங்கு பொத்தியாருக்கென்று இடம் ஒதுக்கப்பட்டிருந்தது கண்டு வியந்து

“நிலைபெறு நடுகல் ஆகியக் கண்ணும்
இடம்கொடுத்து அளிப்ப” (புறநானூறு-223)

என்று பாடிவிட்டு அங்கு அமர்ந்து கோப்பெருஞ்சோழனைப் போலவே உயிர்துறந்தார்.

யானைப்போர்க்கல்:

போர்க்களத்தில் பகைவரைத் தடுத்து நிறுத்துகின்ற ஆற்றலுடைய தந்தங்களை உடைய யானையைக் கொன்று வீரன் ஒருவன் இறந்துப்பட்டான். அவனது நினைவாக எழுப்பப்பட்டக் கல்லினை

“ஒன்னாத் தெவ்வர் முன்நின்று விலங்கி
ஒளிறுஏந்து மருப்பின் களிறு எறிந்து
வீழ்ந்ததெனக் கல்லே” ( புறநானூறு -335)

என்று புறப்பாடல் காட்சிப்படுத்துகின்றது.

வில்போர்

தலைவன் செல்லும் பாலைநிலத்தில் வில் படை நெருங்கிய அரியப் போரில் பகைவர் அழியக் கொன்று புகழை நிலைநிறுத்திய வீரம் மிகுந்த மறவரின் நடுகற்கள் வரிசையாக நிற்கும் என்பதனை

“வில்ஈண்டு அருஞ்சமம் ததைய நூறி
நல்இசை நிறுத்த நாணுடை மறவர்
நிரைநிலை நடுகல் பொருந்தி” (அகநானூறு -387)

என்கிறாள் தோழி. மற்றொரு பாடலும்

“வில்இட வீழ்ந்தோர் எழுத்துடை நடுகல்” (அகநானூறு -53)

என்று விற்போர் நடுகல்லினைப் பதிவு செய்துள்ளது.

நடுகல் - வழிபாடு

துடியன், பாணன், பறையன், கடம்பன் முதலிய நான்கு தொல்குடிகள் மட்டுமல்லாது மறக்குடிகள் வாழ்ந்த சிற்றூர்மக்களும், மூதின் மகளிரும் நடுகல்லினைப் போற்றி வணங்கியுள்ளனர். இறந்தவீரர்களின் உடலை மூடிய கற்குவியல்கள் பதுக்கை என்று அழைக்கப்பட்டன. பதுக்கையின் அருகிலும். பதுக்கைகள் இல்லாமல்; தனியாகவும் நடுகற்கள் அமைக்கப்பட்டன.கற்பதுக்கைகளுக்கு அருகில் நடுகற்கள் இருந்ததை

“வல்ஆண் பதுக்கைக் கடவுள் பேண்மார்
நடுகல் பீலி சூட்டி” (அகநானூறு-35)

என்ற அகப்பாடல் குறிப்பிடுகின்றது.மேலும் கற்குவியலின் மேல் உள்ள நடுகல் தெய்வத்தை வழிபடுவதற்காக அக்கல்லில் மயிற்தோகையைச் சூட்டினர் என்றும் சான்று பகர்கின்றது.

"பரலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி" ( புறநானூறு-2)

இப்பாடலில் பருக்கைக் கற்களைக் கொண்டு மேடு அமைத்து, மரலில் இருந்து எடுத்த நார்கொண்டு சிவந்த பூக்களால் கண்ணியைத் தொடுத்து, அழகிய மயிற்பீலியைச்சூட்டிப் பெயரை எழுதி, நடுகல்லும் நட்டனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"விடுவாய்ச் செங்கனைக் கொடுவில் ஆடவர்
நல்நிலை பொறித்த கல்" (அகநானூறு-179:7-8)

என்பதிலிருந்து கடவுள் குறித்த கோட்பாடுகளும், நம்பிக்கைகளும் தீவிரமடையாத காலங்களில் இனக்குழுமக்கள் நடுகற்களை வழிபட்டு வந்தனர் என்று உணரமுடிகின்றது.

நடுகல்லை வழிபடுதல் அல்லது நெல்லைத் தூவி வழிபடும் பிற கடவுளும் இல்லை என்பதனை

"கல்லே பரவின் அல்லது
நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே" (புறநானூறு-335:9-12)

என்று மாங்குடிகிழார் உரைப்பதிலிருந்து மறவர் குடியின் வீர மேம்பாட்டினை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

நடப்பட்ட கல்லுக்கு காலையில் படையல் செய்து, நன்னீராட்டி, நெய்விளக்கேற்றி, மணப்பொருள்களைக் கொண்டு வழிபட்டச் சிறப்பைக் கீழ்க்காணும் பாடல் உணர்த்துகின்றது.

"நடுகல்லின் நாட்பலி ஊட்டி
நல்நீராட்டி, நெய்நறைக் கொளீஇய" (புறநானூறு-329)

அதியமான் இறப்ப அவன் பெருமைச் சொல்லி ஔவையார் பாடிய பாடலில் அதியன் நடுகல் ஆகியதையும், அக்கல்லிற்கு மயிற்தோகையைச் சூட்டி, அரிக்கப்பெற்ற கள்ளைச் சிறிய கலத்தில் ஊற்றி வைத்து வழிபட்டதையும்

"நடுகல் பீலி சூட்டி,நார்அரி
சிறுகலத்து உகுப்பவும் கொள்வான் கொல்லோ" (புறநானூறு-232:3-4)

என்னும் புறப்பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன.

மூதின் மகள் தன் வீட்டுக்கு விருந்தினர் வரப்பெறவும், கணவன் நாடுதரு பகை எய்தி போருக்குச் செல்ல வேண்டும் என்றும் வரம் கேட்டு வழிபடுவதை அள்ளூர் நன்முல்லையார்

"நடுகல் கைதொழுது பரவும்
விருந்துதெதிர் பெறுகதில் யானே
---------வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை எய்துக" (புறநானூறு-306)

என்கிறார்.நடுகற்கள் மயில் தோகையால் அலங்கரித்து. துடி அடித்து அரிசிக் கள்ளை ஊற்றி, செம்மறி ஆடுகளைப் பலி கொடுத்ததை அம்மூவனார்

"நடுகல் பீலி சூட்டி த் துடிப்படுத்துத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலிகொடுக்கும்
போக்கு அரும் கவலைய புலவுநாறு அரும்சுரம்" (அகநானூறு-35)

என்று உரைக்கின்றார்.

நடுகல் – இடங்கள்:

நடுகற்கள் ஊரின் எல்லையில் அல்லது போர் நடைபெற்ற இடங்களில் அமைக்கப்பட்டன என்பதற்கான குறிப்புகள் அகநானூற்றில் பாலைத்திணைப் பாடல்களில் அதிகமாக உள்ளன.

"பெரியஓடை யானை உயர்ந்தோர் ஆயினும்

நின்றாங்குப் பெயரும் கானம்" (அகநானூறு-387)

என்னும் பாடல் அச்சம் மிகுந்த பாலை நிலம் எனவும், ஒருமுறை சென்றவர் மீளவும் செல்லத் தயங்கும் நீண்ட சுரவழியில் அந்நடுகற்கள் உள்ளதாகக் குறிப்பிடுகின்றது. போர் நடந்த பாலை நிலங்களில் வரிசையாக அமைக்கப்பட்ட நடுகற்களில் வாள்களும், கேடயங்களும் வைக்கப்பட்டிருந்ததை பாலைத்திணைப் பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன. பாலைநிலத்தின் வழியில் செல்லும் பொழுது ஊர்மன்றத்தில் நடுகல் காணப்பட்டதாகவும், அக்கல்லிற்கு படையிலிடுவார் இல்லாமையால் அதன்மீது சுரைக்கொடி படர்ந்திருப்பதை குடவாயிற்கீரத்தனார்

"சுரைஇவர் பொதியில் அம்குடிச் சீறூர்

நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகை

புரிசை மூழ்கிய பொரிஅரை ஆலத்து" (அகநானூறு-287:2-524)

என்னும் பாடலில் கூறியுள்ளார்.

கரந்தை திணைப் பாடலொன்றில் ஊருக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்ட நடுகல்லினை ஆயர்கள் சென்று வழிபட்டதைக் கருந்தும்பியார்

"ஊர்நனி இறந்த பார்முதிர் பறந்தலை

கல் ஆயினையே கடுமான் தோன்றல்" ( புறநானூறு -265-1-5)

எனக் காட்சிப்படுத்துகின்றார்.

"நடுகல் பிறங்கிய உவல்இடு பறந்தலை" (புறநானூறு-314)

என்று ஐயூர்முடவனார் பாடிய வாகைத்திணைப் பாடலில் நடுகல் காடுகளில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

'ஒன்னா தெவ்வர் உலைவு இடத்து ஆர்த்தென
நல்வழி கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்இசை பெயரொடு நட்ட
கல்ஏசு கவலை எண்ணுமிகப் பலவே"

(மலைபடுகடாம் -386 - 89)

என்ற பாடலடிகளில் ஒரு மறவன் போரில் பகைவீரர்களை வீழ்த்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்து தானும் இறந்துபட்டான்.அவனுடைய வீரத்தோடு தன் வீரத்தை ஒப்பிட்டுப் பார்த்த மற்ற மறவர்கள் நாணினர்.அவனது புகழை உலகிற்கு அறிவிக்கும் வகையில் பலரும் நடந்து செல்லும் வழி பிரியும் இடங்களில் கல் நட்டு வீரனது பெயரையும் புகழையும் பொறித்து வைத்திருக்கின்றனர்.அப்படிப்பட்ட கல்லேசு கவலைகள் பலவற்றை கடந்து செல்வீர்கள்.அவற்றை தொழுது போற்றுங்கள் என்று வழி சொல்கின்றான் ஒரு கூத்தன்.

நடுகற்களின் அமைப்பு:

நடுகல்லினை மனிதன் என்று எண்ணிய காட்டுயானை அதைத் தம் காலால் உதைக்கின்றது. நடுகல் சாயவில்லை. ஆனால் யானையின் கால் நகம் உடைந்துவிட்டது. இதனை

"அத்த நடுகல் ஆளென உதைத்த

கானயானைக் கதுவாய் வள்ளுகிர்" (அகநானூறு-365)

என்று மருதன் இளநாகனார் உரைப்பதிலிருந்து நடுகல் நேராக நிற்கக்கூடிய நிலையில் அமைத்திருப்பது புலனாகின்றது. மதுரை மருதன் இளநாகனார் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நிலை,

உப்பு வணிகரின் சக்கரத்தால் உடைந்த நடுகல் பற்றியும், கூரிய உளிக்கொண்டு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தைதையும், அவை சிதைவடைந்த நிலையில் உள்ளதையும் கண்முன் நிறுத்துகின்றார்.

"உமண்மகன் பெயரும் பருதிப்
புன்தலை சிதைத்த வன்தலை நடுகல்
கூர்உளி குயின்ற கோடுமாய் எழுத்து"(அகநானூறு-343-4-7)

நடுகல்லில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் யானையின் தழும்புடைய தும்பிக்கையின் சொரசொரப்போடு ஒத்திருந்ததை

"எழுத்துடை நடுகல் அன்ன விழுப்பிணர்ப்
பெருங்கை யானை" (ஐங்குறுநூறு-352-1-3)

என்கிறார் ஓதலாந்தையார்.

வில்போரில் வீழ்ந்தவர்களுக்காக நாட்டிய நடுகல்லில் எழுத்துக்கள் இடம்பெற்றிருந்ததை

"விழுத்தொடை மறவர் வில்இட வீழ்ந்தோர்
எழுத்துடை நடுகல் இன்நிழல் வதியும்" (அகநானூறு.-53)

என்கிறது அகப்பாடல்.

பந்தல் அமைத்தல்:

பகைவரால் கவர்ந்து செல்லப்பட்ட பசுக்கூட்டத்தை மீட்ட வீரன் விண்ணுலகம் சென்றுவிட்டான். அவ்வீரனுக்காக நடப்பட்டக் கல்லில் பெயரை எழுதி,மயிற்தோகையைச் சூட்டி,பந்தல் அமைத்ததை

"நிரையொடு வந்த உரையன் ஆகி
படம்செய் பந்தர்க் கல்மிசை யதுவே"28 (புறநானூறு-260)

என்னும் கையறுநிலைப் பாடல் மூலம் தெரிந்து கொள்ள இயலுகின்றது

ஆற்றில் வரும் வெள்ளத்தைக் கல்லடுக்கிக் கட்டப்பட்ட கலிங்கு அணை தடுத்து நிறுத்துவது போல பகைவர்கள் தாக்கும் போது அவர்களைத் தடுத்தி நிறுத்தி திரும்பி ஓடும்படி செய்த வீரச்செயலை

'வருபுனற் கற்சிறை கடுப்ப விடையறுத்து
ஒன்னா ரோட்டிய செருப்புகல் மறவர்"
(மலைபடுகடாம் -725 - 26)

என்று ஆற்றுப்படை இயம்புகின்றது.

பண்டையத் தமிழரின் வாழ்வியல் பதிவுகளை உலகுக்கு வெளிக்காட்டும் சான்றுகளுள் குறிப்பிடத்தக்கது நடுகல். போரில் இறந்த வீரர்களுக்கும், நிரைமீட்டவர்களுக்கும், வடக்கிருந்தோர்க்கும், அரசர்களுக்கும் நடுகல் எடுக்கப்பட்டதையும், சிற்றூர் மக்கள் நடுகல்லிற்கு நன்னீராட்டி, நெய்விளக்கு ஏற்றி,கள்படைத்து, மாலைசூட்டி வழிபட்ட முறைகளையும், தம் இனத்திற்காக உயிரிழந்த வீரனுக்குச் செய்யும் மரியாதை என்று எண்ணியதையும், அவர்களது செய்நன்றி மறவாப் பண்பினையும், வீரர்களுடைய நடுகற்கள் வழிபாடு பிற்காலத்தில் பள்ளிப்படைக் கோயில்கள் தோன்ற காரணமாயிற்று என்பதையும்,நடுகல் வழிபாட்டு நம்பிக்கை அமைக்கப்பட்ட இடங்களையும் தெரிந்து கொள்ள இயலுகின்றது.

**14. விழாக்கள்**

மகிழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படுபவை விழாக்கள் ஆகும். ஆடலும் பாடலும் விழாக்களின் முக்கிய அம்சமாகும். கொண்டாட்டம், இன்பம், பொழுதுபோக்கு, நல்லுறவு முதலியவை விழாக்களின் இலக்காக அமைகின்றது. தமிழர்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்குவனவற்றுள் திருவிழாக்கள் சிறப்பிடம் பெறுகின்றன.பண்டைய காலத்திலிருந்தே விழாக்கள் நிகழ்ந்ததை இலக்கியங்கள் வழி தெரிந்து கொள்ள முடிகின்றது. விழவு, சாறு, திருவிழா, நோன்பு, திருநாள் என்று விழாவிற்கு பல பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. விழாக்கள் உடலுக்கு ஓய்வும் உள்ளத்திற்கு இன்பமும் தரவல்லன. சங்கத் தமிழர் வாழ்வியலின் பிரதிபலிப்பாக விழாக்கள் இருந்திருக்கின்றன.

விழவின் நோக்கம்:

அழகிய குடில்களைக் கொண்ட சிற்றூரில் மக்கள் எப்பொழுதும் விழாக்களைக்(சாறு) கொண்டாடி மகிழ்ந்துள்ளனர் என்பதை குறுந்தொகை

“சாறுகொள் ஊரின் புகல்வேன்

---------மன்ற”(குறுந்தொகை41:2)

என்றுரைப்பதிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.

'நுங்கோ யாரென வினவின் ,எங்கோக்
களமர்க்கு அரித்த விளையல் வெங்கள்
யாமைப் புழுக்கின் காமம் வீட ஆரா
........
மடியா விழவின் யாணர் நன்னாட்டுள்ளும்"

(புறநானூறு -212-1:6)

இப்பாடலில் பிசிராந்தையார் உன்னுடைய மன்னன் யாரென்று என்னிடம் கேட்டால்,என்னுடைய மன்னன் உழவர்களுக்காக வடிக்கப்பட்டக் கள்ளினோடு ஆமையின் அவித்த இறைச்சியை உழவர்களுக்குக் கொடுக்க அவர்கள் அதனை உண்டு,சுடப்பட்ட கொழுத்த விலாங்கு மீனின் இறைச்சியைத் தங்கள் கன்னங்களில் அடக்கித் தம்முடையத் தொழிலை மறந்து நீங்காத விழாக்களைக் கொண்டாடும் வளம் மிகுந்த சோழ நாட்டின் உறையூரில் உள்ள மன்னன் கோப்பெருஞ்சோழனே என் மன்னன் என்பேன் என்று பதிலளிப்பதிலிருந்து மன்னர்கள் உழவர்களை மகிழ்விக்கும் பொருட்டு விழா எடுத்துள்ளனர் என்ற செய்தி அறியலாகின்றது.

விழா நடைபெறும் இடத்திற்குச் சென்றால் அவ்விடத்தில் வாழுகின்ற நல்லோர்களைப் பார்க்க முடியும். அவர்களிடமிருந்து நற்சொற்களைப் பெறமுடியும்.அதனால் நம்முடைய வாழ்வு சிறக்கும். எனவே விழாவிற்கு செல்வோம் என்கிறாள் தலைவி. அவளது சிந்தனையை

“பேர்ஊர் கொண்ட ஆர்கலி

விழவின்”(குறுந்தொகை:223:1-3)

என்று வெண்ணாகனார் குறிப்பிடுகின்றார்.

நல்லாரைக் காண்பதுவும் நன்று அவர் வாய்ச்;சொல் கேட்டல் அதனினும் நன்று.

“விழவு மேம்பட்ட என் நலனே”(குறுந்தொகை:125:3-4)

இப்பாடல் மூலம் திருவிழாக்களால் பெண்களிடம் உண்டாகும் தன்னம்பிக்கை வெளிப்படுகிறது.

திருமால்:

தமிழ்மக்கள் விழாக்களை இறைவனைத் தொடர்புப்படுத்தியே கொண்டாடி உள்ளனர். திருவோண நட்சத்திர நன்னாளில் வலிமை மிக்க அசுரரை அழித்துப் பொன்னால் செய்யப்பெற்ற மாலையை அணிந்த கருநீல நிறமுடைய திருமால் பிறந்தார். அந்நாளில் கொண்டாடப்பட்ட விழா 'ஓணவிழா' என்று அழைக்கப்பட்டது. இந்நாளில் யானை அணிவகுப்புத் திருவிழா நடைபெறும்.அப்போது போரில் விருப்பமுள்ள மறவர் யானைப் போரைக் காண விரும்பிக் களிறுகளை மோதவிட்டு மகிழ்ந்;தனர்.அதனைக் காண மக்கட்கூட்டம் வரும்.அக்கூட்டம் விரைந்து வரும் யானையைக் கண்டு அஞ்சி ஓடும்.அப்போது அவர்கள் மார்பில் அணிந்துள்ள காழகம் என்னும் அணிகலன் கழன்று விழுவதையும் பொருட்படுத்தாமல் ஓடுவர்.அவை நிலத்தில் கிடந்து ஓடுபவர்களின் கால்களில் உருத்தும். இதனை

"கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்

மாயோன் மேய ஓண நன்னாள்"(மதுரைக்காஞ்சி590-591)

என்று மதுரைக்காஞ்சி செப்புகின்றது.இவ்விழா இன்றும் கேரளாவில் வெகுச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

"விழவுடை விழுச்சீர் வேங்கடன்"(அகநானூறு:61)

திருவேங்கடத்தில் திருமாலுக்கு விழாவானது சிறப்பாக நடைபெற்றமையை இது சுட்டுகின்றது.
திருமாலைப் பற்றி கூறுகிறபொழுது நால்வகை யுகங்களைப் பற்றி பரிபாடல்

"நால்வகைஊழிஎன்நவிற்றும்சிறப்பினை(பரிபாடல்:3)

என்கிறது. இதன்மூலம் திருமால் தெய்வ வணக்கம் வெளிப்படுகின்றது.

உள்ளிவிழா:

கொங்கர் இன மக்கள் கொண்டாடிய விழா. இவர்கள் இடையில் மணியைக் கட்டிக் கொண்டு தெருவில் ஆடுவர் என்பதனை

"-----------கொங்கர்
மணியரை யாத்து மறுகின் ஆடும்
உள்ளி விழவின் அன்ன
அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே"(அகநானூறு :368)

என்கிறது அகப்பாடல்.இது போன்ற சில விழாக்கள் குறிப்பிட்ட பகுதி மக்களால் மட்டுமே கொண்டாடப்பட்டிருக்கின்றது என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

பங்குனிவிழா:

தமிழர்கள் மாதந்தோறும் விழாக்கள் எடுத்து கொண்டாடியுள்ளனர்.பங்குனி மாதத்தில் முருகனுக்கு விழா எடுத்திருக்கின்றனர்.அதற்கு பங்குனி உத்திரம் என்று பெயர்.

" வென்றெறி முரசின் விறல்போர்ச் சோழர்
இன்கடுங் கள்ளின் உறந்தை ஆங்கண்;
வருபுனல் நெரிதரும் இகுகரைப் பேரியாற்று
உருவவெண் மணல்முருகு நாறு தண்பொழில்
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்"(அகநானூறு:137)

சோழர்களின் தலைநகராகிய உறையூரில் பங்குனி விழா கொண்டாடப்பட்டதை அறியமுடிகின்றது. இவ்விழா இன்றும் பங்குனி உத்திரம் என்ற பெயரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது.

கார்த்திகை விழா:

கார்த்திகை மாதத்தில் கொண்டாடப்படும் விழா கார்த்திகை விழா. சமய விழாக்களில் குறிப்பிடத்தகுந்தது கார்த்திகை விழாவாகும். ஏனெனில் அறச்செயல்கள் செய்வதற்கு ஏற்ற மாதம்.

எனவே கார்த்திகை நட்சத்திரத்தை ‘அறுமீன்’ என்றும், கார்த்திகைத் திங்களை ‘அறம்செய் திங்கள்’ என்றும் நற்றிணைப் பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது.

“அறுமீன் பயந்த அறம்செய் திங்கள்”(நற்றிணை:202)

விழாக்கள் என்றாலே வீட்டினை ‘அழகுப்படுத்துதல்’ என்பது முக்கியப் பங்கு வகிக்கிறது. தூய்மைப்படுத்துதல், தோரணங்கள் கட்டுதல், விளக்கு ஏற்றுதல், கோலமிடுதல் போன்ற செயல்களைப் பெண்கள் மேற்கொள்வர். கார்த்திகை விழாவினை சிறப்பிப்பதற்காக வீடுகளும் தெருக்களும் அலங்கரிக்கப்பட்டதை அகநானூற்றுப் பாடல்

“அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்

மறுகுவிளக் குறுத்து மாலை நோக்கி”(அகநானூறு:141)

என்று எடுத்துரைக்கின்றது.இன்றைய நாளில் ஏற்றப்பட்ட விளக்கின் ஒளியானது வானத்து நட்சத்திர,சந்திரனின் ஒளியைவிட விஞ்சி நிற்கின்றது.

“-------------அறம்செய் திங்கள்

பல்பூங் கோங்கம் அணிந்த நாடே”(நற்றிணை:202)

“பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்

இலையில் மலர்ந்த இலவமொடு” (அகநானூறு:185:11)

என்று அகஇலக்கியங்களில் கார்த்திகை விழாவிற்காக வீடுகளிலும், முற்றங்களிலும்,மாடங்களிலும் வரிசையாக ஏற்றி வைக்கப்பெற்ற விளக்கு கோங்க மரங்களிலும், இலவ மரங்களிலும் நெருக்கமாக மலர்ந்துள்ள பூக்களுக்கு உவமையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பொருள்தேடச் சென்ற தன் கணவன் கார்த்திகை விழாவினைத் தன்னுடன் கொண்டாட வருதலை விரும்புகிறாள் என்று அகப்பாடலொன்று சுட்டுவதிலிருந்து கார்த்திகை விழாவின் சிறப்பு அறியலாகின்றது.

காமன்விழா:

இளவேனிற்காலமானது காமவேளுக்கு உரியதாகக் கருதப்படுகின்றது. இக்காலத்தில் நடக்கக்கூடிய விழா காமன் விழா.மன்மதனை காமன் என்று அழைத்தனர். மக்கள் இன்பமாக பொழுதைக் கழிக்க கொண்டாடிய விழா காமன் விழா.சிற்றூர்களில் மழை வேண்டி மன்மதனுக்கு விழா எடுக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. திருமணம் ஆகாத ஆண்களும் பெண்களும் காமனை வணங்குவதால் விரைவில் திருமணம் நடக்கும் என்றும், குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தைப்பேறு கிட்டும் என்ற நம்பிக்கையும் இருந்துள்ளது. காமன்விழா உயர்ந்தவன் விழா, வில்லவன் விழா என்னும் பெயர்களில் கொண்டாடப்பட்டுள்ளது.

அருந்தவம் செய்தவர் அந்தத் தவத்தின் பயனை நுகர்வது போல கிளையெல்லாம் பூத்திருக்கும் பூக்கள் வண்டுகளும் தும்பிகளும் மொய்ப்பதால் தாது உதிர்ந்து இன்பம் நுகரும் வேனிற்காலம் என்றும்,இத்தகு காலத்தில் நான் தனிமையில் துன்புறுகிறேன் அவன் காமன் விழாவில் அணிகலன்கள் அணிந்த பரத்தையோடு விளையாடுகின்றானே எனத் தலைவி கவலையுற்று என் நிலையை அவனிடம் சொல்வார் இருந்தால் நன்றாக இருக்கும் என்று புலம்புவதைப் பாலைப்பாடிய பெருங்கடுங்கோ

“ --------உயர்ந்தவன் விழவினுள்

விறலிழை யவரோடு விளையாடுவான் மன்னோ”(கலி:30:13)

என்று தலைவியின் உணர்வுப்பிழிவுகளைச் சித்திரித்துக் காட்டுகின்றார்.காமன் விழா நடைபெறுகின்றது என்பதை அறிந்தால் பெண்கள் மிகுந்த வருத்தம் அடைவர்.ஏனெனில் இவ்விழாவில் ஆடவர் பரத்தையருடன் இன்புற்று மகிழ்ந்திடுவர்.

பொருள்வயிற்பிரிவு மேற்கொண்ட தலைவன் திரும்பி வருங்காலம் இளவேனிற்காலம். இக்காலத்தில் தலைவியின் மனவுணர்களை எண்ணுகின்றான். தலைவியின் இன்னலைப் பொறுத்தக்கொள்ள மாட்டாத தலைவனின் உயரிய செயலை விளக்கும் தோழி தலைவர் தேரினை விரைவாக செலுத்தி வந்தது உம்மை மகிழ்வக்கும் பொருட்டே என்று தலைவியிடம் உரைக்கும் பாங்கு செவ்வித்தாகும்.கீழ்க்காணும் பாடல் இப்பொருண்மையைக் கொண்டு அமைந்திருக்கின்றது.

“காமவேள் விழாவாயிற் கலங்குவள் பெரிதென
வேமுறு கடுந்திண்டேர்கடவி
நாம்அமர் காதலர் துணைதந்தார் விரைந்தே(கலித்தொகை:27)

தலைவன் இல்லாமல் தனிமை துயரத்தில் இருக்கும் தலைவிக்கு காமன்விழா துயரத்தைக் கொடுத்ததை

“காமவேள் விழவாயின்
கலங்குவள் பெரிதுஎன”(கலித்தொகை:29-24)

“காமவேள் அம்பின் தொழில்
வீற்றிருந்த நகர்”(பரிபாடல்:18:26-27)

என்ற பதிவுகள் மெய்ப்பிக்கின்றன.

காமவேள் விழாவில் காதலர்கள் களித்து விளையாடியதை

'மல்கிய துருத்தியுள்மகிழ்துணைப் புணர்ந்தவர்
வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுதன்றோ"
(கலித்தொகை: 35)

என்று சுட்டுகின்றது.

புனல்விழா:

புனல் விழா என்பது இலக்கியத்தில் ‘நீர்விழா’ என்று அழைக்கப்படுகின்றது. நீர் விழா அன்றைய நாளில் ஆடிப்பெருக்கு விழா என்று வழங்கப்படுகின்றது. மக்கள் காவிரி ஆற்றில் வருகிற புதுப்புனலில் நீராடி மகிழ்ந்தனர். அந்நாளில் புதுத் துணி உடுத்திப் புனல் ஆடி மகிழ்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.நீர்நிலைகள் மிகுதியாக நிரம்பிய நீர்விழா சோழவள நாட்டில் சிறப்பாக நடைபெற்றதை

“கல்லா யானை கடிபுனல் கற்றென
மலிபுனல் பொருத மருது ஓங்குப் படப்பை” (அகநானூறு:376:3-5)

என்னும் அகப்பாடல் வழி அறியமுடிகின்றது.

நீர்விழாவின் பொழுது பல்வேறு இசைக்கருவிகளைக் கொண்டு ஒலிகளை எழுப்பியுள்ளனர். ஆட்டனத்தியின் சிவந்த கால்கள் நீருக்கு மேலே வந்து புரண்டதையும்,இசைக்கேற்ப அவன் ஆடியதையும்

“தண்பதம் கொண்டு தவிர்ந்த இன்னிசை
ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரள”(அகநானூறு:376)

என்பதிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகின்றது.

அத்தி காவிரியாற்றுக் கழார் என்னும் நீர்த்துறையில் நீரில் நடனம் ஆடிக் காட்டினான்.நீர் மிகுந்த துறையைக் கொண்ட ஊரின் பெயர் கழார்.இதன் கரையில் மருத மரங்கள் மிகுந்து காணப்படுகின்றன.நெற்கதிர்கள் வளமுடன் காட்சியளிக்கின்றன.இவ் ஊருக்கு முன் இருந்த துறைக்கு கழார் முன்துறை என்று பெயர்.அத்துறையில் அத்தி கரிகாலச்சோழன் காணும்படியாக

நடனம் ஆடிக் காட்டினான்.இதிலிருந்து கரிகாலன் காலத்தில் நீர்விழா நடைபெற்றது என்பது வெள்ளிடைமலையாகின்றது.

'கழாஅர் முன்துறை

கலிகொள் சுற்றமொடு கரிகாலன் காண"(அகநானூறு:376)

விழாக்கள் பகல் பொழுதில் நடைபெற்றன. இரவு நேரத்தில் நிலவொளியில் ஆடலும் பாடலும் உற்சாகமாக நிகழ்ந்துள்ளன.மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியுள்ளனர். இதனை

“நிலவே நீல்நிற விசும்பில்

பல்கதிர் பரப்பி

கலிகெழு மறுகின் விழவு

அயரும்மே”(நற்றிணை: 348:1-4)

என்னும் பாடலடிகள் கண்முன் நிறுத்துகின்றன.
பரிபாடலிலும் நீர்விழாப் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது.

“--------பூநீர் நிறைதலின்

படுகண் இமிழ் கொளை பயின்றனர் ஆடும்

களிநாள் அரங்கின் அணிநலம் புரையும்”;(பரிபாடல் :16)

கோடியர் விழா:

ஆடும் கலைஞர்கள் கோடியர் என்று அழைக்கப்பட்டனர். கூத்தர்கள் ‘கோடியர்’ என்றும்,வயிரியர் என்றும் அழைக்கப்பட்டனர். பாணர்களும் கூத்தர்களும் விழாக்களைச் சிறப்பிக்கும் கலைஞர்களாவர். இவர்கள் மக்களை மகிழ்விக்கும் பெரும்பணியில் பெயர் பெற்றவர்கள். இவர்கள் தோலாலான இசைக்கருவிகளைக் கொண்டு இரவு நேரத்தில் கலைகளை நிகழ்த்துவர்.
விறலியர்கள் மயில்போல ஆடும்போது கூத்தர்கள் முழவை முழக்கிக் கொண்டு பின் செல்வதை

“ஆடுமயில் முன்னது ஆக கோடியர்

விழவுகொள் மூதூர் விறலி பின்றை”(அகநானூறு:352:4-6)

நெடுந்தொகை சுட்டிக்காட்டுகின்றது.

“-------விழவில்

கோடியர் நீர்மை போல முறைமுறை

ஆடுநர் கழியும் ”(புறநானூறு :29:22-23)

“விழவின் ஆடும் வயிரியர்”;(மதுரைக்காஞ்சி:628)

என்று திருவிழாவில் ஆடும் கூத்தர்கள் வேடம் மாறி மாறி ஆடுவதையும், இடையாமத்தில் அயர்ந்து உறங்குவதையும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

பூந்தொடை விழா:.

இது வீரர்களின் கலைப்பயிற்சித் தொடக்க விழா.வில்லில் நாணேற்றி குறிகண்டு எய்யும் விழா.வில்லையும்,வீரனையும் மலர் சாத்தி சிறப்புச் செய்வர்.வில் போட்டியும் நிகழ்த்தப்பெறும்.

“வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்

பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன

தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்”(அகநானூறு :187:7-9)

என்னும் அகப்பாடல் போர்களத்தில் சினந்தெழுந்த பகைவரை முறியடித்து வென்ற மழவர்கள் எடுக்கும் விழா பூந்தொடை விழா என்றும், இவ்விழாவினைக் கொண்டாடுவதற்கு முன்பு வீட்டு முற்றத்தில் புதுமணல் பரப்பும் சடங்கினை பின்பற்றியுள்ளனர் என்றும் தெரிவிக்கின்றது.

வெறியாட்டுவிழா:

வெறியாட்டுவிழா பண்டை நாளில் பெருவழக்காக இருந்துள்ளது. இவ்விழா முருகனுக்காக எடுக்கப்பட்டது. முருகனுக்காக வேலன் வேலினைக் கையிலேந்தி ஆடுவான். அப்பொழுது இன்னிசைக் கருவிகள் முழங்க தினையரிசியும் மலர்களும் தூவி வழிபட்டுள்ளனர்.

“சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்”(திருமுருகாற்றுப்படை:218-220)

என்ற நக்கீரர் பாடல் வழி குன்றுகள் இருக்கின்ற இடத்தில் எல்லாம் முருகன் இருப்பதாகக் கருதி, மலைப்பகுதியில் விளைந்த சிறுதினையை மலருடன் சேர்த்து பரப்பி, ஆட்டினைப் பலியிட்டும் கோழிக் கொடியை நட்டும் முருகன் குடியிருக்கும் இடமாகக் கருதி இவ்விழாவினைக் கொண்டாடியுள்ளச் செய்திப் புலனாகிறது.

பெண்கள் வெறியாட்டு நிகழ்த்தியுள்ளதைப் பற்றியக் குறிப்புகள்

'-------நெடுவேள்
அணங்குறு மகளிர் ஆடுகளங் கடுப்பத்
திணிநிலை”(குறிஞ்சிப்பாட்டு:174-176)

“செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள்
வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்”(பட்டினப்பாலை:154-155)என்ற இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன.

இந்திரவிழா:

மருதநிலக் கடவுள் இந்திரன். இந்திரனை சிறப்பிக்கும் வகையில் கொண்டாடப்பட்ட விழா இந்திரவிழா. இலக்கியங்களில் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. தொடித்தோட் செம்பியன் எடுத்த காதல் விழாவைக் காமன் விழா என்றும், இந்திரவிழா என்றும் குறிப்பிடுகின்றனர். இவ்விழா 28 நாட்கள் நடைபெற்றிருக்கின்றது.. இவ்விழாவினை ‘விருந்தாட்டுவிழா’ என்றும் அழைப்பர்.இந்திர விழாவில் பூ கொட்டிக் கிடப்பது போலக் காணப்படும் பெட்டைக் கோழியானது கோடு கோடா இருக்கும் வரி நிழலில் நின்று கொண்டு சேவலை அழைக்கும் இந்த ஊரில் உள்ள புதுப்பெண்களை எல்லாம் துய்த்து விட்டு ,இப்போது எந்த ஊரில் தேரை நிறுத்தி இருக்கின்றாய் என்று தலைவனிடம் கேட்டு தலைவி ஊடல் கொள்ளும் பாடலில் இந்திரனுக்கு எடுக்கப்படும் விழாப் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது.

“இந்திர விழவிற் பூவின் அன்ன”(ஐங்குறுநூறு:62:1)

வச்சிரக்கோட்டம் என்பது இந்திரனின் கோயில.இக்கோயிலில் இருந்த முரசத்தை எடுத்து யானையின் பிடரியில் ஏற்றி, யானை மீதமர்ந்து விழாச் செய்தியை ஊருக்கு அறிவித்தனர்.கால்கோள் முதல் கடை நிகழ்ச்சி வரை நவின்றனர்.இந்திரனுக்கு நீராட்டுவிழா நடத்தினர் என்பதை இளங்கோவடிகள்

'வச்சிரக்கோட்டத்து மணம்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்தலை ஏற்றி
கால்கோள் விழவின் கடைநிலைச் சாற்றி"
(சிலப்பதிகாரம்- இந்திரவிழவு ஊரெடுத்தக்காதை - 141-144)

என்று புகாரில் நடைபெற்ற இந்திர விழாவினைக் குறிப்பிடுகின்றார்.

மணிமேகலையில் விழாவறை காதையில்இந்திரவிழா பற்றி விளக்கப்பட்டுள்ளது.பசி, பிணி, பகை முதலியவற்றால் துன்பம் அடையாது இருத்தல் பொருட்டுத் தெய்வத்தைக் கருதிச் செய்யும் சாந்திப்

பெருவிழாவே இந்திரவிழா என்பதை சாத்தனார். “தீவகச் சாந்தி செய்தரு நன்னாள்”என்கின்றார். இவ்விழா புகார் என்ற நகரோடு அதிகம் தொடர்புடையது. புகார் நகர மக்களுக்கு துன்பம் நேராமல் இருக்க சமயக்கணக்கர்,ஐம்பெருங்குழு, எண்பேராயத்தினர் குழுமி இந்திரனுக்கு விழா எடுக்க முடிவு செய்தனர்.இதனை

'மாயிரு ஞாலம் அரசுதலை ஈண்டும்
ஆயிரங் கண்ணோன் விழாக்கால் கொள்க"
(மணிமேகலை - விழாவறை காதை- 25- 26)

என்று சீத்தலைச்சாத்தனார் உரைக்கின்றார்.

இவற்றிலிருந்து இந்திரவிழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டிருக்கின்றது என்பது தெளிவாகின்றது.மேலும் கற்பகக் கோட்டத்தில் வெள்ளானைக் கொடி ஏற்றப்பட்டு,பல தெய்வங்களுக்கும் பூசையிடப்பட்டு, இசையும் கூத்தும் கலந்து மக்கட்கு இன்பமூட்டும் நிகழ்வுகள் நடைபெற்று,அறிஞர்கள் குழுமியிருந்து பட்டி மண்டபத்தில் வாதிட்டு,பல்வேறு சமயத்தவரும் செற்றமும் கலகமும் செய்யாது ஒற்றுமையாய் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதிலிருந்து இந்திவிழா சமய ஒற்றுமையை வலியுறுத்தும் விழாவாக இருந்திருக்கின்றது என்றும்,அக்கால நாகரிகச் சிறப்பிற்கு ஓர் சான்றாக திகழ்ந்திருப்பதும் புலனாகின்றது.

தைநீராட்டுவிழா:

இவ்விழாவானது இளம்பெண்கள் தங்களுக்கு கணவனாக வரவேண்டிய ஆண்மகன் நற்பண்புடையவாரக இருக்க வேண்டும் என நோன்பிருப்பதாகும். இளம்பெண்கள் தங்களது தோழியருடன் ஊரிலுள்ள குளத்தி;ல் தைத் திங்களில் நீராடி இவ்விழாவினைக் கொண்டாடினர் என்பதை ஐங்குறுநூறு,

“நறுவீ யைம்பான் மகளி ராடும்
தைஇத் தண்கயம் போலப்
பலர்படிந் துண்ணுநின் பரத்தை மார்பே”(ஐங்குறுநூறு:84)

என்றும்,

'தைஇத் திங்கள் தண்கயம் போல"(புறநானூறு :70)

எனப் புறமும் குறிப்பிடுகின்றது.

“தைத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோட் குறுமகள்"(நற்றிணை :80)

“தையில் நீராடிய தவந்தலைப் படுவோளே"(கலி:13)

என்று நற்றிணையிலும், கலித்தொகையிலும் தைநீராடல் பற்றிய குறிப்பு காணப்படுவதிலிருந்து இவ்விழாவானது சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

ஒப்பனை:

விழாக்காலங்களில் பெண்கள் தங்களை ஒப்பனை செய்து கொள்வர். புத்தாடை உடுத்தியும், மலர்களை சூடியும் மகிழ்வர்.

“மீன்முள் அன்ன வெண்கால்மா மலர்
பொய்தல் மகளிர் விழவு அணிக்கூட்டும்”(அக: 26: 2-3)

“விழவுக் களம் கமழும்
உரவுநீர்ச் சேர்ப்ப”(நற்றிணை :19:5)

என்ற பாடல் அடிகள் மகளிர் விழா நடக்கும் இடங்களை நீர்முள்ளிச் செடியில் உள்ள வெண்மையான காம்புடைய பூக்களைப் பறித்து தலைநிறைய சூடிக்கொள்வதையும்,அரும்பு முதிர்ந்த தாழை மரங்களை கொண்டு வந்து விழா நிகழும் இடத்தினை அழகுப்படுத்துவதையும் காட்சிப்படுத்துகின்றது.

விழாக்களம்:

'சாறுகொள் ஆங்கண் விழவுக்களம் நந்தி
அரிக்கூட்டு இன்னியம் கறங்க ஆடுகமள்
கயிறு ஊர் பாணியின் தளரும்"(மதுரைக்காஞ்சி-186-199)

என்ற மாங்குடிமருதனாரின் பாடல் வழி மாவின் கனிகள்,வண்டுகள் சிதறிய தேன், பலாப்பழம் வெடித்து சிதறிய தேன் ,பழங்களின் சாறு இவையெல்லாம் கலந்து விளைந்த கள்ளாக மாறியது.அதனை நீர் எனக் குடித்த மயில்ஒன்று பெரிய ஊரின் விழாக்களத்தில் மிகுந்த இசைக்கருவிகள் ஒலிக்க கயிறாடும் பெண் கயிற்றில் ஏறி தாளத்திற்கு ஏற்ப ஆடி தளர்ந்தது போல் தளர்ந்தது என்றுரைக்குமிடத்து விழாக்கள் நடத்துவதற்கென்றே தனியிடங்கள் இருந்ததையும்,விழாக்களுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியவத்தினையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

சங்ககாலத்தில் நாடு செழிக்கவும், உறவுகள் வளம்பெறவும்,இயற்கைக்கு நன்றி செலுத்தவும்,கலைகளை வளர்க்கும் பொருட்டும்;, மன்னனை மகிழ்விக்கும் அடிப்படையிலும், வீரர்களின் ஆற்றலை மதிக்கும் வண்ணமும், இசைச்கலைஞர்களைப் போற்றும் விதமாகவும், மக்கள் மகிழ்ச்சியில் விளையாடி திளைக்கவும் விழாக்கள் எடுத்துள்ளனர்.ஒவ்வொரு இடங்களிலும் வெவ்வேறு பெயர்களில் கொண்டாடப்பட்டிருக்கின்றன.இன்றும் அரசு விழாக்கள், சிற்றூர் விழாக்கள் என்று கொண்டாட்டங்கள் நிகழ்ந்துக் கொண்டிருக்கின்றன.

## 15. இசைக்கருவிகள்

இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை என்பது உலகறிந்த உண்மை. கலைஞர்கள் மக்களை மகிழ்விக்கவும், தங்களது வறுமையை நீக்கிக் கொள்ளவும் இசைப்புலமையை வெளிப்படுத்தியுள்ளனர்.அன்பின் ஐந்திணை மக்கள் நிலம்சார் தொழில்களை நிகழ்த்தும் வேளையில் கொல்லாமை என்ற அறநெறியைப் பின்பற்றவும், அயர்ச்சியைத் தவிர்க்கவும் மண்மனம் கமழும் பண்களைப் பாடி மகிழ்ந்துள்ளனர். வளமார்ந்த வாழ்க்கையின் குறியீடாகத் திகழ்ந்த விழவில் இடைவிடாது முழவினை இயக்கியுள்ளனர். செருவகத்தில் வீரர்களை ஊக்கப்படுத்த மருந்தாக இசையைப் பயன்படுத்தியுள்ளனர். செய்திகளை அறிவிக்கவும், இறைவனை வழிபடவும், பயிரப்; பாதுகாப்பின் பொழுது விலங்குகளை விரட்டவும் பறையை முழக்கியுள்ளனர். தமிழர்களின் இசைவளம், வேட்கை, இசைக்கருவிகளை உருவாக்கிய கலைநுட்பத்திறன், பயன்பாட்டு நேர்த்தி, இன்றைய சமூகத்தினர் வியக்கும் வகையில் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள தொல்கருவிகளின் பெயர்கள் முதலிய தரவுகளின் தொகுப்புகளை காணலாம்.பழந்தமிழ் மக்கள் இயற்கையில் எழும் ஒலிக்கூறுகளை நுட்பமாக ஆராய்ந்தனர். அதனை ஒட்டி இனிமையான ஓர் இசைமுறையை உருவாக்கினர். படிப்படியாக பண்படுத்திய அந்த இசைமுறையை பண் என்று அழைத்தனர். வாழும் நிலத்திற்கேற்ப பண்களைப் பாகுபடுத்தியுள்ளனர்.

குழல்:

இசைக்கருவிகளுள் முதலில் தோன்றியது குழல்.குழலுக்கு புல்லாங்குழல்,வேய்ங்குழல்,வங்கியம்,வேணு என்னும் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன.குறிஞ்சிநிலக் கடவுள்; முருகன்.குறிஞ்சி நிலத்திலே வாழ்கின்ற தெய்வம் மலையிலே விளைகின்ற மூங்கிலை வெட்டி அதை துளையிட்டு புல்லாங்குழல் இசைத்தார் என்று கூறப்படுகின்றது. வெறியாடுகின்ற வேலன் மீது ஏறும் முருகன் பல்வேறு இசைக்கருவிகளை இசைக்கின்றான்.திருமுருகாற்றுப்படைக் குறிப்பிடும்

“குழலன் கோட்டன் குறும்பல்
லியத்தன் …………” (திருமுருகாற்றுப்படை-209)

என்னும் அடிகள்; முருகன் புல்லாங்குழலையும்,ஊதுகொம்பையும் இசைத்ததை தெளிவுப்படுத்துகின்றது.முருகனை வழிபட்டு வெறியாடும் மகளிர் குழல் ஊதியதை

“குழல் அகவ”(பட்டினப்பாலை- 155)

என்று பத்துப்பாட்டு எடுத்துரைக்கின்றது.குழலினை அடுத்து யாழ், முழவு, தண்ணும்மை போன்றவை வழக்கில் வந்தன.

“குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்
தண்ணும்மை நின்றது தகவே முழவே”
(சிலம்பு-அரங்கேற்றுக்காதை-140-141)

என்னும் இளங்கோவடிகளின் கூற்று இதனைப் பறைசாற்றுகின்றது

பழந்தமிழ் மக்கள் இயற்கையில் எழும் ஒலிக்கூறுகளை நுட்பமாக ஆராய்ந்தனர். அதனை ஒட்டி இனிமையான ஓர் இசைமுறையை உருவாக்கினர். படிப்படியாக பண்படுத்திய அந்த இசைமுறையை பண் என்று அழைத்தனர். வாழும் நிலத்திற்கேற்ப பண்களை

“குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்”(குறள்-66)

என்ற குறளில் வள்ளுவரும் முதலில் குழலைச் சொல்லிவிட்டு பிறகு யாழைச் சொல்கின்றார்.குழல்கருவி பிற கருவிகளோடு இயைந்து வாசிக்கப்பட்டதைப் பரிபாடல்

“குழலளந்து நிற்ப முழவெழுந்தார்ப்
மன்மகளிர் சென்னியர் ஆடல்” (பரிபாடல்-7:79-80)

என்று நவில்கின்றது.

முல்லைநிலக் கோவலர்கள் கன்றுகளையும்,பசுக்கூட்டங்களையும் காட்டிலே மேய்க்கும் பொழுது மூங்கிலில் தீக்கடைக்கோலால் தீ உண்டாக்கி அம்மூங்கிலில் துளைப்போட்டுக் குழல் செய்து பாலைப் பண் இசைத்ததை நக்கீரர்

“ஞெலிக்கோல் கொண்ட பெருவிறல் ஞெகிழிச்
செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின்”
(பெரும்பாணாற்றுப்படை:178-179)

என்று காட்சிப்படுத்துகின்றார்.

கன்று விரைந்து வர கோவலர் குழல் ஊதுவதை அகநானூறு

“குழல்வாய் வைத்தனர் கோவலர்”(அகநானூறு-354:5)

என்று சுட்டுகின்றது.குழலோசை மிகவும் இனிமையானது என்பதை

“விளிப்பது கவரும் தீம்

குழல் துதைஇ" (மலைபடுகடாம்-8)

என்று கூத்தராற்றுப்படை எடுத்துரைக்கின்றது.

கொன்றைப் பழத்தைத் துருவித் துளைத்துச் செய்யப்பட்டக் குழல் கொன்றைக்குழல் என்றும்,முல்லைக் கொடியால் முப்புரியாக தெற்றிய வளை முல்லைக்குழல் என்றும் அழைக்கப்பட்டது.கோவலர்கள் ஆம்பல், கொன்றை, முல்லைக் குழல்களில் தெளிந்த ஓசையை எழுப்பியுள்ளதற்கானச் சான்றுகளைச் சங்க இலக்கியங்களிலும், காப்பியங்களிலும் காணமுடிகின்றது.

"கொன்றையந் தீங்குரல்
மன்றுதோறு இயம்ப" (நற்றிணை-364:9-10 )

"ஆம்பல் குழலால்"(முல்லைக்கலி-108 )

"கொன்றைக் குழல் கோவலராம்பலும்''(வளையாபதி-69)

"ஆம்பலந் தீங்குழல் தெள்விளி பயிற்ற"
(குறிஞ்சிப்பாட்டு-222)

"ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி"
(சிலப்பதிகாரம்-ஆய்ச்சியர்குரவை:2)

"முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி"
(சிலப்பதிகாரம்-ஆய்ச்சியர்குரவை-3

யாழ்:

இசையின் நுண்ணறிவைப் பெருங்கருவியாக்கி பல்வேறு பயனபாட்டுக்கு வைத்திருந்தனர் தமிழர். தமிழரின் அறிவில் கிளைத்த இசைக்கருவிகளுள் தலையாயது யாழ்.இசைக்கருவிகளுள் தலைமையானது யாழ். பேரியாழ், மகரயாழ், சகடோயாழ், செங்கோட்டுயாழ் என்று யாழ் நான்கு வகைப்படும்.பேரியாழ் 21 நரம்புகளையும், மகரயாழ் 19 நரம்புகளையும், சகோடயாழ் 14 நரம்புகளையும், செங்கோட்டுயாழ் 7 நரம்புகளையும் உடையது. செங்கோட்டுயாழே' சீறியாழ்' என்று அழைக்கப்பட்டுள்ளது.

"இசைப்பு இசையாகும்" (தொல்காப்பியம் -உரியியல் -792)

"செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ"
(தொல்காப்பியம் -பொருளியல் -964)

"நரம்பின் மறைய என்மனார் புலவர்"
(தொல்காப்பியம் எழுத்ததிகாரம்- 33)

என்னும் நூற்பாக்களுள் யாழ் பற்றிய குறிப்புகள் இடம்பெற்று இருப்பதிலிருந்து நரம்புக் கருவிகளுள் தொன்மையானது யாழ் என்பது புலனாகின்றது.பண்டையத் தமிழரின் வாழ்க்கை இசையோடு இரண்டற கலந்திருந்தது.குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்,பாலை நிலங்களில் வாழ்ந்த மக்கள் முறையே குறிஞ்சியாழ், முல்லையாழ்,மருதயாழ்,விளரியாழ்,பாலையாழ் முதலியவற்றை இசைத்துள்ளனர்.

யாழோர் மருதப் பண்ணைப் பாட பொழுது விடிந்ததாக மதுரைக்காஞ்சிக் குறிப்பிடுகின்றது.

"சீரினிது கொண்டு நரம்பினிது இயக்கி
யாழோர் மருதம் பண்ண" (மதுரைக்காஞ்சி -657:5-8)

யாழிடத்து தெய்வம் உறைந்திருப்பதாக எண்ணினர். அதனால் யாழை வணங்கினர்.சிலப்பதிகாரத்தில் இதற்கான குறிப்பு காணக்கிடக்கின்றது

"குற்றம் நீங்கிய யாழ்கையில் தொழுது வாங்கி"

(சிலப்பதிகாரம் - கானல்வரி -1)

பேரியாழ்:

பெரிய யாழை வைத்துப் பாடுவோன் பெரும்பாணன் என்றும்,அவன் இசைத்த யாழ் பேரியாழ் என்றும்,அவர்களின் வாழ்விடம் பெரும்பாண் இருக்கை என்றும் அழைக்கப்பட்டது.

"அழுந்துபட்டிருந்த பெரும்பாண் இருக்கை"

(மதுரைக்காஞ்சி -342) "பெரும்பாண் காவல்" (நற்றிணை - 40:3)

என்ற அடிகளில் பெரும்பாணன் பற்றிய குறிப்புகள் காணக்கிடக்கின்றன. இதனை

"அரும்பெறன் மரபில் பெரும்பாணிருக்கை"

(சிலப்பதிகாரம்-37)

என்று சிலம்பும் சுட்டுகின்றது.

பேரியாழ் என்பது இனிமையான இசைத்தரக்கூடிய கருவி. பரிசில் பெற்ற பொருநன் மற்றொரு பொருநனிடம் யாழை முறைப்படி இயக்கிப் பரிசில் பெற்று திரும்பலாம் என்றுரைக்கும் விதம் படித்து இன்புறத்தக்க வகையில் உள்ளது.

"பேர்யாழ் முறையுளிக் கழிப்பி" (பொருநராற்றுப்படை - 168)

பேரியாழை இடப்பக்கமாக வைத்து மீட்டுவர் என்பதை

"வாங்கிடை மருப்பில் தீந்தொடை பழுனிய
இடனுடை பேரியாழ் "(பதிற்றுப்பத்து 66: 1-2)

"வள்ளுயிர்ப் பேரியாழ்" (கூத்தராற்றுப்படை -37)

என்று பதிற்றுப்பத்தும், மலைபடுகடாமும் இயம்புகிறது. இச்செய்தியை இளங்கோவடிகள்

"திருக்கையின் வாங்கி இடவயின் இரீஇ"

(சிலப்பதிகாரம் - 8:24)

என்கிறார்.சிலம்பின் கானல்வரி பகுதியில் வார்த்தல், வடித்தல், உந்தல், உறத்தல், உருட்டல், தெருட்டல்,அள்ளல், பட்டடை என்று யாழை மீட்டுகின்ற எண்வகைத்திறன் கூறப்பட்டிருப்பதிலிருந்து பண்டையத் தமிழரின் இசைத்திறனையும், வாழ்வின் முக்கிய அங்கமாக இசை இருந்துள்ளமையையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

சீறியாழ்:

சிறிய யாழைக் கொண்டு பாடுவோர் 'சிறுபாணர்' என்று அழைக்கப்பட்டனர்.வள்ளல்களை நாடிச்சென்று பரிசில் பெறுவதற்காக சிறிய யாழினை ஆடல்மகளிரும்,விறலியரும், பாண்மகனும் இசைத்துள்ளமையையும்,சீறியாழில் மருதப்பண், செவ்வழிப்பண், குறிஞ்சிப்பண், பாலைப்பண், விளரிப்பண் என்று தாம் விரும்பிய பல்வேறு பண்களைப் பாடி மகிழ்ந்தமையையும் கீழ்வரும் அடிகளில் காணமுடிகின்றது.

"மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்"

(மலைபடுகடாம்:534-536)

"சீறியாழ் செவ்வழி பண்ணின் யாழநின்"(புறநானூறு:144)

"கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்ப

(நெடுநல்வாடை-70

"இன்குரல் சீறியாழ்" (சிறுபாணாற்றுப்படை - 35)

"தீம்தொடைவிளரி நரம்பின் நயவரு சீறியாழ்"

(அகநானூறு 279:10-11)

"செவ்வழியாழ்,பாலையாழ்,விளரியாழ் பாண்மகனே"

(திணைமாலைநூற்றைம்பது-124,133,126

"களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்

பாடின் பனுவற் பாணர் உய்த்தென"(புறநானூறு - 127)

அரசர்கள் யாழிசைக் கேட்டு மகிழ்ந்து பாணர்களுக்குப் பரிசில் கொடுத்துப் பாராட்டியுள்ளதை

"அருந்திறல் முற்றிய கருங்கோட்டுச் சீறியாழ்

பாணர் ஆர்ப்ப பலகலம் உதவி

நாளவை யிருந்த நன்மகிழ்த் திதியன்"(அகநானூறு - 31:10-12)

என்னும் அகப்பாடல் உணர்த்துகின்றது.இதிலிருந்து சங்ககாலத்தில் புழக்கத்தில் பேரியாழும், சீறியாழும் மிகுதியாக இருந்துள்ளன என்னும் செய்தி புலனாகின்றது.

முழவு:

முழவு என்பது தாள இசைக்கருவிகளின் பொதுப்பெயர்.முப்பத்து ஒன்றிற்கும் மேற்பட்ட தாள இசைக்கருவிகளை முழவு என்னும் பொதுப்பெயரால் சுட்டப்பட்டுள்ளதை பண்டைத் தமிழ் இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன.சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் முப்பத்தொரு இசைக்கருவிகளில் முழவு என்பது எது? என்பதற்கு புறநானூற்றில் பாண்டியன் பல்யாகசாலை பெருவழுதியைப் பாடிய

"வார் உற்று

விசிபிணிக் கொண்ட மண்கனை முழவின்

பாடினி பாடும் -------"(புறநானூறு -15:22-24)

என்ற நெட்டிமையாரின் பாடல் வரிக்கு ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் வார் பொருந்தி வலித்துக் கட்டுதலைப் பொருந்திய மார்ச்சனை செறிந்த தண்ணும்மை என்று விளக்கம் அளித்து இத்தகைய அமைப்புடைய தண்ணும்மையைக் கொண்டு விறலி பாடினாள் என்று குறிப்பிடுகின்றார்.

சிலப்பதிகாரத்தில் மாதவியின் அரங்கேற்றத்திற்கு இசைக்கருவிகள் ஒலித்த முறையைக் கூறுமிடத்தில்

" --------- தண்ணும்மை

யாழ்வழி நின்றது முழவே"(சிலப்பதிகாரம்-3:140-41)

என்று இளங்கோவடிகள் கூறுகின்றார். வாரால் கட்டப்பட்ட முழவு என்பதை

"விசிபணி முழவின்"(பட்டினப்பாலை-293)

"திண்வார் விசித்த முழவு"(மலைபடுகடாம்-3)

என்று பத்துப்பாட்டும் எடுத்துரைக்கின்றது.

அடியார்க்குநல்லார் ஏழுவகையான முழவுகளாக அகமுழவு (மத்தளம்,சல்லிகை, இடக்கை,கரடிகை, பேரிகை, குடமுழா), அகப்புறமுழவு (தண்ணும்மை, தக்கை, தகுணிசம்), புறமுழவு

(கணப்பறை), புறப்புறமுழவு (நெய்தல்பறை), பண்ணமை முழவு (முரசு, திமிலை, துடுமை,திமிலை), நாள்முழவு (நாழிகைப்பறை), காலைமுழவு (துடி)போன்றவற்றைக் குறிப்பிடுகின்றார்.

மார்ச்சனை:

முழவின் ஒருபக்கம் மண் (மார்ச்சனை)பூசப்பட்டிருப்பதை சம்பந்தர் முதலாம் திருமுறையில

"மண்ணார் முழவதிர முதிரா மதிசூடி"

(பன்னிருதிருமுறை1:46)

என இறைவன் மண்ணார் முழவுக்கு ஆடுகிறார் என்கிறார்.இரண்டாம் திருமுறையில்

"மண்ணார்ந்த மணமுழவந் ததும்ப"

(பன்னிருதிருமுறை2-54:6)

என சுந்தரமூர்த்தி நாயன்மாரும் பதிவு செய்கிறார்.

மண்ணார் முழவை விரல் கொண்டு கைகளால் கொட்டி ஒலி எழுப்பியதை பாலைப்பாடிய பெருங்கடுங்கோ

"மண்ணார் முழவின் கண்ணகத்து அசைத்த"

(அகநானூறு-155:14)என்றும்,

"மார்ச்சினைக் கொண்ட முழவு"

"மண்ஆர் முழவின் ஆங்கண் முழவின்"

(மலைபடுகடாம்-370,380 )

என்று ஆற்றுப்படையும் சித்திரிக்கின்றது.

"புலம்புரி வயிரியர் நலம்புரி முழவின்
மண்ணார் கண்ணின் அதிரும்"

(நற்றிணை-100:10-11)

என பரணர் நற்றிணையில் முழவில் மண் பூசப்பட்டு இருந்ததைக் காட்டுகிறார்.

இப்பாடலுக்கு விளக்கம் தரும் நச்சினார்க்கினியர் இடக்கண் இளியாக வலக்கண் குரலாக நடப்பது தோலியற் கருவியாகும் என்று ஒரு பாடலை எடுத்துக்காட்டாகத் தருகிறார். இளி என்பது பஞ்சமத்தையும், குரல் என்பது சட்சத்தையும் குறிக்கும். தோலாலான இசைக்கருவிகள் இடப்பக்கம்கண் பஞ்சம சுருதி உடையதாகவும், வலக்கண் சட்சம சுருதி உடையதாகவும் இயங்க வேண்டும் என்கிறார். மண்ணார் முழவு அப்படி சுருதி சேர்க்கப்பட்டது என்பதை நச்சினார்க்கினியர் உரையால் காணலாம்.

"மண்கனை முழவம் விம்ம"(சீவகசிந்தாமணி-628:2 )

என்று திருத்தக்கத்தேவரும் கூறுகின்றார்.

முழவொலி:

பூதபாண்டியனது காவலமைந்த அரண்மனையில் முழவு அதன் மார்ச்சனை உலராதவாறு எப்போதும் முழங்கிக் கொண்டிருந்தது என்பதை மதுரைப்பேராலவாயர்

"முழவு கண்துயிலாக் கடியுடை வியல்நகர்"

(புறநானூறு-247:8 )

என்கிறார்.முழவுகள் இடைவிடாது ஒலித்துக் கொணடிருக்கும் ஊர்களையுடைது நன்னனுடைய மலை

"முழவுத் துயில் அறியா

வியலுள் ஆங்கண்"(மலைபடுகடாம்-350)

என்று ஆற்றுப்படையும் சான்று பகர்கின்றது.

"பாடுஇன் அருவிப் பனிநீர் இன்இசை

தோடுஅமை முழவின் துதைகுரல் ஆக"(அகநானூறு: 82.4)

என்று கபிலர் இனிய அருவியினுடைய குளிர்ந்த நீரினது ஓசை முழவின் ஓசையை ஒத்திருந்தது என்று உரைப்பதிலிருந்து தண்ணும்மையின் இனிமைப் புலப்படுகின்றது. முழவின் ஒருபக்கம் மண் (மார்ச்சனை)பூசப்பட்டிருப்பதையும் அது இம்மென ஒலியுடன் முழக்கப்படுவதை

"மண்ணார் முழவின் இசை எழ"(பரிபாடல்-17:13)

"மண்ணார் கண்ணின் இம்மென இமிரும்"

(நற்றிணை-139:5-9)

என்று சங்கப்பாடல்;கள் காட்டுகின்றன. இதிலிருந்து முழவின் பயன்பாடு தெரியவருகின்றது.

போர்:

பகைவரை வென்று வெற்றியுடன் திரும்ப வேண்டும் என்ற வேட்கையுடன் போர்க்களத்திற்குச் சென்ற வீரர்களை ஊக்குவிப்பதற்கு தண்ணும்மை என்ற இசைக்கருவிப் பயன்படுத்தப்பட்டுள்ளது.இதற்கு

"மறப்படை நுவலும் அரிக்குரல் தண்ணுமை

இன்னிசை கேட்ட தன்னரு மறவர்

வெற்றிதரு வேட்கையர்" (புறநானூறு-270:8-10 )

என்னும் புறப்பாடல் இதற்குச் சான்றாக அமைகின்றது.

"--------தண்ணும்மை இடம் தொட்டன்ன

அருவி இழிதரும் பெருவரை நாடன்" (நற்றிணை-347:6-7)

என்று நற்றிணை தண்ணும்மையின் ஒலி அருவியினைப் போல முழங்கியதை சுட்டிக்காட்டுகின்றது.

ஒப்புமை:

அரசர்களின் தோளிற்கு உவமையாக முழவு வருணிக்கப்பட்டிருப்பதை

"மதனுடை முழவுத் தோள்ஓச்சி"

"விழவு மேம்பட்ட நல்போர்

முழவுத்தோள் --------------" (புறநானூறு-50:2,88:5-6)

"முழவுத் தோள் முரண் பொருநர்க்கு"(மதுரைக்காஞ்சி-99)

"முழவு உறழ் திணித்தோள் நெடுவேள் ஆவி"

(அகநானூறு-61:15)

என்ற பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன.

மேலும் மக்களின் பயன்பாட்டுப் பொருட்களையே ஒப்புமைப் பொருளாகப் பயன்படுத்தும் மதி நுட்பம் வாய்ந்தவர்களாக முன்னோர்கள் இருந்துள்ளனர் என்னும் செய்தி வெளிப்படுகின்றது.

குறவர்கள் குடியிருப்பில் பலாப்பலங்கள் மிகுதியாக விளைந்துள்ளன.அவற்றை குறிஞ்சி நில கருப்பொருளாகிய குரங்குகள் உண்ணத் தலைப்படும் நிகழ்வு இயல்பானது.ஆண்குரங்கு ஒன்று பலவினைக் கிழித்து உண்கிறது.அவ்வாறு உண்டமையால் சிதறிய பெரிய பலாப்பழம் முழவினைப் போலக் காணப்பட்டதை

"கலைஉணக் கிழிந்த முழவுமருள்

-------பெரும்பழம்" (புறநானூறு-236:1)

என்று புறப்பாட்டும், மலைச்சாரலில் மிகுதியாகப் பெய்த மழையை ஏற்ற பசிய பலாமரங்களில் பலாப்பழங்கள் கூத்தருடைய முழவு போல கீழும் மேலும் காய்த்திருந்ததை

"கானப் பலவின் முழவு மருள்பெரும்பழம்"

(மலைபடுகடாம்:511

"சுரஞ்செல் கோடியர் முழவின் தூங்கி"(மலைபடுகடாம்.143)

"முழவமைந்த பெரும்பழம்" (பதிற்றுப்பத்து-81)

என்று கூத்தராற்றுப்படையும்,பதிற்றுப்பத்தும் குறிப்பிடுகின்றது.

விழா:

தமிழர்களின் வாழ்வில் விழாக்கள் நீக்கமற நிறைந்திருந்தன.விழாக்களின் வாயிலாகப் புத்துணர்ச்சிப் பெற்றும், உறவுகளை மேம்படுத்தியும், பண்பாட்டினை நிலைபெறவும் செய்துள்ளனர். ஊர்மன்றத்தில் உள்ள தெருவிடத்து கூத்தருடைய முழவொடு இசைய அமையும் யாழிசை கேட்பதற்கு காரணமான பெருவிழா நிகழ்ந்ததை

"முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
------பெருவிழா" (59.பட்டினப்பாலை-253)

என்று பத்துப்பாட்டும்,விழாக்கள் நீங்குதலை அறியாத முழவு ஒலிக்கின்ற மூதூர் என்பதை

"முழவொலி அறாது விளங்கும்"(அகநானூறு-35:14)

விழவுஅறுபு அறியா முழவுஇமிழ் மூதூர்"

(பதிற்றுப்பத்து-15:18)

மக்கள் முழவு ஒலிக்கின்ற பழைய ஊரில் நிகழும் விழாவைக் கண்டு தம் இடத்திற்கு திரும்பச் சென்றதை

"முழவு இமிழ் மூதூர் விழவுக்கா ணூஉப் பெயரும்"

(பதிற்றுப்பத்து-30:20)

முழவு முழங்கும் விழாக்கள் நிலைப்பெற்ற அகலமான தெருவினை உடைய ஊர்

"முழவு இமிழும் அகல் ஆங்கண்"(பதிற்றுப்பத்து-30:20)

"முழவின் மகிழ்ந்தனர் ஆடிக் குண்டுநீர்

(மதுரைக்காஞ்சி-327,585 )

"குறுநெடுந் தூம்பொடு முழவுப்புணர்ந்து இசைப்ப"(அகநானூறு-301:17)என்று இலக்கியங்கள் உரைப்பதிலிருந்து விழாக்களில் முழவு இசைக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

மங்கல நிகழ்வு:

திருமணம் நிகழுங்கால் மனையை அழகுபடுத்திக் கடவுளை வழிபட்டு ஒலிக்கும் மணமுழவுடன் பெரிய முரசம் ஒலிக்க மகளிர் மணப்பெண்ணிற்கு மணநீராட்டுவர் என்னும் செய்தியை

"படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ்"(அகநானூறு-136:7)

என விற்றூற்றுமூதெயினனார் எடுத்துரைக்கின்றார.;

பறை:

செய்திகளை அறிவிக்கப் பயன்படுவது பறை என்னும் தோல் கருவியாகும், இது பாரம்பரிய இசைக்கருவி.பறை தொல்குடிச்சமூகத்தின் சொத்து. தோலிசைக் கருவிகளின் தாய்.தொன்மையின் அடையாளம். உழைக்கும் மக்களின் களஞ்சியம், இப்பறை அரித்தெழும் ஓசையை உடையது.

வெறியாட்டுப்பறை, தொண்டகப்பறை, ஏறுகோட்பறை, நெல்லரி, மணமுழவு, மீன்கோட்டுப்பறை,துடி போன்ற பல்வகைப் பறைகளை இயக்கியுள்ளனர்.

தொண்டகப்பறை:

பறை வகைகளுள் ஒன்று தொண்டகம்.வேடர்கள் நீண்ட மூங்கில் குழாய்களில் முற்றி விளைந்த தேனாலாகிய மதுவைத் தம் சுற்றாத்தாருடன் குடித்து மகிழ்ந்து தொண்டகம் என்ற சிறிய பறையை முழக்கிக் குரவைக்கூத்து ஆடி மகிழ்ந்துள்ளனர். இதனை

"தொண்டகச் சிறுபறை குரவை அயர"

(திருமுருகாற்றுப்படை-197)

என்று நக்கீரர் சுட்டுகின்றார்.

"தொண்டகச் சிறுபறைப் பாணி"(நற்றிணை-104:5)

என்று நற்றிணை நானூறும் குறிப்பிடுகின்றது.

தடாரிப்பறை:

இசைக்கலைஞர்கள் பரிசில் பெறுவதற்காக தடாரி பறையை முழக்கியுள்ளனர்,அவர்களுக்கு அரசர்கள் சிறிதும் காலம் தாழ்த்தாது உள்ளம் மகிழ்வுறும் வண்ணம் பரிசில் வழங்கியுள்ளனர். இதனை ஔவையார், நக்கீரர், தாயங்கண்ணனார் பாடல்கள் மெய்ப்பிக்கின்றன.

"தடாரி தெளிர்ப்ப ஏற்றி"

"அரிக்குரல் தடாரி இரிய ஒற்றி"

"தீம் குரல் அரிக்குரல் தடாரியொடு"

(புறநானூறு-370:18,390:8,395:25)

நெல்லரிப்பறை:

மருதநிலத்தில் நெல்லரிப்பவர் கழனிகளில் வாழும் பறவை முதலிய சிற்றுயிர்களை ஓட்டுவதற்கு தோற்கருவிகளைப் பயன்படுத்தியதை

"வெண்ணெல் அரிஞர் தண்ணுமை வெரிஇச்"

(மலைபடுகடாம்-471)

"வெண்ணெல் அரிநர் மடிவாய் தண்ணும்மை"

(அகநானூறு-204-10)

என்பதின் வழி அறிந்துகொள்ள முடிகின்றது.

உழவர் அரிப்பறை முழக்க அவ்வொலிக்கு மயில்கள் பயந்து சென்று குன்றில் அமர்ந்து கொண்டதைப் பரணர்

"கழனி உழவர் கலிசிறந்து எடுத்த
கறங்குஇசை வெரீஇப் பறந்த தோகை"

(அகநானூறு-262:17-18)

என்றும்,வயலில் வெண்மையான நெல்லை அரிபவரின் பின்பு ஒலிக்கும் பறையைக்கேட்டு அஞ்சிய நாரைகள் பனை மரத்தின் மடலில் தங்குவதை

"வெண்ணெல் அரிநர் பின்றைத் ததும்பும்
தண்ணும்மை செரீஇய தடந்தாள் நாரை"

(அகநானூறு-40:13-14)

என்று சுட்டுவதிலிருந்தும் உயிரினங்களின் மீது உழவர்கள் கொண்ட கருணைப் புலப்படுகின்றது.

ஆகுளி :

ஆகுளி என்பது ஒருவகைச் சிறுபறையாகும்.இந்த தாள இசைக்கருவி முழவுக்கு இணையாகவும் துணையாகவும் அமையும்.துடி, கொம்பு, ஆகுளி இவை மூன்றும் ஐவகை நிலங்களில் குறிஞ்சித் திணைக்குரிய இசைக்கருவியாக குறிப்பிடப்படுகின்றன. குரலென்னும் நரம்பு கூடிய வண்ணம் நன்றாகிய யாழுடன் பொருந்தி மெல்லிய நீர்மையுடைய ஆகுளியை (சிறுபறை) ஒலித்து மகளிர் இறைவனை வழிபட்டதையும்,அரசனைப் புகழ்ந்து பாடவும் இசைத்ததை

"நுண்நீர் ஆகுளி இரட்டப் பலவுடன் " (மதுரைக்காஞ்சி-605

"ஆகுளி பதலையொடு சுருக்கி" (புறநானூறு -64)

மதுரைக்காஞ்சியும்,புறநானூறும் தெளிவுபடுத்துகின்றது.

கிணைப்பறை (பதலை):

"அரிக்கூடு மாக்கிணை இரிய ஒற்றி"

"நல்யாழ் ஆகுளி பதலையொடு சுருக்கி"

(புறநானூறு-378:8,64)

என்பதன் வாயிலாக அரசனைச் சிறப்பித்துப் பாடுவதற்கு கிணைப்பறையை முழக்கியுள்ளமைப் புலனாகின்றது.

"கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும்"

(சிலம்பு-புறஞ்சேரியிறுத்தகாதை-148)

என்று சிலம்பு கிணைப்பறையையுடைய மள்ளர் மருதநிலத்து வைகறைகண் கிணைப்பறையைக் கொட்டி ஒலி எழுப்பியதைக் குறிப்பிடுகின்றது.குறவர்கள் தினையை உண்ண வந்த யானையை அம்பினைக் கொண்டும் கிணைப்பறையைக் கொண்டும் கைவிரலில் கோர்த்த கவணைக் கொண்டும் விரட்டியதை நற்றிணைநானூறு

" ------------------குறவர்

கணையர்,கிணையர்,கைபுனை கவணர்"

(நற்றிணை-108:3-4)

என்று குறிப்பிடுகின்றது.

தூம்பு:

தூம்பு என்பது மூங்கிலை அறுத்து குழல் போன்று செய்யப்பட்ட கருவியாகும். இது ஒரு ஊது கருவி.இதனை வங்கியம் என்றும் நெடுவங்கியம் என்றும் கூறியுள்ளனர்.இது யானையின் துதிக்கையைப் போன்றது. துள்ளித்திரியும் மான்களின் வாய் ஒலி பெருவங்கியம் போல இருந்ததை

"கணக்கலை இகுக்கும் கடுங்குரற் தூம்பொடு"

(அகநானூறு-82:5;)

என்கிறார் கபிலர்.இதனை ஐங்குறுநூறு

"இயம்புணர் தூம்பின் உயிர்க்கும் அத்தம்"

(ஐங்குறுநூறு-377;:2)

என்று குறிப்பிடுகின்றது.

"விரல்செறி தூம்பின் விடுதுளைக் கேற்ப
முரல்குரல் தும்பி அவிழ்மலர் ஊத
யாணர் வண்டினம் யாழிசைப் பிறக்க"(பரிபாடல்-21:31-35)

என்று விரலால் தூம்பிலுள்ள துளைகளை மூடியும் திறந்தும் இசையெழுப்பும் முறையை விளக்கி வியக்க வைக்கின்றது.குறிய தூம்பும் நெடிய தூம்பும் முழவினோடு கூடி முழங்குவது நெருங்கிய நடையினையுடைய பிடி யானையோடு களிற்று யானை ஒரு சேர பிளிறுவதுபோல இருப்பதை

"செறிநடை பிடியொடு களிறுபுணர்ந் தென்னக்
குறுநெடுந் தூம்பொடு முழவுப்பணர்ந்து இசைப்ப"

(அகநானூறு-301:17)

என்;னும் நெடுந்தொகை வழி தெரிந்துகொள்ள இயலுகின்றது.

"இளிப்பயிர் இமிரும் குறும்பரத் தூம்பொடு"

(மலைபடுகடாம்-7)

இளி என்னும் நரம்பு போன்று பண்ணை ஒலிக்கின்ற குறுகிய தூம்பு என்று பெருங்குன்றூர்கௌசிகனார் உரைக்கின்றார்.

துடி:

துடி மரத்தால் செய்யப்பெற்றது.இதன் இருகண்களும் தோலால் மூடப்பட்டுத் தோல்வாரால் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும்.இதன் அமைப்பு உடுக்கைப் போல் இருக்கும்.துடி அடிப்பவன் 'துடியன்'என்று அழைக்கப்பட்டான். துடியின் ஓசை ஆந்தையின் ஒலியைப் போலிருப்பதை முடத்தாமக்கண்ணியார்

"துடிக் குடிஞைக் குடிப்பாக்கத்து"

(பொருநர்ஆற்றுப்படை-210 )

என்கிறார்.சூரனது வஞ்சத்தை அறிந்து அவனை அழித்து முருகன் துடி கொட்டி ஆடியதைக் குடிமக்கள் காப்பியம்

"சூர்த்திறம் கடந்தோன் ஆடிய துடியும்"

(சிலம்பு.கடலாடுகாதை-51)

என்கிறது.

வயிர்:

வயிர் என்ற துளைக்கருவி போர்க்களங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இது விலங்குகளின் கொம்பினால் செய்யப்பட்டிருக்கின்றது.

"வயங்கு கதிர் வயிராமொடு வலம்புரி ஆர்ப்ப"

(பதிற்றுப்பத்து-67)

என்று கூறப்பட்டிருப்பதைக் காணின் மரங்களின் வைரப்பகுதியைத் துளைத்துச் செய்யப்பட்டு இருக்கின்றது என்று கருத இடமுளது.அன்றில் பறவையின் குரல் ஊதுகின்ற கொம்பின் ஓசையை ஒத்திருந்ததைக் கபிலர்

"ஏங்குவயிர் இசைய கொடுவாய் அன்றில்"

(குறிஞ்சிப்பாட்டு-219)

என்று சுட்டுகின்றார். பெண்மயில் நீர் கிடைக்காமையால் எழுப்பிய ஒலி அயிரி என்னும் ஆற்றங்கரையில் ஊதப்படும் ஊதுகொம்புபோல இருந்தது என்கிறது நெடுந்தொகை

"அயிர்யாற்று அடைகரை வயிரின் நரலும்"

(அகநானூறு-177:11)

உயிரினங்களும் இசையும்:

இசைக்கு மயங்காத உயிர்கள் உலகில் இல்லை என்பது உலகறிந்த உண்மை. யானைப்பாகனின் குத்துக்கோலுக்கு அடங்காத யானைக்கூட யாழின் இனிமையான இசைக்கு மயங்கியமையை

“காழ்வரை நில்லாக் கடுங்களிற்று
ஒருத்தல் யாழ்வரைத் தாங்கியாங்கு”

(கலித்தொகை -2:26-27)

கலித்தொகைப் பாடல் புலப்படுத்துகிறது.

மலைச்சாரலில் தினைப்பயிரைத் தின்பதற்கு ஓர் காட்டு யானை வந்தது. அப்பொழுது தினைக்கொல்லையில் காவல் புரிந்த குறத்தி குறிஞ்சிப்பண் பாடினாள்.அப்பண் கேட்டு மெய்மறந்து நின்ற யானை தினையை உண்ண மறந்து நின்றதை

“ஒலியல் வார் அயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
குரலும் கொள்ளாது நிலையிலும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற்று ஒய்யென
மறம்புகல் மழகளிறு உறங்கும்” (அகநானூறு -102)

என்ற பாடல் வழி அறியமுடிகின்றது.

“ சுடுபுன மருங்கில் கலித்த ஏனற்
படுகிளி கடியும் கொடிச்சி கைக்குளிரே
இசையின் இசையா இன்பாணித்தே கிளி
அவள்விளி என விழல் ஓவாவே” (குறுந்தொகை -291)

என்ற குறுந்தொகைப் பாடல் தினைகளில் வாழும் கிளிகளை விரட்டத் தலைவி சென்றமையையும்,குளிர் என்னும் இசைக்கருவியை இசைத்து ஒலி எழுப்பியதையும், இசைக்கருவிக்கு மயங்கிய கிளிகள் வேறிடம் செல்லாது அங்கேயே தங்கியதையும் காட்சிப்படுத்துகின்றது.

இசையும் மருத்துவமும்:

மறவர்கள் தங்கள் உயிரினைப் பொருட்படுத்தாது வெற்றி ஒன்றினை மட்டுமே இலக்காகக் கொண்டு போரில் புண்பட்ட வீரர்களின் புண்ணை ஆற்றுவதற்கு காஞ்சிப்பண் பாடியுள்ளதை

“வாங்கு மருப்பு யாழொடு பல்இயம் கறங்க
இசைமணியெறிந்து காஞ்சிபாடி” (புறம் -281:4-5)

உடலில் ஏற்பட்ட வலியைக் குறைக்க பழந்தமிழர்கள் இசையை மருந்தாகப் பயன்படுத்தியுள்ளதை

“கொடுவரி பரந்தெனக் கொழுநர் மார்பில்
நெடுவரிசி விழுப்புண் தணிமார்க் காப்பென
அறல்வாழ் கூந்தல் கொடிசியர் பாடல்” (மலைபடுகடாம்-302-304)

ஆற்றுப்படைச் சுட்டுகிறது.

சங்க இலக்கியம் தமிழரின் இனிய இசைக்களஞ்சியம்.இதன் வாயிலாக இசைக்கலைஞர்கள், இசைக்கருவிகள், வகைகள், அமைப்பு முறைகள், ஒலிகள் முதலியவற்றை அறிந்துகொள்ள இயலுகின்றது. பழங்காலத்தில் மன்னர்களை மகிழ்விக்கவும், பரிசில் பெறுவதற்காகவும் இசைக்கருவிகளை இசைக்கும் நிலை இருந்துள்ளது புலனாகின்றது. ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலோடு இயைந்த பறைகளின் பட்டியலைக் காணமுடிகின்றது. மங்கல நிகழ்வுகளிலும், திருவிழாக்களிலும் இசைக்கருவிகள் நீங்கா இடம் பெற்றிருந்ததைத்

தெரிந்துகொள்ள முடிகின்றது. முன்னோர்களின் மகிழ்ச்சியையும், வழக்கிழந்துவிட்ட கருவிகளையும், தொல்குடிச் சமூகத்தின் சொத்துக்களாக பறை இருந்துள்ளமையையும், இசையின் பயனையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**பார்வை நூல்கள்:**

1.கழகவெளியீடு - புறநானூற்றுச் சொற்பொழிவுகள்
தென்னிந்திய சைவசித்தாந்தநூற்பதிப்பு கழகம்,
லிமிடெட்,திருநெல்வேலி,மறுபதிப்பு-சூன்-1956

**2.** ஐங்குறுநூறு ஆய்வுக்கோவை – சங்க இலக்கிய ஆய்வு மையம்
மதுரை
குறிஞ்சி பதிப்பகம் -2008.

3.சண்முகதாஸ் பேரா.அ - சங்க இலக்கிய ஆய்வுகள்-
தேசிய கலை இலக்கியப் பேரவை
செப்டம்பர்-2010

4.சாலமன் பாப்பையா -புறநானூறு - புதுமை வரிசை வகை
கவிதா பதிப்பகம்
சென்னை

5.சுப்பிரமணியன், ச.வே. சங்கஇலக்கியம் எட்டுத்தொகை மூலமும் உரையும்
மணிவாசகம் பதிப்பகம்
சிங்கர் தெரு,பாரிமுனை, சென்னை-08
முதற்பதிப்பு-செப்டம்பர் -2015.

6. சுப்பிரமணியன், ச.வே. சங்கஇலக்கியம் பத்துப்பாட்டு முழுமையும்
மணிவாசகர் பதிப்பகம்
31,சிங்கர் தெரு,சென்னை-08
இரண்டாம் பதிப்பு- டிசம்பர்-2010

7. சேதுராமன், கு. முனைவர் - தமிழகச் சமுதாயப் பண்பாட்டுக் கலைவரலாறு
நியூசெஞ்சுரி புக் கவுஸ்(பி)லிட்;;;
41-பி-சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர்,

8.துரை.தண்டபாணி, மணிமேகலை -
உமாப்பதிப்பகம்
பவளக்காரத்தெரு,சென்னை-01
ஏழாம்பதிப்பு-டிசம்பர்-2017

9.வெற்றிச்செல்வி கோ. - அருங்கலச்செப்பு மூலமும் உரையும் -
சாரதா பதிப்பகம் -2007.

10 ஜெகதீசன், பேரா.இரா.- பரிபாடல் ஆய்வுக்கோவை
குறிஞ்சிபதிப்பகம், மதுரை, முதற்பதிப்பு –டிசம்பர் -2010

11.ஜெகந்நாதன் கி.வா. - மனைவிளக்கு(சங்கநூற்காட்சிகள்)
அமுதநிலையம்லிமிடெட் 46,இராயப்பேட்டை
சென்னை-60004 ,முதற்பதிப்பு-டிசம்பர்-1951

12. ஜகந்நாதன் கி.வா. -பொருநர்ஆற்றுப்படை விளக்கம்
அமுதநிலையம்
பதிப்பு – 1985.

13..இலக்கியத்தில் மருத்துவக் கருத்துக்கள் , கலாநிதி இ.பாலசுந்தரம்,தமிழ்த்துறைத் தலைவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,திருநெல்வேலி,நாட்டார் வழக்கியல் கழகம்,யாழ்ப்பாணம்,1990.

14.கம்பன் புதிய தேடல் அ.அ.ஞானசந்தரத்தரசு,தமிழ்ச்சோலைப்பதிப்பகம்,புதுக்கோட்டை,2012.

15.தொல்காப்பியம் - பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல்,பேராசிரியர் க.வெள்ளைவாரணனார்,மாணவர் பதிப்பகம்,பி-11 குல்மொகர் அடுக்ககம்,35,செவாலியே சிவாசி கணேசன் சாலை,தியாகராயர் நகர்,சென்னை - 600 017, மறுபதிப்பு - 2014.

16.தமிழர் நாகரிகமும் பண்பாடும்,அ.தட்சிணாமூர்த்தி, ஐந்திணைப்பதிப்பகம், யு1108,தென்றல் காலனி, மூன்றாவது தெரு,மேற்கு அண்ணாநகர்,சென்னை-600 040.

17..தமிழர் கண்ட தாவரவியல்,முனைவர் வே.நெடுஞ்செழியன்,உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை.

18.தமிழ் மருத்துவ நூல் வரிசை – 7 -பதார்த்த குண சிந்தாமணி - இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகம்,சென்னை – 600106,பதிப்பு – 2007.

19..தமிழ் மருத்துவப் பொழில், திங்கள் வெளியீட்டு இதழ், மார்ச்-1942 ,இதழ் 3,மலர் 2.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.